# இனிக்கும் இலக்கியம்



மணிவாசகர் பதிப்பகம்

முனைவர் தமிழண்ணல்

# இனிக்கும் இலக்கியம்

தமிழண்ணல்

மணிவாசகர் பதிப்பகம்
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

முதல் பதிப்பு : நவம்பர், 2000
திருவள்ளுவர் ஆண்டு : 2031
உரிமை : ஆசிரியருக்கு
**விலை : ரூ. 40.00**
மணிவாசகர் வெளியீட்டு எண் : 796

## பதிப்பாசிரியர்

## முனைவர் ச. மெய்யப்பன்

டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

தமிழகப் புலவர்குழுவின் துணைத் தலைவர்.

பல்கலைக்கழகங்களின் பதிப்புக்குழு உறுப்பினர்.

பல பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

தமிழக அரசின் தமிழ்ச்சங்கப் பலகை - குறள்பீடத்தின் பொதுக்குழு உறுப்பினர்.

'வள்ளுவம்' இதழின் சிறப்பாசிரியர்.

பத்து நூல்களின் ஆசிரியர். இவர் எழுதிய தாகூர் நூல் தமிழக அரசின் முதல் பரிசு பெற்றது.

குன்றக்குடி அடிகளார் தமிழவேள் என்னும் விருது வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

பதிப்புச்செம்மல் என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடம் :

**மணிவாசகர் நூலகம்**

12-B, மேல சன்னதி, சிதம்பரம் - 608 001.
31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600 108.
110, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை - 625 001.
15, ராஜ வீதி, கோயமுத்தூர் - 641 001.
28, நந்தி கோயில் தெரு, திருச்சி - 620 002.

தொலைபேசி :

| | |
|---|---|
| சிதம்பரம் | : 30069 |
| சென்னை | : 5361039 |
| மதுரை | : 622853 |
| கோயமுத்தூர் | : 397155 |
| திருச்சி | : 706450 |

அச்சிட்டோர் : பீகே ஆப்செட் பிரஸ், சென்னை - 600 013.

# இனிக்கும் இலக்கியம்

படைப்புக் கலையின் உச்சத்தைத் தொடும்
பாடல்களின் தொகுப்பு!
உச்சத்தைத் தொடும் இலக்கியம் படைக்கும்
திறமையை வளர்க்கும் வகுப்பு!

உன்னதக் கலைகளில் ஊறித் திளைத்தால்
உயர்ந்தன பலவும் உங்கள் நிலைக்களம்!
ஒலிநயம் சொல்வளம் இசைநலம் சந்தம்
உறவாடுபவர்க்கே அடைக்கலம்!

ஆகாயப் பூக்கள் மணப்பதில்லை!
அவை வேரூன்றாமல் நிலைப்பதில்லை!

சுவைதரும் இலக்கியம் படிக்காமல்
சுவைமிகும் இலக்கியம் பிறக்காது!

பிறவியில் கலைஞராய்ப் பிறந்திடலாம்!
பெருமையைப் புலமையால் மட்டுமே அடைந்திடலாம்!

எல்லைகளைத் தொடும் இனிக்கும் இலக்கியம்
படியுங்கள்!
இணையிலாச் சுவைநயம் இணைந்து சிறந்திடும்
இலக்கியம் இனிநிதம் படையுங்கள்!



# இலக்கியச்சுவை நுகர்வோம்

## *பதிப்புச்செம்மல் ச. மெய்யப்பன்*

### நிறுவனர் : மெய்யப்பன் தமிழாய்வகம்

பேராசிரியர் தமிழண்ணல் எழுதத் தொடங்கிய காலத்திலேயே இலக்கியக் கட்டுரைகள்தான் எழுதினார்கள். பள்ளி ஆசிரியராக வாழ்வைத் தொடங்கிய அவர்கள் பாநலம் பாராட்டுதல் என்னும் நிலையில் மாணவர்களைப் பாட்டின்பம் நுகரச் செய்த பாவலர். தொடக்க காலத்தில் அவர்கள் எழுதிய நூல் 'இலக்கியத்தில் இன்பச்சுவை'. முதல்நிலைக் கல்லூரியாகிய மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலை, முதுகலை மாணவர்களுக்கு இலக்கியத்தைக் கரும்பின் கட்டிபோல் இனிக்க இனிக்கப் பாடம் சொல்லியவர். காமராசர் பல்கலைக்கழகத்தில் ஒப்பியல் இலக்கியத்திற்கு விதை ஊன்றி விழுது கண்டவர்.

பின்னர் இலக்கணம், மொழியியல், சமூகவியல், பண்பாட்டியல் துறைகளில் சிறந்த ஆய்வாளர்களையும் ஆய்வு நூல்களையும் உருவாக்கினார்கள். 'தினமணி' நாளிதழ் வாயிலாக 'உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற தலைப்பில் உரைநடைக்குரிய விதிகளை எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக விளக்கி, பேரும் புகழும் பெற்றார்கள்.

75 ஆண்டுகளாகப் பொதுமக்களை மகிழ்விக்கும் 'ஆனந்தவிகடன்' வார இதழில் 'இனிக்கும் இலக்கியம்' என்ற தலைப்பில் 'வெகுஜன' ரசனைக்கேற்ப மிகமிக எளிமையாக, பாடல்களின் பல்வகை நலங்களை விளக்கினார்கள். இவர்கள் எடுத்தியம்பும் திறத்தினால், இலக்கிய இனிமையை எல்லோரும் உணர்ந்தனர். வாரந்தோறும் வாசகர் எண்ணிக்கை வளர்ந்தது,

உயர்ந்தது, பெருகிற்று. அண்ணலின் எழுத்து படிநிலை வளர்ச்சியில் விகடனில் எழுதிய கட்டுரை ஒரு புதிய திருப்புமுனை. எளிமையில் எளிமை, எளிமையில் அருமை, எளிமையில் நுட்பம் என எல்லோரும் தமிழ்ச்சுவை நுகர வழிவகுத்தன, விகடன் கட்டுரைகள். இலக்கியத் தும்பிகள் வாரந்தோறும் விகடன் வரவுக்காகக் காத்திருந்த காட்சியை நான் நேரில் கண்டேன்.

இலக்கியத்தில் நயம் கண்டதில் முதுபெரும்புலவர் பண்டிதமணி கதிரேசனார்க்கு ஒப்புச் சொல்ல இயலாது. பண்டிதமணியை 'நயத் தந்தை' என மூதறிஞர் வ.சுப. மாணிக்கனார் வியந்து போற்றுவார். அவர் காலத்தில் ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் ரசனையில் புதுவகையை உருவாக்கினார். சொல்தோறும் வரிதோறும் நின்று சுவைப்பார். பாடல்களை மீண்டும் மீண்டும் படிப்பார்; சுவைஞர் அணி ஒன்று உருவாயிற்று.

திறனாய்வும் ஒப்பாய்வும் வளர்ந்துள்ள இக்காலத்தில் தமிழண்ணல் புதிய அணுகுமுறையில் இலக்கியத்தைச் சுவைப்பதற்கு இக்கட்டுரைகள் வாயிலாக வழிகாட்டியுள்ளார்.

இவர் பாடல்களைத் தேர்ந்தவிதம் சிறப்பானது. தரும் விளக்கங்கள் மிகச் சிறப்பானவை. இவரது சுவை உணர்திறனும் உணர்த்தும் திறனும் பாடல்களை முதலில் சொல்லோவியமாக்கி, கட்புலத்தில் காட்சிப்படுத்தி, ஆழ்மனத்தில் பதியச் செய்து விடுகிறது. பாட்டைப் படிக்கும்பொழுது தென்றல் வந்து மெய்யின்பம் தருவது போல மனத்திற் படிந்து, பாட்டின் தமிழ்மணத்தை நுகர்விக்கும். சொல்லும்பொழுது வாயும், கேட்கும்போது செவியும், பாடல்காட்சி வீடியோ காட்சிபோல நம் கண்முன் விரியும் போது கண்களும் களிப் பெய்துகின்றன. ஐம்புல நுகர்ச்சியும் ஒருங்கே பெற இவர் எழுத்து வழிவகை செய்கிறது. பாட்டின்பம் போலப் பேரின்பம் தருவது பாரில் வேறு இல்லை என்பான் பாரதி. எஃகு செவிஉடையார் மட்டுமன்றி எல்லோரும் கேட்டு இன்புறத்தக்க வகையில் ஓசை இன்பத்தை உணரும்படி செய்கிறார். வாசகன் பாட்டோடு கலத்தலை ஊன்கலந்து உயிர் கலந்து என்பார் வள்ளலார். அவ்வின்பம் உவட்டாமல் இருப்பதற்கு அண்ணலின் எழுத்துநெறி உறுதுணை செய்கிறது.

இவர் கைவண்ணத்தால் ஒவ்வொரு பாடலும் நம் நெஞ்சில் குடியேறுகிறது. தெளிவுற அறிந்திடுதல், தெளிவுற மொழிந்திடுதல் இவருக்குக் கைவந்த கலை. கட்டுரைகளைப் படிக்கும்பொழுது உள்ளத்தில் களிவர, ஆனந்தக் கனவு காணல் எனப் பாரதி சுட்டுமாப்போல கனவுகளை விரியச் செய்யும் திறன் இவரின் தனித்திறன்.

தமிழண்ணல்
துணைத் தலைவர்,
தமிழிலக்கியச் சங்கப் பலகை - குறள்பீடம்
ஒருங்கிணைப்பாளர் - தமிழ்ச் சான்றோர் பேரவை

# நன்றி மலர்கள்

'ஆனந்தவிகடனி'ல் முப்பத்தாறு வாரம் தொடர்ந்து வெளிவந்த 'இனிக்கும் இலக்கியம்', இந்நூல் வடிவில் வெளிவருகிறது. இதிலுள்ள 41 கட்டுரைகளில் - 36 முதல் 40 வரையுள்ளவை - 5 கட்டுரைகள் - அதற்காக எழுதப்பட்ட குறிப்பிலிருந்து, பிறகு இந்நூலுக்காக எழுதிச் சேர்க்கப் பெற்றவை.

35 வரை உள்ளனவும் 41ஆம் கட்டுரையும் விகடனில் வெளிவந்தவை. யான் கட்டுரைகளை மட்டுமே அனுப்பினேன். ஒவ்வொன்றின் தலைப்பும் ஆ.வி.யின் துணையாசிரியர்கள் இட்டவை. முதல்சில வாரங்களிலேயே தலைப்பிடும் இதழியல் கலைநுட்பத்தை விளங்கிக்கொண்டேன்.

தமிழில் வெளிவரும் நாளிதழ்களில் 'தினமணி' ஒன்றுதான், இலக்கியத்திற்கும் மொழிக்கும் உரிய இடம் தருகிறது. டி.எஸ். சொக்கலிங்கம், ஏ.என். சிவராமன் காலம் முதல் பல பரிமாணங்களைப் பெற்று வளர்ந்த அந்நாளேடு, ஐராவதம் மகாதேவன் காலத்தில், ஆங்கில நாளேடுகளுக்கு நிகரான தரத்தைப் பெற்றது. இன்று தமிழ்மொழி, இலக்கியம், சமுதாயம் ஆகியவற்றுக்கு அந்நாளிதழ், வரலாறு போற்றும் பணியையும் செய்கிறது. தம்மை வெளிப்படுத்திக்கொள்ள விரும்பாமல் தாம் ஆசிரியப் பொறுப்பேற்றிருக்கும் இதழின் தரத்தையே வெளிப்படுத்தும் ஓர் ஆசிரியர், தமிழ் நாளேட்டிற்குக் கிடைத்திருப்பது, தமிழ் செய்த தவப்பேறேயாகும்.

ஆங்கில நாளேடுகள், தமிழ்நூல்களை 'வரப்பெற்றோம்' என வெளிப்படுத்தியும் மதிப்புரை எழுதியும் பதிவு செய்யும் அளவு, தமிழ்நாளேடுகள் செய்வதில்லை என்பது வருந்தத்தக்கது.

தமிழ் இதழ்கள் இலக்கியத்திற்கும் சில பக்கங்கள் ஒதுக்கவேண்டும். தமிழில் வெளிவரும் நூல்களைப் பதிவு செய்யவேண்டும். இது ஒரு மொழியில் இதழ் நடத்துபவருக்குப் 'பத்திரிகை தருமம்' என நெஞ்சிற்படுவதில்லை.

'ஆனந்தவிகடன்' முன்பு வாரந்தோறும் 'எனக்குப் பிடித்த புத்தகம்' என்று, ஒரு புதிய தமிழ்நூலுக்கு, மதிப்புரை எழுதச்செய்து, வெளியிட்டு வந்தது. எனது 'தாலாட்டு' என்ற நூலை, 'எனக்குப் பிடித்த புத்தகம்' என்று, ஹேமா ஆனந்ததீர்த்தன் எழுதிய கட்டுரை, வெளிவந்ததால், அத்தொடர் என் மனத்தில் பசுமையாய் நிலைபெற்றுள்ளது.

பொதுவாகத் தமிழறிஞர்களைக் கண்டாலே, தமிழ்ப் படைப்பாளிகள் பலருக்குப் பிடிப்பதில்லை. காரணம், தாழ்வு மனப்பான்மையே. அவர்களில் பலருக்கு மொழியறிவு குறைவு. தமிழ்ப் புலவர்கள் மொழி நடையிலும் சொற் படைப்பிலும் நாட்டம் கொள்வது, அவர்கள் கற்ற கல்வியின் பயனாகும். ஒரு மொழியில் எழுத்தாளனாக வருகின்றவர், சிறிது சிறிதாகவேனும், அம்மொழியிலும் 'ஆளுமை' பெறுவதே முறையாகும். அம்மொழியில் எழுதிக்கொண்டே, "எனக்கு மொழி தெரியாதென்றும்; எனக்குத் தெரிந்த மொழியில் எழுதுவேன்; அதுதான் எனது மொழி" என்றும் இவ்வாறு பேசுவதும், தமிழ்ப் புலவர்களையும் தமிழிலக்கணத்தையும் கிண்டல் செய்வதும் சிலரது 'பெருமைக்குரிய' செயல்களாகும். ஆங்கிலம் ஆங்கிலம் என்று கதைப்பவர்கள் ஆங்கிலத்தில் கதை கவிதை கட்டுரை எழுதும்போது ஆங்கில மொழியறிவு வேண்டாமென்றோ; நான் எழுதுவதுதான் ஆங்கிலமென்றோ சொல்ல ஏன் வெட்கப்படுகிறார்கள்?

மு.வ. அவர்கள் கரித்துண்டு, அகல்விளக்கு, மண்குடிசை எனப் பல நாவல்களை எழுதினார். அவை பல நூறாயிரம் வாசகர்களால் வரவேற்கப்பட்டு வாங்கிப் படிக்கப் பெற்றன. எனக்குத் தெரிய ஒருகாலத்தில், கல்கியின் புதினங்களும் மு.வ.வின் புதினங்களுமே மிகக் கூடுதலாக விற்பனை ஆயின.

வாசகர்கள் ஏற்றுக்கொண்ட மு.வ. என்ற படைப்பாளியை, ஏனைய படைப்பாளர் சிலர் ஏற்றுக் கொள்வதில்லை. அத்தகைய சூழலிலும் மு.வ. அவர்கள் வீடுதேடிச்சென்று, திரு எஸ்.எஸ். வாசன் அவர்கள் ஆ.வி.யில் கட்டுரைகள் பெற்று, வெளியிட்ட வரலாற்றை யான் அறிவேன்.

என்னையும் என் எழுத்தையும் ஏற்று, மதித்து, நான் எழுதியவாறே வெளியிட்டு, என்னைப் பெருமைப்படுத்திய 'ஆனந்தவிகடன்' ஆசிரியர் திரு எஸ். பாலசுப்பிரமணியன்

அவர்களுக்கும் துணை ஆசிரியர்களுக்கும் எனது மனமுவந்த நன்றி உரியதாகும்.

ஏனைய இதழ்களும் இதுபோல் தமிழ்மொழி, இலக்கியத்திற்கு வாரத்தில் ஒரு நாளேனும், இதழின் அமைப்பில் ஒன்றிரண்டு பக்கங்களையேனும் ஒதுக்கி, தமிழறிஞர்களுக்கும் இடம் தந்து, மொழி வழக்கின் இடைவெளியைக் குறைத்து, மேலைநாட்டு இதழ்களைப் போலப் பெருமை பெறவேண்டுமென்பதே என் விருப்பமாகும்.

ஆங்கில நாளேடுகள், இதழ்கள் யாவும் ஆங்கில மொழியின் தரத்தைக் குறைப்பதில்லை. மேன்மேலும் செறிவும் நிறைவும் பொருந்திய மொழிநடையைக் கையாண்டு, தாம் பயன்படுத்தும் 'மொழி' என்ற கருவியைச் சீர்மையும் கூர்மையும் உடையதாக்குவதை நாம் ஏன் ஒரு முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது?

'ஆனந்த விகடன்' - மக்கள் இதழாக மலர்வதுடன், தரம் தாழாது; பல நூறாயிரம் மக்களுக்குச் சென்று சேர்வதிலும் குறைபடாது வளர்வதைப் பார்த்து மகிழ்ச்சியடைபவர்களில் யானும் ஒருவன்.

பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் 'இனிக்கும் இலக்கியத்தை' மணிவாசகர் பதிப்பக வாயிலாக வெளியிடும் ஆர்வத்தைத் தொடக்கம் முதலே கூறிவந்ததுடன், என்னை ஊக்கப்படுத்தியும் உதவியும் வருவதற்கு நான் மனமார்ந்த நன்றி கூறும் கடப்பாடுடையேன்.

எனக்கென்று எனது நூல்கள் வாயிலாகவும் இவ்விதழ்கள் வாயிலாகவும் மிகக் கூடுதலான 'வாசகர் உலகம்' கிடைத்துளது. என்னை நினைந்தும், முடிந்தால் கடிதமெழுதியும் நேரிலுமாக என்னைப் பாராட்டி, ஊக்கமளித்துவரும் அவர்களுடன் 'மனத்துக்கு மனம்' உறவுகொண்டாடும் வாய்ப்பைத் தந்துள்ள 'இறையருளே' நான் பெறுகின்ற விருதும் பரிசும் பாராட்டுமாகும்!

தமிழண்ணல்

27-9-2000
நெற்குப்பை,
சிவகங்கை மாவட்டம் - 630 405

# உள்ளுறை


1. இனிக்கும் இலக்கியம் 11
2. அயல்மொழி அறிஞரைக் கவர்ந்த அந்த மூன்று குறள்கள் 17
3. கம்பரின் காமிரா 22
4. படிப்படியான படப்பிடிப்பு 27
5. ஒரேவரியில் ஒரு நாவல்! 35
6. காதல் அகராதி 41
7. கவிதையின் ஒளி! 49
8. உள்ளிருக்கும் 'அந்த' ஆசை! 54
9. தங்கத்திலே தொட்டில் கட்டி 59
10. கிளி விரட்டிய கிளி 63
11. ஓடுகிறாள் கதவு திறக்க மூடுகிறாள் நாணம் தடுக்க 68
12. சுற்றி வளைத்தால் கவிதை! 73
13. பரக்கப் பரக்கப் பறக்கிறதே 79
14. பறவை பறக்குது மனசு துடிக்குது! 84
15. காதல் மனத்தின் வலிமை 88
16. காவியமா? ஓவியமா? 92
17. சொக்கியிடம் சொக்கி 97
18. சிற்பமே கவிதையாக 101
19. ஆலம்விதையில் ஆச்சரியம்! 105
20. காதலினால் கவலைபோகும் 109

21. ஒருசிக்கல் மேலும் முறுக்கேறுகிறது! 114
22. சிலம்பின்முடிவு! 120
23. எதுகை, மோனை என்றென்றும் பகையா? 127
24. பூக்களைப் பறிக்காதீர்கள்! 132
25. ஒலிஅழகுச் சிறகுகள்! 139
26. உயிரை உண்ணும் முறுவல்! 144
27. கண்ணன் பாட்டு 148
28. மனைவி இட்ட ஆணை! 154
29. வேண்டுவதை வேண்டுவதா! 159
30. முதல்வர் தந்த ஊக்கம்! 164
31. வாழ்க்கையெனும் பயணம் 169
32. வாழ்த்தினால் வாழலாம்! 173
33. சந்திரனும் சூரியனும்போல 177
34. இணக்கம் அறிதல்! 183
35. யானையா? மரமா? 187
36. கவிகாட்டும் நடையழகு 193
37. உலக வியப்புக்களில் ஒன்று! 198
38. கதவு பேசுகிறது! 203
39. காகிதப்பூ நடையழகு 207
40. வாழையடி வாழை 212
41. முத்துக் குளிக்க வாருங்கள் 221

# 1

# இனிக்கும் இலக்கியம்

உரைநடையில் எழுதும் ஆயிரமும் ஒரு கருத்தைத் தெரிவிக்கலாம். அது சுவையாக இருக்க வேண்டுமென்ப தில்லை. ஆனால் கவிதை, காப்பியம், இலக்கியம், கதை நாடகப் படைப்புக்கள் எல்லாம் சுவையாக இருக்க வேண்டும். திரும்ப நினைத்துப் பார்க்கும்போதும் அலுப்புத் தட்டாமல், சுவையாக இருந்து தீர வேண்டும். சுவை யில்லாதது இலக்கியம் ஆகாது.

சுவைபடத் திரும்பச் சொல்லும்படி, திரும்ப நினைத்துப் பார்க்கும்படி, பேச்சினிடையே ஒரு தொடர் வந்துவிட்டால்கூட, அதில் இலக்கியச் சாயல் படிந்துவிடும். ஆட்டோ ஒன்றில் 'கல்லறை போகும்வரை சில்லறை தேவை' என எழுதியிருந்தது. பிறகு அது பல தடவை நினைவு வந்தது; அதை மறக்கவிடவில்லை. அப்படியென்றால், அதில் இருக்கும் இலக்கியச் சாயலை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

அமெரிக்காவுக்குத் தமிழன்பனுடன் சென்றிருந்த போது, ஓர் அறிவிப்பு கண்ணில்பட்டது. 'தயவு செய்து மல்லாந்து படுத்துக்கொண்டு, சிகரெட்டுப் பிடிக்காதீர்கள்;

உதிர்வது உங்கள் சாம்பலாகவும் இருக்கலாம்.' புகழ்வாய்ந்த கவிஞரான அவரே திகைத்துப் போனார். அதைத் திரும்பத் திரும்பச் சொல்ல வைத்தது; திரும்பத் திரும்ப நினைக்க வைத்தது.

'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பதற்கு என்ன பொருள்? உப்பு-சுவை என்றுதான் பொருள். சுவையில்லா ததை மனிதன் உண்ணமாட்டான்; தூக்கி எறிந்துவிடுவான். உணவு அறுசுவையுடையது; இனிப்பு, புளிப்பு, கைப்பு, துவர்ப்பு, கரிப்பு அல்லது உவர்ப்பு, (காரம் உள்ள) கார்ப்பு. எல்லாவற்றிலும் கடைசியில் 'உப்பு' இருப்பதைக் கவனித் தால், உப்பு என்பதற்குச் சுவை என்ற பெதுப்பொருளே முன்பு இருந்தமை புலப்படும். உவர்ப்பு ஒன்றை மட்டும் இன்று உப்பு என்பது, அதன் சுவை மிகுதி கருதி வந்து விட்டது. அதுபோல, இலக்கியத்தில் சுவை தேவைப்படாத சாந்தம் நீங்கலாக எட்டுச் சுவைகள் இருக்கவேண்டும். இந்தச் சுவையை உண்டாக்குவதற்கு, கவிஞன் எத்தனையோ வழிகளைக் கண்டுபிடித்துக் கையாள்கிறான்.

'இன்டர்மீடியட்டு' எனப்படும் இடைநிலைக் கல்வி பயின்றபோது **'கட்டுரையாளனின் கலை'** என்ற ஒரு பாடம் ஆங்கில உரைநடைப் புத்தகத்தில் வந்திருந்தது. இலக்கியப் படைப்பாளன் நாம் காண்பதைத்தான் அவனும் பார்க்கின் றான்; நாம் கேட்பதைத் தான் அவனும் கேட்கிறான்; நாம் அனுபவிப்பது போலவே அவனும் நுகர்ந்து இன்புறு கின்றான். ஆனால், அவற்றிலிருந்து அவன் ஒன்றைப் படைத்து, நம்மை வியப்பிலாழ்த்துகின்றான். 'அடே, நாமும்தானே அதைப் பார்த்தோம்; இந்த மாதிரி நமக்குத் தோன்றாமல் போய்விட்டதே' என்று வியக்க வைத்து விடுகின்றான். நாம் கண்டும் காணாத; கேட்டும் உணராத ஒன்று அவனுக்குப் புலப்படுகிறது. அல்லது அதை அவன் சொல்லும் முறை நம்மை ஈர்த்துவிடுகிறது. திரும்பத் திரும்ப நினைத்துப் பார்க்கிறோம்.

ஔவையாரின் நீதி நூல்கள் மிக எளிமையானவை; ஆனால், பொருள் ஆழத்தாலும் சொல்லும் திறமையாலும் மிக அருமையானவை. மாணிக்கவாசகர் இறைவனை 'அருமையில் எளிய அழகே போற்றி,' என்றார். 'அருமையில் அரிய' என்றுதான் நாம் பாடி இருப்போம். அவரோ அருமை எளிமையாக இருக்க வேண்டுமென எண்ணினார். அருமை யுடைய இறைவன் எளிவந்தபிரானாக வந்து அருள் செய்யவும் வேண்டும். அதனால்தான் இறைவனை 'அருமையில் எளிய அழகு' என்றார் அவர். அருமையும் எளிமையும் கலந்ததுதான் அழகு என்று ஆகிறது. இஃது இலக்கியத்துக்கும் பொருந்தும்.

ஔவையாரின் 'நல்வழி' கடவுள் வாழ்த்து ஒன்றைப் பார்த்தாலே, இவ்வுண்மையை நிறுவலாம். மிகமிக எளிமை யான பாட்டு, எல்லோர்க்கும் தெரிந்த பாட்டு, முன்பு மழலையர்க்குச் சொல்லிக் கொடுக்கும் பாட்டு அது.

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான்தருவேன்– கோலஞ்செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீஎனக்குச்*
*சங்கத் தமிழ்மூன்றுந் தா!*

ஒரு சிறுவனிடம் வெற்றிலை வாங்கிவரச் சொல்லும் போதும் அவனைப் பாராட்டி, "டே சமர்த்து! கெட்டிக்காரப் பயலே! இங்கே வாடா! பக்கத்துக் கடையிலே கொஞ்சம் வெற்றிலை வாங்கிவா!" என்றால் மகிழ்ச்சியோடு போய் வருவான். கூப்பிடும்போதே 'அட, தடியா' என்றால்-ஒன்று, போகமாட்டான்; அல்லது முனங்கிக் கொண்டே போவான். இது உளவியல்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், கடிதம் எழுதும் போது,

'அன்புள்ள தம்பி, நீ தன் முயற்சியுடையவன். வாழ்வில் வெற்றி பெறுவாய். உன் கட்டுரை ஒன்று கண்டேன், மிக அருமையாக இருந்தது. நீயும் உன் மனைவி மக்களும் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறேன். கீழ்க்கண்ட புத்தகத்தை வாங்கியனுப்ப வேண்டுகிறேன்' என்று குறிப்பிடு வார். கடைசி வரிதான் செய்தி. அதனை வாங்கியனுப்புவதில் சிரமம் தோன்றாமல் இருக்கவே, முன்னைய வரிகள். புத்தகத்தை வாங்கி அனுப்பவே தோன்றும்; நீடூழி வாழ லாமே! ஔவையார் பிள்ளையாரைப் பார்த்து, 'துங்கக் கரிமுகத்துத் தூமணியே!' என்று அழைக்கிறார். 'உயர்ந்த சிறந்த யானை முகத்தை உடைய தூய மாணிக்கமே' என்றதும், உறுதியாக அவர் திரும்பிப் பார்ப்பார்! யார் அவர் முகத்தை இவ்வளவு பாராட்டப் போகிறார்கள்?

ஓர் ஆட்டோக்காரனிடம் நாம் பேரம் பேசுவதைப் பார்த்தால், மற்றுமொரு உளவியல் விளங்கும். ஓரிடத்துக்கு அவன் எழுபது கேட்டால், நாம் நாற்பதில் தொடங்கி, இருவரும் ஐம்பதிலோ அறுபதிலோ முடிப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிடும். ஒரு கூடைக்காரியிடம் கீரை வாங்கும்போது கூட, ஒரு காசாவது கூடுதலாக வாங்கிவிட அவளுக்கும், ஒரு கொத்தாவது கூடுதலாக வாங்கிவிட. நமக்கும் ஆசை போட்டியிடுவதை வேடிக்கை பார்க்கலாம். தனக்கென்று சற்றுக்கூடுதல் இலாபமென்றால் மகிழ்ச்சிதான். ஔவையார், 'நாலும் கலந்துனக்கு நான் தருகிறேன்; நீ மூன்று மட்டும் தா' என்று கேட்கிறார். மேலும் தாம் கொடுக்கும் நான்கையும் மூன்று அடிகளில், மிக விரிவாகக் கொட்டி முழக்கி, 'சங்கத் தமிழ்மூன்றும் தா' என்று மூன்றே சீரில் முடிக்கிறார். ஏதோ இந்தப் பேரத்தில், பிள்ளையாருக்குத்தான் நல்ல இலாபம் என்பதுபோல் பேசுகிறார். கொஞ்சம் மனம் மகிழ்ந்த நிலையில், பேரம் இனிதாக முடியும்; தமக்கு மூன்று தமிழும் கிடைக்குமென நம்பி, அவர் பாடியிருக்கும் திறம்

படித்துப் படித்துச் சுவைக்கவும் நினைத்து நினைத்துச் சிரிக்கவும் வைக்கிறது.

பாலும் தெளிதேனும் பாகும்பருப்புமென நீட்டி முழக்கியவர், இயலும் இசையும் நாடகமுமாகிய முத்தமிழும் என்றோ, படிக்க இனிக்கும் இயற்றமிழும் அதனுடன் கேட்க மகிழ்ச்சிதரும் இசைத்தமிழும் அதற்கும் மேலாகப் பார்த்தும் இன்புறக்கூடிய நாடகத்தமிழும் என்று சங்கத் தமிழைப் பற்றியே மேலும் பல அடிகள் பாடி விரிவாகக் கேட்டிருக்க லாமே? 'சங்கத் தமிழ்மூன்றும் தா' என்று ஏதோ எளிதான மூன்றைக் கேட்பது போல் முடிக்கும் உத்தியின் சிறப்பு, நம்மை அறியாமலேயே ஒரு மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. இவ்வாறு பொருளனைத்தையும் விளக்கமாக அறியா விட்டாலும் மனிதனின் உள்ளுணர்வு அதைப் பற்றிக் கொள்ளவே செய்கிறது. அதனால்தான் அந்தப் பாட்டு, படிப்பவரைப் பற்றிக்கொண்டு நினைவில் நிற்கிறது. இன்றும் என்றும் நிலைத்து வாழ்கிறது!

திருக்குறளை எல்லோரும் படிக்கிறோம். சிறந்த ஆய்வாளரைக்கூட முன்னே நிற்கவைத்து, 'தங்களுக்குப் பிடித்த ஒரு குறளைக் கூறுங்கள்' என்றால், உடனே பதில் சொல்ல முடியாமல் விழிப்பார்.

குசராத்தைச் சேர்ந்த உமா சங்கர் ஜோஷி, நாட்டுத் தந்தையின் அடியொற்றி வாழ்ந்தவர். சான்றோர் பெருந்தகை. நெடிய தோற்றமும் தாள்தொடு தடக்கையுமுடைய ஆளுமை மிக்க பேரறிவாளர். பத்தாண்டுகளுக்கு முன், தில்லி சாகித்திய அகாதெமியின், இரவீந்திர பவன் கட்டடத்தில் குளிர்சாதன மண்டபத்தில் அவர் சிறப்புரை ஆற்றினார். ஆண்டுக்கு ஒரு முறை, மூன்று நாள் நடக்கும் 'சம்வத்சர லெச்சர்' எனப்படும் சிறப்புரை அது. தலைப்பு: 'இந்திய இலக்கியம் என்னும் கருத்துரு' (The Idea of Indian Literature).

இந்திய இலக்கியம் பல மொழிகளிலிருப்பினும் அவற்றிடையே ஒரு பொதுமையும் உண்டு என்பது பேச்சின் சாரம்.

அந்த உரையில் தமிழ் இலக்கியம் பற்றியும் குறிப்பிட்டார். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், பக்தி இலக்கியம் என எல்லாமே இடம் பெற்றன. அவற்றுள் திருக்குறள் பற்றிக் குறிப்பிட்டு, அதன் சிறப்புக்குச் சான்று காட்டுவதுபோல மூன்று குறள்களை ஆங்கிலத்தில் மிகத் தெளிவாக நிறுத்திப் படித்தார். அந்த அவையில் நானும் தீபம் நா. பார்த்தசாரதியும் இருந்தோம். மற்ற அனைவரும் பிறமொழியாளர்கள். ஒவ்வொரு குறளைப் படித்து முடித்ததும், அவையோர் வரவேற்றது வியப்பை அளித்தது. குறளின் ஆளுமை - வீச்சு அப்போது விளங்கியது. நகைச்சுவைக்கும் வெற்றாரவாரத்துக்கும் மட்டுமே கைதட்டிப் பழக்கப்பட்டவர்கள் நம் தமிழர்கள். ஆனால், கருத்துச் செறிவை ஆரவாரம் செய்து வரவேற்ற, அந்த வடநாட்டு மக்கள் கவிதையை, இலக்கியத்தை மிகுந்த மகிழ்ச்சியுடன் கேட்டுப் பழக்கப் பட்டவர்கள்.

தமிழே தெரியாதாரும் இரசித்த அந்த மூன்று குறள்கள் யாவை என அடுத்துப் பார்ப்போம்.

# 2

# அயல்மொழி அறிஞரைக் கவர்ந்த அந்த மூன்று குறள்கள்

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில், திருக்குறள் துறைக்கு நேர்காணல் நடந்து கொண்டிருந்தது. ஒரு விரிவுரையாளர் பதவிக்குப் பலர் வந்திருந்தனர். அவர்களில் ஒருவர், திருக்குறளை விவிலியச் சிந்தனைகளுடன் ஒப்பிட்டு 'டாக்டர்' பட்டம் பெற்றவர். அவரிடம் அன்றைய துணைவேந்தர் ஜே. இராமச்சந்திரன், "உங்களுக்குப் பிடித்த மான சில குறள்களைக் கூறுங்கள்..." என்று கேட்டார். வந்திருந்தவர் மௌனமாயிருக்கவே, "ஒரே ஒரு குறள் சொல் லுங்கள்; ஒரு குறளின் கருத்தையாவது சொல்லுங்கள்..." என்றெல்லாம் மன்றாடிப் பார்த்தார். பதிலே கிடைக்க வில்லை. அவர் போனபிறகு, "என்ன பேராசிரியர்! இவர் எப்படிக் குறளில் டாக்டர் பட்டம் பெற்றார்...?" என வினவி னார். நான், "இன்றைய நிலை அது..." என ஏதோ சொல்லித் தமிழாசிரியரின் மானத்தைக் காப்பாற்ற முயன்றேன்.

ஒரு முறை மதுரை தியாகராசர் கல்லூரிக்கு, காந்தியடி களைத் தமது இல்லத்திலேயே வரவேற்ற தமிழ்க்கடல் இராய.சொ. பேச வந்திருந்தார். கலைத் தந்தை கருமுத்து

தியாகராசர் அவரை வரவழைத்து, அன்று தலைமை தாங்கினார். ஒரு பேராசிரிய நண்பர், "என்ன ஐயா, தமிழ்க்கடல்...? ஆறு, குளம் இல்லையா...? அவ்வளவு ஆழமா, அகலமா...?" என்றெல்லாம் கேலி பேசினார். இராய. சொ. அன்று கம்பராமாயணம், திருமுறைகள், திவ்வியப் பிரபந்தம் போன்றவற்றிலிருந்து நூற்றுக்கணக்கான பாடல்களை - அடிகளை - தொடர்களை எவ்வி ,றிப்புமின்றி, சிறிது தயக்கமோ, தடங்கலோ இன்றி எடு துச் சொல்லி, மிக விரிவான ஒரு சொற்பொழிவ ற்றி முடித்தார். மறுநாள் காலை அதே நண்பர், "தமிழ்க்கடல் என்றால், கடல் தானய்யா..." என்று வெகுவாக, அதே வாயால் புகழ்ந்தார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால், அவ்வாறு கிண்டல் பேசியவர் ஒரு தமிழாசிரியர்!

இலக்கியம் என்றால், அவ்வாறு நினைவில் நிற்க வேண்டும்; நிற்கவைத்து மகிழ்ந்தனர் நம் முன்னோர்.

இன்று பழக்கம் மாறிவிட்டது. எதற்கும் பார்வைநூல் பார்த்துப் பார்த்து எழுத, பேசப் பழகிவிட்ட காலம். நல்ல வேளையாகக் கணினி வந்துவிட்டது. அமெரிக்க நாட்டு கம்ப்யூட்டர்கள்கூட நம் திருக்குறளை, திவ்வியப் பிரபந்தத்தை, திருமுறைகளை உடனுக்குடன் எழுதிக் காட்டுகின்றன. தேவைப்பட்டால், வாய்விட்டுப் படித்தும் காட்டுகின்றன. ஆஸ்ட்டின் பல்கலைக்கழக கணினி ஒன்றில், நானும் கவிஞர் ஈரோடு தமிழன்பனும் குறுந்தொகைப் பாட்டொன்றின் முதற்சொல்லை வருமாறு செய்தோம். உடனே து, முழுப்பாட்டையும் எங்களுக்கு ஒப்பித்தது.

ஆனாலும் ம ர்களாகிய நாமே படித்து, நம் னைவில் வைத்து, அப்பாடலடிகளைச் சுவைத்துச் வைத்து அனுபவம் பெறுவதற்கு ஈடாகுமா அது...? திருக்குறளைப் பொறுத்தவரை, நம்மில் பலர் சொன்ன குறள்களையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டி

ருக்கிறோம். ஒரு கணக்கெடுத்தால், நாம் பயன்படுத்துவன இருநூறு அல்லது முந்நூறு குறள்களே என்பது விளங்கும். மற்றவையெல்லாம் உரை எழுதுபவர்கள் மட்டுமே, ஒரு முறை பார்க்கும் குறள்களாகும். மேனாட்டவர், பிறமொழி யாளர்கள் பலர் தங்களுக்குப் பிடித்தமான குறள்கள் என்று சிலவற்றைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். டால்ஸ்டாய் தமது `The Hindu Kural' என்ற கட்டுரையில் 'இன்னா செய்யாமைக் குறள்கள்' தமக்கு மிகப் பிடித்தவை எனக் குறிப்பிட்டுள்ளார். ஆல்பர்ட்டு சுவைட்சர் முப்பத்திரண்டு குறள்களைக் காட்டிப் பாராட்டுகிறார். நாமோ யாராவது கேட்டால் "எல்லாக் குறள்களுமே பிடிக்கும்..." என்று கூறி விடுவோம். ஏதேனும் ஒன்றிரண்டு குறள்கள் என்றால், அவற்றைச் சொல்லியாக வேண்டுமே!

முன்பு குறிப்பிட்டபடி, **உமா சங்கர் ஜோஷி** விளக்கிய குறள்கள் இவைதான்:

'வறுமையைவிட இன்னாதது-துன்பம் தருவது எது? வறுமையை விடத் துன்பம் தருவது அவ்வறுமையே; பிறிதில்லை...' என்று வள்ளுவர் கூறுகிறார். உலகில் பசித் துன்பமாம் வறுமைக்கு அப்பாற்பட்டுத் துன்பம் தருவது, பிறிதொன்று இல்லை. அது, பல நாள் பட்டினி கிடந்தவனுக்குத்தான் தெரியும்.

> இன்மையின் இன்னாதது யாதெனின், இன்மையின்
> இன்மையே இன்னா தது. (1041)

தமிழில இதைப் படிக்கும் நமக்கு, இதன் அருமை தெரிவதில்லை. ஒரு பிறமொழியாளர், குறள் மொழி பெயர்ப்பை முழுவதும் படித்து, இப்படி ஒரு நினைவில் நிற்கும் குறளைத் தேர்ந்தெடுக்கிறார். அடுத்த குறள்:

> தேவர் அனையர் கயவர்; அவரும்தாம்
> மேவன செய்தொழுக லான். (1073)

தேவர்களும் தாம் நினைத்தபடி வாழக்கூடிய எல்லாச் செல்வமும் பெற்றவர்கள். கயவர்களையும் யாரும் கட்டுப்படுத்த முடியாது. நினைத்தபடி வாழ்வார்கள்! இதிலுள்ள எள்ளல் எனப்படும் 'Satire' அவரால் விளக்கப் பட்டபோது, முன்னிலும் பெரிய ஆரவாரம் ஏற்பட்டது.

கடைசியாக, அவர் ஒரு குறள் சொன்னபோது விழுந்து விழுந்து சிரித்துக் கைதட்டினார்கள்.

*பெரிதுஇனிது பேதையார் கேண்மை; பிரிவின்கண்*
*பீழை தருவதுஒன்று இல்.* (839)

முட்டாள்களோடு நட்புக்கொள்வது மிகவும் இனிது. ஏனெனில், பிரியும்போது அது எவ்விதத் துன்பமும் தருவ தில்லை. அதனால் நன்மையே தவிர, கேடு இல்லை. பேதை யாருடன் தெரியாத்தனமாக நட்புக்கொண்டுவிட்டால், அது விட்டுப்போவது நல்லதுதானே! இதைச் சொல்லியுள்ள விதந்தான், இலக்கியத் தரமாக, நினைக்கும் போதெல்லாம் இன்சுவை பயக்கிறது. 'பெரிது இனிது' என்று தொடங்குவதே சுவையை மிகுவித்துவிடுகிறது.

அறம் எல்லோரும் சொல்லலாம். அது எளிது. ஆனால், திருவள்ளுவர் சொல்லியுள்ளதுபோல், சொல்வதுதான் கடினம்! திருக்குறள் படித்ததும் மனத்தில் பதியும்படியும் நினைவில் நிற்கும்படியும் எழுதப்பட்டு இருப்பதை இதனால் அறியலாம். எங்ஙனமாயினும் மொழிபெயர்ப்பைப் படித்தே, இப்படிப் பலரும் பாராட்டும்படியான மூன்று குறள்களைத் தேர்ந்தெடுத்த உமாசங்கர் ஜோஷியை மறக்க முடியுமா...?

இவ்வாறு நிகழ்ச்சிகளையும் சுவைபடச் சொல்வதில் கம்பர் நிகரற்றவர். இராமன் வில்லை முறித்த செய்தி தயரதனுக்குத் தெரிவிக்கப்பட்டு, தயரதன் 'மந்திரிப் பிரதானியர்களோடு' மிதிலை சேர்கிறான். திருமணம் நடக்கிறது. ஆனால் கம்பர், வால்மீகியைப் போல் கதையைக்

கூறிப் போகாமல், தமிழ்நாட்டு மரபுக்கேற்ப, மாப்பிள்ளை ஊர்வலம் நடத்த விரும்புகிறார். திருமணத்துக்கு முதல் நாள் மாப்பிள்ளை பெண்ணுள்ள ஊரில் ஊர்வலமாகச் செல் வதும் அவ்வூர்ப் பெண்கள் 'மாப்பிள்ளை எப்படி...?' என்று திரண்டு கூடிநின்று பார்ப்பதும் இங்குள்ள வழக்கமல்லவா...? அதை நிகழ்த்திக் காட்ட கம்பர் ஆசைப்படுகிறார். மிதிலை எல்லைக்குத் தயரதன் வந்ததும், இராமன் முன்னே சென்று, அங்கேயே தந்தையைச் சந்திக்கிறான். தயரதனோ, 'தம்பியருடன் நீ முன்னே செல்; நான் பின்னால் வருகிறேன்' என்று கூறி, இராமனைத் தம்பியருடன் செல்லப் பணிக்கிறான். இவ்வாறு மாப்பிள்ளை ஊர்வலம் நடக்கிறது. நீங்கள் இதை எவ்வாறு வருணிப்பீர்கள்...? மனத்தில் கற்பனை செய்துவைத்துக் கொள்ளுங்கள். பிறகு, கம்பர் எவ்வாறு இதை ஒரு திரைப்படக் காட்சியாகக் காட்டுகிறார் என்பதைக் காண்போம்.

# 3

# கம்பரின் 'நகரும் காமிரா!'

கம்பர் எத்தனையோ புதுப்புது உத்திகளைக் கையாள்கிறார். இன்றைய திரைப்படம் போல, ஒரு காட்சியைப் படம் பிடிக்கிறார். சில காட்சிகளை வீடியோவிற் போல நகர்த்துகிறார். சில இடங்களில், பாத்திரங்கள் பேசாமலேயே, முகத்தினால் மட்டும் பேசவைக்கிறார், கமலகாசன் நடித்த 'பேசும்படம்' போல. இன்னும் நாடகவுத்திகளாக அவர் பயன்படுத்துவன பல. நாடக உத்தியே என்றாலும் அவர் கைவசமிருந்த கவிதை, ஒரு ஒளிப்படக் கருவி (Camera) போல அல்லவா வேலை செய்கிறது? அது 'ஸ்டில்ஸ்' (Stills) எனப்படும், சில நிலைப்படங்களை எடுத்து, அப்படங்கள் காலத்தால் அழியாமல் இன்றும் நின்று நிலவச் செய்துள்ளது. அவரிடம் `Movie Camera' கூட இருந்திருக்கிறது. அந்த நகரும் ஒளிப்படக் கருவி, கவிதை வடிவில் நம் கண்முன், தொலைக் காட்சியை அருகில் இருந்து பார்ப்பது போலக் காட்சிகளை நகர்த்துகிறது; ஓடவைக்கிறது!

என்ன சிரிக்கிறீர்கள்? பாவம் நீங்கள் என்ன செய்வீர்கள்! கதை கேட்டுக் கேட்டுப் பட்டிமன்றம் பார்த்துப் பழக்கப்பட்டவர்கள். கதை தெரிந்தால் போதாது; கதை

எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதும் தெரிய வேண்டும். அதனால்தான் சேக்ஸ்பியரை ஆராய்ந்த பிராட்லி சொன்னார், 'எது சொல்லப்பட்டிருக்கிறது என்பதை விட, எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும்' என்று. பட்டிமன்றத்தில் இது முடியாது. அங்கே பொழுதுபோக்கக் கூடுகிறார்கள். இவற்றையெல்லாம் சொல்லத் தொடங்கினால், பேசுபவர்களைத் தவிர யாரும் இருக்கமாட்டார்கள். ஆனால் கதை, நாவல், கவிதை, நாடகம், திரைப்படம் என்று படைப்புக்கலையில் நுழை பவர்கள் இதில் கவனம் செலுத்தவேண்டும். செலுத்தினால் அவர்களின் படைப்பாக்கத் திறன் வளரும். 'நான் யாரையும் படிக்கத் தேவை இல்லை; நானே பிரம்மா; நான் படைப்பதே எழுத்து; பிடித்தால் படி, இல்லாவிட்டால் போ' என்று நம் எழுத்தாளர் சிலர் அடம் பிடிக்கிறார்கள். வளரும் இளைஞர்கள் உலகளாவிய, பல மொழி இலக்கியம், நமது இந்திய - அல்லது நம் தாய்மொழி இலக்கிய அறிவுடன், அவற்றிலுள்ள படைப்பாக்க உத்திகளை (Creativity) தெரிந்து கொள்வது நல்லது. நாமும் தொட்டகலை யாதாயினும் அதன் உச்சத்தைத் தொடவேண்டாமா?

கம்பர் கையாளும், மனத்தைக் கவரும், சுவையான உத்திகளில் ஒன்றிரண்டையாவது பார்த்து வைப்போமே!

வான்மீகி 'சீதா விவாகம்' என்று சுருக்கமாய்க் கதை தந்தார். கம்பர் நம் பழக்கப்படி, 'மாப்பிள்ளை ஊர்வலம்' நடத்தியும், மாப்பிள்ளை வீட்டார்க்குப் 'பெண்ணெடுக்கிக் காட்டியும்', அதன் பிறகு திருமணத்தை நடத்த எண்ணு கிறார். இதற்காகவே 'உலாவியற் படலம்', 'கோலங்காண் படலம்' என்று இரண்டு புதிய படலங்களை இணைக்கிறார்.

இப்போது, தயரதன் மிதிலை நகர்ப்புறத்துக்கு வந்தாயிற்று. சனகன் தன் சுற்றத்துடன் போய் எதிரே வரவேற்கின்றான். முன்பே, விசுவாமித்திரருடனும் தம்பி

இலக்குமணனுடனும் மிதிலை வந்து, வில்லை முறித்து வெற்றிகண்ட இராமனும், மிதிலை நகர்ப்புறத்துக்கே போய், தந்தை, தாயரனைவரையும் வரவேற்று மகிழ்கிறான். அப்போது தயரதன், 'நாங்கள் பிறகு வருகிறோம்; நீ தம்பி யருடன் மிதிலை நகருக்குள் சென்று, அரண்மனைக்குப் போய் இரு' என்று இராமனைப் பணிக்கின்றான். இராமன் இப்போது, 'எழுத அரும் தகையது ஓர் தேரின்மேல்' ஏறி, குதிரைகள் தேரை இழுத்துச்செல்ல, மிதிலை நகரின் தெருவில்-அரசர் உலா வரும் தேரோடும் தெருக்களில் பவனி உலா புறப்படுகிறான்.

மிதிலை மக்களுக்கு, இராமன் என்ற ஓர் இளவரசன் வில்லை முறித்த செய்தியும், சீதைக்குத் திருமணம் நிச்சயமான செய்தியும் முன்பு எங்கும் பரவி, அனைவரும் அறிந்ததாய் இருந்தது. நெடுநாள் தவமிருந்து வந்த திருமணம் அல்லவா?

இப்போது 'கலியாண மாப்பிள்ளை' ஊர்வலமாக வருகிற செய்தியும் எங்கும் பரவிவிட்டது. 'மாப்பிள்ளை எப்படி?' என்று பார்க்க, மக்கள் தெரு முழுதும் திரண்டு விட்டனர். நம் நாட்டுப் பழக்கம்தான் தெரியுமே? பொது வாகக் கணக்கற்ற விமர்சனங்கள் வரும். ஆளுக்கு ஒன்று பேசுவார்கள். 'மகாலட்சுமி மாதிரி பெண்ணுக்கு இப்படி மாப்பிள்ளையா?' என்பார்கள். "அடி, நம்ம கருத்தக் குட்டிக்கு மாப்பிள்ளையைப் பார்த்தியா? எலுமிச்சப்பழ நிறமிடி" என்பார்கள். இன்னும் ஏதேதோ பேசுவார்கள். கம்பர் இந்தச் சூழலில் பழகியவர், விடுவாரா?

அரச வீதிகள் முழுவதும் பெண்கள், 'பெண்கள் பெண்களே! ஒரு தலையை முட்டிக்கொண்டு, அடுத்த தலை; பல வரிசைகள். ஆயிரக்கணக்கான தலைகள்; பல ஆயிரம் கண்கள். விழித்தது விழித்தபடி, புதுமாப்பிள்ளையைப் பார்க்கத் தயாராக இருக்கின்றன.

தேர் தெருமுனையில் வருகிறது; தேர் வருவது தெரிகிறது.

அடுத்தடுத்துத் தொடர்ந்து நிற்கின்ற கண்களுக்குள்ளே, இப்போது ஊர்வலம் நுழைந்து செல்கிறதாம்! ஒவ்வொருவர் கண்களையும் தொலைக்காட்சிப் பெட்டியாக்கி, அதற்குள்ளே போகிற ஊர்வலத்தைக் காட்டுகிறார் கம்பர்.

தேரின் முன் தாவிப்பாயும் குதிரைகள்; தேர்த்தட்டிலே வில்லுடன் நிற்கும் அழகிய இராமன்; வில்லை முறித்த வலிமைமிக்க தோள்கள்; தாள்தொடு தடக்கை; பரந்த மார்பு! பார்த்த பெண்கள் இமைக்கவில்லை. அதனால் ஊர்வலம், உண்மையில் கண்களுக்குள்ளேதான் போகிறதாம். வெளியே, தெருவில் போவது, கண்களுக்குள் போகும் ஊர்வலத்தின் பிரதிபலிப்புத்தானாம்!

'வீதிவாய்ச் செல்கின்றான்போல்' இருக்கிறது; ஆனால், வீதியிற்போகவில்லை. 'விழித்து இமையாது நின்ற, மாதரார் கண்களூடே' செல்கின்றானாம். நாம் வீதியில் போவதை மட்டுமே உண்மை என்போம். ஆனால், ஒரு படப்பிடிப்பாளர் போல, கம்பர்,

*வீதிவாய்ச் செல்கின் றான்போல்*
*விழித்துஇமை யாது நின்ற*
*மாதரார் கண்க ளூடே*
*வாவும் மான் தேரில் செல்வான்!*

*(வாவும் - தாவும்; மான் - குதிரை)*

என்று, கவிதையின் முன்இரண்டு அடிகளில் ஒளிப்படக் காட்சி ஒன்றைப் பதிந்து, நகர்த்துகிறார். பார்ப்பவர் இல்லையென்றால், ஊர்வலம் என்பதற்குப் பொருள் இல்லையே? அதனால்தான், கண்ணுக்குள்ளே போவதை, ஒளிப்படச் சுருளாய்ப் படம் பிடித்து, இதோ உண்மையான ஊர்வலம் என நம்மைப் பார்க்க வைக்கின்றார்.

அடுத்த இரண்டு அடிகளில் இன்னும் மேலே சென்று, கற்பனையின் உச்சத்தைத் தொடுகிறார். திருமாலின் அவதாரம்தானே இராமன்; இராமனாகிய திருமாலுக்குக் 'கண்ணன்' என்றும் பெயருண்டுதானே. இன்றைக்குக் 'கண்ணன்' என்ற பெயர், தனக்கு எவ்வளவு பொருத்தம் என்பதையும் அவனே காட்டிவிட்டானாம். எல்லோருடைய கண்ணுக்குள்ளும் இருப்பவன்தானே 'கண்ணன்' ஆக முடியும்!

யாதினும் உயர்ந்தோர் தன்னை
யாவர்க்கும் 'கண்ணன்' என்றே
ஓதிய பெயர்க்குத் தானே
உ[illegible]நள் உணர்த்தி விட்டான்!

இவ்வாறு [illegible] வலம் ஒன்றைக் கண்ணுக்குள் நடத்திக் காட்டிய கம்பர், நீலப் பெருங்கடலில், பௌர்ணமியன்று, முழுநிலவு ஒன்று தோன்றி, எழுந்து, வானில் ஏறி, வெண்மை நிற ஒளியை உலகெலாம் பரப்புவதைக் கவிதைக் 'காமிரா' ஒன்றை, நகர்த்தி நகர்த்திப் படம்பிடிக்கின்ற ஒரு காட்சி யையும் காண்போம். ஒளிப்பதிவாளர்கள் சிலர் திரைப்பட இயக்குநர்கள் ஆவதைப் பார்த்திருக்கிறோம். இந்த இரண்டு திறமைகளும் வெளிப்படும் ஒரு காட்சியை நாம் காண வேண்டாமா?

4

# படிப்படியான படப்பிடிப்பு

சிலர் கடல்மீது சூரியன் உதயமாவதைப் பார்க்கக் கன்னியாகுமரிக் கடற்கரைக்குச் செல்வதுண்டு. நக்கீரர் திருமுருகாற்றுப் படையில், 'பூமியை வலம்வரும் ஞாயிறு நீலக் கடலில் எழுந்து வருவதை, கோல மயில்மீது வரும் குமரனுக்கு' ஒப்பிட்டு மகிழ்கிறார். பௌர்ணமி முழுநிலவு கடலில் தோன்றும் அன்று கடலலைகள் கொந்தளிக்கும். அப்போது அந்த முழுநிலா கடலலை மேல் முகிழ்த்து, மலர்ந்து, விரிந்து, எழுந்து, இப் பார் உலகம் முழுவதையும் வெண்மை நிறமான தனது நிலவொளியால் நிரப்புவதை எப்படி ஓவியமாக எழுதலாம்? சித்திரத்தில் இதில் ஒரு பகுதியைத்தான் தீட்டிக் காட்டலாம்.

முதலில் வெள்ளிய கடலலைமேல் வட்டவடிவமான முழுமதி அரும்புவதைக் காட்டவேண்டும்.

அடுத்த சில கணத்தில் அது கடல்மேல் சிறிது உயர்ந்து வெண்தாமரைபோல் மலர்வதைப் பார்க்கச் செய்ய வேண்டும்.

சில நொடிகள் கழித்து, முழுநிலவு கதிர்க் கீற்றுகளை மேலே நீளமாகப் பாய்ச்சுவதைத் தெரியச் செய்ய வேண்டும்.

இப்போது வெண்மதி தன் நிலவை உலகின்மேல் பொழியத் தொடங்குவதைப் படமாகக் காட்டி, அடுத்து பூமி முழுவதும் வெள்ளிய நிலவொளியே படர்ந்து பரவித் தோய்ந்து கண்ணுக்கு ஒரு குளிர்ச்சி, தூய்மை, ஒளிர்மை தருவதை அனைவரும் பார்த்து மகிழச் செய்யவேண்டும்.

இத்தனையையும் ஒரு சித்திரத்திலோ, ஒரு புகைப்படக் கருவியிலோ வரைந்தும் எடுத்தும் காட்ட முடியாது. இதற்கு வீடியோ எனப்படும் நகரும் ஒளிப்படக் கருவி வேண்டும். இப்போது கம்பரிடம் கவிதை வடிவில் அக்கருவி இருக்கிறது. அதை அவர் எப்படிப் பயன்படுத்துகிறார் என்று பார்ப் போம்.

சீதை கன்னிமாடத்தில் நின்றாள். கீழே தெருவில் இராமன் நடந்து சென்றான். எதிர்பாராது பேரெழில் நங்கையும், வரிசிலை(வில்) அண்ணலும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள நேர்ந்தது. 'இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினர்'. அவள் உள்ளத்தில் இவனும் இவன் உள்ளத்தில் அவளுமாக மாறிக் குடிபுகுந்து கொண்டதால், இனி இரண்டு உடல்களுக்கு ஓர் உயிர் என ஆகிவிட்டார்களாம்.

அந்தத் தெருக்கோடியில் போய்த் திரும்பும் வரை ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டுள்ளனர். இதனை எவ்வாறு நாகரிகமாகச் சொல்லலாம்?

*சிந்தையும் நிறையும் மெய்ந்நலனும் பின்செல,*
*மைந்தனும் முனியொடு மறையப் போயினான்!*

சிந்தை-சிந்தனை, எண்ணம். நிறை-நிறுத்துதல், மனத்தைக் கட்டுப்படுத்துதல், கண்டபடி ஓடாமல் நிறுத்துதல் நிறை. மெய்ந்நலன்-உடலின் அழகிய தோற்றம்.

இராமனது மனமும் அதைக் கண்டபடி போகாமல் தடுத்து **நிறுத்தும் நிறையும்** இனி இப்பிரிவுத் துயரால் இழக்கப்போகும் **உடல்பொலிவும்** பின்னே போக, இராமன் மட்டும் முன்னே சென்றானாம். இதற்கு என்ன பொருள்? இவை பின்செல என்றால், மனத்தை நிறுத்த முடியாமல் திரும்பிப் பார்த்தபடி போனான் என்பது குறிப்பு. வாழ்க்கை யில் ஒரே ஒரு முறைதான் இராமன் ஒரு பெண்ணை இப்படித் திரும்பிப் பார்த்தான்.

இனிச் சீதையின் நிலை என்ன? **'மைந்தனும், முனியொடு** (விசுவாமித்திரர்) (கண்) **மறையப் போயினான்'.** அவளும் அவன் தன் கண்ணுக்கு மறைந்து, தெருமுனையில் திரும்பும் வரை பார்த்திருக்கிறாள்! 'மைந்தனும் கண்ணுக்கு மறையப் போயினான்' என்றால், குறிப்பால் யார் கண்ணுக்கு என்று உணர முடியவில்லையா?

மேற்கொண்டு என்ன? சீதையைக் காதல் நோய் பிடித்துக்கொண்டுவிட்டது. எரியும் விளக்குக்கு எண்ணெய் ஊற்றியதுபோல மாலைப்பொழுது, அந்திநேரம் தொடங்கி விட்டது. சீதையை மேலும் துன்புறுத்த வருவது போலச் சந்திரன் உதயமாகின்றான். இப்போது, கம்பருக்கு முழுமதி நிலவு அலைமோதும் கடலில் எழுந்து வருவதைக் காட்டி யாகவேண்டும். இதை ஐந்து பாடல்களில், தம் கற்பனைக் 'காமிராவை' நகர்த்திப் படம்பிடித்துப் பதிவு செய்துள்ளார் கம்பர்.

அமரர்கள் அமுதம் பெற, பாற்கடலைக் கடைந்தபோது, 'அமுதம் நிறைந்த பொற்கலசம் ஒன்று, கடலிடையே வந்து எழுந்தது' எனத் திங்கள் (முழுமதி) எழுந்ததாம்! அமுதகலசம். இது முதல் காட்சி; வட்டமான முழுமதி எழுகிற தோற்றம்.

ஆழிவெண்திங்கள் - கடலின் உள்ளிருந்து எழும் முழுமதி; முழுமதிதான் கடலினுள்ளிருந்து தோன்றும். அது,

அமுதம் நிறைந்த பொற்கலசம்' (செம்பு) போல இருக்கிறது. பாற் கடல் கடையப்பட்டபோது, பால் திவலைகள் சிதறியது போல விண்மீன்கள்.

*அமுதம் நிறைந்த பொற்கலசம்*
*இருந்தது இடைவந்து எழுந்ததுஎன*
*எழுந்தது–ஆழி வெண்திங்கள்*

திங்கள் - முழுமதி - கடலினுள்ளே இருந்தது; இப்போது நடுவில் வந்து எழுகிறது.

முன்பு பாற்கடலில், ஆலிலைமேல் கிடந்த திருமால் படுத்திருக்க, அவனது உந்தியில் ஒரு தாமரைப்பூ பூத்தது (நான்மறை பாடும் பிரமனைத் தர)! இன்று அலை பொங்கும் கடலில் வேறு ஒரு 'வெண்தாமரை மலர்' பூத்தது போல, வெண்மதி பூத்திருக்கிறது. ஆம். வட்டவடிவமாய் இருந்த போது மொட்டு; சற்று மேலெழுந்து, கதிர் விரிய முயலும் போது வெண்தாமரை மலராகிவிட்டது, வெண்திங்கள்!

அதே 'ஆழிவெண்திங்கள்' கலசம் என (செம்பு போல) எழுந்தது, இப்போது பாற்கடலில் பள்ளி கொண்ட திருமாலின், திருவுந்தியில் ஒரு தாமரை முன்பு பூத்ததுபோல, வெண்தாமரைப் பூ எனக் கடல் அலைமேல் தோன்றுகிறது. வெண்மதி முதலில் கலசம் போல இருந்தது, இப்போது தாமரை பூத்ததுபோல - இதழ்கள் விரிவதுபோல, ஒளிக் கற்றைகள் விரிய எழுகிறது.

*வெண்தா மரையின் மலர்பூத்தது*
*ஒத்தது ஆழி வெண்திங்கள்*

வெண்தாமரை. இரண்டாவது காட்சி; கடலில் எழுந்த, சில நொடிகளுக்குப் பிந்திய நிலை!

இப்போது கோலமிடுவதற்குப் பெண்கள் வெண்மை நிறக் கோலமாவைப் புள்ளிகளாக முதலில் வைப்பார்களே, அதுபோல விண்மீன்களாம் நட்சத்திரங்களால் நீலவானம்

பொலிகிறது. இருளைச் சிறிது சிறிதாகப் பருகிக்கொண்டு, நிலாக் கதிர்கள் கற்றை கற்றையாக வானில் ஒளிவீச்சைத் தொடங்கிவிட்டன. அது வெள்ளிக் கும்பத்தில், இளம் கமுகம் பாளைகளை வைத்திருப்பது போலத் தோன்றுகிறது. வெள்ளிக் குடம் - வட்டமான கும்பம் முழுமதி, ஒளிக் கற்றைகள், கமுகம் பாளைகள்! இது மூன்றாம் காட்சி.

முளைப்பாரி பார்த்திருப்பீர்கள். பெண்கள் மழை வேண்டி 'முளைப்பாரி' தலையில் தூக்கி, குலவை இட்டு, வலம்வந்து கும்பிடுவர். இப்போது நிலவில் ஒளிக்கற்றைகள், பல இரேகைகளாக மேலே பரவுவது, முளைப்பாரிக் கும்பம் எனப்படும் வெள்ளிக்குடத்தில் வைக்கப்பட்ட, இளங் கமுகம் பாளைகள் போலக் காட்சி தருகிறது.

முழுமதி கடலைவிட்டு, மேலே மேலே எழும்போது நிகழ்வன இவை.

*கீழ்ப்பால் திசையின் மிசைவைத்த*
*வெள்ளிக் கும்பத்து இளங்கமுகின்*
*பாளை போன்று விரிந்துளதால்!*

மிசை-மேலே, வெள்ளிக் கும்பம்-வெள்ளிக்குடம். இன்று பூரண கும்ப மரியாதை என்று கோயில்களில், வரவேற்கும்போது, இந்தக் கும்பத்தைப் பார்த்திருக்கலாம். கமுகம்பாளை, பாக்குமரப் பாளை. இவை தென்னம்பாளை போல இருக்கும்.

இனி காட்ட வேண்டியது, உலகின் மீது நிலவொளி பரவத் தொடங்குகிற கட்டமாகும். மாலைப்பொழுது என்ற கையை நீட்டி, உலகையே வளைத்துக் கொண்ட இருள் முழுவதையும் மதியம் தன் நிலாக் கற்றைகளாம் ஒளி வீச்சுக்களைப் பரப்பி, உண்டு விழுங்குகிறதாம். அதனால் நிலவு எங்கும் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவுகிறது. புகழ் வெண்மை நிறமென்பது, ஓர் இலக்கியக் குறியீடு, சிவப்பு நிறத்தைப் புரட்சியின் அடையாளம் என்பது போல! கம்பர்,

இதுதான் தக்க சமயம் என்று, 'நீர்வளம் நிறைந்த பண்ணை வெண்ணெய்ச் சடையன் தன் புகழ்போல்' நிலவு எங்கும் பரவியது என்று கூறுகிறார். இது நான்காம் காட்சி.

முழுமதி வெண்திங்கள் மேலே எழுந்து, வெண்ணிற நிலவொளி பரவத் தொடங்கும்போது, இருள் சிறிது சிறிதாக மறையும். அது நிலாக் கற்றைகள் (இரேகைகள், ஒளிக் கீற்றுக்கள்) இருளைக் கை நீட்டி உண்பதுபோல உளது. ஆம், நிலா ஒளி இருட்டை விழுங்கத் தொடங்கி, உண்டு, தீர்த்து விடுகிறது.

*விண்ணும் மண்ணும் திசைஅனைத்தும்*
*விழுங்கிக் கொண்ட, விரிநல்நீர்ப்*
*பண்ணை வெண்ணெய்ச் சடையன்தன்*
*புகழ்போல்–எங்கும் பரந்துளதால்!*

பண்ணைகள் (நெல்வயல்கள்) சூழ்ந்த, திரு வெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலது புகழ் எட்டுத் திசையும் பரவியதுபோல், நிலவொளி இப்போது உலகெங்கும் பரவுகிறது.

படிப்படியாக ஒரு காட்சி, படம்பிடிக்கப் படுவதைப் பார்க்கிறோம்.

விரி நல் நீர்ப் பண்ணை - விரிந்த பல நீர்நிலைகளால் சூழப்பட்ட நன்செய்யும், புன்செய்யுமான வயல்வெளிகள் சூழ்ந்த பண்ணைகள். வெண்ணெய்ச் சடையன் - திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளல். கம்பரை ஆதரித்தவர்; சோழநாட்டுப் பெருவள்ளலாம் இவரைத் தக்க இடங்களில் வைத்துப் பாடித் தம் நன்றியறிதலைக் கம்பர் காட்டிக் கொள்வார். இந்த நன்றியறிதல்தான் கம்பரை, இந்த உலகில் என்றென்றும் வாழ வைக்கின்றது! சடையப்பர் புகழ் மண்ணும் விண்ணும் மற்றும் திசையனைத்தும் பரவுவது போல, நிலவொளி பரவியது.

இறுதியில் மண்ணும் விண்ணும் வீடும் வெளியும் எங்கும் முழுநிலவொளி தவழ்வதை எப்படிக் காட்டுவது? திருமாலால் படைக்கப்பட்ட இந்த அண்டம் (பூமி), மிகப் பழையதாய்ப் போய்விட்டதால், இதை ஒருமுறை வெள்ளையடித்துப் புதுப்பிக்க வேண்டுமென்று எண்ணிய 'நெடு வெண் திங்கள்' (பூரணச் சந்திரன்) எனும் கொத்தன் தன் கதிர்கள் எனும் கைகளால், நிலவொளியாகிய வெண் சுதையைப் பூசி, உலகைப் புதுப்பிப்பது போல இருக்கிறதாம்!

இப்போது உலகமே வெண்ணிற நிலவொளியில் மிதக்கிறது. எங்கு பார்த்தாலும் வெண்மை நிறம்... இது உலகைப் புதுப்பித்து, ஒரு முறை வெள்ளையடித்தது போல இருக்கிறதாம். திருமால் படைத்த பூமி பழையதாய்த் தூசிபடிந்து போய்விட்டதாம். இந்த 'நெடு வெண் திங்கள்' என்னும் நிறைமதியாம் தச்சன், அதாவது கொத்தன், தன் கதிர்க்கைகளால், நிலவொளியாகிய சுண்ணாம்பைப் பூசி, உலகைப் புதுப்பிப்பதுபோல இருக்கிறதாம்!

மிதிலைக் காட்சிப் படலத்தில் வரும் இந்த ஐந்து பாடல்கள், இவ்வாறு முழுமதியின் தோற்றத்தைப் படிப்படியாக வளர்த்துக் காட்டுவது, படப்பிடிப்புப் போல அமைகிறது.

*நீத்தம் அதனில் முளைத்து எழுந்த*
*நெடுவெண் திங்கள் எனும்தச்சன்*
*மீத்தன் கரங்கள் அவைபரப்பி*
*மிகுவெண் ணிலவாம் வெண்சுதையால்*
*...............................................................'பண்டு*
*பூத்த அண்டம் பழையது' என்று*
*புதுக்கு வானும் போன்றுளதால்!*

நீத்தம்-கடல், தச்சன்-கொத்தனையும் தச்சன் என்பது பழைய வழக்கு. மீ-மேலே, வெண்சுதை-வெள்ளைநிறச்

சுண்ணாம்பு, பூத்த அண்டம்-திருமாலின் உந்தியில் முன்பு பூத்த (தோன்றிய) பூமி.

பழைய அண்டத்தைப் புதுப்பிப்பது-வெள்ளையடிப்பது என்ற கற்பனை, இன்றைய புதுக்கவிதைகளையும் புதுப்பிக்கக்கூடிய, புதுக்கற்பனையாக இருக்கிறது.

இதுபோல உள்ளத்தில் தோன்றும் நுண்ணுணர்வுகளையும் படம் பிடித்ததுபோல் காட்டுகிறார்கள் கவிஞர்கள். வெளிப்புறக் காட்சியைப் படம் எடுக்கலாம். மன உணர்வு வெளியே தெரியாத அருவப் பொருளாயிற்றே! அதை எப்படிப் படமாக்கிக் காட்ட முடியும்? சங்கப் புலவர் பலர் அதையும் சாதிக்கிறார்கள். ஒரு சான்றாவது பார்க்க வேண்டாமா?

# 5

## ஒரே வரியில் ஒரு நாவல்!

என் பிள்ளைகள் பள்ளிப் படிப்பில் இருந்த காலம் அது. சம்பளம் போதாத காலம்; ‘போறாத’ காலமுங்கூட. மதியம் எல்லோரும் கூட இருந்து சாப்பிடும் நேரம். எனக்குள் ஏதோ மனச் சங்கடம். கடன் தொல்லையாக இருந்திருக்கும். வீட்டுக்காரர் வாடகைக்கு வந்ததாக மனைவி சொல்லியிருப் பாள். கல்லூரி விட்டு வருகிற வழியில், சென்ற மாதம் கடன் கொடுத்தவர் எதிரே வந்திருப்பார். என்ன நடந்ததோ, அது மட்டும் நினைவில்லை. சாப்பிட்டு எழும்போது, “சேச்சே... என்ன வாழ்க்கை இது! இப்படி வாழ்றதுக்கு காசி, ராமேசுவரம்னு ஓடிவிடலாமான்னு தோணுது...” என்று சொல்லிக்கொண்டே கைகழுவச் சென்றேன்.

சற்று நேரம் கழித்து, என் மூத்த மகன் சோலையப்பன் என் பக்கத்தில் வந்து மெதுவாக, “அந்த ரெண்டு ஊர்லே, எந்த ஊர்னு உறுதியாச் சொன்னால், நாங்களும் அங்கேயே வந்துடலாம்னு நினைக்கிறோம்...” என்றான். அவன் பின்னா லேயே, மற்ற பிள்ளைகளும் மனைவியும் வரிசையாக நின்றார்கள். நான் தீர ஆலோசித்துப் பார்த்தேன். நாம் அங்கே எங்காவது போக, இவர்களும் அங்கேயே வர, விவரம்

தெரியாத ஊரிலே போய்த் துன்பப் படுவதைவிட, அந்தத் துன்பத்தை இங்கேயே படுவது நல்லது என்று தோன்றியது.

இதே மாதிரி மனத்தவிப்பு உங்களிலும் பலருக்குத் தோன்றியிருக்கலாம். ஏழ்மையான குடும்பத்தில் அகப்பட்டவன், கடமையுணர்ச்சி உடையவனாக இருந்தால் தொலைந்தான். ஒரு கடனை முடித்தால், அடுத்த கடன்காரர் தயாராக நிற்பார். பெண்ணுக்குக் கல்யாணம் முடித்தோமோ, தப்பித்தோமோ என்று பெருமூச்சுவிட்டு நிமிர்வோம். பேர்த்தி வந்து நிற்பாள். ஒவ்வொரு சங்கடம் வரும்போது தப்பிக்க வழி தெரியாது. விட்டுவிடலாம் என்றுதான் எண்ணுவோம். யாரையும், எந்தக் கடமையையும் விட்டுவிட, நம் மனமே இடம் தராது! கூண்டுக்குள் அகப்பட்ட புலிபோல், சுற்றுவோம் - திமிறுவோம் - வெளியேற எண்ணுவோம் - நாமே வெளியேறவும் மாட்டோம்!

ஒரே தவிப்பு; தவிக்கும் மனம்; தவிப்பதிலேயும் இன்பம்! அந்தத் துன்ப இன்பத்தை அனுபவித்து, மீண்டும் மீண்டும் தவித்துத் தவித்து அலையும் மனம்!

புறத்தே தோன்றும் காட்சியைத்தான் சித்திரமாகத் தீட்டலாம்; ஒளிப்படமாக எடுக்கலாம்; நகரும் காட்சியாக இயக்கலாம். புறத்தே காட்சிப்படாத, அருவமான, கண்ணுக்குத் தெரியாத இந்தத் 'தவிப்பை' ஒரு படமாகப் பிடித்துக் காட்ட முடியுமா? ஓரேருழவர் என்ற சங்கப் புலவர் இதைச் சாதிக்கின்றார்.

உடனே 'சங்க இலக்கியமா? அது காலங்கடந்த தாயிற்றே' என்று சிலர் தள்ளிவிடப் பார்ப்பர். ஒப்பிலக்கிய அறிஞர்கள் சொல்வதை நாம் அவர்களுக்குச் சொல்லலாம் – "இலக்கியம் என்பதற்கு இறந்தகாலம் என்பதே இல்லை; அதற்கு நிகழ்காலம்தான் உண்டு." இலக்கியமல்லாதவை மறைந்திருக்கலாம். ஆனால், சிறந்த இலக்கியங்கள் என்றும் வாழ்கின்றன.

ஒளிப்படம் எடுப்பது ஒரு கலை. அதற்குத் தனித் திறமை வேண்டும். ஒரு குந்தையைப் படம் எடுப்பவர், தக்க சமயத்தில் 'கிளிக்' செய்ய வேண்டும். ஒரு கணம் தவறினால், குழந்தை முகம் கோணல் மாணலாகப் போய்விடுமே!

'மறக்க முடியாத அந்தக் கணப்பொழுதை என்றென்றும் நிரந்தரம் ஆக்கும் கலை, படம் எடுக்கும் கலை' என்பார்கள்.

மனிதர்களின் மனநிலைகளிலும் சரியான மன நிலையை - மிகச் சரியான நேரத்தில்-மிகப் பொருத்தமான கோணத்தில் படமாக எடுத்து வைத்ததுதான் உலகக் கவிதை இலக்கியம். சங்கப் பாடல்களில் பல படப்பதிவுகள் உள்ளன. அது ஒரு நுண் உணர்வுப் பட 'ஆல்பம்' - தொகுதி. அவை இன்றும் பார்த்துப் பார்த்து, நினைத்து நினைத்துச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

குடும்பத்தில் அகப்பட்டுக் கொண்ட பொறுப்புள்ள குடும்பத் தலைவனின் மனத்தவிப்பை, ஓரேருழவர் என்ற புலவர் எப்படிப் பதிவு செய்து உள்ளார் என்று பார்ப்போம். ஒரே ஒரு ஏர் மட்டும் வைத்திருந்த அவர் அன்று ஏழை என்றே கருதப்பட்டிருப்பார். ஏனெனில், அன்று ஆடு-மாடு களும் நெற்குதிர்களும் வைக்கோல் போர்களும் ஏர்களும் ஒரு குடும்பத்தில் இருந்த எண்ணிக்கையை வைத்துத்தான், ஒருவரது செல்வ மதிப்பு, சமுதாயத்தரம் மதிக்கப்பட்டது.

ஒரு வெண்மையான களர்நிலம். குத்துச் செடிகள் தவிர எதுவும் விளையாத சதுப்பு மண். கால்வைத்தால் பதியும். ஒரு வெள்ளைத் தோலை வீசி எறிந்தால், அது எப்படிப் பரந்துபட்டுப் பாய் விரித்தது போல் கிடக்குமோ அப்படிக் கிடக்கிறது. இன்றைய நிலையில் சொல்வதானால், வெள்ளைநிற விரிப்பைப் பரப்பிய விளையாடுதளம் போல் அது கிடக்கிறது.

அவன் ஒரு வேட்டுவன். வேட்டை ஆடுவதில் பல காலம் பழகியவன். ஏன்... வேட்டுவக் கலையில் ஒப்பற்றவன் என்றே சொல்லலாம். அவனிடம் அங்கே ஓர் இளமான் கண்ணிற்பட்டு விட்டது. 'புல்வாய்' என்ற அந்த மான், இன்னும் புல்லைக் கறிக்கப் பழகாத இளம் மான். அதை விரட்டிப் பிடிக்க அவன் முயல்கிறான்; அவனிடமிருந்து தப்பிக்க அது முயல்கிறது. அவன் அப்படி இப்படி ஓடி மறிக்க முயலவும், அது பிடிகொடுக்காமல் அங்கும் இங்கும் ஓடவும், பதுங்கியும் பாய்ந்தும் உயிர்பிழைக்க மன்றாடவும்... ஏதோ தொலைக்காட்சி பார்ப்பதுபோல, ஒரு பெரிய போராட்டம் நடக்கிறது. என்னதான் அந்த வேடன் முயன்றாலும், உயிர்மீது உயிரை வைத்துப் போராடிய அந்த மான் தப்பித்து ஓடினாலும் ஓடிவிடலாம். ஆனால் மனைவி, மக்கள், பேரன், பேர்த்தி, உறவு, சுற்றம், மாமன், மைத்துனன் என்று சுற்றி வளைக்கும் இந்தக் குடும்ப வாழ்க்கையில் அகப்பட்டுக் கொண்டால், தப்பித்து ஓடவே முடியாது. அச்சுற்றம் என்ற கயிறு - தளை-இம்மனிதன் காலைத் தப்பவிடாமல் தடுத்து விடும்!

'ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே...'

ஒக்கல் வாழ்க்கை - சுற்றத்தால் - உறவுகளால் சுற்றப்பட்ட இக்குடும்ப வாழ்க்கை, காலைத் தட்கும் - தடுத்துவிடும். தளையிட்டு விடுமாம்.

அதள்எறிந் தன்ன நெடுவெண் களரின்
ஒருவன் ஆட்டும் புல்வாய் போல,
ஓடி உய்தலும் கூடும்மன்!
ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே!

கடைசி அடியை வைத்து, ஒரு புதினமே எழுதலாம். அத்தனை கருத்துச்செறிவு, ஒரே வரியில் குறிப்பிடப்படுகிறது.

மான் தப்பித்தாலும் தப்பிக்கலாம்; மனிதன் தப்பிக்க முடியாது. காரணம், ஒக்கல் (உறவு, சுற்றம், மனைவி, மக்களென்ற பிணைப்பு) சார்ந்த குடும்ப வாழ்க்கை! அது காலைத் தளையிடுகிறது. எப்படி எல்லாம் தளையிடுகிறது என அடுக்கினால், ஒரு நெடுங்கதை ஆகிவிடாதா?

ஒரு தோலை (அதள்-தோல்) வீசி எறிந்து, தரையில் போட்டு வைத்தாற் போன்ற, வெண்ணிறக் களர்நிலம் அது. எங்கு பார்த்தாலும் குத்துச் செடிகள்தான். வேறு எதுவும் விளையாது. புல்வாய் - புல்லைக் கறித்துத் தின்னப் பழகும் இளமான். அந்தப் புதர்களுக்குள் பதுங்கிப் பதுங்கி, ஓடி ஒளிந்து தப்பிக்க முயல்கிறது. இங்கே 'ஒருவன்' என்பது வேடன். வேட்டையாடுவதில் ஒப்பற்றவன். அதாவது அதில் நன்றாகப் பழகியவன் என்பதும் பொருள். அவனிடமிருந்து, அந்த இளம்மான் தப்பித்தாலும் தப்பித்துவிடுமாம். உய்தல் - உயிர் தப்பிப்பிழைத்தல். கூடும் மன்! - பெரும்பாலும் முடியாது; ஒருவேளை தப்பிக்கக் கூடுமென்பதை இந்த 'மன்' என்ற இடைச்சொல் உணர்த்துகிறது. ஒக்கல் வாழ்க்கை - சுற்றம் சூழ்ந்த வாழ்க்கை. ஒக்கல் - சுற்றம். நம்மைச் சுற்றி இருக்கும் உற்றார் உறவினர்களே நம் சுற்றம். 'அடுக்கிய சுற்றம்' என்பார் திருவள்ளுவர் (525). 'சுற்றத்தது சுற்றமும் அதனது சுற்றமும்' என்பது பரிமேலழகர் கூறும் விளக்கம். நம் நெருங்கிய சுற்றம், அந்தச் சுற்றத்தார் ஒவ்வொருவருக்கும் உள்ள சுற்றம்; பிறகு அவர்களுக்குள்ள சுற்றம் என்று இது விரிந்து கொண்டே போகும். இந்தக் கடலிலிருந்து தப்பமுடியாது; முதலாவது பிள்ளைகளிடையே மன வேறுபாடு; நமக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படக்கூடிய மன விரிசல்கள் - என இப்படியே பார்த்தால்தான், இதிலிருந்து வெளியேற - தப்ப - முடியாது; 'ஒக்கல் வாழ்க்கை தட்கும்மா காலே' என்று ஓரேருழவர் சொன்ன செய்தி விளங்கும்.

நோபல் பரிசு பெற்ற நாவல்கள், இப்படி ஏதாவது ஒரே ஒரு செறிவான கருத்தை மட்டும் வைத்துக்கொண்டு, நூல்

முழுவதும் நெய்தலைதான்! ஹெர்மன் ஹெஸ்ஸேயின் சித்தார்த்தாவைப் படித்துப் பாருங்கள்.

திருவள்ளுவரின் காமத்துப்பால், காதலர்களுக்கான 'பாலுறவுக் கல்வி' தருவது என்று மூதறிஞர் வ.சுப. மாணிக்கம், தமது 'தமிழ்க்காதலில்' எழுதுகிறார். இன்று காதல் இல்லாத கதையும் இல்லை; படமும் இல்லை. காமத்துப்பால் என்னதான் அப்படி ஒரு பாலுறவுக் கல்வியைப் பாடமாகக் கற்பிக்கிறது, பார்க்க வேண்டாமா?

# 6

# காதல் அகராதி

பழகும் பண்பாடு பற்றி ஜூனியர் சேம்பரில் ஒரு பயிற்சி வகுப்பு நடத்துவார்கள். மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் பழகுவதுபோல், விலங்குகள் கலந்து பேசி, உரையாடி மகிழ்வதில்லை. சிலருக்கு மற்றவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்பதே தெரிவதில்லை. அதனால் நாள்தோறும் சங்கடத்துக்கு ஆளாவார்கள்.

பழகுவது ஒரு தனிக்கலை. அதிலும் காதலர்கள் பழகுவது, கணவன்-மனைவி உறவாடுவது தனிச்சிறப்புக் கலை. காதலர்கள் பேசும் சொற்களுக்கு வேறு வேறு அர்த்தம். அவற்றுக்கு அகராதியில் பொருள் கிடையாது.

அம்மையாருக்கு ஐம்பது வயது. அவர் அடுத்த வீட்டு அம்மாவிடம், "எங்க அப்பா ஊரெல்லாம் தேடி, இவரைப் பார்த்ததும், இவர்தான் மாப்பிள்ளைனு முடிவு பண்ணிட்டார். இப்போ நான் கிடந்து முழிக்கிறேன். பெரிய ஆபீசரா போச்சா... எத்தனை விருந்து; எத்தனை வேலை. எல்லாத்தையும் தாங்க வேண்டியதாப் போனது" என்று பெருமூச் செறியப் பேசுகிறார். 'ரொம்ப ரொம்பக் கட்டப்படுவதாக' அம்மையார் பேசுவதன் உட்பொருள், அடுத்த வீட்டு

அம்மாவுக்கும் தெரியும்; ஏன், நமக்கும் விளங்கத்தான் செய்கிறது. பார்த்ததும் பிடிக்கும்படி அவ்வளவு அழகானவ ராம்; பெரிய ஆபீசர் வேறேயாம். 'அவரைப்' பற்றிய பெருமை எல்லாம் அதில் அடங்கியிருக்கிறது. இது இளமைக்கால நினைவுகள்!

"இவருக்கு நேரமேது? ஞாயிற்றுக்கிழமைகூட வேலை தான் முக்கியம். என்னை எங்கேயும் அழைச்சிட்டுப் போகவே மாட்டார்" என்று கலியாணமான புதிதில் ஒரு பெண் சொன்னால், அது பொய்; அந்த வாரம்தான் அவர்கள் வெளியே போகவில்லை; அதற்கே இந்தப் பாடு! "போங்க! அஞ்சு மணிக்கே வரதாச் சொல்லிட்டு, ஆறு மணிக்கு வரீங்க! தொடாதீங்க! எனக்குத் தலைவலி..." என்று சொல்லி, இளம் மனைவி சிணுங்கினால், அது செல்லக் கோபம். "நேரங்கழிச்சு வந்ததுதான் வந்தீங்க... சீக்கிரம் பக்கத்திலே வாங்க!" என்று சொல்லி, தன் பொய்யான தலைவலியைப் போக்கத் தன்னைத் தொட்டுத் தலையை நீவிவிட மாட்டாரா என்று அவள் எதிர்பார்க்கிறாளாம். இளமை கொள்ளும் பொருள் இது. மற்றவர்கள் இதை உண்மைக் கோபம் என்று எடுத்துக் கொள்வார்கள். காதலனுபவம் இல்லாத கணவனுக்கும் இது விளங்காது. அந்த அனுபவத்தைச் சிலபோது, இலக்கியங்கள் கற்றுத் தருகின்றன.

கோபிக்கிற மாதிரி கோபிக்கிறது; வேண்டாதவர்கள் மாதிரி பேசுவது; சண்டைபிடிக்கிறவர்கள் மாதிரி பார்க்கிறது – இவை எல்லாம் வெளியே தான் அப்படித் தெரியுமாம். உள்ளூற நெஞ்சத்தில் அள்ளூறும் உறவிருக்கிறது என்று அதற்கு அர்த்தமாம். வள்ளுவர் சொல்கிறார்! *(1097)*

*செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்*
*உறாஅர்போன்று உற்றார் குறிப்பு*

செறாச் சிறுசொல் - உள்ளூறக் கோபமின்றியே வெளியே சினங்கொண்டவர் போல் பேசுவது. செற்றார் போல் நோக்கு - உள்மனத்தில் சினமின்றியே, கோபப்பட்டவர்கள் போல் பார்ப்பது. உறாஅர் போன்று உற்றார் - வெளியே வேண்டாதவர் போல் நடித்து, உள்ளத்துள் நீங்காத உறவை வைத்திருப்பவர்.

வேண்டாதவர்போல் பார்த்தால் வேண்டியவர் என்று பொருளாம். கொஞ்சம் தள்ளி நில்லுங்கள் என்றால், இன்னும் அருகில் வரச் சொல்வதாம் அது. 'இவ்வளவு விலையிலே, இந்தப் புடவை எதுக்குங்க?' என்றால், அந்த விலையுயர்ந்த புடவைதான் பிடித்திருப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டுமாம். 'விடுமின் எங்கள் துகில், விடுமின் எங்கள் துகில்' என்று இளைய காதற்பெண், தன் காதலனிடம் சொன்னால், அதற்குப் 'பிடிமின்' என்றுதான் பொருளாம். கலிங்கத்துப் பரணியில் இவ்வாறு செயங்கொண்டாரே பாடுகிறார். காதல் அகராதியில், 'அர்த்தமே வேறுதான்' என்பதை, அவரும் அறிந்து வைத்திருக்கிறார்.

திருவள்ளுவர் இளங்காதலர்களுக்குச் சொல்லும் அறிவுரை இதுதான்:

**'எந்த நேரமும் சிரித்துப் பேசி மகிழுங்கள். மனமொத்த காதலில் செல்லக் கோபம், சிறு சண்டை; பிறகு சமாதானம் பண்ணுதல், கெஞ்சுதல், அதன் பிறகு கொஞ்சுதல் எல்லாம் வேண்டும். நிறைய நேரம் அதற்குத் தான் ஒதுக்கவேண்டும்'.**

"இன்று இரவு முழுதும், நேரங்கழித்து வந்த அவர்மீது நீ கோபம் கொண்டதுபோல் நடித்து, விலகிப் படுத்துக் கொள்! அவர் என்ன பாடுபடுகிறார் என்பதையும் சிறிது நேரம் வேடிக்கை பார்ப்போமே" என்கிறாள் ஒரு தோழி *(1301).*

*புல்லாது இராஅப் புலத்தை அவர்உறும்*
*அல்லல்நோய் காண்கம் சிறிது!.*

புல்லாது - தழுவாது. புலத்தை - ஊடல் கொள்வாயாக. இப்படி வேடிக்கை பார்ப்பதால், அன்பு கூடுமேயன்றிக் குறையாது.

புதுக்கவிதையில் காமத்துப் பாலை விளக்குகிறார் பெரியார்தாசன்:

பூப்போன்ற கண்ணுடைய பெண்,
தன் கணவனிடம் எவ்வளவுக்கெவ்வளவு
ஊடுகிறாளோ
அவ்வளவுக்கவ்வளவு
நல்லவர் அவளுடைய கணவர்
என்று அர்த்தம் (1305)

ஊடல் கொள்ள இடங்கொடுப்பதுதான் அன்புள்ள ஆடவர்க்கு அழகாம். அப்படிப்பட்ட கணவனாக இருந்தால் தான் அவளும் ஊடுவாளாம்.

நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் புலத்தகை
பூஅன்ன கண்ணார் அகத்து.

பூப்போன்ற கண்களையுடைய மனைவியர், தம் கணவன்மாரிடம் புலப்பார்கள் - ஊடுவார்கள் - சிணுங்குவார்கள் - சிறு சிறு சண்டை பிடிப்பார்கள். ஏன்? எப்படி? அப்பெண்களின் கணவன்மார் அவ்வளவு நல்லவர்கள். 'நலத்தகை நல்லவர்க்கு ஏஎர்' - நல்ல குணமுடைய நல்ல கணவன்மார்க்கு அதுவே அழகுதரும் நற்பண்பாகும். அதாவது தம் மனைவியர் தம்முடன் ஊடவும், நகையாடவும், சண்டை பிடிக்கவும் கூட இடம் கொடுக்கும் கணவன்மாரே, உண்மையன்புடைய நல்லவர்களாம். மேலும் அவ்வாறு நடந்துகொள்வதே, காதல் வாழ்வில், அவர்களுக்கு அழகு தருவதாகுமாம்.

ஊடுதலுக்கு வள்ளுவர் கூடுதலான இடம் தருகிறார். எத்தனைவகை ஊடல்கள்?

கோபத்தோடு அவள் இருக்கிறாள். அந்தச் சமயம் பார்த்து அவன் தும்மினானாம். குழந்தைகள் தும்மினால் 'நூறு, நூத்தி ஒண்ணு' என்று வயதைச் சொல்லி வாழ்த்தும் பழக்கம் நம்மிடம் உண்டு அல்லவா? தன்னை அவ்வாறு வாழ்த்துவாள் - கோபத்தை விட்டுத் தன்னை மறந்து வாழ்த்துவாள் என்று, அவன் தும்மிக் காட்டுகிறானாம் *(1312)*.

*ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை*
*நீடுவாழ்க என்பாக்கு அறிந்து.*

ஊடல் கொண்டு தலைவி பேசாது, முகத்தை மாற வைத்துக்கொண்டு இருந்தாளாம். அவளுடைய 'மௌன விரதத்தைக்' கலைப்பது எப்படி? தலைவன் வேண்டுமென்றே ஒரு தும்மல் போட்டானாம், உடனே அவள் தன்னை மறந்து 'நூறு' என்று அகவையைக் குறிப்பிட்டு, அதுவரை வாழ்க என்பாள் என நினைத்து. என்பாக்கு-என்று வாழ்த்திக் கூறுவாளென்று. அவளின் செல்லக் கோபத்தை அசைக்க முயலும் விளையாட்டு முயற்சி இது.

'யாரினும் நாம் இருவரும் காதலம்' என்றானாம். 'யாரைவிட, யாரைவிட' என அவள் ஊடினாளாம், அவனுக்கு வேறு காதலியரும் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு *(1314)*.

*யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்*
*யாரினும் யாரினும் என்று.*

காதலராவார் அனைவரையும்விட, நாம் மிகுந்த அன்புடையோம் என்றான் தலைவன். உடனே அவனுக்குக் காதலியர் பலர் இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டு. கூறிய இது பொய்க்கோபம். ஊடுவதற்கு இப்படிக் கற்பனை யானவற்றையே திருவள்ளுவர் மிகுதியும் கூறுகிறார். உண்மையான தவறொன்று தலைவன்பால் கண்டவிடத்தும், தலைவி ஊடித்திருத்தலாம். என்றாலும் தலைவனைத்

தவறற்றவனாகவும் அவளைப் பொய்க்கோபம் காட்டியே அவனைச் சீண்டியும் தீண்டியும் துன்புறுத்துவதுபோல், இன்புறுத்துபவளாகவும் காட்டுகின்றார். மானுடம் தவறுகளை நோக்கி, எளிதில் திரும்புவதாகலின், தவறற்ற வற்றையே வலியுறுத்தி, மானுடநேயத்தை வளர்ப்பதுதான் படைப்புக்கலையின் குறிக்கோளாக வேண்டும். காமத்துப் பால் பரத்தையிற் பிரிவால் வரும் ஊடலை, வெளிப்படவோ, மிகைப்படவோ, சங்க இலக்கியம்போலப் புனையாததற்கு இப் படைப்பாக்க நெறியைப் பின்பற்றவேண்டுமெனத் திட்ட மிட்டு எண்ணியதே காரணமாகும்.

எழுத்துப்படைப்பு முதல் திரைப் படைப்புவரை இன்றைய கலைஞர்கள் மிகப் பலர். அதாவது கொலைகளையே படம் பிடிப்பவர்கள். கலைஞர்கள் அல்லர்; கொலைஞர்கள். சட்டத்திற்கு அகப்படாது மானுடத்தைக் கொல்பவர்கள்.

‘இப்பிறவியில் பிரியமாட்டேன்’ என்றானாம்; உடனே அவள் கண்கள் குளமாகிவிட்டனவாம்; அப்படியானால் அடுத்த பிறப்பில் பிரிவேன் என்று சொல்வதாக எடுத்துக் கொண்டு *(1315)*.

தும்மினானாம். ‘நூறு’ என்று வாழ்த்தினாளாம். உடனே, ‘யாரோ நினைத்தால்தானே தும்மல் வரும், புரை போய்ச் செருமுவார்கள். இப்போது யாரோ உம்மை நினைத்ததால்தானே செருமினீர்?’ என்று அழத்தொடங்கி விட்டாளாம். அடுத்தும் ஒரு தும்மல் இயல்பாக வரவே, ‘ஏதடா, வம்பாய்ப் போச்சு’ என்று அதை அடக்கிக் கொண் டானாம். அதற்கும் அவள் கலங்கினாளாம்: ‘யாரோ நினைக் கிறார்கள். அதனை மறைக்கவே வந்த தும்மலை அடக்கு கிறீர்கள்’ என்று.

அவள் பொய்க் கோபம் கொள்ளும்போது கெஞ்சிக் கொஞ்சினாலும் தப்பாகிப்போகிறதாம். ‘இப்படித்தானே

மற்ற பெண்களிடமும் நடந்து கொள்வீர்கள்' என்று கூறி ஊடுகிறாளாம்.

இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

வழுத்தினாள் தும்மினே னாக; அழித்துஅழுதாள்
யார்உள்ளித் தும்மினீர் என்று.

தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளல்
எம்மை மறைத்திரோ என்று.

தும்மினால், (இன்று சாப்பிடும்போது புரை போனால்) - 'யாரோ நினைக்கிறார்கள்' என்பது ஒரு வழக்காறு. புரை போவதையும் திருவள்ளுவர் தும்மல் என்றே கூறுகிறார். தும்மினால் 'நூறு, நூற்றி ஒன்று' என்று, அத்தனை அகவை வாழவேண்டுமென்று வாழ்த்துவதே நம் மரபு. யாரோ நினைப்பதாகச் சொல்வது, சாப்பிடும் போதோ, நீர் பருகும்போதே புரைபோய்ச் செருமும் போதுதான்! இப்போது புரைவந்து இயல்பாகச் செருமியதும் 'யார் உம்மை நினைப்பது, என்னைத் தவிர' என்பது போன்ற கோபத்தை அது உண்டாக்கியது. அதற்கு அஞ்சி, உண்மையாய்ப் புரைபோன போதும், அதை அடக்கிச் செருமினால் (செறுத்தல் - செருமலை அடக்குதல்), 'அடடே! யாரோ நினைக்கிறார்கள்; அதை மறைக்கவல்லவா இவர் முயல்கிறார்' என்று, தலைவி அழத் தொடங்கி விடுகிறாள்!

தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்குநீர்
இந்நீரர் ஆகுதிர் என்று. (1319)

உணர்த்துதல் - மனைவியின் கோபத்தைத் தணிவிக்க முயலுதல். இந் நீரர் - இத்தன்மையுடையவர். பிறரிடமும் இப்படித்தானே 'கெஞ்சிக் கொஞ்சுவர்' என்பது, கற்பனை யிலும் கணவனைத் தவறவிடாமை. அவள் அழகை அள்ளிப் பருகுவது போல் பார்த்துக்கொண்டே இருந்தாலும்,

'இத்தனை நேரமும் யாரோடு என்னை ஒப்பிட்டுப் பார்த்தீர்கள்?' என்று கோபிக்கிறாளாம்.

*நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்,*
*யார்உள்ளி நோக்கினீர் என்று!* (1320)

காதலர்களின் முதற்சந்திப்பிலிருந்து, இவ்வாறு பொது நோக்கு நோக்குவது, பார்த்துப் பார்த்து மகிழ்வது, பார்க்காதது போல் பார்ப்பது, ஏதோ வேண்டாதவர் — கோபங்கொண்டவர் போல் பேசுவது, சிறுசிறு பூசலிடுவது, பிறகு உடனே பணிந்து போவது, விட்டுக் கொடாதவர் போல் நடந்து உடனே விட்டுக் கொடுப்பது, சுவையான உரை யாடல்களால் பட்டிமன்றம் போல் போட்டியிட்டுப் பேசி இருவரும் மகிழ்வது என இவ்வாறு பலவற்றையும் திருவள்ளுவர் கூறுவதன் உட்கருத்துத்தான் என்ன? ஒரே ஒரு அதிகாரம் மட்டும் கூடிமகிழ்வது பற்றிக் கூறிவிட்டு, மற்ற இருபத்துநான்கு அதிகாரங்களிலும் பிரிவையும், பிரிவில் காதல் மிகுவதையும், மிகுந்து துடிதுடித்துக் கூடத்துடிப் பதையும், வாழ்நாளில் பெரும்பகுதி பேசிச் சிரித்துக் கலந்து பழகி மகிழ்வதையுமே கூறியுள்ளாரே ஏன்? இதனால் அவர் நமக்குச் சொல்ல வருவதுதான் என்ன?

**7**

# கவிதையின் ஒளி!

'மீனாட்சி' என்ற கவிதைக்குப் பொற்கிழிப் பரிசு தந்தனர். 1973இல் மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் கையால் முதன் முதல் நான் பெற்ற பரிசு அது. அப்போது மதுரை வானொலியினர் 'உங்களுக்கு மரபுக் கவிதை பிடிக்குமா; புதுக் கவிதை பிடிக்குமா?' என்று கேட்டார்கள் நேர்காணலில். இப்போதும் நினைவிருக்கிறது, 'கவிதை பிடிக்கும் எனக்கு' என்று கூறினேன். எந்த வடிவம் என்பதைவிட அதில் கவித்துவம் இருக்கிறதா என்பதே கேள்வி.

ஆமாம். கவிதை ஒரு பழமொழியில்கூட இருக்கிறது. கி.வா.ஜ-வின் 'தமிழ்ப் பழமொழிகளைச்' சில மணித்துளிகள் புரட்டிப் பாருங்கள். 'கம்புக்குக் களை எடுத்தாற் போலவும் இருக்கும்; தம்பிக்குப் பெண் பார்த்தால் போலவும் இருக்கும்'-உழவர் சமுதாயப் பெண் ஒருத்தி சொன்னது இது. களை எடுக்கும் வேலை பார்க்க இளம் பெண்கள் வருவார்கள். 'நாமும் போனால், அந்த வேலையையும் பார்த்தபடி, தம்பிக்குப் பொருத்தமான பெண்ணையும் தேடலாமே' என்பதை அவள் இப்படி எதுகை மோனை

கி.4.

நயம்படச் சொல்கிறாள். 'வினையால் வினையாக்கிக் கோடல்' (678) என்ற குறளுக்கு, இதில் விளக்கம் இருக்கிறது. ஒரு செயலைச் செய்யும்போதே, அதைக் கொண்டு மற்றொரு செயலையும் முடித்துக் கொள்வதுதான், நிருவாகத்திறமை. 'நாங்களெல்லாம் இருக்கும்போது, உழத்தி ஒருத்தியா திருக்குறளுக்கு உரை சொல்வது' என்று கோபப்படாதீர்கள்!

அறிவும் உணர்வும் தனி உடைமை அல்ல. புலர் காலையில், சூரிய ஒளி மேற்குப் பக்கத்துச் சாளர வழியாகவும் உள்ளே வரும்!

சிறந்த எழுத்தாளனாக வேண்டுமென்றால், சிறந்த எழுத்துக்களையெல்லாம் திரும்பத் திரும்பப் படிக்க வேண்டும். சிறந்த கலைஞனாக, கவிஞனாக ஆக வேண்டு மென்றால், சிறந்த படைப்புக்கள் பற்றிய கல்வி வேண்டும். சிறந்தவற்றைப் படித்தால் போதாது. அதிலுள்ள சிறப்பு எது; அது எதனால் சிறந்ததாகிறது என்ற நுட்பத்தைக் கண்டு கொள்ளும் வரை அதில் தோய்ந்து படிக்க வேண்டும்.

எழுதுவன எல்லாம் இலக்கியம் ஆவதில்லை. ஒரு பெருங்காப்பியத்தில் கூட வரலாறு, கதைப் பகுதி கலந்திருக்கும். அதன் ஊடே, மின்னல் கீற்றுக்கள் போலச் சிதறிக்கிடக்கும் இலக்கிய ஒளிவீச்சுக்களைக் கண்டு, நின்று, படித்துப் படித்துச் சுவைக்க வேண்டும். அப்போதுதான் உலகம் வியந்து சுவைக்கும்படியான, எழுத்துக்களை நீங்களும் படைக்க முடியும்.

எந்த வடிவமாகவும் இருக்கலாம். அதில் கவிதைக்குரிய 'ஒளி' ஊடுருவி இருக்குமானால் அது கவிதைதான். தகழியின் 'செம்மீனி'லிருந்து, அசோக மித்திரனின் 'வேலி' வரை - ஒன்று நெடுங்கதை மற்றது சிறுகதை; புதுமைப்பித்தனின் 'பொன்னகரம்' தொட்டு செயகாந்தனின் 'ஒரு வீடு பூட்டிக் கிடக்கிறது' வரை எனக்குக் கவிதைகளாகவே தோன்று கின்றன.

திருவள்ளுவர் நீதியைப் போதிக்கவே எழுதினார். படிப்பவர் மனத்திலே பதிய வேண்டுமே என்பதால், தமது நூலை இலக்கியமாகக் கருதும்படியும் எழுதலானார்.

*யாதனின்... யாதனின்...*
*நீ...ங்...கி யான் – நோ...தல்*
*அதனின்...அதனின்–இலன்*

இப்படி எழுதிக் காட்டினால், இதைப் புதுக்கவிதை இல்லை என மறுப்பது கடினம். ஆசை விடவிடத் துன்பம் விடுகிறது. வள்ளுவர் சொன்னதைவிடவும் சொல்லியுள்ள முறை உள்ளத்தைத் தொடுகிறது.

'அவர்' ஊரில் இல்லை. 'அவள்' தனியே இருக்கிறாள். இரவு முழுவதும் அவளுக்கு உறக்கமில்லை. ஊரே உறங்குகிறது. இப்போது, அவளது இமையாத கண்ணெதிரே, அந்த 'இரவுப் பொழுது' ஒன்றுதான், நகராமல் நிற்பதுபோல் தெரிகிறது. "அடடே! இந்த இரவுக்கும் உறக்கமில்லைபோல் தெரிகிறதே. ஒருவேளை இதுவும் தன் துணையைப் பிரிந்திருக்கிறதோ? மிகவும் இரக்கப்படும்படி இருக்கிறது... அதற்கு இப்போது என்னைத் தவிர வேறு துணையில்லை!"

*உலகையே உறங்க வைத்தது! இரவுக்கு,*
*பாவம் நான் மட்டுமே துணை!*

என ஒரு ஹைக்கூக் கவிதையாக எழுதிவிடலாம். திருவள்ளுவர் அன்றைய நடையில்,

*மன்னுயிர் எல்லாம் துயிற்றி (தூங்கச் செய்து)*
*அளித்து இரா (இரவு இரங்கத்தக்கது)*
*என்அல்லது இல்லை துணை!*

என எழுதியுள்ளார்.

சிலசமயம் திருமண வாழ்வு என்று மனப்பொருத்தம் இல்லாத இருவரைக் கட்டிப் போடுகிறோம். மற்ற

பொருத்தம் எல்லாம் பார்க்கும் நாம் மனப்பொருத்தம் பார்ப்பதில்லை. கடைசி வரை இது இழுபறி வாழ்வாகி விடுகிறது.

தாமே காதலித்து மணம் செய்து கொள்பவர்கள்கூட அப்போதைய காம ஈர்ப்புக்கு ஆட்பட்டு விடுகிறார்கள். விலகி நின்று பழகிப் பார்ப்பதில்லை. அங்ஙனம் சற்று விலகி நின்றே, மனப்பொருத்தம் உண்டா என அறிந்து, பிறகு அது காதலாக மாறினால் நல்லது. 'நாடாது நட்டலிற் கேடில்லை; நட்டபின் வீடில்லை, நட்பாள்பவர்க்கு' *(791)* என்பது காதலுக்கும் பொருந்தும். நன்கு தீர ஆலோசிக்காமல் நட்புக்கொள்வதைவிடக் கேடில்லை; நட்புக்கொண்ட பிறகு விடுவதென்பதும் இயலாது!

இருவர் பண்பும் ஒத்துப்போக வேண்டும். ஒருவரை ஒருவர் முழுமையாக விரும்பும்படி, இருவர்தம் குணங்களும் பழக்க வழக்கங்களும் அமைய வேண்டும்.

தாம் மனமார விரும்புகிறவரே, தம்மையும் விரும்பும் படியான மனப் பொருத்தம் அமைந்துவிட்டால், அவர்கள் 'காமத்துக் காழ்இல் கனி' பெற்றவர்போல் முழு இன்பச்சுவை பெறுவார்களாம். 'விதையற்ற கனி' என்று விலை கூறி இன்று விற்கிறார்களே, அதுபோல், முழுச்சுவையும் பெற்று மகிழ்வார்களாம். (காழ்-விதை)

*தாம் வீழ்வார் (ஆசைப்படுபவர்)*
*தம் வீழப் (தம்மை ஆசைப்படப்)*
*பெற்றவர், பெற்றாரே*
***காமத்துக் காழ்இல் கனி.***

காம இன்பம் - பாலுறவு என்ற இன்ப சுகத்தை, இவர்கள் முழுமையாக அடைவார்கள். தாம் ஒருவரை விரும்பி, அவரும் தம்மை விரும்பப் பெற்றால், என்னும் போது அவ்வாறு ஒருவரை ஒருவர் விரும்ப வேண்டும் என்ற தொனியும் உளது.

இத்தகைய காதலர்கள் காம இன்பத்தை - பால் உறவை எங்ஙனம் நுகர வேண்டும்? திருவள்ளுவர் குறிப்பாய் உணர்த்திச் சொல்லாமல் சொல்கிறார்.

விலங்குகளின் பாலுறவே வேறு. அவை பேசிச் சிரித்தும், உரையாடி மகிழ்ந்தும் இன்பமாய்ப் பொழுதைப் போக்கி, பிறகு கூடுவதில்லை. மனிதர்களிலும் அவ்வாறுதான் பலர் வாழ்கிறார்கள்! திருவள்ளுவர் உடலுறவைவிட, உள்ளத்தின் உறவுக்கு அதிக இடம்தர வேண்டுமென்று கருதுகிறார். அதை அவர் நமக்குப் போதிக்கின்ற முறையைத்தான், நாம் ஊன்றிக் கவனித்துக் கண்டுகொள்ள வேண்டும். இளைஞர்க்கு இக்கல்வி அவசியமென்று, உளவியல் வல்லுநர்கள் சொன்னபிறகு, நாம் தயங்கலாமா?

# 8

## உள்ளிருக்கும் 'அந்த' ஆசை!

மெய்ப்பாடு என்பது என்ன? 'மெய்' நம் உடம்பு. பாடு - படுதல் - தோன்றுதல். உடம்பில் தோன்றுவது சைகை மொழி. உள்ளத்தின் உணர்வுகள் வெளியே மற்றவர்க்குத் தெரியும்படி கண், முகம், கை, உடல் அசைவுகளால் வெளிப்படுதல், மெய்ப்+பாடு.

ஒரு பெண் தன் 'இணைவிழைச்சு' எனப்படும் பாலுறவு ஆசையை வெளிப்படச் சொல்லமாட்டாள். அதை அவள் கண்ணும் முகமுமே சொல்லுமாம். தொல்காப்பியம் 'பசுமண் கலத்துள் (குடத்தில்) பெய்துவைத்த நீர், புறம் பொசிந்து காட்டுவதுபோல, ஒரு பெண் தன் வேட்கையை மெய்ப்பாட்டால் மட்டுமே உணர்த்துவாள்' என்று இலக்கிய நயம் தோன்ற விளக்கும். பச்சை மண் பானையில் தண்ணீரை ஊற்றி வைத்தால், பானையின் வெளிப்புறம் முழுவதும் அத்தண்ணீரின் பொசிவு - நீர்த்தன்மை தெரியும். ஒருவரது ஆசை அப்படி வெளிப்படுவதுதான் நாகரிகமாம்.' *(1064)*

'என்னைத் தொட்டுப்பிடி, கட்டிப்பிடி' என்று வெளிப்படையாக, பச்சையாக இன்று பாடுகிறார்கள்; காட்டு

கிறார்கள். இது நிலைக்காது. 'சே' என்று வெறுக்கவைத்து விடும். குறிப்பால் உணர்த்துவதுதான் நிலைக்கும். சுவையும் மகிழ்ச்சியும் நீடிக்கும்.

அவள் அழகிய மேனி நெளிவதிலும் அசைவதிலும் ஒரு குறிப்பு - மணிகள் கோத்த நூல் வெளியே தெரிவது போலத் தெரிகிறதாம். இன்னும் மொட்டு விரியவில்லை; விரிந்தால் பரவும் மணம் உள்ளே இருக்கிறது. இன்னும் அவள் சிரிக்க வில்லை; அது குமிழ்ச் சிரிப்பாய் உள்ளடங்கியிருக்கிறது. ஆனாலும் உள்ளிருக்கும் மணம் போல, இவள் உள்ளத்தினுள்ளிருக்கும் 'அந்த ஆசை'யை அதனால் உணர முடிகிறதாம். அவள் வளையல்களைச் சரி செய்பவள் போல, ஒரு 'கள்ளப்' பார்வையுடன் நடந்து, அவன் இருக்குமிடத்தைக் கடந்து போகிறாளாம். அதில் 'தன் துயர் தீர்க்கும் மருந்து ஒன்று' தெரிவதாகக் காதலன் சொல்கிறான். குறிப்பில் குறிப்பு உணர்வதை, வள்ளுவர் சொல்லும் திறம் இது.

> செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்
> தீர்க்கும் மருந்தொன்று உடைத்து.

(செறிதொடி - வளையல்கள். செய்து இறந்த கள்ளம் - நடந்து, தன்னைக் கடந்து போனவளின் கள்ளப்பார்வை)

பிரிந்திருக்கும்போதுதான் உண்மையான காதலின் உணர்வு ஊற்றெனப் பெருகும். பிரிவினால் ஆற்றாமை ஏற்படும். உடல் மெலியும்; நிறம் பொலிவு குறையும். புலம்பத் தோன்றும். நனவும் கனவும் அதுவாகவே வளரும். மனம் ஒருவழி நிற்காது. மாலைப்பொழுது வந்தாலே மயக்கம் வரும்.

இங்ஙனம் விருப்பத் தூண்டுதல் வளர்ந்து, ஆசையால் நெஞ்சம் துடிதுடிக்கும் நிலைவரை, திருவள்ளுவர் இந்த உணர்ச்சியின் வளர்ச்சியை அதன் உச்சத்துக்கே கொண்டு செல்வதன் மூலம், ஓர் அரிய செய்தியை இளம் காதலர் களுக்குச் சொல்கிறார்.

ஒன்று வயிற்றுப்பசி; மற்றது உடற்பசி அல்லவா? இரண்டுமே இயற்கை நியதிக்குட்பட்டவைதானே?

வயிற்றுப்பசிக்கு மிகுதலும் குறைதலும் கூடாது; அளவறிந்து உண்ண வேண்டும்; பசி என்று வயிறுமுட்டத் தின்னக் கூடாது; 'உருசி' யென்று கண்டதையெல்லாம் தின்னுதல் தவறு; 'துய்க்க துவரப் பசித்து' என்றபடி, மிக நன்றாகப் பசித்த பிறகே சாப்பிட வேண்டும்; பசியின் அளவைவிடச் சிறிது குறைவாக உண்பது நல்லது.

மிக முக்கியமானது எதுவென்றால், முன்பு சாப்பிட்டது செரித்ததா என்று நன்கு தெரிந்துகொண்டு, அதன் பிறகுதான் உண்ண உட்காரவேண்டும். உடலுக்கு மாறுபாடில்லாத, தன் உடல்நிலைக்கு ஏற்ற உணவை, இவ்வாறு ஒவ்வொரு முறையும் செரிமானம் ஆனபிறகு, அதற்கான நேரம் கொடுத்து, இடைவெளிவிட்டு உண்ண வேண்டும்.

திருவள்ளுவர் மருந்து *(95)* அதிகாரத்தில் கூறிய இயற்கை மருத்துவம் எனத்தகுந்த, பசிக்கு உணவுண்பது பற்றிய இவை அனைத்தையும், காதற்பசி தீர்ப்பதாகிய உடற்பசிக்கும் பொருத்திப் பார்க்கத் தூண்டுகிறார்.

கடைசி அதிகாரத்தில் இதை வெளிப்படையாகக் கூறுகிறார்.

***உணலினும் உண்டது அறல் இனிது!***

சாப்பிடுவதைவிட, சாப்பிட்டது செரிப்பது உடலுக்கு நல்லது.

***காமம் புணர்தலின் ஊடல் இனிது!***

அதுபோலக் காம இன்பமும் உடலுறவு கொள்வதை விட, ஊடிச் சிரித்துப் பேசி, பொய்க்கோபம் காட்டி, அதைத் தீர்த்து இங்ஙனம் பழகுவதில் பெரும் பொழுதைச் செலவழிப்பது இனிது!

திருவள்ளுவர் காதலுறவில், காம இன்பத்துக்கு மிகுந்த இடைவெளி வேண்டுமென்றுதான், ஊடிக்கூடி விளையாடிப் பழகும் பண்பாட்டுக்கு மிகப்பல குறள்களை ஒதுக்கியுள்ளார். ஏன்? நீண்டகாலம் வாழவேண்டும்; நெடிது காலம் இன்பம் துய்க்க வேண்டும்; அதற்காக!

வயிற்றுப்பசி போன்றதுதான் உடற்பசி. அதாவது இணைவிழைச்சு; பாலுறவு. 'துய்க்க துவரப் பசித்து' (944) என்பதற்கேற்ப, நன்கு பசியெடுத்த பிறகே உண்ண வேண்டும். நம் உடலுக்கு ஒத்து வராதவற்றை - மாறானவற்றை உண்ணக் கூடாது. ஒருமுறை உண்டபின், மறுமுறை உண்பதற்கிடையே நீண்ட இடைவெளி வேண்டும். மிக அதிகமாக உண்பது நோய்க்கு இடமாகும். நம் உடலில் எவ்வளவு செரிமானம் ஆகக்கூடியதாக இருக்கிறதோ - அவ்வளவினதாக உண்ண வேண்டும். ஆசை அளவினதாக உண்டு தீர்க்காமல், அதைவிடச் சிறிது குறைத்தே உண்டால் நல்லது.

*அற்றால் அளவுஅறிந்து உண்க;அஃது உடம்பு*
*பெற்றான் நெடிதுஉய்க்கு மாறு*

(943)

அறுதல் - உண்டது செரித்தல். மேலே சொன்ன ஒவ்வொரு வாக்கியக்கருத்தையும் ஆண் பெண் உடலுறவாகிய, உடற்பசி தீர்த்துக் கொள்வதற்கும் பொருத்திப் பாருங்கள். 'நெடிது உய்க்குமாறு' - நீண்ட நாள் வாழ்ந்து, உணவுண்டு இன்புறும் வழி. இன்பத்திலும் நெடிது 'துய்த்து' (அனுபவித்து) நீண்டநாள் வாழும் வழியும் இதுவேயாம். இதுதான் வள்ளுவர் தரும் பாலுறவுக்கல்வி.

மலர் மென்மையானது; காமமோ மலரினும் மென்மை யானதாம். ஆனால், மலரைச் 'செவ்வி' பார்த்து, மலரும் பருவம் பார்த்து, வாடும் முன் சூடும் இம்மக்கள், இந்தக் 'காமத்தில்' செவ்வி பார்ப்பதில்லையே, ஏன்?

*மலரினும் மெல்லிது காமம் சிலர்அதன்*
*செவ்வி தலைப்படு வார்!* (1289)

இலக்கியச் செவ்வியும் அது போன்றதே. சொல்வது நல்லதாக இருக்க வேண்டும்; சொல்லும் முறை சுவையாக இருக்க வேண்டும். திருவள்ளுவர் காமத்துப்பாலைச் சிறுசிறு நாட்கக் காட்சிகளாக்கிச் சுவைபடச் சொல்லி இருக்கிறார். ஆனாலும் அதனுள்ளே ஒரு 'செய்தியை' வைத்துள்ளார். அதைக் கவனிக்காவிட்டால், மலரைப் பார்த்து விட்டு மணத்தை நுகரத் தவறியதாகும்.

நீண்ட காலத்துக்கு முன்னால் விகடனில் ஒரு தொடர், 'எனக்குப் பிடித்த புத்தகம்' என்று வந்தது. அந்தத் தொடர் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஏன் தெரியுமா? நான் தொகுத்த 'தாலாட்டு' என்ற நாட்டுப்புறப் பாட்டுத் தொகுப்பை 'எனக்குப் பிடித்த புத்தகம்' என்று ஹேமா ஆனந்ததீர்த்தன் எழுதியிருந்தார். அதே நூலை, 'எங்கள் தாய் வீட்டுச் சொத்து' என்றார் கண்ணதாசன், தமது 'தென்றலில்'. அப்படி, பலருக்கும் அத்தொகுப்பு பிடித்திருந்ததற்குக் காரணம் என்ன? சில பாடல்களையேனும் பார்க்க வேண்டு மல்லவா.?

9

# தங்கத்திலே தொட்டில் கட்டி..

'ஆயி தீவாலி ஆயி தீவாலி, என்ற இந்திப் பாட்டு ஒன்று நாடெங்கும் எதிரொலித்தது. அந்தக் காலத்தில் தமிழ்த் திரைஇசைப் பாட்டெல்லாம் இந்தி மெட்டுப்படிதான் இருக்கும். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், 'இது என்னடா புதுமெட்டு, 'ஆண்டிப் பண்டாரம் உன்னை வேண்டிக் கொண்டேனே' என்று நம்ம ஊரிலே பாடுறானே, கேட்டதில்லையா?' என்று அவை இரண்டிலும் ஒரே மாதிரி இசை இருப்பதைப் பாடிக் காட்டினார்.

காலம் மாறிவிட்டது. 'வட்டம் தொட்ட இடத்தில்' என்பார்கள். இப்போதெல்லாம் நாட்டுப்புறப்பாடல் இசைதான் தமிழ்த் திரைவானில் கொடிகட்டிப் பறக்கிறது. அதுதான் இங்கிருந்து இந்திப் படத்துக்கும் ஏற்றுமதியாகிறது.

நாட்டுப்புறப் பாடல்களில் பலவகையுண்டு. பல பாடல்கள் பச்சையாகவும் கொச்சையாகவும் இருக்கும். அதாவது கருத்தும் கற்பனையும் பிறந்தமேனியில் வெளி வரும். சில பகுதியினர் இலக்கியம் போலவே பாடுவதையும் கேட்கலாம். நான் கேட்டுச் சுவைத்துத் தொகுத்தவை பல காரைக்குடி வட்டாரப் பாடல்கள். அங்கு நகரத்தார்,

நாட்டார் பாடிவந்த பலவற்றில் இலக்கியத்தரம் மேலோங்கி இருந்தது. கேட்டால் நீங்களும் வியப்பில் மூழ்கிப் போவீர்கள்.

பொழுதெப்ப விடியும்
பூவெப்ப மலரும்
சிவனெப்ப வருவார்
வரமெப்பத் தருவார்

– என்று பிள்ளைகளிடம் பாடிக்காட்டுவார்கள். ‘உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மையெழுதி, தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மையெழுதி’க் குழந்தையை அழகு செய்வார்கள். ‘மானோ மரகதமோ, தேனோ திரவியமோ’ என்று சீராட்டுவார்கள். ‘மானுடா ஓடுது, மறியுடா நல்லதம்பி; மானோடும் வீதியெல்லாம் தம்பி தானோட வந்தவனோ’ என்று மானுக்கும் மகனுக்கும் ஒப்புமை சொல்லி மகிழ்வார்கள். பிள்ளையைத் தொட்டி லில் போட்டுத் தாலாட்டத் தொடங்கிவிட்டால், கற்பனை வானத்தில் அவர்கள் வலம் வருவதைப் பார்க்க வேண்டுமே!

‘கொம்புக்கனியோ, கோதுபடா மாங்கனியோ; வம்புக் கமுதாயோ, வாயெல்லாம் பால்வடிய’ என்று கேட்ட தாய், அம் மகனுக்குப் பால் கறக்க, ஒரு காராம்பசுவையே கற்பனையில் ஓட்டி வருகிறாள். எப்படி?

காடெல்லாம் தேடிக் காராம் பசுவோட்டி
ஓட்டிவந்த பாற்பசுக்கு
உடம்பெல்லாம் பொன்நிறமாம்
கூட்டிவந்த பாற்பசுக்குக்
கொம்பெல்லாம் பொன்நிறமாம்
உட்கார்ந்து பால்கறக்க
முக்காலி பொன்னாலே
அணைந்துபால் கறப்பதற்கு
அணைகயிறும் பொன்னாலே

*பிடித்துப்பால் கறப்பதற்குப்*
*பிடிசெம்பும் பொன்னாலே'.*

ஒரு தாய்க்குத் தன் மகன்தான் மகராசா, இந்திரன், சந்திரன் எல்லாம்! அதனால் அவனைப் பழைய சேலையினால் கட்டிய ஒரு தொட்டிலில் ஆட்டினாலும், பாட்டில் அது தங்கத்தொட்டிலாகக் கண்ணைப் பறிக்கும்!

*தங்க வளை பூட்டி*
*சரிகையினால் தொட்டில் கட்டி*
*வெள்ளி வளை பூட்டி*
*விசாலமாய்த் தொட்டில் கட்டி...*

– என்று அவள் பாடுவாள். கண்ணன் என்னும் குழந்தையைத் தாலாட்ட விரும்பிய பெரியாழ்வார், இந்தத் தாய்போலவே மாறிவிடுகிறார்; ஒருபடி மேலேயும் செல்கிறார்.

*மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி*
*ஆணிப் பொன்னால் செய்த*
*வண்ணச் சிறுதொட்டில்*
*பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்*
*மாணிக் குறளனே தாலேலோ!*
*வையம் அளந்தானே தாலேலோ!*

பிரமன் செய்து விடுத்ததாக ஒரு 'வண்ணச் சிறுதொட்டிலை'க் கண்முன்னர் கொண்டுவருகிறார். பிள்ளைத்தமிழுக்கு வழிகோலியவர் பெரியாழ்வார் என்பது இலக்கிய வரலாறு. ஆனால், பின்வந்த எவரும் அவரைப் பின்பற்றவில்லை. பத்துப் பருவமென வரையறுத்து, எல்லோரும் ஒன்றுபோலவே பாடி, சற்று நம்மைச் சோர் வடையவும் செய்து விட்டார்கள்.

பெரியாழ்வார் குழந்தை கண்ணனின் தளர்நடை, 'அச்சோ அச்சோ... விழுந்துவிடாமல் வா' என அழைத்தல், புறம்புல்குதல் (இன்று உப்புமூட்டை தூக்குவதாக முதுகில் வந்து அமரச் சொல்லுதல்), கண்ணை மூடிக்கொண்டு திறக்கச் சொல்லிப் பிள்ளைக்கு அப்பூச்சி காட்டுதல் என்று இவ்வாறு பாடும் பருவங்கள் எல்லாம் மிக இயல்பானவை; வாழ்வில் நடப்பவை; நாட்டுப்புற இலக்கியத்தன்மை யுடையவை. எந்த இலக்கியமும் தாய்மை இலக்கியமாம் வாய்மொழி இலக்கிய மரபின் வடிவம், உத்தி, கற்பனை, அடிக்கருத்து என்பவற்றைப் பெற்றிருந்தால், சுவை மிகுந்ததாகிறது. அல்லாதவை செயற்கைத் தன்மையுடன் அமைந்து, சுவை குறைகின்றன.

'மூங்கிலிலை மேலே தூங்குபனி நீரே, தூங்குபனி நீரை வாங்குகதிரோனே' என்பது ஒரு நாடோடிப் பாட்டு. ஏற்றம் இறைக்கும்போது பாடப்பட்ட இதை, காடு கழனிகளைச் சுற்றி வந்த கம்பர் கேட்டு அசந்து போனதாக, 'கி.வா.ஜ' தமது 'மலையருவி'யில் குறிப்பிடுகின்றார். கம்பரே திகைக்கும்படி இப்பாட்டுக்களிலிருந்த வடிவச்சிறப்பும் உணர்ச்சிப் பொலிவும் பற்றிச் சில சான்றுகளைக் காண்போமா?

# 10

# கிளி விரட்டிய கிளி

படம் சுவரில் தூங்குகிறது' என்பது ஒரு வட்டார வழக்கு. தொங்குகிறது என்பதுதான் அது. 'தூக்கு' என்ற சொல்லும் அதிலிருந்து வந்ததே... புலரும் காலைப் பொழுதில் மூங்கிலின் நீண்ட இலை நுனியில் ஒரு பனித்துளி விழப்போவதுபோல் தொங்கும்; சூரிய ஒளியில் வயிரம் போல் மின்னும். நேரம் செல்லச் செல்ல, அது சூரிய ஒளியில் கரைந்து, ஆவியாகி மறைந்துவிடும்.

*மூங்கில் இலைமேலே*
*தூங்குபனி நீரே*
*தூங்குபனி நீரை*
*வாங்கு கதிரோனே!*

ஏற்றக்காரன் பாடிய இந்தப் பாட்டு, கம்பரைத் தடுத்து நிறுத்திக் கேட்க வைத்ததில் வியப்பில்லை.

'தூங்குபனி நீர்' என்ற தொடர், அடுத்த அடியிலும் வருவது இனிமை தருகிறது. இந்த வடிவமைப்பை, இளங்கோஅடிகளின் வரிப் பாடல்களில் காண்கிறோம்.

கயல்எழுதி வில்லெழுதிக்
　　கார்எழுதிக் காமன்
செயலெழுதித் தீர்ந்தமுகம்
　　திங்களோ காணீர்
திங்களோ காணீர்...
　　திமில்வாழ்நர் சீறூர்க்கே
அங்கண்ஏர் வானத்து
　　அரவுஅஞ்சி வாழ்வதுவே...

'நெஞ்சையள்ளும் சிலம்பில்' கானல் வரிப்பாடல் இது. பெண்ணின் அழகுச் சித்திரம், வரிப்பாடல், அன்றைய நாடோடிப்பாடல். அதற்கு இளங்கோ இலக்கிய வடிவம் தந்துள்ளார். 'திங்களோ காணீர்' திரும்ப வந்திருப்பதைப் பாருங்கள்.

அலைகள் திரும்பத் திரும்ப வருவதுபோல், பாடல் அடிகளைத் திரும்ப வரவைத்து, இனிமை தவழப் பாடும் அழகை இக்கிராமத்துப் பாடல்களில் நிரம்பக் காணலாம்.

நாழித் தினைவிதைத்து – வள்ளி
　　நடந்து கிளிவிரட்டி
உழக்குத் தினைவிதைத்து – வள்ளி
　　ஓடிக் கிளிவிரட்டி
பதக்குத் தினைவிதைத்து – வள்ளி
　　பாடிக் கிளிவிரட்டி!

தினைப்புனத்தில் வள்ளி நடந்தும் ஓடியும் ஆலோலம் பாடியும் கிளி முதலிய பறவைகள், தினைக்கதிர்களைக் கொத்திப் போகாமல், இப்படித்தானே காவல் காத்திருப்பாள்.

ஒருத்தியின் நாத்தனார், தன் அண்ணனின் குழந்தையைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுகிறாள். 'ஆரடித்தார் ஏனழுதாய்' என்று கேட்டுவிட்டு;

தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு

போட்டுவைப்போம்
கடிந்தாரைச் சொல்லியழு
கால்விலங்கு
போட்டுவைப்போம்
அடித்தாரைச் சொல்லியழு
ஆக்கினைகள்
செய்துவைப்போம்...

என்று தண்டனைகளை அடுக்குகிறாள். பிள்ளை வேறு எதற்கோ அழுகிறது என்பது அவளுக்குத் தெரியும். அதனால் நகைச்சுவைபடவும் மேலே பாடுகிறாள்.

வெண்ணெயால்
விலங்குபண்ணி
வெய்யிலிலே
போட்டுவைப்போம்
மண்ணாலே
விலங்குபண்ணித்
தண்ணீரில்
போட்டுவைப்போம்!

இப்படிப் பாடும்போதே, தன்னைக் கவனித்துக் கொண்டு இருக்கும் அண்ணிக்கு ஒரு குறிப்பும் சொல்கிறாள். அதாவது, 'இந்தப் பையன் தான் விளையாடுவதற்குத் தோதாக ஒரு தம்பி வேண்டுமென்று' அழுகின்றானாம்.

ஆரும் அடிக்கவில்லை
ஐவிரலும் தீண்டவில்லை
தானா அழுகின்றான்
தம்பிதுணை வேண்டுமென்று!

இப்படிப் பாடுபவர்கள் கருத்தாழத்தோடும் பாடுகின்றனர். நகரத்தார் மரபினர் விருந்தோம்புவதில் தனிக் கவனம் செலுத்துவர். ஒரு பெண்மணி பாடியது இது.

தென்னை இலைபரப்பிச்
சென்றாரைக் கையமர்த்தித்
தேடி விருந்துவைக்கும்
திசைக்கருணர் பேரேனோ!

வாழை இலைபரப்பி
வந்தாரைக் கையமர்த்தி
வருந்தி விருந்துவைக்கும்
மகராசர் பேரேனோ!

தம்மைக் கடந்து போனவர்களையும் கூப்பிட்டு விருந்து வைப்பார்களாம்... தம்மைத்தேடி வந்தவர்க்கும் விருந்து தருவார்களாம். 'கை அமர்த்தி' என்பது, உபசரிக்கும் பாங்கை நினைப்பூட்டுகிறது. 'வருந்தி' என்றால், மிக முயன்று, வந்தவர் முகம் கோணாமல் முழுக்கவனம் செலுத்தி விருந்து படைப்பது.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு (86)

என்ற குறளுக்கு விளக்கம் அளிப்பது போல், மேலேயுள்ள தாலாட்டு அமைந்திருப்பதை ஒப்பிட்டு அறியலாம்.

சுவாமி விபுலாநந்தர் 'யாழ்நூல்' படைத்தவர். யாழையும் தமிழிசையையும் மீட்டுருவாக்கம் செய்ய முயன்றவர். அவர் இந்த நாடோடிப் பாடலமைப்பில் 'ஈசன் உவக்கும் மலர்' என எழுதியிருக்கும் கவிதை 'ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்' (1923) மாத இதழில் வெளிவந்திருக்கிறது.

வெள்ளைநிற மல்லிகையோ
வேறெந்த மாமலரோ
வள்ளல் அடிஇணைக்கு
வாய்த்த மலரெதுவோ...?
வெள்ளைநிறப் பூவுமல்ல,
வேறெந்த மலருமல்ல

உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது

காப்பவிழ்ந்த தாமரையோ
கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிள்ளையாய் வந்தவர்க்கு
வாய்த்த மலரெதுவோ...?
காப்பவிழ்ந்த மலருமல்ல
கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி
கோமகனார் வேண்டுவது

பாட்டளிசேர் பொற்கொன்றையோ
பாரிலில்லாக் கற்பகமோ
வாட்ட முறாதவர்க்கு
வாய்த்த மலரெதுவோ...?
பாட்டளிசேர் கொன்றையல்ல
பாரிலில்லாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி
நாயகனார் வேண்டுவது!

கமலம் - தாமரைப்பூ இதயம் போலவே இருக்கும்; காந்தள் பூ வேலியோரங்களில் பூத்திருப்பது. ஐந்து கை விரலோடு கூடிய உள்ளங்கை போலவே காணப்படும். நெய்தல்பூ விழி போல விளங்கும். ஈசன் விரும்பும் இம்மலர் களைப் பாடலில் வைத்துப் படிக்கும்போது கோயில்மணி ஓசை போல, நீண்ட நேரம் காதுகளுக்குள் ரீங்காரமிடுவது, எல்லோர் மனத்தையும் தொடும் என்று நம்புகிறேன். பாட்டு அளி - பாட்டுப்பாடும் வண்டு.

தமிழின் பழங்காலப் பாடல்கள் பலவற்றை... இது சித்திரப் பாட்டு, இது சிற்பப் பாட்டு, இது உளவியற் பாட்டு என்று ஒவ்வொன்றாக இரசிக்கலாம். முதலில் உளவியற் பாட்டுக்கு, ஓரிரு எடுத்துக்காட்டுகள் பார்ப்போம்.

# 11

## ஓடுகிறாள் கதவு திறக்க...
## மூடுகிறாள் நாணம் தடுக்க...

மனமும் அறிவும் வேறல்ல. அறிவு வழிகாட்டும்; மனம் அவ்வழியில் நடக்கும். அறிவு செயற்படும்போது சிந்தனை ஆகிவிடுகிறது.

விலங்குகள், ஏனைய உயிரினங்களுக்கு அறிவு உண்டு. கண்ணால் காண்பது காட்சியறிவு; காதால் கேட்பது கேள்வியறிவு. நம் மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு, செவி என்பன, வெளி உலகுடன் நம்மைத் தொடர்புபடுத்தும் வாயில்கள் - வழிகள். இவை ஐந்து அறிவுகள். மற்றவற்றுக்கு ஐந்தறிவும் முழுமையாக அமைவதில்லை. ஆனால், நாய்க்கு மோப்ப அறிவு மனிதனைவிடக் கூடுதல்; பருந்துக்குக் கண்பார்வை அதிக ஆற்றலுடையது. மனிதனிடம் ஐந்து அறிவும் உண்டு. அவனிடம் ஆறாவதாக இருக்கும் 'மனம்' என்ற, சிந்திக்கின்ற - பகுத்தறிகின்ற அறிவுதான், அவனை ஆடு, மாடுகளிலிருந்து வேறுபடுத்துகிறது. மனம் இருப்பதாலேதான், அவன் மனிதன் ஆகின்றான்.

இந்த மனத்தை அடிப்படையாகக் கொண்டு, கட்டிய வானளாவிய கோபுரங்கள்தாம் கலைகள், கவிதைகள், இலக்கியங்கள்.

புற உலகைவிட, இந்த அக உணர்வைப் படமாக, சித்திரமாகப் படைத்தவை நம் மனத்தை ஈர்க்கின்றன. அதனால், அவை நிலைபெறுகின்றன.

ஆனந்த விகடன் தீபாவளி இதழ் ஒன்றின் அட்டைப் படத்தில், ஒரு நகைச்சுவைக் காட்சி. மிகப்பல ஆண்டுகளுக்கு முந்தையது. தலைதீபாவளிக்காக மாமனார் வீட்டுக்கு வந்திருந்த மாப்பிள்ளை ஊருக்குப் புறப்படுகிறார். எல்லோரும் வழியனுப்ப வாசலில் நிற்கிறார்கள். புதிய மனைவி வெட்கத்துடன், கதவோரம் கணவன் விடை பெறுவதைப் பார்த்தபடி நிற்கிறாள். மாமனார், 'ஒன்றையும் விட்டு விடவில்லையே...?' என்று மாப்பிள்ளையிடம் கேட்கிறார். குறும்புக்கார மாமா சொல்கிறார்: 'வேறு எதையும் விட்டுட்டுப் போகலை. மனசை மட்டும்தான் விட்டுட்டுப் போகிறார்...' என்று.

திருமணமான புதிதில், மனைவியைப் பிரிகின்ற பாசமுள்ள கணவனுக்கு அவள் நினைவாகவே இருக்கும். அலுவலகத்தில் கணக்குப் பேரேட்டைத் திருப்பும்போதும் அதில் கணக்கு விவரத்தை மறைத்துக்கொண்டு, மனைவியின் முகம்தான் தெரியும். மேலே சொன்ன நகைச்சுவைத் துணுக்குப் படத்தில் சிரிப்பு மட்டுமா இருக்கிறது; சிந்தனையும் அல்லவா இருக்கிறது!

ஓராண்டு பிரிந்து அமெரிக்கா போயிருந்த கணவன், நாளைக் காலை ஐந்து மணிக்கு வந்து சேருவான் எனத் தெரிந்தால், இளம்மனைவியின் மனம் இன்று என்ன செய்யும்...? முதல் நாள் இரவே, அது விமானநிலையம் போய்விடும்; திரும்பும்; மீண்டும் போய் வரவேற்று மகிழும்; இன்னும் அந்த நேரம் வரவில்லையே என்று தவிக்கும்.

கடிகார முள் நகராமல் நிற்பது போல் தோன்றும். விடிந்ததும் அவள் மனம் முன்னதாகவே விமானநிலையம் போய்விடும். ஆம்... அவள் போவதற்கு முன், அவள் மனம் அங்கே போய் நிற்கும்!

இந்த அனுபவம் உங்கள் வாழ்க்கையிலும் ஏற்பட்டிருக் குமே...?

இராமனுக்கு முடிசூடுவதென்று, தயரதன் தன் அமைச்சரவையைக் கூட்டி, அவர்களை இசையும்படி பேசி, முடிவுசெய்து அறிவித்துவிட்டான். உடனே, தன் குல குருவான வசிட்டரை அழைத்து, நாளை முடிசூட இருக்கும் இராமனுக்கு இன்று 'அரசியல் அறங்களை'ப் போதிக்கும்படி வேண்டுகின்றான்.

நாளை மங்கல நாளாதலால், வில்லேந்திய தோளை யுடைய இராமனுக்கு, 'நல் உறுதியும் வாய்மையும் சொல்லுதி பெரிது' எனத் தொழுது வேண்டுகிறான்.

இன்று அரசாள வருகின்ற உறுப்பினர் முதல் அமைச்சர் வரை, அனைவர்க்கும் 'குடியாட்சி முறைத் தத்துவங்களை'ப் 'போதிக்க வேண்டும் என்பதை இது நினைவூட்டுகிறது.

இராமனுக்கு முடிசூட்டப் போவதான செய்தி முற்றும் துறந்தவராகிய முனிவரையே மகிழ்ச்சியில் திளைக்க வைக்கிறது. அவர், இராமனது அரண்மனைக்கு இந்தச் செய்தியைச் சொல்ல விரைகிற வேகத்தை, எப்படிச் சொல்லலாம்...?

**முனிவனும் உவகையும் தானும் முந்துவான்**
**மனுகுல நாயகன் வாயில் முன்னினான்.**

*(மனுகுலநாயகன் - இராமன்; வாயில் முன்னினான் - வாசலை அடைந்தான்.)*

'உவகையும் தானும் முந்துவான்' என்ற ஒரு தொடரே நாடகமாகி விடுகிறது; ஒரு படப்பிடிப்பு நடக்கிறது. உவகை மகிழ்ச்சி முந்துகிறதாம்; அதையும் மீறி முனிவர் முந்தி நடக்கின்றாராம். உவகை முந்துகிறதா; அவர் முந்துகிறாரா என்று வேறுபாடறிய ஒண்ணாமல், ஒன்றை ஒன்று முந்துவ தாகக் கூறுகிற இந்தத் தொடர், மகிழ்ச்சியில் மனம் ஓடும் ஓட்டத்தைப் படமாகக் காட்டவில்லையா...?

இம் மனவுணர்வுகள் இருக்கும் வரை, இக்காப்பிய உயிரோட்டம் இருக்குமல்லவா...?

கோதை என்பது சேரமன்னர் குடிப்பெயர்களுள் ஒன்று. ஒரு சேர மன்னனை, ஓர் இளம்பெண் காதலித்தாள். அன்று அவன் உலாவருவதாகக் கேள்விப்பட்டு, அவனைப் பார்க்கத் தெருக்கதவு வரை ஓடுகிறாள். நாணம் தடுக்கிறது. வெட்கம் தடை போடுகிறது. பாதி திறந்த கதவை மூடிவிட்டுத் திரும்புகிறாள். ஆசை உந்துகிறது. ஓடுகிறாள் திறக்க; உடனே மூடுகிறாள், நாணம் தடுக்க!

புதுக் காதலில், ஒரு பெண் தன் காதலனைப் பார்க்க, இப்படித் தவிப்பதை, எத்தனை கோணங்களில் படமெடுக்க லாம்...?

ஒருவரிடம் கடன் வாங்கப் போக நினைக்கிறோம். பெரும் செல்வரிடம் ஒன்றைக் கேட்டுப் பெற, அவர் வீடுவரை போகிறோம். ஐயோ, இந்த மானம் தடுக்கும்; வறுமையோ 'போ, போய்க் கேள்' என்று விரட்டும். மனம் மட்டுமே போய்ப் போய்த் திரும்பும்; தவிக்கும்.

தமிழ் இலக்கியத்தில் முத்தொள்ளாயிர வெண்பாக்கள் ஈடு இணையற்றவை.

**ஆய்மணிப் பைம்பூண் அலங்குதார்க் கோதையைக்**
**காணிய சென்று, கதவடைத்தேன்...**

அழகிய பொன் ஆபரணம் பூண்ட சேரன் உலாவருவதைக் காணப்போய், கதவை அடைத்தாளாம். அதாவது, கதவைச் சற்றே திறந்து, உடனே அடைத்த காட்சியைச் சொல்கிற விதம் இது. (கோதை-சேரன்)

— நாணிப்
பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல
வரும் செல்லும் பேரும்என் நெஞ்சு!

(பேரும் - திரும்பும்.) பணமுடையால் செல்வர் வீட்டுக்குக் கடன் கேட்கப்போன அனுபவமிருந்தால், இப்பாட்டு விளங்கிவிடும். உதவியை யாசிக்க - இரந்து கேட்க நா எழும்; உடனே கூச்சப்பட்டுப் பாதி விழுங்கி நின்றுவிடும். அப்பப்பா, அப்போது நெஞ்சு படும்பாடு! பாடலை மீண்டும் படியுங்கள். 'வரும் செல்லும் பேரும்' என்ற பாட்டு நடையிலேயே, படும்பாடு தெரியும். அதனால்தான் சங்கப் புலவர்கள், மனவுணர்வு நிலைகளையே படம்பிடித்து நிலைபெற்று விட்டார்கள். வெள்ளி வீதியார் நான்கு அடிப் பாடலில், இன்றைக்கும் நாம் அனுபவிக்கும் மனத்தவிப்பைச் சொல்லியுள்ள விதத்தைப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள்!

# 12

## சுற்றி வளைத்தால் கவிதை!

சொல்வதைக் கொஞ்சம் நிறுத்தி, நிதானித்துச் சொன்னால் இலக்கியமாகி விடுமாம். 'நான் உன்னை நினைத்துக் கொண்டிருந்த சரியான சமயத்தில், நீ வந்து சேர்ந்தாய்! வாழ்க!' என்பது உரைநடை. 'நினைத்தேன் வந்தாய், நூறு வயது...' என்று வாலி பாடினால், அது கவிதையாகி விடுகிறது. அதில் ஒரு 'திட்டமிடுதல்' இருக்கிறது. முன் ஆயத்தப்படுத்திச் சொன்னது அது. கொஞ்சம் நாடகம் போலக் கற்பனை கலப்பதால், இதை நாடக வழக்கு; புனைந்துரை மரபு என்பது தமிழிலக்கியம். நேரே நடப்பது உலக வழக்கு; அதைச் சுவைபடச் சிறிது அழகுபடுத்திப் படைப்பது நாடக வழக்கு.

வடமொழியில் இதை 'வக்கிரோக்தி (வக்கிர+உத்தி) என்பர். எல்லோரும் சொல்வது போல் சொல்லாமல், வேறுவழியில் புதுமையாகச் சொல்வது அது. 'இராதையின் நெஞ்சமே கண்ணனுக்குச் சொந்தமே...' என்று இளைய காதலி, தன் காதலனிடம் சொல்வதாகக் கவிஞர் பூவை செங்குட்டுவன் பாடுகிறார். இதுதான் நாடக வழக்கு, வக்கிரோக்தி. மேனாட்டார் கூறுகிறபடி 'திட்டமிடுதல்'.

என்நெஞ்சம் உனக்குச் சொந்தமென்று, நேரே பாடுவது நமது நாகரிக மரபன்று. அதனால், இது கொஞ்சம் சுற்றி வளைக்கிறது. இவள் இராதையாம்; அவன் கண்ணனாம்.

'இந்த உலகில் ஒரே ஒரு மிக அழகான குழந்தைதான் இருக்கிறது; அதை ஒவ்வொரு தாயும் பெற்றிருக்கிறாள்' என்பது ஒரு சீனப் பழமொழி. இதில் ஒளிந்து கொண்டிருக்கும் உண்மை தெரியாதா என்ன...? அவரவர் குழந்தை அவரவர்களுக்குச் சிறந்ததுதான்.

*அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்*
*சிறுகை அளாவிய கூழ்.* (64)

இங்கு நினைவாகத் 'தம் மக்கள்' எனத் திருவள்ளுவர் ஆள்வதைக் கவனியுங்கள். யார் வீட்டுப் பிள்ளையோ, சோற்றுப் பானையில் கைவிட்டுத் துழாவினால், அருவருப் பாகக்கூட இருக்கும். தன் குழந்தை கைவிட்டதானால், அது அமிழ்தத்தைவிட இனிதாக இருக்குமாம். தன் குழந்தை யானால், தோளில் சுமக்கும்போது சுகமாக இருக்கிறதே; அதன் மழலை, குழலை விட இனிதாயிருக்கிறதே!

எல்லாவிதமான செல்வங்களையும் பெற்றிருக்கலாம்; 'கூடியிருந்து குளிர்ந்தேலோர் எம்பாவாய்' என்று பலரோடு கூடியமர்ந்து, பெரிய விருந்து வைத்துச் சாப்பிடும் பெருஞ் செல்வரர்கவும் இருக்கலாம். ஆனால் அவ்விருந்தினிடையே ஒரு குழந்தையிருந்து, அங்கு மிங்கும் நடந்து, ஓடி விளையாட வேண்டுமாம்.

இடைப்படக்
குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்

என்று பாண்டியன் அறிவுடை நம்பி பாடுகிறான். துழந்தும் – துழாவியும். நெய்ச் சோற்றை (அடிசில்) உடம்பெல்லாம்

சிதறச் செய்து கொள்கிறது குழந்தை. அடிக்கத் தோன்றும்; பக்கத்தில் போனதும் பொக்கைவாய்ச் சிரிப்பு அணைக்கச் சொல்லும். 'மயக்குறும் மக்களாம்' இவர்கள். 'இன்ப உணர்வால் அறிவை மயக்கும் குழந்தைகள்' என்பார் பழைய உரைகாரர். 'இட்டும் தொட்டும் கல்வியும் துழந்தும்' என்னும்போது, சின்னஞ்சிறு பிஞ்சுக் குழந்தையின் 'சுட்டி'த்தனம் கண்ணுக்குத் தெரிகிற தல்லவா...?

தின்னப் பழங்கொண்டு தரும் குழந்தை கண்ணன், 'அதனை எச்சிற்படுத்திக் கடித்துக் கொடுப்பான்' என்று பாடும் பாரதி, துள்ளிக் குதிக்கும் பிள்ளையின் சுட்டித் தன்மையை நம் கண்ணாற் காணமட்டும்மன்று, சந்த ஓசையால் காதால் கேட்கவும் வைத்துவிடுகிறார். இவற்றைக் 'காட்சி உருவகப்படுத்துதல்' (Imagery) என்பர் மேலை நாட்டார்.

சங்கப் பாடல்கள் பல இவ்வாறு உணர்ச்சி தோன்றப் பாடுவதோடு நிற்காமல், சில மன உணர்வுநிலைகளைப் படம்பிடித்தாற்போல் பாடிவைத்துள்ளன. அதனால், அவை இன்றைக்கும் பொருந்தி வருகின்றன.

நான் பல்கலைக்கழகம் போக வேண்டும். இருபத்தேழு என்ற எண் வண்டி வருமா எனக் காத்து நிற்பேன்; கால்கடுக்க, நேரம் ஆக, மனம் துடிக்க. ஏழு வரும்; பதினேழு வரும்; முப்பத்தேழும் வரும்; பாழாய்ப்போன அந்த இருபத்தேழு மட்டும் குறித்தபடி வராது.

ஒரு பெட்டிச் சாவியை வைத்த இடம் மறந்து தேடுவோம். மற்ற சாவிக்கொத்துகள் எல்லாம் கண்ணிற் படும். குறிப்பிட்ட கொத்து மட்டும் கண்ணிற் படாது. அது மறந்துபோய், நம் இடுப்பிற்கூட இருக்கும். இருந்தாலும், தேடுதேடென்று தேடுவோம். பெட்டியை உடைக்கலாமா என்றுகூடத் தோன்றும்.

நண்பர் பயணச்சீட்டை வைத்துவிட்டுத் தேடுவதைப் பார்க்க வேண்டுமே! பயண நேரம் நெருங்க நெருங்க, வண்டி போய்விடுமே என்று துடிதுடிப்பார். பாவம், அந்தப் பயணச்சீட்டு மட்டும் கண்ணிற்படாது. மிகப் பத்திரமாக வைக்க நினைத்தது, இப்படி ஆகும். பெட்டி முழுவதும் துழாவுவார், அகப்படாது. கடைசியில், அவர் சட்டையின் உட்பையில் இருந்தாலும் இருக்கும்!

இவை எல்லாமே சில சமயம் ஏற்படும் மன உணர்வு நிலைகள். ஆத்திரத்தாலோ, அவசரத்தாலோ நம் மனம் அப்படித் தவிக்கும். இயல்பாக நடப்பதும் உண்டு. என்றாலும், நாமே ஏற்படுத்திக் கொள்ளும் மன ஊசலாட்டங்கள்தான் அதிகம்.

அந்தக் காலத்தில், காதலர்கள் திருமணம் செய்து கொள்ளத் தடை வந்தால், இருவருமாக வீட்டை விட்டு வெளியேறிவிடுவார்கள். இன்றுபோல் 'ஓடிப்போனதாக' கேவலப்படுத்த மாட்டார்கள். அதையே திருமணம் என ஏற்றது மிகப்பழங்காலம். பிற்பாடு, அவர்களைத் தேடி அழைத்து வந்து, முறைப்படி திருமணம் செய்து வைத்தார்கள். இன்றும் 'முதுவர்' போன்ற மலைவாழ் பழங்குடி மக்களிடம் இந்தப் பழக்கம் காணப்படுகிறதென்பர்.

சங்க காலத்தில் இப்படி ஒரு காதல் சோடி புறப்பட்டுப் போய்விட்டார்கள். வளர்ப்புத் தாயாம் செவிலி, தங்கள் செல்வ மகளை, அவளுடைய காதலனுடன் தேடிப் பிடித்து வரப் புறப்படுகிறாள். நடந்து நடந்து கால்கள் தள்ளாடுகின்றன. பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்துப்போயின. எதிரே எத்தனையோ ஆண் பெண்ணாக, இணை இணையாக, சோடி சோடியாக வருகிறார்களாம். தூரத்தில், தன் மக்களைப் போலவே தெரிகிறதாம்; பக்கத்தில் நெருங்க நெருங்க, வேறு யாரோ என்று ஆகிவிடுகிறதாம்! விரக்தி,

வெறுப்பு, சோர்வு, தளர்ச்சி, ஏமாற்றம் - செவிலித்தாய் தன்னை இழந்து தவிக்கின்றாள்.

தன்னுடையவர்களை அவள் தேடத் தேட, மற்றவர்களே கண்ணிற் படுகிறார்களாம். அதைச் சரியான கணத்தில், பொருத்தமான கோணத்தில், அழிவிலா ஓவியமாகப் படமாக்கி விடுகிறார், வெள்ளி வீதியார் என்ற பெண்பாற் புலவர்.

*காலே பரிதப் பினவே! கண்ணே*
*நோக்கி நோக்கி வாள்இழந் தனவே!*
*அகல்இரு விசும்பின் மீனினும்*
*பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே!*

பரி - ஒரு சீராக அடிவைக்கும் நடை, வாள் - ஒளி, விசும்பு - வானம், மீன் - மின்னும் நட்சத்திரம்

பரிதப்புதல் - நடை தள்ளாடுதல். நாம் நடப்பதில் ஒரு சந்தத்தன்மை உண்டு. பாதச்சுவடுகளின் இடைவெளி ஒரு சீராக இருக்கும். அது, இப்போது தடுமாறுகிறது! கண் ஒளி இழந்து, ஒருவிதப் புகைப்படலம் படர்வது போல் ஆகிறது! அதைவிட, இந்த அகன்ற பெரிய ஆகாயத்தில் காணப்படும் விண்மீன்களாம் நட்சத்திரங்களைவிடக் கூடுதலாக, மற்றவர்கள்தான் கண்ணிற்படுகின்றனர் என்று செவிலித்தாய் ஏங்குகிறாள். இன்றும் ஒவ்வொரு தடவையும் ஒரு பொருளைத் தேடி, அதை மட்டும் காணாமல் தவிக்கும் போது 'பலரே மன்ற இவ்வுலகத்துப் பிறரே' என்ற பாடல் நினைவு வரும்.

இம் மன உணர்வுநிலை உள்ளவரை, இந்தப் பாட்டுக்கு உயிரோட்டம் இருக்கும். தனியே சொல்லிப் பாருங்கள்.

*அகல்இரு விசும்பின் மீனினும்*
*பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே!*

*(விசும்பின் மீன் - வானத்து நட்சத்திரம்)*

தவிக்கும் ஒரு மனவுணர்வு அழுத்தமான சித்திரமாகப் பதிவாகி இருக்கிறது. இதுபோல், ஒரு காதலியின் மனம் தன் காதலனைத் தேடிப் போவதையும் ஒரு சிறுகதையாக வளர்த்துள்ளார் ஒரு சங்கப்புலவர். மலையாளக் கவிஞர் சங்கர குறூப்பின் ஒரு கவிதையைப் போல, அந்தப் பழங்கவிதை உள்ளத்தினுள்ளே ஓர் அவல ஊற்றை வெள்ளமெனப் பெருக்குவதையும் காண்போமே!

13

# பரக்கப் பரக்கப் பறக்கிறதே

நானும் நண்பர் சுப. அண்ணாமலையும் மதுரை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம். முன்னால் போய்க் கொண்டிருந்த சரக்குந்து 'லாரி'யின் பின்புறம் ஒரு வாசகம் தீட்டப்பட்டிருந்தது.

'தொடர்ந்து வா; தொடாதே' என்பதைப் பார்த்ததும், 'இது நமக்கா... காதலர்களுக்கா?' என்று நண்பர் கேட்டார்.

புதிதாகக் காதலிப்பவர்களுக்கு, தங்களுக்கு என ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் வரை, இது நல்ல பாடம் அல்லவா? இதில் நம் பண்பாடும் இருக்கிறது. திருமணமாகு முன் 'தொடுவது' தவறுதானே?

*கோவம் பழத்தைக் கிளி*
*கோதிவைத்துக் காத்ததுபோல்*
*மாமி மகளை நான்*
*மனதுவைத்துக் காத்திருந்தேன்!*

பறவை கடித்த பழத்தை யாரும் பறிப்பதில்லை. கோதுதல் - சிறிது கடித்து விடுவது. கோவைப் பழம் - செக்கச்செவேரென்று, கொடியில் பழுத்திருக்கும். மாமி மகள்

*உறவுக்காரப் பெண் அல்லவா? அத்தை மகள் ரத்தினத்தைத் தொடர்ந்தது மட்டுமல்லாமல், மனத்தால் தொட்டுவைத்துக் காத்திருந்ததை, நாட்டுப்புறத்தான் கூட நாகரிகமாகச் சொல்லும் முறை இது. 'மனது வைத்து' என்பதைக் கவனியுங்கள்.*

*இலக்கியம் சொல்லும் முறை இனிதாக இருக்க வேண்டும்; படைக்கும் முறை சுவையாக அமையவேண்டும். இன்றேல் அதை யாரும் திரும்பிப் பார்க்க மாட்டார்கள்.*

*சங்கர குறூப்பு எழுதிய மலையாளப் பாடல் ஒன்றை, நீண்ட நாளைக்கு முன் படிக்க நேர்ந்தது. நீண்ட அந்தப் பாடலின் சாரம் இதுதான்:*

**எனக்குத் திருமணம் ஆகிவிட்டது. என்னைக் கைப் பிடித்தவர் அழைக்கின்றார். நான் அவருடன் புறப்பட வேண்டிய நேரம் நெருங்குகிறது. 'கைப்பிடித்தவரே' கூப்பிட்டபின், மறுக்க இயலுமா? 'அவர்' என்னை அழைத்துச் செல்ல முடிவு செய்து விட்டார். என்னைக் குளிப்பாட்டி, புத்தாடை உடுத்தி, எனக்குப் பூச்சூட்டுகிறார்கள். என்னை அலங்கரிக்கிறார்கள். சுற்றத்தார் எல்லோரும் கவலையும் கண்ணீருமாகச் சூழ்ந்து நிற்கிறார்கள். வெளியே வாத்தியங்கள் முழங்குகின்றன. ஊர்வலமாக அழைத்துச் செல்லத் தேர் ஒன்றும் அலங்காரம் செய்து, ஆயத்தமாக வீட்டு வாசலில் இருக்கிறது. 'அவரே' அழைக்கும்போது என்ன செய்வது?**

**நான் இத்தனை நாளாகப் பிறந்து வளர்ந்த இடத்தை விட்டுப் பிரியப்போகிறேன். என் கண்கள் சுற்று முற்றும் சுழன்று, ஒளி மழுங்குகின்றன. நா எழ மறுக்கிறது; 'போய் வருவதாய்ச்' சொல்ல, ஒலி வெளிவரவில்லை. குரல் உள்ளே போகிறது. பழகிய இடத்தை விட்டுப் பிரிவது என்ற மன உணர்வும் மங்கி மறைந்து அடங்கு கிறது. நான் பிரிகிறேன்.**

'எனது திருமணம்' என்ற தலைப்பிட்ட இந்தக் கவிதை உண்மையிலேயே ஒருத்தியின் திருமணம் பற்றியதுதானா?

'போகிற உயிரின் புலம்பல்' என்ற நினைவோடு, திரும்ப ஒருமுறை படியுங்கள்! பிரிகிற உயிர் பேசுகிறது. சங்கர குறுப்பின் 'ஓடக் குழலில்' வரும் இந்தக் கவிதையின் ஒவ்வொரு சொல்லிலும் பிறிதொரு 'தொனிப் பொருள்' அமைந்து, படிப்பவர் கண்களைப் பனிக்க வைக்கிறது.

எந்த மொழியில் எழுதப்பட்டிருந்தாலும் 'இலக்கியம்' என்பது ஒன்றுதான்; ஓரினம் தான். 'ஆங்கில இலக்கியம் என்று கற்பிக்காதே; ஆங்கிலத்திலுள்ள இலக்கியம் என்று கற்றுக்கொடு' என்பது ஒப்பிலக்கியம். அதாவது இலக்கியம் எல்லா மொழிக்கும் சொந்தம் என்பது இதன் பொருள்.

இலக்கியம் மனிதனைப் பண்படுத்துகிறது; பண்படுத்த வேண்டும்.

மனிதன் விலங்கில் இருந்து பரிணமித்தவன். அவனை மீண்டும் மிருகமாக்குவது எளிது. அவனை மனிதனாக்கு வதும் தெய்வ நிலைக்கு உயர்த்துவதும்தான் இலக்கியம் உள்ளிட்ட படைப்புக்கலையின் பணி.

அறிவியல் அறிஞனாயினும் அவன் இலக்கியம் படிக்கும் இரசிகனாதல் வேண்டும். இன்றேல் மனம் பண் படாது. மனிதன் மனம் ஒரு தரிசுநிலம்; அதைக் கலை பண்படுத்துகிறது.

மறைந்த பேரறிஞன் ஏ.கே. இராமானுசம், கமீல் சுவலபில், ஜார்ஜ் ஹார்ட், தக்ககசி உள்ளிட்ட உலக மாமேதைகளின் உள்ளங்கவர்ந்த சங்க இலக்கியப் பாடல் களையும் நாம் படிக்க வேண்டும். நம் பெண்கள் படிக்க வேண்டும். இளையோர் வாசிக்க வேண்டும். விளங்கவில்லை என்று சொல்லாமல், நாமும் விளங்குபவர்களாகச் சற்று உயரவேண்டும்.

'குறுந்தொகை' சிறுசிறு பாடல்கள் கொண்டது. அதில் ஐந்து அடிப்பாடல் ஒன்று. பாடியவர் தாமோதரன். ஏதோ, இந்தக் காலத்துப் பெயர்போல் இருக்கிறது.

'சூரியன் மறைகிற நேரம். அகன்ற ஆகாயவெளியில், அதோ, அதோ ஒரு பறவை விரைந்து பறந்து போகிறது. அதன் சிறகுகள் வளைந்து காணப்படுவதில், அதன் வேகம், விரைவு தெரிகிறது. ஐயோ! ஏன் இப்படிப் பரக்கப்பரக்கப் பறக்கிறது? பார்த்தால் பரிதாபமாக இருக்கிறதே! ஏன் இந்த அவசரம்?

ஓகோ! நெடுந்தூரத்துக்கு அப்பால் நீண்ட நெடிய சாலை ஓரத்தில், ஒரு பெரிய மராமரம் நிற்கிறது. அதன் வளைந்த கிளையில், இந்தப் பறவை தங்க வசதியான கூடு இருக்கிறது. அந்தக் கூட்டினுள்ளேயுள்ள தன் பிள்ளையின் - குஞ்சினது - வாய்க்குள் தன் அலகிலுள்ள தானியக் கதிரை - இரையை - வைத்து ஊட்டுவதற்காகத் தான் இப்படி வேகமாகப் பறந்து போகிறது. அதன் அலகில் தொங்கும் தானியக் கதிர் தெரிகிறது. அது தனக்குக் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் விரைவாகப் பறந்து செல்கிறது!'

ஒரு தாய்ப்பறவையின் பாசத்தைப் பொழிந்துகாட்டும் சிறுகதைச் சித்திரமா இது?

*ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து*
*அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை*
*இறைஉற ஓங்கிய நெறிஅயல் மராஅத்த*
*பிள்ளை உள்வாய்ச் செரீஇய*
*இரைகொண் டமையின் விரையுமால் செலவே* (92)

ஞாயிறு பட்ட - சூரியன் மறைந்த. அகல்வாய் வானம் - அகன்ற ஆகாயம். கொடும் சிறைப் பறவை - வளைந்த சிறகையுடைய பறவை. 'கொடும்' - பறவையின் வேகத்தை, வளையும் சிறகு காட்சிப்படுத்துகிறது. சிறை - சிறகு. அளிய - இரங்கத்தக்கது இந்தப் பறவை. இறை உற - இந்தப் பறவை

போய்த் தங்குவதற்கென்று. ஓங்கிய, நெறி அயல் மராத்த - உயர வளர்ந்து, சாலையின் பக்கத்தேயுள்ள மராமரத்தில். பிள்ளை உள்வாய்ச் செரீஇய - குஞ்சினது வாய்க்குள் தன் அலகால் உணவை உள்ளே செருகி ஊட்ட. செலவு - பறந்து போகிறது.

சங்கர குறூப்பின் கவிதையிற்போல, இதிலும் ஒரு 'தொனிப்பொருள்' இருப்பதை, நாம் தெரிந்துகொள்ள வேண்டும் அல்லவா ?

# 14

## பறவை பறக்குது.. மனசு துடிக்குது!

'உரைநடை ஆயிரத்தைச் சொல்லி ஆயிரத்தை உணர்த்தும். கவிதை ஒன்றைச் சொல்லி ஆயிரத்தை உணர்த்தும்.'

வடமொழியில் அது 'தொனி' எனப்படும். ஆங்கிலத்தில் குறிப்பாய் உணர்த்துவது (Suggestion) என்பர். தமிழில் இதை 'இறைச்சி' என்பார் தொல்காப்பியர். பறவை, விலங்குகளின் வாழ்வையும் பாடுவது 'இறைச்சி'. இன்று அதன் மாமிசத்தை 'இறைச்சி' என்கிறோம். காலம் பொல்லாதது!

கணவனைப் பிரிந்த தலைவி பலகணி வழியாக ஆகாயத்தைப் பார்க்கிறாள். ஒரு பறவை தன் அலகில் தானியக் கொத்துடன் விரைந்து பறப்பதை ஏக்கத்தோடு பார்க்கிறாள். அகல் வாய் வானம் - பலகணி வழியாக, அந்த அகன்ற நீல நிற ஆகாயம் தெரிகிறது. ஞாயிறு பட்ட (சூரியன் மலைவாயில் விழுந்து விட்ட) நேரம் அது. வளைந்த சிறகுள்ள பறவை, ஆகாய வெளியில் பறக்கிறது. "சிறகின் வளைவு வேகத்தைக் காட்டுகிறது. தாமோதரனார் சித்திரமாக வரைந்து காட்டுகிறார். கொடுஞ்சிறை - வளைந்த சிறகு. இச்

சிறு அடைமொழி (Epithet), அதன் வேகத்தை அளந்து காட்டுகிறது.

'அளியதாமே கொடுஞ்சிறைப் பறவை'

ஐயோ பரிதாபம்; என்ன வேகம்; ஏன் இந்த அவசரம்?

'இரை கொண்டமையின் விரையுமால் செலவே!' – ஆமாம். இனி என்ன? இரை கிடைத்துவிட்டது. தானியக் கதிர் ஒன்று அலகில் கொத்தப்பட்டிருப்பது தெரிகிறது. நெடுந்தூரத்திலே, மராமரக் கிளையிலே உள்ள கூட்டினுள் இருக்கும் குஞ்சுக்கு ஊட்ட வேண்டுமே. அதற்குத்தான் இந்த வேகம்; தாய்ப்பறவையின் பாசம்! 'டிஸ்கவரி' தொலைக் காட்சியில் பார்த்து இருக்கலாம். பறவை, தன் குஞ்சினுடைய வாய்க்குள்ளே தன் அலகை வைத்து உணவூட்டும். 'பிள்ளையின் (குஞ்சு) உள் வாயினுள் தன் அலகைச் செருகி ஊட்ட' வேண்டுமென்று பறக்கிறதாம்! இதை விளங்கிக் கொள்ள, இந்தப் பாடலின் சூழல் - முன் கதை தெரியவேண்டும்.

அவள் அவனைக் காதலித்தாள். திருமணமும் ஆகி விட்டது. ஈருடல் ஒருயிராகச் சில மாதங்கள் ஓடின. சிறப்பாக வாழ வேண்டுமென்றால் செல்வம் வேண்டுமே? இன்பத்தில் மூழ்கி வீட்டிலேயே கிடந்தால், வறுமை வாட்டும்; ஊரார் தூற்றுவார்கள். செல்வம் சேர்த்து, தாமும் வாழ்ந்து, பிறர்க்கும் உதவி, குழந்தைகளை வளர்த்து, உலகம் போற்றுமாறு விளங்க வேண்டுமே!

அதற்காகத்தான் பொருள்தேட என்று அவன் வெளி நாடு போனான். நாட்கள் உருண்டோடின; மாதங்கள் கழிந்தன; ஆண்டுகளும் பலவாயின. அவன் இன்னும் வரவில்லை.

பிரிவுத் துயரமும் ஆரத்தழுவும் ஆர்வத் துடிப்பும் அவளுக்கு இராதா? குழந்தைகள் முற்றத்தில் விளையாடு கின்றன. கரைகடந்த காம உணர்வு ஒரு பக்கம்; கடமையாற்றத் துடிக்கும் பொறுப்பு உணர்ச்சி மறுபக்கம்!

ஏங்கி ஏங்கித் துடித்து, வருவார் வருவார் என வழி பார்த்திருக்கும் அவள் சன்னலோரத்தில் இருந்தபோது இந்தக் காட்சி தெரிந்தது.

அலகில் கொத்திய இரையுடன், ஒரு பறவை அகன்ற வானத்தில் விரைந்து பறந்த காட்சி, அவள் உள்ளத்தில் எத்தகைய உணர்வுகளைத் தோற்றுவித்திருக்கும்?

*ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து...*
*இரை கொண்டமையின் விரையுமால் செலவே!*

தன் கணவனும் இப்படிப் பொருள் தேடியிருக்கலாமே; இவ்வாறு விரைந்து திரும்பி வந்திருக்கலாமே... திரும்பி வரமாட்டானா? ஏக்கத்தைத் தீர்க்கமாட்டானா?

இந்தப் பாடல் உணர்த்தும் செய்தி இதுதான். அது பாடலில் இல்லை. 'பறவை இரையுடன் தன் குஞ்சுக்காக விரைந்து திரும்புகிறது' என்பது மட்டுமே பாடலில் உள்ள செய்தி. பாடலின் அடியில், பிரிவால் காம உணர்வு மிகப் பெற்ற ஒருத்தி, மாலைப் பொழுதைக் கண்டு மயங்கிக் கூறியதாக 'அடிக்குறிப்பு' இருக்கிறது. தாமோதரனார் சொல்ல வந்த செய்தியைச் சொல்லாமல் சொல்லி இருக்கிறார்.

ஒரு தலைவியின் ஏக்க உணர்ச்சிப் பெருவெள்ளம் - கரை கடந்த காம உணர்வு, 'கொடுஞ் சிறகுப் பறவையின் விரைவில்' வைத்து உணர்த்தப்பட்டு இருக்கிறது! உள்ளத்தின் உள்ளிருக்கும் உணர்வைப் படம் பிடிக்கும் கலை இது!

நம் மனத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? விலங்குகள், பறவைகளுக்கு ஓரறிவு முதல் ஐந்து அறிவு வரை உண்டு. ஆனால், மனம் என ஒன்றில்லை. மனிதனுக்கு மட்டுமே மனம் இருக்கிறது. இதை நல்ல வழியில் செலுத்து வதும் தீய வழியில் திருப்புவதும் அறிவு.

மனம் நல்லதுதான். அது நம் செல்வம். மாந்தனின் தனியுடைமை பகுத்தறிவின் பிறப்பிடம்.

கண்ணுக்குத் தெரியாத மனத்தின் வலிமை, விரைவு, நுட்பம் எல்லாம் மிக மிக அருமையுடையவை. 'மனம் ஒரு குரங்கு' என்பது, புல்லறிவு - தீய அறிவால் ஏற்பட்ட கெட்ட பெயர். நம் மனத்தின் பெருமையை நாமே உணர்வதில்லை. நம் மனம் உயர்ந்தால் நாம் உயர்வோம். நம் மனம் சிறுத்தால் நாம் சிறியவர்களாகிப் போவோம். மனத்தினால் பறக்க நினைத்தவன் விமானத்தைக் கண்டுபிடித்தான். மரக்கிளையி லிருந்து ஆப்பிள் பழம் ஏன் கீழே விழவேண்டும்? அப்படியே நிற்கக்கூடாதா; மேலே போகலாகாதா என மனம் 'எதிர் மறுத்து' எண்ணியது. 'புவியீர்ப்பு' விசை கண்டு பிடிக்கப் பட்டது.

மனம் தான் காணாத தெய்வ உலகத்தைப் படைக்கும். மனம் இந்தக் கணமே ஐந்நூறு கிலோமீட்டருக்கு அப்பா லிருக்கும் மனைவியிடம் சென்று நலம் விசாரிக்க உதவும். அமெரிக்காவிலிருக்கும் தன் கணவன் - புதிதாகக் கலியாணம் ஆனதும் போய்விட்டவன் - இருக்கும் இடத் துக்கு இளம் மனைவியின் மனம் போய் ஒட்டிக்கொள்கிறது. கண்களால் அப்படிப் போகமாட்டாமையால், அது அவளைத் 'தின்னுகிறதாம்!' திருவள்ளுவர் காட்டும் தலைவி சொல்கிறாள்: 'ஏ' மனமே! நீ மட்டும் அங்கே போகிறாயே! இந்தக் கண்களையும் அழைத்துக்கொண்டு போகமாட் டாயா! இவை அவரைப் பார்க்க வேண்டுமென்று என்னைத் தின்னுகின்றனவே!' என ஏங்கி அழுகிறாள். *(1244)*

மனம் போல்தான் வாழ்வு. கண்ணுக்குத் தெரியாத தால் நம் எண்ணங்களின் விளைவை நாம் அறிவதில்லை! தான் நினைத்தபடி மனம் ஏவிய வேலையைச் செய்யுமாம். அதையும் ஒரு கவிஞர், சிறுகதையைப் போல் பாடலாக்கிச் சொல்வதைப் பார்ப்போம்.

15

## காதல் மனத்தின் வலிமை!

திருவரங்கத்திலுள்ள 'சண்பகத்தமிழரங்கில்', சங்க இலக்கியம் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். கேள்வி நேரம்... ஒருவர் அந்தப் பேச்சுக்குத் தொடர்பில்லாத ஒரு கேள்வி கேட்டார்: "உங்களுக்கு இராகுகாலம் பார்ப்பதில் நம்பிக்கை உண்டா...?"

வான நூற்கலையில் தமிழர்களுக்குப் பெரும்பங்கு உண்டு. 'சோதிடம்' அன்று 'கணியம்' எனப்பட்டது. அதைக் கணிப்பவன் கணியன் எனப்பட்டான். இன்றும் 'சாதகத்தைக் கணித்துக் கொடுங்கள்' என்றுதானே கேட்கிறோம். 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற பாடலைப் பாடிய புறநானூற்றுப் புலவன் கணியன் பூங்குன்றன். அப்பாடலின் முதலடியை மட்டும்தான் நாம் எல்லோரும் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அடுத்த அடி என்ன என்று பலருக்குத் தெரியாது. அப்பாடலை முழுவதும் படித்தால், அப்புலவன் தான் ஒரு 'கணியன்' என்பதை மெய்ப்பித்திருப்பது புலனாகும். 'பார்ப்பான்' என்ற தூய தமிழ்ச்சொல்லும் அதே பொருளுடையதுதான். வானநூற்கலையைக் கணித்துப் பார்ப்பவனே அவன்.

இவற்றை நான் அன்று விளக்கிச்சொல்ல நேரமில்லை. ஒன்று மட்டும் சொன்னேன். அது இதுதான்:

"இராகுகாலம் பார்ப்பவன், அதில் நம்பிக்கை வைத்துள்ளான். அதனால் நன்மையா, உண்மையில் பயன் தருமா என்று முடிவு சொல்ல... அதில் எனக்கு ஆராய்ச்சி எதுவும் தெரியாது. அவ்வாறு பார்ப்பவன், 'நான் நல்ல நேரத்தில் என் தொழிலைத் தொடங்கி இருக்கிறேன். நல்ல சமயத்தில் என் மகள் திருமணத்தை வைத்துள்ளேன். எனக்குத் தீங்கே வராது. என் காரியம் வெற்றியாக முடியும். நிச்சயம் நான் வெற்றி பெறுவேன்...' – இவ்வாறு திரும்பத் திரும்ப ஆழமாக, உறுதியாக எண்ணுமாறு செய்வதால், அவன் வெற்றி பெறுகிறான். இராகுகாலம் பார்க்காத வனுக்கும் இந்த மனவுறுதி இயல்பாக இருந்தால், அவன் வெற்றி பெறுகிறான். இப்பழக்கம், ஓர் எளிய பாமரனிடமும் இம் மனவுறுதியைத் தர உந்துகிறது. இதைத்தான் ஆங்கிலத்தில் 'Positive Thinking' என்று புத்தகம் எழுது கிறார்கள். இதையே திருவள்ளுவர் 'எண்ணிய எண்ணி யாங்கு எய்துப, எண்ணியார் திண்ணியராகப் பெறின்' என்று சொல்லியுள்ளார்..."

மனத்தின் வலிமையை விளக்கவே இவ்வளவும் கூறப் பட்டது. உடல் வலிமை, கண்ணுக்குத் தெரியும் பருப் பொருள்; மனபலம், கண்ணுக்குத் தெரியாத அருவப் பொருள். அதனால், மனத்தின் விளைவுகளும் உடனே தெரிவதில்லை. உண்மையில், மனவலிமையே பெரிதென் பதை நாம் மனத்தில் பதியவைத்துக் கொள்ளவேண்டும்.

அது – சங்க காலம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்த கதை. அவள் மலையடிவாரக் கிராமத்துப் பெண். மலையுச்சியில் வாழும் அவன், வேட்டையாட வந்த போது அவளைப் பார்த்துக் காதல் கொண்டு விட்டான்.

அன்றிலிருந்து அவன் நாள்தோறும் வருவதும் அவளைப் பார்த்துப் போவதும் வழக்கமாகி விட்டது.

அன்று மழை பொலபொலவென்று தூறிக் கொண்டிருக்கிறது. மாலை நேரமும் வந்து, இருளும் சூழ்ந்துவிட்டது. 'ஐயோ! மழை விடாது தூறுகிறதே... அவன் தவறாமல் வருவானே... மலை வழி, மடுவும் குழியும் சேறும் வழுக்கு நிலமுமாய் இருக்குமே... அவன் பத்திரமாக வரவேண்டுமே... ஏதும் ஆபத்து வந்துவிடக் கூடாதே!'

அவள் மனம் இப்போது அவளிடம் இல்லை. பக்கத்தில் இருந்த தோழி, கூப்பிட்டுக் கத்தியும் அவள் திரும்ப வில்லை. தோளைத் தொட்டு உலுக்கிய பிறகுதான் அவள் திரும்பினாள்.

தலைவியின் மனஉணர்வை, அவளுடைய முகமும் கண்களும் சொல்லாமல் சொல்லின. தெரு சந்தடி அடங்கி விட்டது. வீடுகளில் எல்லோரும் தாழிட்டுக்கொண்டு உறங்கப் போய் விட்டார்கள். வெளியே அந்தக் கும்மிருட்டைப் பார்த்தால் ஒரு கொலைகாரனைப் பார்ப்பதுபோல் மனம் நடுங்குகிறது. நேரம் நகர்ந்து, நள்ளிரவும் வந்துவிட்டது. அந்தக் காதல் உணர்வு இப்போது, கடல் பொங்கி எழுந்து கரையைத் தாண்டி வருவதுபோல் பாய்ந்து அலைக்கழிக்கிறது.

"தோழி! நாம் இங்கே இப்படித் தவித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இதுநாள்வரை நம் சொற்படி கேட்ட என் நல்ல நெஞ்சம், என்னையும் கேட்காமல் உன்னையும் கலக்காமல், தான் நினைத்த மூப்பாய்ப் போய்விட்டதடி!" என்கிறாள் தலைவி.

**தோழி:** அடடே! அப்படியா...? அது எங்கே போய் விட்டது...?

தலைவி: என் காதலன், சுனையில் பூத்த புதுக் குவளைப் பூக்களைச் சூடிக்கொண்டு வருகிற அந்த மலை வழியைத் தேடிக்கொண்டு போய் விட்டது...

தோழி: எதற்காகப் போனதோ...?

தலைவி: என்னடி அப்படிக் கேட்டுவிட்டாய்...? அதோ பார், மழை மின்னல் கீற்றுக்கிடையே 'யானைக் கயிற்றுப்புறத்து அன்ன கல்மிசைச் சிறுநெறி' கண்ணுக்குத் தெரிகிறதா...? யானைபோல் மலை தெரிகிறது. அதன் முதுகில் போடப்பட்ட கயிறு போல, அந்த ஒற்றையடிச் சிறுபாதை தெரிகிறது. அதுதான் என் காதலன் வரும் வழி. சுற்றிலும் அடர்ந்த காடு. கால்வைக்க இடமில்லை. மழை மேகமோ, நீரைக் கொட்டிக்கொண்டே இருக்கிறது. மலை மேலேயிருந்து தண்ணீர் வழிந்தபடி இருக்கிறது. வளைந்து வளைந்து போவதால், காலை எந்தப் பக்கம் அடுத்து வைப்பது என்று தெரியவில்லை. இடையிடையே படு குழிகள்... இருளில் கண்தெரியாத சமயம், அப்படுகுழியில் என் காதலர் கால்வைத்து மிதிக்கும் அந்த நொடிப் பொழுதில், அவரது அடிதளராதபடி, அவர் பாதங்களைத் தாங்குவதற்கு என் மனம் போய்விட்டதடி!"

*இட்டருங் கண்ண படுகுழி இயவின்,*
*இருளிடை மிதிப்புழி நோக்கி,அவர்*
*தளர்அடி தாங்கிய சென்றது, இன்றே?* (அகநானூறு 128)

இட்டருங் கண்ண - கால்வைக்க முடியாத இடங்கள். இயவு - சிறுவழி. தளரும் அடியை மனம்போய்த் தாங்குமா...? மனத்தின் வலிமையை உணர்ந்தவர் இதை மறுக்க மாட்டார்கள். 'பொய்யா நாவிற்கபிலர்' பாடிய பாட்டு இது.

சிலர் சித்திரத்தைப் பார்த்து, அதைப் படி எடுத்தது போல் பாடுவார்கள். சிலர் சித்திரம் வரைவதுபோல் பாடுவார்கள். சிலர் பாடல், சித்திரமாகவே இருக்கும். அவை கண்ணெதிரே காட்சி தருவதையும் பார்க்க வேண்டாமா...?

# 16

## காவியமா? ஓவியமா?

தூரிகையைக் கையில் எடுத்தவன் ஓவியனாகின்றான்; மொழியின் ஒலியில் ஈடுபட்டவன் கவிஞனாகின்றான்; புதுமை படைப்பதில் ஆர்வம் கொண்டவன் கலைஞன் ஆகின்றான்.

இம் மூவரிடமும் கருத்துக் கூர்மையும் கற்பனை வளமும் ஒன்று போலவே அமைந்துள்ளன. எடுத்துக் கொண்ட கருவிகளால் இவர்கள் வேறுபடுகிறார்கள். அவ்வளவுதான்!

சித்திரம் கண்ணால் பார்க்கும் கவிதையாகிறது; கவிதையோ படித்துப் பார்க்கும் சித்திரமாகிறது. தொல் காப்பியத்துக்கு விளக்கம் சொன்ன 'பேராசிரியர்' என்ற பெரியவர், கவிதை என்பது,

'சொல் கேட்டார்க்குப் பொருள் கண்கூடாதல்'

என்று கூறியுள்ளார். அதாவது, ஒன்றைச் சொன்னதும் சொல்லப்பட்ட பொருள் கண்ணுக்குத் தெரிய வேண்டு மாம்.

பாரதியார் பராசக்தியிடம் காணி நிலமும் அக் காணி நிலத்திடையே ஒரு மாளிகையும் கேணி அருகினிலே இளநீர்கள் காய்த்துக் குலை குலையாய்த் தொங்கும் தென்ன்ன மரங்களும் கேட்டுப் பாட்டுப் பாடுகிறார். அது மட்டுமா? முத்துச்சுடர்போலே நிலா ஒளி முற்றத்தில் வந்து வீசவேண்டுமாம். தோட்டத்துப் பக்கம், கத்தும் குயிலோசை சிறு ஒலியாக வந்து, காதில் விழ வேண்டுமாம். சித்தம் மகிழ்ந்திடுமாறு, நன்றாய் இளம் தென்றல் வரவேண்டுமாம்.

*காணி நிலம் வேண்டும் – பராசக்தி*
*காணிநிலம் வேண்டும்...*

என்று தொடங்குகிறார். வீடு கட்ட முதலில் நிலம் வேண்டுமல்லவா? சரி, அங்கு கட்டுகிற மாளிகை எப்படி இருக்க வேண்டும்?

*அங்குத்*
*தூணில் அழகியதாய் –*
*நன்மாடங்கள்*
*துய்ய நிறத்தினவாய் –*
*அந்தக் காணி நிலத்திடையே – ஓர்*
*மாளிகை*
*கட்டித் தரவேண்டும்!*

தூணைப் பார்த்தாலே மாளிகையின் அழகு தெரிய வேண்டுமாம். 'தூணில் அழகியதாய்' என்றவர், நல் மாடங்கள் துய்ய (தூய) நிறத்தினவாய் இருக்க வேண்டுமென் கிறார். ஒளிவீசும் நிறம் தீட்டிய வண்ணப் பூச்சுக்கள் பாரதியாருக்கு மிகவும் பிடித்தம் போலும்! இப்போது அந்த மாளிகை – காணிநிலத்தின் நடுவில் அமைந்த அந்த மாளிகை உங்கள் கண்ணுக்குத் தெரிய வில்லையா?

இதுதான் 'சொல் கேட்டார்க்குப் பொருள் கண் கூடாதல்'.

அங்குக்
கேணி அருகினிலே -
தென்னைமரக்
கீற்றும் இளநீரும் -
பத்துப் பன்னிரண்டு
தென்னைமரம்
பக்கத்திலே வேணும்...

மாளிகையைச் சுற்றிக்காட்டுகிறார். வெறுமனே தென்னைமரம் என்னாமல், காற்றில் ஆடி அசையும் தென்னங்கீற்றும் இளநீரும் உள்ள மரம் என்பதால், அவற்றையும் நம் மனக்கண்ணால் பார்க்க முடிகிறது.

கவிஞன் எதைக் காட்டினால் முழுமையும் தெரியுமோ, அதை மட்டுமே சொல்லில் வடிக்கின்றான்.

நல்ல
முத்துச்சுடர் போலே - நிலா ஒளி
முன்பு வரவேணும்; அங்குக்
கத்தும் குயிலோசை சற்றே வந்து
காதிற்படவேணும்; என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாய் இளந்
தென்றல் வரவேணும்!

நம்மால் இப்படி ஒரு மாளிகை கட்டி வாழ முடியாவிட்டாலும் இப்பாடலை இருமுறை, மும்முறை படித்த அளவில், அப்படி ஒரு மாளிகையில் வாழும் அனுபவம் - நுகர்ச்சி - இன்பம் உள்ளத்துக்குள் ஏற்படவே செய்கிறது.

காணிநிலத்தில், ஒரு மாளிகை கட்டியதைக் கவிஞன் இதில் ஓவியப் படுத்திவிட்டான். இதையே வண்ணச் சித்திர மாக - ஓவியமாகத் தாளில் வரைந்து காட்டவும் முடியும்.

வசதி இருந்தால், இத்தோட்டத்து மாளிகையைக் கண் முன்னே கட்டியும் காட்ட முடியும்.

கல்லைக் கொண்டு கட்டி முடிக்க வேண்டியதைப் பாவலன் தன் சொல்லைக் கொண்டு காட்சிப்படுத்துவது தான், அவனது கலைத்திறமை ஆகும்.

இதற்கு மொழியிலும் திறமை வேண்டும். சொற் களஞ்சிய அறிவு வேண்டும். அறிவுக்கூர்மை, மொழியைப் பயன் படுத்தும்போதுதான் வெளிப்படுகிறது. பாரதியாரின் மொழி வளத்துக்கு, அவரது தமிழ் இலக்கியப் புலமைதான் அடிப்படை.

நீங்கள் இப்போது காணி நிலத்தின் நடுவில், மாளிகை ஒன்றில் இருக்கிறீர்கள். தூண்கள் அழகியனவாய், மாடங்கள் தூய வண்ண ஒளி வீசுவனவாய் உள்ளன. பின்புறம் கேணி; கேணி அருகே பத்துப் பன்னிரண்டு தென்னைமரங்கள். அவற்றில் தென்னங்கீற்றுகள் அசைவதும் இளநீர்க்குலைகள் தொங்குவதும் தெரிகிறது. நீங்கள் அமர்ந்திருக்குமிடத்தில், உங்கள் காலடியில் முத்துச்சுடர் போன்ற அந்த வெண்ணிற நிலா வெளிச்சம் வந்து விழுகிறது. இளந்தென்றல் வந்து, உங்கள் உடம்பைத் தொடுகிறது. உங்கள் சிந்தனை மகிழ்ச்சி யில் நிறைகிறது!

பாடலை மீண்டும் படியுங்கள். ஓவியனாகப் பிறக்க வேண்டியவன், காவியனாகப் பிறந்துவிட்டான் போலத் தெரிகிறது.

சிறந்த கவிஞன் எதனையும் மனக்கண்ணுக்குக் கொண்டு வந்துவிடுகின்றான். மனஉணர்வு என்ற அருவப் பொருளைக்கூட, அவன் உருவப்படுத்திக் காட்ட முந்து கின்றான்.

இலக்கியத்தில் ஈடுபட்டுச் சுவைத்துத் திளைப்பவன், தானும் சிறந்த இலக்கியத்தைப் படைக்கின்றான். ஈராயிரம் ஆண்டுக்கும் முற்பட்டுத் தொடர்ந்து வரும் பாட்டுப் பாரம்பரியம் இது. அந்த வேரிலிருந்து விளைந்து பரவும் விழுதுகள் நாம். வேண்டாதது, தானே விலகிவிடும். வேண்டியதையும் விட்டுவிட்டால் படைப்புக்கலை நம்மைவிட்டு விலகிவிடும்.

இவ்வாறு 'கண்ணுக்குள் ஓவியம்' புனைவதை இன்னும் காண்போம். ஒருவேளை, நாமும் அந்த உயர்ந்த உச்சத்தைத் தொட்டுவிடக்கூடும்!

# 17

## சொக்கியிடம் சொக்கி...

நட்புக்கு இலக்கணம் வேண்டுமென்றால், நாம் சங்க காலத்துக்குப் போக வேண்டும். அன்று அரசர்களுக்கும் புலவர்களுக்கும் இருந்தது போன்ற நட்பை, உலகில் வேறு எங்கும் காண முடியாது.

மன்னனிடம் ஒரு புலவர், 'உன்னை நான் மறக்க மாட்டேன். அங்ஙனம் மறக்க நேரும் சமயம் என்பது, என் உடலைவிட்டு உயிர் பிரியும் சமயமாக இருக்கும்' என்று பாடுகின்றார். அதை விளக்க வந்தவர்.

*என்*
*நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே (175)*

என்று கூறுகின்றார். அதாவது புலவருடைய நெஞ்சினுள், அம் மன்னன் எப்போதும் இருக்கின்றானாம். நெஞ்சைத் திறந்து பார்த்தால், அங்கே மன்னன் இருப்பது தெரியு மாம்!

இராமனும் சீதையும் காதல் கொண்டதைக் கம்பர், 'இருவரும் மாறிப் புக்கு இதயம் எய்தினார்' என்றார். ஒருவர் நெஞ்சில் ஒருவர் புகுந்துகொண்டார்களாம்.

மதுரை மீனாட்சியம்மையின் பழைய பெயர் 'சொக்கி' என்பது. சொக்கர் சொக்கியின் அழகில் சொக்கிப் போனார். இதைக் குமர குருபரர், பிள்ளைத் தமிழில் பாடுகிறார். சிவபெருமான் 'எறிதரங்கம் உடுக்கும் புவனம் கடந்து நின்ற ஒருவன்' (வீசும் அலைகடலை ஆடையாக உடுத்தும் உலகைக் கடந்து நிற்பவன்). அவ் 'ஒருவன்' தன் 'திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே!' என்று மீனாட்சியை அழைக்கின்றார். உள்ளத்தில் அழகு தவழ எழுதிப் பார்த்துக் கொண்டே இருக்கும் கயற்கண்ணியை (கயல்-மீன்) 'உயிரோவியமே' எனக் குறிப்பிடும் அழகில் நெஞ்சம் பறிபோகிறது. 'நெஞ்சம் திறப்போர் நின்னைக் காண்குவரே' என்று சங்கப் புலவன் சொன்னபடி, சிவனின் உள்ளத்தில் அம்மை 'உயிர் ஓவியமாய்' இருக்கின்றாளாம்.

காதலர்கள் தங்கள் உள்ளத்தில், ஒருவரை ஒருவர் இங்ஙனம் அழகு ஒழுக எழுதி, உயிரோவியமாய்ப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்ற 'தொனி'யும் இதிலுளது.

அரண்மனை போன்ற வீடுகளில், பெரிய நிலைக்கதவு களின் மேலே 'கசலட்சுமி' என்ற மரச் சிற்பத்தைக் காணலாம். நகரத்தார்களின் முன்னைய வீடுகளில், முகப்பில் இப்பெரிய நிலைக்கதவுகளும் மேலே ஒளி வீசித் திகழும் 'கசலட்சுமி'யும் தவறாது இடம் பெற்றிருக்கும். திருக்கோயில் களின் வாயில்களிலும் இச்சிற்பம் கல்லிலோ, மரத்திலோ காணப்படும்.

இரண்டு புறமும் இரண்டு யானைகள் அமர்ந்த நிலையில், துதிக்கையைத் தூக்கி வணங்குவது போல் காணப்படும். நடுவே செந்தாமரைப்பூவில் திருமகளாம் இலக்குமி-செந்நிற மேனியளாய் நிற்பாள். யானைகளின் துதிக்கைகளிலிருந்து, பன்னீர் தெளிப்பதுபோல் நீர்சொரிந்து திருமகளின் பாதங்களில் விழும்.

வீட்டில் திருமகள் கொலுவிருப்பதாக இதன் பொருள். இரவிவர்மா இதைச் சித்திரமாகத் தீட்டிய பிறகு, ஓவியப் படங்களாகவும் இது வீடுகளில் தொங்கவிடப் பெற்றது.

இக் 'கசலட்சுமி'க் காட்சியை, இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன்பே கபிலர் என்ற புலவர், அப்படியே சிற்பத்தில் வடித்தது போல், ஒரு பாடலில் எழுதிக் காட்டியுள்ளார். அப் பாடல் கலித்தொகை என்ற சங்க இலக்கியத்தில் வருகிறது.

அது ஒரு மலைச்சாரல், எதிர் எதிரே இரண்டு மலைகள். நடுவே பள்ளத்தாக்கு போன்ற இடத்தில், சிவந்த நிறப் பூக்களைக் கொண்ட பெரிய வேங்கை மரம் நிற்கிறது. மலைக்குப் பின்னால், காலை இளஞ்சூரிய ஒளி, கண்ணைப் பறிப்பதுபோல் ஒளிவீச, செந்நிற மலர்கள் குலுங்கும் அவ்வேங்கை மரம், திருமகள் போலவே காணப்படுகிறது. இது இரண்டு பக்கத்திலும் இரண்டு யானைகள் அமர்ந்த நிலையில் இருக்க, நடுவில் இலக்குமி நிற்பதை நினைவூட்டு கிறது. மலைகளிலிருந்து விழுகின்ற சிறிய அருவிநீர், இலக்குமி மீது யானைகள் பன்னீர் தெளிப்பதுபோல் தோன்றுகிறது.

நிச்சயமாகக் கபிலர் இதுபோன்ற ஒரு சிற்பத்தைப் பார்த்துத்தான் பாடியிருக்க முடியும்.

தலைமகன் இத்தகைய மலைசூழ்ந்த நாட்டுக்கு உரியவன் என்று சொல்லவந்த கபிலர், மலைகளையும் வேங்கைமரத்தையும் இருபுறமும் யானைகள் வணங்கும் திருமகளின் தோற்றமாக வருணிக்கின்றார்.

இது சித்திரத்தைப் பார்த்துப் பாடியது; இது சிற்பத்தைப் பார்த்துப் பாடியது என்று கவிதைகளைக் காட்டி மகிழ்வது மேனாட்டார் பழக்கம். நம்மிடம் இப்படி எத்தனையோ பாடல்கள் உள்ளன.

*புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறுஎய்தித்*
*திருநயந்து இருந்தன்ன தேங்கமழ் விறல்வெற்ப!* (கலி.44)

புரிநெகிழ் - முறுக்கவிழ்ந்த. வீறு-தனிச்சிறப்பு. தேம் கமழ் - இனிமை கமழ்கின்ற. விறல் வெற்ப-சிறந்த மலை நாடனே.

புரி நெகிழ்ந்து மலர்ந்த தாமரை மலரின்கண், வீறு எய்தி, அதாவது கொலுவீற்றிருக்கின்ற திருமகள் மலர்ந்த முகத்துடன் காணப்படுவது போன்ற மலை சூழ்ந்த நாடனே! - இதுதான் பொருள்.

'வரிநுதல் எழில்வேழம் பூநீரை மேலே சொரிய'த் திருமகள் நிற்கிறாள். யானையின் நெற்றிமேலே புள்ளி புள்ளியாய் இருக்கும். அத்தகைய எழிலான, அழகிய வேழம் - யானை, பூநீரை (பூவைத் தெளிப்பது போன்று நீரைத்) தெளிக்கின்ற காட்சி, இலக்குமி கொலுவீற்றிருப்பதை மேலும் அழகுபடுத்துகிறது.

மனையடி நூலைக் கற்றவர்கள் கூட மறந்துவிட்ட ஒரு காட்சியைச் சொல்லோவியச் சிற்பமாய்த் தந்த கபிலரை மறக்கலாமா?

இது சிற்பத்தைப் பார்த்துப் பாடியது. இனிச் சில பாடல்கள் சித்திரமாகவே அமைந்திருக்கும்; சிற்பமாகவே காட்சிதரும். அவற்றையும் பார்ப்போமே!

## 18

# சிற்பமே கவிதையாக...

சில கவிதைகளைக் 'கவிதைச் சிற்பம்' என்றே கூறலாம். நடனமாடும் தோற்றத்தில் காணப்படும் நடராசர், காலைத் தூக்கிநின்று ஆடும் காட்சி கண் கொள்ளாக் காட்சி. நடனமிடும் கூத்தப் பெருமான், அந்தக் கலையின் ஒரு தோற்றத்தை அல்லவா உலகில் நிலை பெறச் செய்து விட்டார்! இவ்வாறு ஒரு சிற்பம் தென்னாட்டில் மட்டுமே காணப்படுகிறது. அதனால்தான் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றார் மாணிக்கவாசகர். 'காலைத் தூக்கிநின்று ஆடும் தெய்வமே' என்று, மாரிமுத்தா பிள்ளை ஆடல்வல்லானின் தோற்றத் தையே கண்முன் நிறுத்தினார். 'தூக்கிய திருவடி அல்லவா' ஆடற்கலையின் உச்சத்தைத் தொடுகிறது.

நாட்டியமாடும் மகளிர் அபிநயம் பிடிப்பதைப் பார்த் துள்ளீர்களா? கை போகும் திசையில் கண்போகும், கண்போகும் வழியில் கருத்துச் செல்லும். நுண்ணிய இடையையுடைய இளம் மகளிராடும் காட்சியை, இன்றைய தஞ்சையைச் சுற்றி அன்று இருந்த சோழநாட்டில் கண்டு களித்தவர் கம்பர். அதை அவர் மிதிலை நகரிலும் காணச்

செய்கின்றார். மிதிலைக்குள் புகும் இராம இலக்குவர்கள் அந்நகரத்தில், இத்தகைய ஆடல் அரங்குகளைக் கண்டு களித்தனராம்.

கைவழி நயனம் செல்லக்
கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் இடையார் ஆடும்
ஆடக அரங்கு கண்டார்.

கண் பேசுவதைக் கொண்டு, மனக்கருத்தை வெளிப் படுத்துகிறாள் நடன மங்கை. கண் அவ்வளவு விரைந்து, கருத்தைப் புலப்படுத்துவதால், கண்ணின் வழியில் மனம் போகிறது என்று கூறுகிறார்.

'ஐயநுண் இடையார்' - மிக நுண்ணிய, சிறிய இடையையுடையார். நடனமாடுபவர்க்கு இடை மேலும் சிறுக்கும். உடல் கட்டமைப்புடன் திகழும். அப்படி இருந் தால்தான் நடனமும் பார்க்கும்படி இருக்கும்.

சிவபெருமானுக்கு 'ஆடல்வல்லான்' என ஒரு பெயருண்டு. உலகம் இயங்கிக் கொண்டேயிருப்பதை, இறைவன் ஆடிக்கொண்டே இருப்பதால் நிகழ்வதாக நம்பினர். ஒருவர் இறந்துபோனால், 'ஆட்டம்' முடிந்து போனதாகப் பேசிக்கொள்வதில்லையா? எப்படி ஆடுகிறான் இறைவன் பாருங்கள்!

குனித்த புருவமும் கொவ்வைச்செவ்
வாயில் குமிண்சிரிப்பும்

நடனத்தில் ஒரு கருத்தைச் சொல்ல முதலில் பயன்படுவது கண்; அடுத்தது முகம்; அதற்கடுத்தது கை; பிறகு உடல். கண் பேசுவதை, வளைந்த (குனித்த) புருவம் காட்டிவிடுகிறது. 'கொவ்வைச் செவ்வாய்' - 'செம்மேனி எம்மான்' என்றும் 'பொன்னார் மேனியனே' என்றும் போற்றப்படுபவன் சிவபெருமான். அச்சிவந்த மேனியனின்

பவள உதடுகள், இன்னும் இதழ்விரியாத மொட்டுப்போல் சிரிப்பை வெளிப்படுத்துகின்றனவாம்.

'மலர்ந்த முகம்' என்கிறோமே, அது இதுதான். குமிழ் போன்ற சிரிப்பு. மலர்ந்தும் மலராத மலர்தான் குமிழ். தமிழில் அரும்பு, மொட்டு, முகிழ், முகை, மொக்குள் என மலரின் அரும்பிய நிலையில் இதழ் விரியாததற்கு மட்டுமே பல பெயர்கள் உண்டு. நீரில் தோன்றும் நீர்க்குமிழிகள் போல, குவிந்த வடிவ அரும்பே 'குமிழ்' ஆகும். இதழ் குவிந்து, சிரிக்கப்போவதைப் போன்ற - வாய் இதழ் விரிவதற்கு முன்புள்ள நிலையை, மலரப்போகும் மொட்டுக்கு (குமிழுக்கு) உவமை சொல்லியிருப்பது, கல் சிற்பத்தில் இப்படித்தான் வடிக்க வேண்டும் எனச் சொல்வதுபோல் உள்ளது.

இப்போது நமக்குச் சிற்பத்தில் நடராசர் தெரியத் தொடங்குகிறார்.

*பனித்த சடையும் பவளம்போல்*
*மேனியில் பால்வெண் ணீறும்*

கங்கை இருப்பதால் குளிர்ந்த - பனித்த சடை; ஆடும் போது அசையும். அது இருபுறமும் வீசி ஆடுவதைக் காட்டும் அடையாளம்.

இனி நாம் சிவனைப் பார்க்கிறோம். மேனி பவள நிறம் - சிவப்பு. அதில் பால் போல் தூய வெண்மையான திருநீற்றைப் பூசியிருப்பது, கோயில்களில் இன்று நாம் காணுகின்ற 'விபூதிக் காப்பு'ப் போலப் பளிச்சென்று தெரிகிறது.

இனி நாம் காண வேண்டியது நடனத்தைத் தான். அதனை 'இனித்த முடைய எடுத்த பொற்பாதம்' என்ற ஒரு தொடர் காட்டி விடுகிறது. எடுத்த பொன் பாதம் - தூக்கிய திருவடி கண்ணுக்குள் மகிழ்ச்சிப் பெருக்கூட்டுவதால், 'இனித்தமுடையது' - இனிமையுள்ளது என்றார்.

இப்போது மீண்டும் அந்தப் பாடலைப் பார்ப்போம்.

குனித்த புருவமும், கொவ்வைச்செவ்
வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

மனிதப் பிறவியை வெறுப்போரிடையே, இத்தகைய காட்சிகளைக் காண, இப்பிறவியே பயன்படுகிறதென்ற உண்மையை இப்பாடலால் அறிகிறோம். அதனால்தான் ஔவையார், 'அரிது அரிது மானிடராதல் அரிது' என்றார். மனிதராகப் பிறந்தும் கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், அறிவிருந்தும் மூடர்களாய் வாழ்வது தகாது. நம்மைச் சுற்றியுள்ள உலகை இரசிக்கத் தெரிய வேண்டும். இலக்கியம் நமக்கு அதைத் தருகிறது.

இரண்டு மூன்று முறை இந்தப் பாடலைப் படியுங்கள்; இன்னும் இசையோடு படிக்க முடிந்தால், 'எடுத்த பொற் பாதம்' போலப் பாட்டும் இனிக்கும். நடராசருக்கு முன்னே நின்று, இதைப் பாடிப்பாடிப் பரவசமடைய வேண்டாமா? பக்தி என்பதென்ன? பாடலைப் பாடிப் பாடிப் பாட்டுப் பொருள் நெஞ்சில் நிறைதல் வேண்டும். அந்த நெஞ்சத் தாமரையில்தான் இறைவன் குடியேறுவான்.

இலக்கியப் படைப்பாளியின் அறிவுக் கூர்மை மிக எளிதாய்த் தொடங்கி, அரிதாய் முடியும். அவனுடைய கண், செவி முதலிய பொறிகள் விரைந்து செயற்படுபவை. நாம் காணாததைக் கண்டு சொல்லி, நம்மை வியப்பில் ஆழ்த்து பவை. அத்தகைய சில உதாரணங்களைப் பார்க்கப் பார்க்கவே நம் அறிவும் கூர்மைப்படும். அந்த வகையில் மிக எளிய பாடல்கள் சில்வற்றைப் பார்ப்போம்.

## 19

# ஆலம் விதையில் ஆச்சரியம்!

நாம் பனைமரத்திலுள்ள நுங்கு பார்த்திருக்கிறோம்; அது பனம்பழமாவதும், பனம்பழத்திலிருந்து பனங்கிழங்கு கிடைப்பதும் தெரியும். நுங்கின் இளஞ்சுவைக்கு ஈடில்லை. நுங்கும் தெங்கின் இளநீரும் எங்கும் இல்லாத இன்சுவை தருபவை; வேனிற்கால விருந்தாகக்கூடியவை. ஆனால், படைப்புக் கலைஞனின் மூளை வேறு திசையில் வேலை செய்கிறது. அவன் பனங்கொட்டை எனப்படும் அதன் விதையைப் பார்க்கின்றான். கரிய, திரட்சியான, பருத்த கொட்டை அது. அவன் ஆலமரத்தின் அடியிலும் இருந்திருக் கின்றான். ஆலம்பழம் உதிர்கிறது; அதைப் பிதுக்கிப் பார்த்தால் அதன் சின்னஞ்சிறு விதை கண்ணிற்படுகிறது. உடனே அவன் மனம் நினைக்கிறது – ‘அடடே! அவ்வளவு பெரிய விதைக்கு இவ்வளவு சிறிய நெட்டை மரமா? இவ்வளவு சிறிய விதைக்கு அவ்வளவு பெரிய ஆலமரமா?’

அவன் உள்ளம் வியப்பிலாழ்கிறது. அவன் உலகியல் பாடவந்தவன். உலகில் பெருஞ்சீமான்கள் என்று பலரைப் பார்க்கின்றோம். அவர்கள் வசதி படைத்தவர்கள்; பெரும்

பணக்காரர்கள். வீடு அரண்மனை போலிருக்கும். ஆனால், யாருக்கும் உதவ மாட்டார்கள்.

சிலர் நடுத்தரக் குடும்பத்தவராக இருப்பார்கள். எளிய வாழ்வு வாழ்வார்கள். சாதாரண உத்தியோகிகளாக இருப்பார்கள். ஆனாலும், பலருக்கும் பயன்பட வாழ் வார்கள். யாருக்கும் ஏதாவது உதவுவதில் மனம் மகிழ் வார்கள். அவர்களைத் தேடிப் பலர் வருவார்கள். எப்போதும் 'சுற்றமும் நட்பும் சூழ்தர' வாழ்வார்கள்.

இந்தப் படைப்புக் கலைஞன் - இலக்கியன் - எண்ணிப் பார்க்கிறான். மிகப் பெரிய வசதி வாய்ப்புப் பெற்றும், பனங்கொட்டைபோல் திரண்டு உருண்டு பெரி தாகக் காணப்பட்டாலும், அதனால் உருவாகும் மரம் பிறர்க்கு நிழல் தராது. அந்த மரநிழல் பெரிதும் அதன்மீது மட்டுமே விழும். அல்லது நீளமாகத் தோன்றி மறையும். அந்நிழலில், தனி ஒருவன்கூடத் தங்க முடியாது. ஆனால், மிகச்சிறிய விதையிலிருந்து உருவான ஆலமரமோ, மன்னன் ஒருவன் தன் நால்வகைப் படையுடனும் வந்து தங்கி இளைப் பாறும்படியான நிழலைத் தரும். இதனால் ஒரு புதுமை புலப்படுகிறது என்றான் அப்புலவன். அது என்ன?

உலகில் நாம் பெரியவர்கள் என்று கருதுகின்ற பலர் பெரியவர்களே அல்லர்; அதுபோலச் சிறியவர்கள் என்று நாம் நினைக்கின்ற பலர் சிறியவர்களும் அல்லர்.

அவன் ஓர் அரசப் புலவன்; அதிவீர ராம பாண்டியன். அவன் பாடிய நறுந்தொகை சிறந்த வாழ்க்கை அனுபவப் பாடல்கள் அடங்கியது.

நிச்சயமாக நாம் நம் சிறுவர் சிறுமியர்க்கு இவற்றை எல்லாம் கற்பிக்க வேண்டும். வாழ்க்கைப் பயணத்தில், இவை அனுபவக் கட்டுச் சோறுகளாய்ப் பயணம் முடியும்வரை உதவும்.

தேம்படு பனையின் திரள்பழத்து ஒருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழலா காதே.

தேம்படு பனை - பனஞ்சாறும் சர்க்கரை ஆவதால், இனிமை பொருந்திய பனை என்றான். தேம் - இனிமை. பழத்தின் திரண்டு பருத்த விதை வானை நோக்கி வளரும் ஒரு மரத்தை உண்டாக்கும். ஆனால், அம்மரம் தனி ஒருவன் நிற்கக்கூட நிழல் தராது. தன் நிழல் தன்மீதே விழும்படி வளர்வதால், அதைத் 'தன்னைப் பேணி மரம்' என்றே கூறலாம். ஒருவர் அமர்ந்து ஓய்வெடுக்க உதவாத மரம் அது.

ஆனால், விதைகளிலேயே மிகச் சிறிய விதை எனக் கூறக்கூடிய ஆலமரத்து விதை, எவ்வளவு பெரிய மரமாக விழுதுகள் விட்டு வளர்கிறது! மீனின் முட்டை வெள்ளை நிறமாக மிகமிகச் சிறிய உருண்டையாக இருக்கும். குளத்துமீன், அயிரை மீன் எனப்படும் சிறிய மீனின் முட்டையை விடச் சிறியதான ஆலம்விதை, படை பட்டாளத்தோடு மன்னர்களே வந்து அமரும்படி அகன்று படர்ந்து இருக்கும் மரத்தைத் தருகிறது.

தெள்ளிய ஆலின் சிறுபழத்து ஒருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழலா கும்மே!

கயம் - குளம், சினை - முட்டை, அண்ணல் யானை - தலைமை வாய்ந்த யானை; புரவி - குதிரை.

உயர்ந்த யானை, அழகிய தேர்கள், தேரில் பூட்டிய குதிரைகள், ஆட்பெரும் படை - பெரிய காலாட்படை. இவற்றோடும் மன்னர்களே வந்திருந்து இளைப்பாற இடம் தருமாம் இந்த மரம்.

ஒரு கூரிய பார்வை, இவ்வளவு பெரிய உண்மையைச் சொல்லப் பயன்படுகிறது பாருங்கள். விதைகளில் பெரிய விதை, ஒருவர் உட்காரக்கூட நிழல் தராமல் போகிறது. விதைகளிலெல்லாம் சிறியதொரு விதை. மன்னர்களே படைகள் சூழ இளைப்பாற இடம் தருகிறது. இவ்வாறு நுட்பமாகக் கூற வேண்டுமானால், எவ்வளவு சீரிய கூரிய அறிவு வேண்டுமென எண்ணிப் பாருங்கள்.

எனவே முடிவுரை போல, அதிவீரராம பாண்டியன் கூறுவது: "பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்; சிறியோ ரெல்லாம் சிறியருமல்லர்". இங்கு பெருமை, சிறுமை என்பன செல்வத்தால், வாய்ப்பு வசதிகளால் வரும் வேறுபாடுகள்.

கணியன் பூங்குன்றன், 'பெரியோரை வியத்தலும் இலமே; சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே' எனக் கூறியதும் நினைவுக்கு வருகிறது.

நாம் அணி தேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு மன்னரும் இருக்கக்கூடிய ஆலமரம்போல் வாழவேண்டுமே தவிர, நிழல் தராத நெட்டை மரமாக ஆதல் கூடாது. இளையோர்க்கு எனப் பாடிய, 'வெற்றி வேற்கை' எனப்படும் 'நறுந்தொகை' சிறியவர் பெரியவராக வளர வளர நன்கு பயன்படும் அல்லவா?

'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்பது, பாரதி சிலப்பதிகாரம் பற்றிப் பாடிய, 'ஒரு தொடர் விமரிசனம்'. நூறு பக்கத்தில் எழுதக் கூடிய விமரிசனத்தின் சுருக்கம் இது எனலாம். அவ்வாறு நெஞ்சத்தை அள்ளிச் செல்லும் இக்காப்பிய இனிமையில் ஒரு காட்சியைப் பார்ப்போம்!

20

# காதலினால் கவலை போகும்

செஞ்சொற்சிலம்பு என்று சிலப்பதிகாரம் போற்றப் படும். சிலப்பதிகார நாடகக் காட்சிகள் விரைந்து, விறுவிறுப் பாக நகர்வது கருத்துக்கு இனிமை தரும். சேக்ஸ்பியர் நாடகங்களைக் குழந்தைகளுக்கு, இளைஞருக்கு என எளிமைப்படுத்தியிருப்பது போல, இங்கும் செய்தால் எல்லோரும் பயன் பெறுவர்.

சிலம்பில் உள்ளது போலவே, அதை ஒரு 'வீடியோ' படமாக்க வேண்டும். சிலம்பு வரிகள், சொற்கள், பாடல் வடிவங்கள் கூடியவரை இடம்பெற வேண்டும். சின்னத் திரையில் சிலம்புக் காட்சிகளை மீட்டுருவாக்கலாம்.

கண்ணகிக்கும் கோவலனுக்கும் திருமணம் நடக்கிறது. 'மங்கல நல் அமளி (படுக்கை) ஏற்றி' முதலிரவு தொடர்கிறது. கோவலன் தன்னை மறந்து, அந்த மயக்கத்தில், கண்ணகியைப் பலவாறு பாராட்டுகின்றான்.

காம இன்ப வயப்படும்போது, காதலன் பேசுவன, போதையில் பேசுவது போலிருக்கும். சில நாள் கழித்து அதனைக் கேட்டால், அவனுக்கே வெட்கமாக இருக்கும். பேச்சும் நீளும். அதனால்தான் 'உலவாக் கட்டுரை பல

பாராட்டி' என்றார் இளங்கோவடிகள். சற்றும் நிறுத்தாமல் தொடர்ந்து, கற்பனையான அலங்காரப் பேச்சுக்களால் பாராட்டினானாம். அப்படி அவன் என்னதான் சொன்னான்...?

"கண்ணே! கண்ணகி! இந்த மயில்கள் காட்டுக்கு ஓடிவிட்டன. ஏன் தெரியுமா...? உன் சாயலைப் போல் அழகாக இல்லையாம். அதனால் வெட்கப்பட்டு ஓடி விட்டன. இந்த அன்னப்பறவைகள் குளத்தில் விழுந்து, ஒளிந்து ஒளிந்து நீந்துவதேன் தெரியுமா...? உன் வண்ணச் சீறடியின் மெல்லிய நடை போல, பூமியில் நடக்க முடிய வில்லையாம்! ஆனால், ஐயோ... இந்தக் கிளிகள் உன் மழலைப் பேச்சைப் போல் பேசமுடியாவிட்டாலும், உன் கைகளில் அமர்ந்திருக்க நேர்வதால், தப்பித்து ஓடமுடியாமல் தவிக்கின்றன!"

கோவலன் எதையும் திட்டமிட்டுக் கொண்டு பேச வில்லை. இந்தக் காலத்துக் காதலர்களும் அப்படித்தானே...? எழுதிவைத்து, மனப்பாடம் செய்துகொண்டு போய், மனைவியை முதலிரவில் யாரேனும் பாராட்டியது உண்டா...? அதனால்தான் இளங்கோவடிகள் 'கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை' என்று தொடங்கினார். குறியாக் கட்டுரை - முன் திட்டமிடாத, ஆயத்தம் செய்யாத பேச்சு. அப்போது மனத்தில் தோன்றியதை எல்லாம் அளப்பது.

இன்றைய திரைப்படப் பாடலாசிரியர்கள், காதலர்கள் பாடுவதை வெளிப்படுத்தச் சில சமயம் மிகவும் சங்கடப்பட்டுப் போகிறார்கள். என்ன சொல்லிப் பாடுவ தென்பதில்தான் தடுமாற்றம். 'முன்னாலே நான் போறேன் பின்னாலே நீ வா' என்றால் போதுமா...?

இளங்கோவடிகள் கோவலன் பாடுவதாகப் புனைவதைப் பாருங்கள்.

"பொன்னில் சிறந்தவளே, நிறத்தில்! வலம்புரி முத்து எனப் பிறந்தவளே, மென்மையில்! குற்றமற்ற நறுமணமே, முகர்வதில்! கரும்பிலினிய பேச்சினளே, செவிக்குக் கேட்பதில்! தித்திக்கும் தேனே, நாச்சுவையில்!"

*மாசறு பொன்னே, வலம்புரி முத்தே*
*காசறு விரையே, கரும்பே, தேனே!*

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலனுக்கும் இன்பம் தருபவளே என்று எவ்வளவு அழகாகச் சொல்கிறார், பாருங்கள்! (விரை - வாசனைப் பொருள்.)

அது மட்டுமா...?

*அரும்பெறல் பாவாய், ஆருயிர் மருந்தே,*
*பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!*

'தொடுந் தோறும் உயிர் தளிர்க்கும்' (உறுதோறு உயிர்தளிர்ப்ப - 1106) என்றார் திருவள்ளுவர். காதல் புனித மானது மட்டுமன்று; ஆருயிர் மருந்துமாகும். உண்மையான காதல், உயிரைத் தளிர்க்கச் செய்யும்; வாழ்விக்கும். பாரதியார் காதலின் சிறப்பை அழுத்தமாகவே புனை கின்றார்.

*காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்*
*கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்*
*காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்*
*கானமுண்டாம்; சிற்பம்முதற் கலைக ளுண்டாம்*
*ஆதலினால் காதல்செய்வீர்! உலகத் தீரே!*
*அஃதன்றோ இவ்வுலகத் தலைமை இன்பம்*
*காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்!*
*கவலைபோம்; அதனாலே மரணம் பொய்யாம்!*

உறுதோறும் (தொடுந்தோறும்) உயிர் தளிர்க்கும் என்ற குறள் கருத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். நிறைவேறாத

காதல்கள்கூடக் காப்பியங்களைப் படைக்கத் தூண்டியுள்ளனவே!

கோவலன் கண்ணகியைப் பார்த்துப் பாடுகிறான். "மலையிலே மாணிக்கம் பிறக்கும் என்பார்கள்; நீ மலையில் பிறவாத மாணிக்கம். பாற்கடல் அலைமேல் அமிழ்தம் தோன்றியதாம்; நீயோ, கடலில் தோன்றாத அமிழ்தம். யாழிலே இசை பிறக்கும் என்பார்கள்; நீயோ யாழில் பிறவாத இன்னிசை! பெண்ணே! உன்னை என்ன சொல்லி வாழ்த்துவேன்...?"

*மலையிடைப் பிறவா மணியே என்கோ*
*அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ*
*யாழிடைப் பிறவா இசையே என்கோ*
*தாழ்இருங் கூந்தல் தையால், நின்னை...?*

இவ்வாறு முதல் நாள் தொடர்கிறது. கோவலனும் கண்ணகியும் தனிக்குடித்தனம் போகின்றனர்.

மகிழ்ச்சியாக நடந்துகொண்டிருந்த இந்த வாழ்வுக்கு இடையேதான் மாதவியின் நடன அரங்கேற்றம் நடந்தது. பொன்னிறப் பூங்கொடியாம் மாதவி 'நாட்டிய நூலின் திறன்களை எல்லாம் நன்கு கடைப்பிடித்துக் காட்டினாள்.' சோழ மன்னன் இதைக் கண்டு, 'தலைக் கோல் பட்டம்' தந்தான். ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் மதிப்புள்ள மாலை ஒன்றும் பரிசளித்தான்.

இந்த மாலையை, இந்த அளவு மதிப்புள்ள விலை கொடுத்து, 'மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு' என, ஒரு கூனி, புகார் நகர இளைஞர்கள் திரியும் ஒரு நாற்சந்தித் தெருவிலே நின்று கூவினாள். கோவலன் அதை விலை கொடுத்து வாங்கினான். அதனால் மாதவி அவனுக்கு 'உரியவள்' ஆயினாள். அவளது அழகிலும் நடிப்பிலும்

மயங்கிய கோவலன், குற்றமற்ற அழகும் குணமும் ஒருங்கே அமைந்த தன் மனைவியை மறந்தேபோனான்.

அதன் பின்னர் கோவலன், கண்ணகி, மாதவி மூவர் வாழ்விலும் நடந்த நிகழ்ச்சிகள், ஒரு திரைப்படக் காட்சிகளைவிட, விறுவிறுப்பாக நடைபெற்று முடிகின்றன. காட்சிகளின் 'கட்டுக் கோப்பு' (Editing) இளங்கோவின் இயக்குநர் திறனை மிக உயர்த்திக் காட்டுகிறது.

இ.8.

21

# ஒரு சிக்கல் மேலும் முறுக்கேறுகிறது!

மனிதன் எழுதும் முன்பே பேசப் பழகிவிட்டான். அன்றே அவன் பாடத் தொடங்கி ஆடினான்; அல்லது ஆடிக் கொண்டே பாடினான்.

இதை இன்றும் மலைவாழ் மக்கள், பழங்குடி மக்களிடம் பார்க்கிறோம். இந்த ஆடலுடன் கூடிய குழுப் பாடல்களில் இருந்து கூத்துப் பிறந்தது. தெருவிலாடிய கூத்து, அரங்கில் ஏறியபோது நாடகம் ஆனது.

இன்றைய ஒலி ஒளிச் சுருள் வடிவாகக் கண்முன்னே நகர்ந்து, ஓடும் திரையில், இப் பழம்பிறப்புக்களின் தொடர்ச்சி யுண்டு.

சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் கவிதை ஓட்டத்தில் காட்சிகளை வடித்திருப்பது, ஒரு வீடியோ படம் கண்ணெதிரே ஓடுவதுபோல் உளது. அதில கதை இருக்கிறது; உரையாடல் வருகிறது; இசைப் பாடல்கள், ஆடல்கள் இடைமிடைந்து வருகின்றன. சிலம்பு 'நெஞ்சை அள்ளு வதற்கு' இக்காட்சிக் கட்டமைப்பும் ஒரு காரணம்.

முதற்காட்சி திருமணம்; மகளிர் ஆடிப் பாடி வாழ்த்தும் மங்கல வாழ்த்து.

இரண்டாம் காட்சி முதலிரவு; கோவலன் தன்னை மறந்து கண்ணகியைப் பாராட்டுதல். இவ்வாறு தனிக் குடும்பமாக அவர்கள் சில ஆண்டுகள் இல்லற வாழ்வில் இன்புறுதல்.

மூன்றாம் காட்சி மாதவி நடன அரங்கேற்றம்; அரச அங்கீகாரம் - தலைக்கோல் பட்டம். மாதவிக்குப் பொன்னரி மாலை பரிசளித்தல். அம்மாலையை ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் விலைகொடுத்து வாங்கிய கோவலன், மாதவியை ஆரத்தழுவி வாழ்தலிலேயே நாளனைத்தையும் போக்கினான்.

*அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி*
*விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்*
*வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்து..*

வடு - குற்றமே இல்லாத மனைவியை, வீட்டை முற்றிலும் மறந்துபோனான். மூன்றாம் காட்சியிலேயே சிக்கல் தொடங்கி விடுகிறது. இது படிப்படியாக முறுக்கேறி, அவலத்தின் உச்சத்துக்கே போவதைத்தான், அடுத்தடுத்து வரும் காட்சிகள் புலப்படுத்துகின்றன.

அன்றைய புகார் நகரத்தின் நிலை என்ன?

செல்வம் கொழிக்கிறது சோழநாடு. கிரேக்க, உரோ மானியப் பேரரசுகள் போல, இந்திரவிழாக் கொண்டாடும் புகார் நகரம் காட்சி தருகிறது. விழா முடிவில் பரத்தையர் உலாவரும் காட்சி; அவர்களைப் பின்தொடர்ந்து மயங்கிப் புகழ்ந்து திரியும் இளைஞர்கள் - 'வம்பப் பரத்தர்கள்'! இதிலும் கிரேக்க, உரோமானிய நாடுகள் போலவே தமிழகம் திகழ்கிறது.

கணவனுடன் வாழ்ந்து, ஒழுக்கத்தில் தவறாது, வடமீனாம் அருந்ததி போன்ற கற்புள்ள வீட்டுப் பெண்களும் திகழ்கின்றனர், கண்ணகி போல.

உடன்உறைவு மரீஇ, ஒழுக்கொடு புணர்ந்த
வடமீன் கற்பின், மனைஉறை மகளிர்

பலரும் வாழ்கின்றனர்.

(உடன் உறைவு மரீஇ - கூடவேயிருந்து வாழ்ந்து. ஒழுக்கு - ஒழுக்கம். வடமீன் - அருந்ததி.)

இச்சூழலில் வளர்ந்த கோவலன் நிலை என்ன?

புகார் நகர வீதிகளில் இசைபாடும் பாணரொடும் 'பரத்தரொடும்' திரிகின்றான். எந்த நேரமும் புது மணம் கமழத் தன்னை அழகு படுத்திக்கொண்டு, மலர்களைத் தேடும் வண்டு என மகிழ்ச்சியில் திளைத்து வாழ்கின்றான். பூவிட்டுப் பூவைத் தேடும் 'மலய மாருதம்' எனும் பொதிகைத் தென்றலை, கோவலனைப் போலத் திரிகிறது எனக் கூறி, கோவலன் நிலையை இளங்கோ குறிப்பாய்க் குறிப்பிடுகிறார்.

புகையும் சாந்தும் புலராது சிறந்து
நகையாடு ஆயத்து நன்மொழி திளைத்துக்
குரல்வாய்ப் பாணரொடு நகரப் பரத்தரொடு
திரிதரு மறுகில் கோவலன் போல

மலய மாருதம் - பொதிகை மலைத் தென்றல், புகார் நகர வீதிகளில் உலாவியது.

கோவலன் மாதவியுடன் பலவகைப் பூக்களில் தேனுண்டு திரியும் வண்டு போலத் திரிந்தானாம். மாதவி மட்டுமன்றி (மாதவி - குருக்கத்திப்பூ என்றும் ஒரு பொருள்.) பிற பூக்களையும் குறிப்பிடுவதால், அவன் புதிய பரத்தையரை நாடித்திரிந்தமை குறிப்பால் உணர்த்தப் படுகிறது.

புகை - அகிற்புகை. சாந்து - சந்தனம். இவை இரண்டும் புலராது, திரும்பத்திரும்பப் பயன்படுத்திக் கோவலன், இளமை முருக்கோடு திரிந்துள்ளான். நகையாடு ஆயம் - எப்பொழுதும் சிரித்துப் பேசும் பெண்கள் கூட்டத் திடையே, அவர்கள் பேசும் இனிய பேச்சிலே மூழ்கித் திளைத்துள்ளான்.

(ஆயம் - மகளிர் கூட்டம்) குரல் வாய்ப்பாணர் - இசை பாடுபவர். நகரப் பரத்தர் - புகார் நகரில் பரத்தையர் பின் அலைந்த இளைஞர்கள். கோவலன் இவ்வாறு திரிந்தது போலத் தென்றல் உலாவும் தெருக்கள் என்றால், அவன் எவ்வளவு தூரம் நிலைமாறி அலைந்தான் என அறிய முடிகிறது.

மாதவியோ, 'யாவரும் மாற்றா உள்ள வாழ்க்கை யேன்' என்று கூறிய கண்ணகி போல வாழ்ந்துள்ளாள். பரத்தையரை மட்டும் நோகாமல், ஆண்பாலில் 'பரத்தர்கள்' என்று ஆடவர்களைச் சுட்டுவதும் கருதற்பாலது. அன்றைய புகார் நகர நிலையைத் 'தெளிவாகவே, இளங்கோ விளக்கி விடுகிறார்.

இதில் ஒரு வேடிக்கை என்ன என்றால், ஆண்டு தோறும் இந்திரவிழாவில் மாதவி நாட்டியமாட வேண்டும். அரசவை ஆடலரசியாதலின் பதினொரு ஆடல் வகை களையும் ஆடிக் காட்டுகிறாள்.

கோவலன் தான் தன் நிலையில் திரிந்தாலும் மாதவி பலர் முன் ஆடுவது மட்டும் பிடிக்கவில்லை. இன்றைய நிலைதான் அன்றும். பெண்ணைக் கட்டுப்படுத்தும் சமுதாயம் ஆணைக் கட்டவிழ்த்து விடுகிறது.

சேற்றில் பிறந்த செந்தாமரையாம், கலைச்செல்வி மாதவியும் காட்சிக்குக் காட்சி, மேன்மேலும் 'குணம் என்னும் குன்றேறி' வளர்வதையே பார்த்து வியப்படைகிறோம்.

கோவலனின் ஊடலைத் தவிர்க்க ஏதேதோ செய்கிறாள். உள்ளங்கால் முதல் உச்சிவரை, தன்னை அலங்கரித்துக் கொண்டு அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்கிறாள். இந்திர விழாவின் முடிவில், புகார் நகரக் கடற்கரையில் கூடி, எல்லோரும் ஆடிப்பாடி மகிழ்வது வழக்கம்.

. . . . . . . . . . . . . . . . . வானவன் விழவும்
ஆடலும் கோலமும் அணியும் கடைக்கொள
ஊடற் கோலமோடு இருந்தோன் உவப்ப...
மடல்அவிழ் கானல், கடல்விளை யாட்டுக்
காண்டல் விருப்பொடு வேண்டின ளாகி

வானவன் விழா - இந்திர விழா. ஆடல் - மாதவியின் பதினொருவகை ஆடல்கள்; இந்திரவிழாவில் அரசனும் மக்களும் கூடிய அவையில் ஆடியவை. கோலம் - அவளது ஒப்பனை. அணி - அப்போதைய அவளது அழகு. கடைக் கொள - முடிவுற. அவள் பலர்முன் ஆடி முடிந்ததும், தனக்குரியவள் எவ்வாறு பலர் முன் ஆடலாம் எனக் கோவலனுக்கு ஊடல் வந்ததாம். அவனை ஊடல்தீர்த்து மகிழ்விக்க எண்ணிய மாதவி, 'கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்துப் பாடு அமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்' (அழகு தவழும் படுக்கையில் இருந்த பொழுது), தாழை மடல் விரியும் கானலாம் - கடற்கரையில், கடல் விளையாட்டுக்காக, மக்கள் எல்லாம் கடற்கரையில் கூடிப் பாடி ஆடுவர். இது இந்திர விழா முடிந்ததும் நிகழும். மாதவி அதனைக் காணும்தன் விருப்பத்தைக் கூறி, மேலும் கோவலனை மகிழ்விப்பதற்காக, அங்கே அழைத்துப் போகிறாள். அங்கே தான் விதி விளையாடுகிறது.

கடற்கரையில் புன்னைமர நிழல் ஒன்றில், ஓவிய எழினியால் (திரை) வேயப்பட்ட, தந்தத்தாலான வெண்கால் அமளிமேல் இருவரும் இருக்கின்றனர். மாதவி யாழை வாங்கி, சுருதி கூட்டி, முற்றிலும் சரிபார்த்தபின், கோவலன் கையில் யாழை நீட்டுகிறாள். அவன் 'கானல்வரி' (கடற்கரைப் பாட்டு) ஒன்றைத் தொடங்கி அதில் உட்குறிப்பு வைத்துப் பாடுகிறான்.

சோழமன்னன் - சென்னி என்னும் பட்டப் பெயருடையான், காவிரியின் கணவன். அவன் வடநாடு

சென்று, கங்கையைக் கூடினாலும் இக்காவிரிப் பெண் ஊடுவதில்லையாம். ஏன்? அதுதான் மங்கை மாதர் பெருங் கற்பாம்! மலர்களைத் தேடும் வண்டென இவன் வாழலா மாம்; அவள் மட்டும் அதனை ஏற்று அடக்கமாக இருக்க வேண்டுமாம்.

கண்ணகிபோல் 'வாயில்லாப் பூச்சி' என மகளிர் வாழ வேண்டுமென்ற கருத்து கோவலன் குரலில் 'தொனிக்'கின்றது.

*திங்கள் மாலை வெண்குடையான்*
*சென்னி, 'செங்கோல் அதுஓச்சி,*
*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*
*புலவாய் வாழி காவேரி!*
*கங்கை தன்னைப் புணர்ந்தாலும்*
*புலவாது ஒழிதல் கயல்கண்ணாய்!*
*மங்கை மாதர் பெருங்கற்புஎன்று*
*அறிந்தேன் வாழி காவேரி!*

இங்கேதான் மாதவி கண்ணகியிடமிருந்து வேறுபடு கிறாள். கணவன் தவறு செய்தால், தட்டிக் கேட்கலாம் - கேட்க வேண்டும் எனத் துணிகின்றாள். இதுபோல் அவன் குறிப்பு ஒன்று வைத்து, பூடகமாய்ப் பாடியதற்கு எல்லாம் சேர்த்துச் சரியான 'பதிலடி' தருகிறாள், மனத்தில் பதியும்படி. அவள் என்ன பாடினாள்? அதன் விளைவு என்ன? காட்சிகள் விறுவிறுப்படைகின்றன.

## 22

# சிலம்பின் முடிவு!

இன்று 'பாட்டுக்குப் பாட்டு' என்றும் 'பாட்டுக்கு எதிர்ப்பாட்டு' என்றும் பாடுகிறார்கள். 'மங்கை மாதர் பெருங்கற்பு' என்று கோவலன் பாடியதற்கு எதிராக 'ஆண்களின் கற்பு'ப் பற்றி மாதவி எதிர்ப்பாட்டுப் பாட வில்லை. மாறாக, சோழ மன்னனின் நேர்மையான செங்கோலாட்சி அதாவது ஒழுக்கமே காவிரியின் சிறப்புக்குக் காரணம் என அவள் பாடுகிறாள்.

கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்த எல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி!

இப்படி அவள் நாகரிகமாகப் பாடினாள். மணி மேகலை என்ற மகளுக்குத் தாயான நிலையில், தன் தாய்மையை நினைவூட்டியும் பாட அவள் தவறவில்லை.

வாழி அவன்தன் வளநாடு
மகவாய் வளர்க்கும் தாயாகி

*ஊழி உய்க்கும் பேருதவி*
*ஒழியாய் வாழி காவேரி!*

சோழநாடு என்ற மகளை, சோழனின் மனைவியாம் காவிரி, ஊழிக்காலம் வரை பால் ஊட்டி வளர்க்கிறாளாம்; தாயாகிய தன் கடமையைக் கைவிடவில்லையாம். கோவலனுக்குத் தான் பெற்ற குழந்தையை அவள் கடமை யுணர்வோடு வளர்ப்பதையும், அவன் அக்கடமை மறந்து ஊர் சுற்றுவதையும் சொல்லாமல் சொல்லிவிடுகிறாள் மாதவி. அது அவன் மனத்தைச் சுட்டு விடுகிறது.

காவிரியாகிய சோழமன்னன் மனைவி, அவன் கங்கையைக் கூடினாலும், ஊடுவதில்லையாம். அதுதான் மங்கையர் கற்பாம், கண்ணகியை நினைத்துக் கோவலன் பாடியவை இவை. இன்னும் என்ன வெல்லாமோ பாடினான்.

ஆனால், மாதவி இவன் இவ்வாறு தான் பரத்தை யர்களோடு அலைவதற்கு நியாயம் கற்பித்துப் பாடியதை ஏற்கவில்லை. கண்ணகி மனத்துள் வருந்தினாள். மாதவியோ, அவன் பாட்டைக் கேட்டு மகிழ்ந்தவள்போல் வெளியே காட்டிக்கொண்டு, மனத்துள்ளே ஏற்பட்ட வருத்தத்தைப் பாடலிலே சொல்ல எண்ணி, யாழைக் கோவலனிடமிருந்து வாங்கிக் கொள்கிறாள். தானும் குறிப்பு வைத்துப் பாடத் தொடங்குகிறாள்.

*நிலத்தெய்வம் வியப்பெய்த*
*நீள்நிலத்தோர் மனம் மகிழக்*
*கலத்தொடு புணர்ந்தமைந்த*
*கண்டத்தால் பாடத் தொடங்கும்மன்!*

கோவல்னுக்கு இவ்வாறு கூறவில்லை. மாதவி குரல் இனிதாக இருந்திருக்கிறது. கலத்தொடு புணர்ந்து அமைந்த

கண்டம் - யாழிசையுடன் இழையோடி இசைந்த குரலாம் அது. என்ன குறிப்பு வைத்துப் பாடினாள்?

"நீங்கள் நினைப்பதுபோல், இன்னொருத்தியையும் கூடுவதால், தனக்கு வருத்தமில்லை என்று, காவிரி தன் கற்பைக் காட்டவில்லை, மாறாகத் தன் கணவனது செங்கோலாட்சி வளையக்கூடாது; அவன் ஆட்சி சிறக்க வேண்டும் என்பதே அக் காவிரியின் கற்புக்குக் காரணமாகும். மேலும் அக் காவிரி, சோழநாடாகிய மகவைத் தன் மகவாகக் கருதி, அம் மகவை வளர்ப்பதே தான் தன் கணவனுக்குச் செய்யும் கடமை என்று கருதி, அங்ஙனம் வளர்ப்பதே 'மங்கை மாதர் பெருங்கற்பு' என நினைத்துச் சோழநாட்டை ஊழிக் காலம் வரை காப்பதையே தன் கடமையாகக் கொண்டுள்ளாள்" என்று பாடுகிறாள்.

மணிமேகலை பிறந்தபின்பு, கோவலன் இங்ஙனம் அலைந்துள்ளான் என்பதும் இதனால் புலனாகிறது. மாதவியின் பண்பாடும் விளங்குகிறது.

கடற்கரைக்கு ஒன்றாகப் போனவர்கள், பிரிந்து தனித்தனியே வீடு திரும்ப நேர்கிறது. கண்ணகியைப் பிரிந்ததற்குப் பிறகு, நாடகத்தின் இரண்டாவது முறுக்கேறிய பரபரப்பு நிகழ்ச்சி இது!

கோவலன் கண்ணகியை அடைகின்றான். செல்வம் அனைத்தையும் இழந்த நிலையில், இப்போது கண்ணகியிடம் காற்சிலம்புகள் மட்டுமே உள்ளன. தன்னிடம் பொருளை எதிர்பார்த்தே கோவலன் வந்துள்ளான் என உணர்ந்த கண்ணகி, 'சிலம்புள கொண்ம்' என்றாள். சிலம்புகள் மட்டுமே உள்ளன; அவற்றையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றதும்,

*சிலம்பு முதலாக, சென்ற கலனோடு*
*உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன்*
*மாட மதுரையகத்துச் சென்று*

அதாவது - சிலம்பை அடிமுதலாகக் கொண்டு, இழந்த பொருளை எல்லாம் ஈட்ட மதுரை நகர் செல்வோம் என அழைத்தான்.

மதுரை நகரில் நினைத்தது ஒன்று; நடந்தது ஒன்று. கோவலன் கொலை செய்யப்படுமாறு நடந்த நிகழ்ச்சிகள் மிகக் கொடுமையானவை. அவற்றை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கும் காட்சிகள் அவலத்தின் உச்சத்துக்கே நம்மை அழைத்துச் செல்வன.

'கல்லாக் களிமகன்' ஒருவனால், அரசன் ஆணைப்படி ஒருபுறம் கோவலன் கொலையுண்டு, மண்ணில் புதைந்து கிடக்கின்றான். மறுபுறம் இது தெரியாமல், ஆயர்குல இடைச்சியருடன் சேர்ந்து, கண்ணகி குரவைக் கூத்து ஆடிக்கொண்டிருக்கிறாள்.

மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோ அரணும் போர்மடிய, தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவிஎன்ன செவியே?
திருமால்சீர் கேளாத செவிஎன்ன செவியே?

மூவுலகையும் தன் இரண்டு அடிகளை வைத்து அளந்து, மூன்றாம் அடிவைக்க இடமின்றிப் போகுமாறு செய்ததே, 'முறை நிரம்பா வகை' முடித்தது. அத்தகைய வாமன அவதாரத்தைக் கூறி, அச்சேவடி மேலும் சிவக்கத் தம்பியொடு காட்டுக்குப் போனதும், தொல் இலங்கையின் அழகை அழித்ததும் இராம அவதாரம் என்பதைச் சேர்த்துச் சொல்கிறார். சோ என்னும் அரணை - கோட்டையை அழித்த கண்ணன் என்பதையும் கூறி, அத்தகைய சேவகனாம் (வீரனாம்) திருமாலின் சீர்கேளாத செவி, செவியாகுமா என வினவுகின்றார்.

இப்படிப் பாடி ஆடும் கூத்தில் மனம் மயங்குகிற நிலை. அந்நிலையிலேதான், 'கோவலனுக்கு ஏதோ ஆபத்து' என்ற

செய்தி, மதுரையில் காட்டுத்தீ எனப் பரவி, கண்ணகி செவியிலும் படுகிறது.

அவள் 'மாயமோ, வஞ்சகமோ' என்று மருண்டு மயங்குவதும்,

'அன்பனைக் காணாது அலவும்என் நெஞ்சாயின்
மன்பதை சொன்னது எவன் வாழியோ தோழி'

என ஊர்ப் பேச்சைக் கேட்டு 'உண்மையோ, பொய்யோ' என அழுவதும், (அலவும் - வருந்தும்)

'மன்பதை அலர்தூற்ற, மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன் யான், அவலங்கொண்டு அழிவலோ'

என அரற்றுவதும் மதுரை நகரத்தெருக்களில் 'பெண்டிரும் உண்டு கொல்? சான்றோரும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?' என வாய்விட்டுக் கூவிக் கேட்பதும் கண்ணீரை வரவழைக்கும் அவலக் காட்சிகளாகும். எப்படிச் சாத்தியமாகும் என்று கருதாமல், சிலம்பின் இந்தக் காட்சிகள் உள்ளபடி காட்டப்படுமானால், 'ஹே ராம்' போன்ற ஒரு கலைநுட்பத் திரைப்படம் நமக்கும் கிடைக்கக்கூடும்.

பாண்டியன் அவையில் கண்ணகி வழக்கை எடுத்துக் கூறிய காட்சிதான், இந் நாடகக் காப்பியத்தில் உச்சம் - மற்றவை இமயம் என்றால், இதனை 'எவரெஸ்டு' சிகரம் எனலாம்.

மன்னனை நேருக்கு நேர் அழைத்து, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, 'என் காற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது' என எடுத்துவைத்த அவள் வாதம்தான், கணப்போதில் வழக்கின் போக்கையே மாற்றியது. 'என் கால் பொன் சிலம்பு மணியுடை அரியே' என்ற கேள்விக்கு விடையாகப் பாண்டியன் 'யாம் உடைச் சிலம்பு முத்துடை அரியே' என்றான். பாண்டியநாடு

முத்துக்குப் பெயர்பெற்ற நாடல்லவா? கண்ணகியின் மனத்தில் இந்த எண்ணம் மின்னலெனத் தோன்றியது வியப்பே. உடனே 'அணிமணிச் சிலம்பை' உடைத்துக் கண்ணகி வென்றாள்; மன்னன் தோற்றான்.

மதுரை நகருக்குக் கீழவாசல், தெற்கு வாசல், மேல வாசல், வடக்கு வாசல் என்ற நகரமைப்பும் வெளி வீதிகளும் இன்றும் உண்டு. கண்ணகி,

> கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
> மேல்திசை வாயில் வறியேன் பெயர்கு

என்று கூறி, வெளியேறுகிறாள்.

(வறியேன் - துணை இழந்து தனியே. கிழக்கு வாசல் வழி இருவராகப் புகுந்தோம்; இப்போது மேற்கு வாசல் வழி தனி ஒருத்தியாகப் போகிறேன் என்னும் கூற்று நெஞ்சை நெகிழச் செய்கிறது.

கண்ணகி வயிர நெஞ்சினள். அவள் சோழ நாட்டில் பிறந்தவள்; அங்கு வாழமுடியாமல், வாழும் வகை தேடிப் பாண்டிய நாடு புகுந்தவள்; அங்கும் கணவனை இழக்கவே, தனது நாடு திரும்ப மனமின்றி, சேர நாட்டுக்கு வையையின் தென் கரை வழியாகப் பதினான்கு நாட்கள் நடக்கின்றாள்.

கண்ணகியிடம் மதுரை மா தெய்வம் 'ஈரேழ் நாளகத்து (பதினான்கு நாள்) எல்லை நீங்கி, நீ உன் கணவனைத் தெய்வ வடிவில் காண்பாய்' என்று கூறியது.

அவளும் வையைக் கரை வழியாகப் பள்ளமென்றும் மேடென்றும் பாராமல் அழுதபடி நடந்தாளாம். கடைசியில் 'நெடுவேள் குன்றம் அடி வைத்து ஏறி... எழுநாள் இரட்டி (14நாள்) எல்லை முடிந்த அன்று, 'வான ஊர்தி ஏறினள் மாதோ' என முடிகிறது கண்ணகி வாழ்வு.

அவள் கணவன் கொலையுண்டது ஆடிமாதம் அமாவாசை நாள், வெள்ளிக்கிழமை. பதினான்கு நாள்

ஊண் உறக்கமின்றி நடந்து நடந்து, திருச்செங்குன்று என்ற நெடுவேள் குன்றத்தில் அடிமேல் அடிவைத்து ஏறுகிறாள். அங்கு உச்சிக்குச் சென்றதும், தன் கணவன் சென்ற இடத்துக்குச் செல்கிறாள்! இதைக் கோவலன் வந்து அழைத்துச் செல்வதாகச் சொல்வது உலகியல்.

முதலில் அவளைக் கண்ட குன்றக் குரவர்கள், இப்போது உயிர் நீத்த அவளைத் தெய்வமெனக் கொண்டு குரவையாடுகின்றனர். சிலம்பின் அவல முடிவு இதனுடன் நிறைவெய்துகிறது. மங்கலத்தில் தொடங்கி அவலத்தில் முடியுமிது, சேக்ஸ்பியரின் துன்பியல் நாடகம் போன்றது. பின்வருவன சேரன் கல்லெடுத்த வரலாறாகும்.

இளங்கோ சொன்னவாறே மக்களுக்குச் சொன்னால் – காட்சியாக்கிக் காட்டினால் அதன் நுட்பம் வெளிப்படும். தமிழுக்கு ஒரு சிறப்பு பாடலென்பது ஓரடியாகக்கூட இருக்கலாம். ஒரே அடி கருத்து நிறைவுறும் பாடலாக அமையும் என்பதையும் இனிக் காண்போம்.

# 23

# எதுகை, மோனை என்றென்றும் பகையா?

'இலக்கியம் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது' என்பார்கள். கவிஞர்கள் புதிய புதிய முயற்சி களில் ஈடுபடுகிறார்கள். அதனால் பழமை மேன்மேலும் சீர்மை பெறுகிறது; சிறப்பும் பெறுகிறது.

இன்றைய புதுக்கவிஞர்கள் செய்யும் முயற்சியும் அதுதான்! புதுக்கவிஞர்கள் சிலர் 'இலக்கணத்தைத் தகர்த்து விட்டோம்; ஒழித்துவிட்டோம்; விலங்குகளை முறித்துக் கொண்டு விடுதலைப் பறவைகளாகிவிட்டோம்,' என்று முழக்கமிடுகிறார்கள்.

முழங்கட்டும். ஆனால், அவ்வாறு முழங்க முழங்க, இவர்கள் மக்களிடம் இருந்து தாங்கள் விலகிப்போவதை மறந்தே போகிறார்கள். இன்று நடப்பதென்ன?

இவர்கள் தங்களுக்குள் ஒருவரை ஒருவர் நட்பாகவும் முரணாகவும் உரசிக் கொள்கிறார்கள்! அதாவது 'புதுக்கவிதை' புதுக்கவிஞர்களுக்குள் மட்டுமே 'சகவாசம்' பண்ணிக் கொண்டு உயிர்வாழ்கிறது. பாரதி, பாரதிதாசன்

கவிதைகள் போல் இவை மக்கள் மத்தியில் எவ்வளவு தூரம் ஊடுருவியுள்ளன என ஒரு கணக்கெடுத்தால் நான் சொல்வது விளங்கும்!

இன்னும் சொன்னால், புதுக்கவிதை கூடச் சில சமயம் ஒரு வடிவமைப்புக்குள் சிக்குகிறது. அப்போதுதான் அதன் சுவை கூடுகிறது!

'கொன்றை வேந்தனை'ச் சிறுவயதில் கற்றுக் கொடுத் திருந்தால், பலர் எதுகை, மோனை வராமல் இடர்ப் பட்டிருக்க மாட்டார்கள்.

*அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்*

*ஆலயம் தொழுவது சாலவும் நன்று*

*சீரைத் தேடின் ஏரைத் தேடு*

எதுகை வந்து விழும் நயம், மனத்தினுள் பதிந்து இயல்பாகப் பழகிவிடுகிறது.

*சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்*

*மைவிழி யார்தம் மனை அகன்று ஒழுகு*

*ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்*

மோனை - முதல் எழுத்து ஒன்றி வருவதும் பாட்டுக்கு அழகு தருகிறது.

ஔவையார் செய்ததும் புது முயற்சிதானே? ஈரடியில் 'குறள்' என்றால், ஓரடியிலும் படைத்துப் பார்ப்போமே என்ற முயற்சிக்குக் கிடைத்த வெற்றிதானே கொன்றை வேந்தன்!

இரண்டே சீரிலும் படைத்துக் காட்டுவேன் என அவர் 'ஆத்திசூடி' பாடவில்லையா?

பாரதியார் நொண்டிச் சிந்து, காவடிச் சிந்து எனத் தம் காலத்தில் கொடிகட்டிப் பறந்த 'சிந்து' எனும் நாட்டுப்புறப் பா வடிவத்தில், புதுமை புகுத்தி, ஒரு பாவியமே எழுதினார்,

'பாஞ்சாலி சபதக்' காவியமாக! பாட்டுக்கு உயிர்ப்புத் தந்து, நினைவில் தங்கவைக்கும் இயைபுத் தொடையைப் பற்றிக் கொண்டு, 'பாண்டவர் பூமி'யில் பாவியம் படைக்கின்றார் வாலி.

கர்ணனின் கதையின் ஒரு பகுதியை, வாலி இப்படிப் பாடுகிறார்:

குந்திதேவி கர்ணனைப் பெற்றதும், மான உணர்ச்சி காரணமாகக் கங்கையில் எறிந்து விடுகிறாள். அக் குழந்தையைத் துரியனின் தேரோட்டி எடுத்து வளர்த்தான்.

என்தாய்
எனக்கு
ஏணை கட்டி – அதில்
என்னை வைத்து ஆட்டினாளா?
இல்லை – என்
இரைப்பை நிரப்ப – புடவைத்
தலைப்பால் எனைமூடி – எனக்கு
முலைப்பால் ஊட்டினாளா?
வெருவல் புகுந்தது – அவள்
உள்ளத்தில்
விட்டெறிந்தாள் – எனை
வெள்ளத்தில்

இறுதிச் சீர்களில் வந்துவிழும் எதுகையைத்தான், 'இயைபுத்தொடை' என்பர். சிந்துப் பாடல்களில் இயைபுத் தொடை மிகுதியாக வரும். அதைப் பல்வேறு விதமாகப் பயன்படுத்திப் படிப்பவர்க்கு அலுப்புத் தட்டாமல் செய்யும் வாலியின் கவித்திறன் அவர்தம் தனித்திறனாய், வெளிப் படுகிறது.

'சங்கத் தமிழில்' கலைஞர் சங்கப் பாடல்களை மீட்டுருவாக்கம் செய்து, உரைவீச்சாக – எளிமைப்படுத்திய

கவிதை வடிவில் தருகிறார். ஆயினும் இந்நூல் முழுவதும் இன்சுவைக் கவிதைக்ளாக அமைவதை, இடையிடையே வரும் சொல்நய வடிவங்கள் காட்டுகின்றன. படிப்பவர் மனத்தில் பதிய இவை உதவுகின்றன எனில் மிகையாகாது.

மானவுணர்ச்சியால், சிறைப்பட்டுக் கிடந்த கணைக் கால் இரும்பொறை, பாடலொன்றைப் பாடி வைத்துவிட்டு இறந்து போனான். அதைக் கலைஞர் விளக்கும் திறம் இது:

ஏடொன்று எழுதிவைத்து
எதிர்காலத்
தமிழகமே – அதனைப்
பாடென்று விட்டுச் சென்றான்!
சேரமான் கணைக்கால் இரும்பொறை
வீர வாளினை ஓலையாய்க் கொண்டு
தீட்டிய புறப்பாடலை
நீட்டுகின்றேன் உம்மிடையே –
படித்துப் பாரீர் – உணர்ச்சியால்
துடித்துப் போவீர்.

கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பு, தமிழ் இலக்கியம் உலகுக்குத் தந்த கொடை என்றே கூறலாம். அவ்வளவு ஒப்பற்ற நட்பு அது..அதைப் பாடவந்த கலைஞர், நட்புக்கு ஓர் இலக்கணமே வகுக்கின்றார்.

உள்ளமெலாம் சுயநலத்துச்
சுரங்கமாக அமைந்ததாலே
பள்ளம்போய் வீழ்கின்ற தண்ணீர்போல்
ஆகிவிடும் பலர்நட்பு.
வாழுங்கால் வந்து தலைகாட்டி
ஆடாவிடினும்
தாழுங்கால் தயங்காது ஓடிவந்து
துணைநிற்கும் தூயநட்பு!

நிகழ்கால 'அனுபவம்' பழங்காலத்துடன் இணைகிறது. இலக்கியத்துக்குக் கால வேறுபாடு இல்லை.

பொருளுக்கேற்ற வடிவம் எனக் கருத்துக்கு முதலிடம் தருவதே தமிழ்க் கவிதைப் பண்பு. கலைஞரிடம் கவிதை வளைந்து கொடுக்குமிடங்கள், கருத்தை நிரப்புகின்றன. மற்றபடி, கவிதை தனக்குரிய வடிவமைப்பைப் பெறவே முந்துகிறது.

புதுக்கவிதையும் பொதுமக்கள் கவிதை ஆகவேண்டாமா? எதுகை, மோனை என்றென்றும் பகையா? சொல்லின் ஒலி அழகிலும் ஈடுபடும்போதுதானே கவிதை ஒளி வீசுகிறது!

புதுக்கவிஞர்களும் பல்வேறு புதுப்புதுச் சோதனை முயற்சிகளில் ஈடுபடலாகாதா என்பதைப் பற்றி எண்ணிப் பார்ப்போம்.

# 24

## பூக்களைப் பறிக்காதீர்கள்!

நந்தவனம் கண்திறந்து
நாலுவகைப் பூ எடுத்து
பூஎடுத்துப் பூசைசெய்யும்
புண்ணியவா பேரேனோ
மலரெடுத்துப் பூசை செய்யும்
மகராசா பேரேனோ...

குழந்தையைத் தொட்டிலில் இட்டதும், பாட்டருவி பாய்ந்தோடி வருகிறது. இது ஒரு நகரத்தார் குலத் தாய் பாடக் கேட்டது. விடிந்ததும், பூங்காவுக்குள் உள்ள செடிகொடி மரங்கள், பனி படரும் புலர்வேளையில் பூத்துக் குலுங்கு கின்றன. இந்தப் பக்திமான் ஐயா புண்ணியவான், கண்மலருமுன், நந்தவனம் கண்திறந்து பார்க்கிறது. அவர் வரவை மலர்ந்த முகத்துடன் எதிர்நோக்குகின்றது!

'பூ எடுத்து' என்பதிலே உள்ளது அழகு. பூ மென்மையானது; தொட்டதும் கையில் வந்துவிடும். காய் பறிக்கலாம்; கனி கொய்யலாம்; பூ எடுக்க வேண்டும். ஏனெனில் அதன் மென்மையைப் 'பூ எடுத்து' என்ற சொல் உணர்த்துகிறது.

பாரதியும் பாரதிதாசனும் கவிமணியும் எத்தனை சோதனை முயற்சி செய்து பார்த்தார்கள்! புதிய புதிய முறையில், சந்தத்தில், துறையில் பாட முயன்றதால், இன்று அவர்களை எளிதில் எல்லோரும் நினைவுகூர்கிறார்கள்.

பாரதியார் கும்மி, சிந்து, கீர்த்தனை என நாட்டுப் புறப் பா வடிவங்களை, விடுதலைக் கீதம் இசைக்கப் பயன்படுத்திக் கொண்டாரே? சிற்றிலக்கிய வகைகளாகப் பாரத மாதா நவரத்தின மாலை, பாரத தேவியின் திருத்தசாங்கம், மணக் குளத்து விநாயகர் நான்மணி மாலை என்றெல்லாம் பாடி வைத்துள்ளாரே? எத்தனை இசைப்பாட்டு வடிவங்கள்? கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம் எல்லாம் புது முயற்சிகள் அல்லவா?

புதுக்கவிஞர்கள் புதுக் கவிதையைவிட்டு, வெளிவர முடியாமல் தவிக்கிறார்கள்.

Twinkle Twinkle Little Star
How I Wonder What You are?

-இந்த Star-க்காக are வருவதுதானய்யா Rhyme இயைபுத் தொடை. இது சிந்துப் பாடல் முதல், பல இசைப்பாடல் வரை, சொல்ல வந்த கருத்தைத் தூக்கி நிறுத்துகிறதே? படிப்பவனை மறக்க விடாமல் நிலை நிறுத்துகிறதே? பாரதியார் உயிரோடிருந்த காலத்தில் மதுரைக்கவி, மதுரகவி பாஸ்கரதாஸ் போல நூற்றுக் கணக்கான கவிஞர்கள் வாழ்ந்துள்ளார்கள். அவர்கள் பாடிய ‘மேடை நாடகப் பாடல்கள்’ பல. என் தமையனார் குழிபிறை செ. ராம. செ. இலட்சுமணன் அவர்கள் சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட பாடல்களை, அன்று அச்சுவடியில் வந்தவற்றைத் தொகுத்து வைத்துள்ளார். 1921இல் வெளியான ஒரு சிறு நூலில், பாஸ்கரதாஸ் ‘இந்து தேசாபிமானிகள், செந்தமிழ்த் திலகம்’ என்ற தலைப்பில் பாடியவை வெளியாகியுள்ளன.

அவர் பாலகங்காதர திலகரையும் வ.உ.சி. யையும் புகழ்ந்த பாடலின் ஒரு பகுதி.

வடஇந்தி யாவிற்கொரு திலகம் – நம் சீ
மான்பால கங்காதரத் திலகம்
திடமுள்ள தென்னிந்தியத் திலகம் – எங்கள்
சிதம்பரம்பிள்ளை ஒரு திலகம்!

இவ்விரு திலகங்களால் இந்தியர்களுக்கு ஓர் ஊக்கம் பிறக்கிறதாம்.

திலகம் இரண்டிருப்ப தாலே – இந்தியா
செல்வம் பெருகும் இனி மேலே
உலகம் செழிப்பதிவர் பாலே – நமக்கு
ஊக்கம் பிறந்ததும் இக் காலே!

அவர் சிதம்பரம் பிள்ளையை, மேலும் ஒரு பாடலில் பாடும்போது, இந்திய ஒற்றுமையை இசையினிமையோடு வற்புறுத்துவதைப் பார்க்கிறோம்.

வந்தேமா தரமந்திரம் ஓதி – பல
வகையில் முதிர்ந்திருக்கும் சாதி
இந்தியர் நாம்ஒன்று என்றநீதி – நமக்கு
எடுத்துரைத் திட்ட நியாய வாதி!

இத்தகைய மேடை நாடகப் பாடல்களின் தொகுப் பேதும் வெளிவந்துள்ளதா எனத் தெரிய வில்லை. மதுரைப் புதுமண்டப வெளியீடுகளாக 1920-க்கு முன்பு பாடப் பெற்றவை இவை எனத் தெரிகிறது.

நம் சித்தர் பாடல்களில் உள்ள தத்துவங்களாம் மெய்யியலைப் பற்றியே பலரும் பேசுவர். ஆனால் அவர்கள் நாட்டுப்புறப் பாவடிவங்களை எடுத்துக்கொண்டு, அவற்றிற்கு இலக்கிய வடிவம் தந்துள்ளவை நூற்றுக்கும் மேற்பட்டவை ஆகும்.

யாப்பு இலக்கணத்தில் இல்லாமல், நாடோடிப் பா வடிவ யாப்புக்கள் - குறிப்பாக இலக்கியத்தில் ஏறியவை ஆயிரக்கணக்கினவாகும். இளங்கோ தந்த வரிப்பாடல்கள் முதலாக இதை எண்ணிப் பார்க்க வேண்டும். தாயுமானவர் 'கண்ணிகள்' தமிழுக்குப் புதுவரவல்லவா? கண்ணி என்பது ஈரடிப் பாடல், மலர்களைப் பிணைத்துக் கட்டும் கண்ணிகள் போல. அதில் சில 'வண்ண வேறுபாடுகளும்' செய்து காட்டி யுள்ளாரே? அதனால் தாயுமானவர் பாடல்கள் தமிழகத்துத் தெருக்களிலெல்லாம் எதிரொலித்தன. ஏழை எளிய மக்க ளிடமும் தமிழ் சென்றடைந்தது.

இராமலிங்க வள்ளற்பெருமான் தந்துள்ள யாப்பு வடிவங்களும் தனியே எண்ணிப் பார்க்கத் தகுந்தவை.

பாரதியாரின் வெற்றிக்கு, வழிவழி வந்த, இந்த யாப்பு மரபு பற்றிய அறிவும் நாடோடிப் பாடலில் அவருக்கு இருந்த ஈடுபாடுமே அடிப்படையாகும்.

புதுக்கவிதை, ஐக்கூகவிதை எழுதுவோர்மீது எனக்கு வெறுப்பில்லை. அவர்கள் அறிவு வாணர்களிடம் மட்டும் தேங்கிவிடாமல், எளிய மக்கள் இதயங்களிலும் இடம் பெற வேண்டுமென்றே இதைக் குறிப்பிட நேர்கிறது.

ஒரு பாவலன், பற்பல சோதனை முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும். ஓசை தவழும் பாடல்களினால் அல்லா மல், யாரும் உலகினர் அனைவர்தம் மனத்தையும் ஒருசேர ஈர்த்தல் என்பது இயலாது.

*தெளிந்து தெளிந்து தெளிந்தாடு பாம்பே! – சிவன்*
*சீர்பாதங் கண்டு தெளிந் தாடுபாம்பே!*
*ஆடுபாம்பே தெளிந்தாடுபாம்பே – சிவன்*
*அடியிணை கண்டோமென்றாடு பாம்பே!*

மகுடிக்குரிய இச்சந்தம், 'பாடலுக்கு இசைந்த பண்ணாகி விட்டதை, எத்தனை மேடைகளில் இசைக்கக் கேட்டிருக்கிறோம். இதனாலேயே அச்சித்தர் 'பாம்பாட்டிச்

சித்தர்' என்றே பெயர் பெற்று விட்டாரே! இவை யாவும் நாடோடிப் பாவடிவங்களிலிருந்து பிறந்தவை என்பதை மறக்க வேண்டாம்.

இன்று நாடோடிப் பாடல்களை மேடை ஏற்று பவர்கள், அவற்றை அப்படியே பிறந்த மேனிக்குப் பாடி, நாடோடிப் பாடகர்களின் பின்பாட்டுக்காரர்களாகி, அவர்கள் வயிற்றில் அடிக்கின்றனர். படித்த அவர்கள், அவற்றை இலக்கிய வடிவமாக்கியல்லவா உலகிற்குத் தர வேண்டும்? நம் வழிவழி மரபு அதுவல்லவா? பரிபாடல், கலிப்பாடல், வரிப்பாடல் எல்லாம் நாட்டுப்புறப் பாவடிவங் களுக்குத் தரப்பட்ட, இலக்கிய வடிவங்களல்லவா?

இடைக்காட்டுச் சித்தர் 'கண்ணிகள்' பாடிக் காட்டுகிறார். தங்கரத்தினமே, தாண்டவக்கோனே என்றெல் லாம் நாடோடிகள் பாடிய காலம் அது.

மனமென்னும் மாடுஅடங்கில் தாண்டவக்கோனே! – முத்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே!

வேறு ஒருவகையான வண்ணமும் இசைக்கின்றார் அவர்.

தாந்திமித்திமி தந்தக் கோனாரே
தீந்திமித்திமி திந்தக் கோனாரே
ஆனந்தக் கோனாரே – அருள்
ஆனந்தக் கோனாரே!

இது அவர் வகுத்துக் கொள்ளும் வண்ணச் சந்தம். மேலே பாடுகிறார்:

அந்தக் கரண மெனச் சொல் நாலாட்டையும்
அஞ்ஞானம் என்னும் அடர்ந்த,வன் காட்டையும்
சந்தத் தவமென்னும் வாளினால் வெட்டினேன்
சாவாது இருந்திடக் கோட்டையும் கட்டினேன்
(தாந்திமித்)

இடைக்காட்டுச் சித்தர் தாம், சொல்லுங் கருத்திற்கு ஏற்பப் பாவடிவங்களை மாற்றுகின்றமை, இசைத்து இன்புறுமாறுளது.

எனதென்றும் யானென்றும் இல்லாதிருக்கவே
தனதாக ஊதுகுழல் – கோனே
தனதாக ஊதுகுழல்!

வேறு ஒரு சந்தம்

தோயாது இருந்திடும் பால்கற – முன்
தொல்லை வினையறப் பால்கற!
வாயால் உமிழ்ந்திடும் பால்கற – வெறும்
வயிறார உண்டிடப் பால்கற!

‘குதம்பை’ என்ற அணிகலனை அணிந்தவளைக் ‘குதம்பாய்’ என அழைத்துக் குதம்பைச் சித்தர் பாடியவற்றைப் பலரும் எளிதிற் பாடுவதுண்டு.

வெட்டவெளி தன்னை மெய்யென்று இருப்பார்க்குப்
பட்டய மேதுக்கடி குதம்பாய்
பட்டய மேதுக்கடி?
முத்தமிழ்கற்று முயங்கும் மெய்ஞ் ஞானிக்குச்
சத்தங்கள் ஏதுக்கடி குதம்பாய்
சத்தங்கள் ஏதுக்கடி?

சித்தர்கள் பாடியவை நாடோடிப் பாடல்களே. அவை வாய்மொழியாய் வழங்கியே, பின்னர் எழுதப் பட்டன. அதனால் அவற்றில், பின்னால் வரவர, பிற்காலத்தவர்கள் சொற்களை மாற்றித் தம் காலத்தன போல் பாடி, அதன்பின் எழுதப்பட்டுள்ளன. உள்ளடங்கிய கருத்துக்களிலும் வேறு பாடு பலவுண்டு, ஆயினும் நம்மைப் போன்றார்க்கு, வேண்டுவன அவர்களின் யாப்பு வடிவப் புதுப்புது முயற்சிகளுமேயாம். அழுகணிச் சித்தர் பாடல்வடிவம் ஒன்றைப் படியுங்கள்:

சம்பா அரிசியடி சாதம் சமைத்திருக்க
உண்பாய்நீ என்று சொல்லி, உழக்குழக்கு நெய்வார்த்து
முத்துப்போல் அன்னமிட்டு முப்பழமும் சர்க்கரையும்
தித்திக்கும் தேனமிர்தம் என் கண்ணம்மா
தின்றுகளைப் பாறேனோ!

மையூரிலேயிருந்து பாழூரிலே பிறந்து
மெய்யூரில் போவதற்கு வேதாந்தவீடறியேன்
மெய்யூரில் போவதற்கு வேதாந்த வீடறிந்தால்
பையூரும் மையூரும் என்கண்ணம்மா
பாழாய் முடியாதோ?

கவியரசு கண்ணதாசன் நமது இலக்கிய மரபுவழி அறிந்து, வேர்பிடித்து வளர்ந்ததால் நிலைபெறுகிறார். ஆனால் இன்றைய கவிஞர்கள் பலருக்குப் பழம் மரபு தெரியாது. ஆங்கில அரைகுறை அறிவு மட்டுமே உண்டு. எனவே இவர்கள் ஆகாயப்பூக்களாய் இன்று காற்றில் பறக்கின்றனர்.

வேர்பிடித்து வளராத மரம்செடி கொடிகள் நிலைப்ப தில்லை.

இவ்வாறு காட்டுவதன் காரணம், இன்றைய பாவலர்கள் தங்கள் கவித்திறமையைப் பல்வேறு வகைகளில் ஏன் வெளிப்படுத்தக் கூடாது என்ற கேள்வியை எழுப்புவதற்கே யாகும். மற்றபடி அது அவர்கள் விருப்பம். திறமையுள்ள வர்களும் முடங்கிப் போவது ஏனோ?

பரதேசத்தவர் காட்டிய வழிகளை மீறோம்
பழந்தமிழ் இலக்கியங்களைத் திரும்பியும் பாரோம்

– இது உங்கள் சபதமானால், உங்கள் கவிதை வாழ்க் கையை ஆண்டவன் காப்பாற்றட்டும்.

# 25

## ஒலி அழுகுச் சிறகுகள்!

காதலன் போய் நெடுநாளாகி விட்டது. சொன்னபடி, குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. காதலி சோர்ந்து போனாள். தன்னைக் காதலித்துக் கைப்பிடித்தபோது அவன் சொன்ன வார்த்தைகளென்ன? அளந்த அளப்பென்ன? அந்த நிலவொளி வீசும் மலர் முகத்தில் பனித்திவலைகள் உதிர்கின்றன. உலகமே, அந்த வீட்டுக்குள் இருண்டு கிடக்கிறது. சுற்றியிருந்த தோழியர்களும் நம்பிக்கை இழந்த பார்வையை வீசுகின்றனர். ஆற்றமாட்டாத அப்பெண் மௌனத்தைக் கலைத்துவிட்டு, ஒரு புலம்பல் - அழுகை - விம்மலிடையே வாய்விட்டுப் பேசுகிறாள். அதில் அவள் அவன் மீது வைத்திருந்த நம்பிக்கைதான் எதிரொலிக்கிறது. "ஆம்... அவன் வந்துவிடுவான். இதோ வரப்போகிறான். என்னை மேலும் வாடும்படி விடமாட்டான். இது சத்தியம்"!

இந்த நம்பிக்கை ஒளிக்குக் காரணம் என்ன?

'அடி தோழி! சுட்டெரிக்கும் வெப்பமான காட்டு வழியில் போவதாகத்தானடி சொன்னார்! ஆனால், அந்தக் காட்டுள் ஒரே ஒரு சிறு பள்ளத்தில் சிறிதளவு தண்ணீரே கிடக்கிறது. முதலில் குடித்துத் தன் குட்டி கலக்கிய சிறு அளவு

தண்ணீரை, பெண் யானையையும் குடிக்க வைத்துவிட்டுப் பிறகு எஞ்சிய நீரையே அந்த ஆண் யானை குடிக்குமென்றாரே! இல்லையா?

*துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்*
*பிடிஊட்டிப் பின்உண்ணும் களிறெனவும் உரைத்தனரே!*

(கயந்தலை - யானைக்குட்டி. பிடி - பெண் யானை. களிறு - ஆண் யானை.)

தோழி! மரமும் இலைகளும் காய்ந்து உலர்ந்து தீய்ந்து போகும் காட்டுவழியே போனவர், தன் அன்பான பெண் புறாவுக்கு அவ்வெப்பத்தால் ஏற்பட்ட துன்பத்தை நீக்குவதற் காக. ஆண் புறா தன் மெல்லிய சிறகைக் குடைபோல் விரித்து, ஆற்றுவிக்கும் என்றாரே! அதை அவர் பார்க்க மாட்டாரா?

*அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை*
*மென்சிறகரால் ஆற்றும் புறவுஎனவும் உரைத்தனரே!*

(மடப்பெடை - இளம் பெண்புறா; புறவு - புறா)

கால் வைக்க மாட்டாது கனல் வீசும் காட்டு வழியே போவதர்கச் சொன்னவர், 'அக் காட்டுள் நிழலே இல்லாத தால் தன் பெண் மானுக்குத் தன்னுடைய நிழலையே தந்து, ஆண்மான் அதைக் காப்பாற்றும் என்றாரே! அக் காட்சி அவர் கண்ணிற் படாதா?'

*இன்னிழல் இன்மையான் வருந்திய மடப்பிணைக்குத்*
*தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும்*
*உரைத்தனரே!*

(பிணை - பெண்மான். கலை - ஆண்மான்)

இயற்கை மனிதனுக்கு மனிதநேயத்தை நினைவூட்டு மாம். அவள் நம்பிக்கை அது. 'அவன் வரப்போகிறான்; அதற்கான நிமித்தமும் தெரிகிறது' எனத் தலைவி பேசுகிறாள்.

ஒலி வடிவான, மொழியின் படைப்பே கவிதைகள். கவிதைகள், வசனத்தை விட்டுக் கவிநடையை நோக்கி முந்தி முந்திச் செல்ல வேண்டும். அல்லாமல் கவிதை என்ற பெயரால் 'தத்துவ விசாரணைகள்' செய்தால் மட்டும் போதுமா? ஒலி அழகுச் சிறகுகள் இருந்தால்தான், அவை நினைவு வானத்தில் வட்டமிட முடியும்.

மொழி என்பது ஒலிகளுக்குக் கிடைத்த பொருள் வடிவம். சொற்கள் மொழிச் சிற்பங்கள். இராமனின் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு ஒரே சமயத்தில் ஏழு மராமரங்களையும் துளைத்தது. தாடகையின் மார்பில் பாய்ந்து ஊடுருவிய இராமபாணத்தைக் கம்பர், **'சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம்'** என்றார். சொல்லானது எந்த அளவு ஒருவர் நெஞ்சினுள் புகுந்து, ஊடுருவ வல்லதோ, அதுபோல இராமபாணம் பாய்ந்தது என்று கூறுவதால் சொற்களின் பேராற்றலை அறிய முடிகிறது.

*சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே – அதைத்*
*தொழுது படித்திடடி பாப்பா*

என்றார் பாரதியார்.

*தனிமைச் சுவையுள்ள சொல்லை – எங்கள்*
*தமிழினும் வேறெங்கும் யாம்கண்ட தில்லை*

என்பது பாவேந்தன் பாரதிதாசன் வாக்கு.

மொழியோடு மிக அணுக்கமாய் ஊடாடுவதால், தாகூர் முதல் பாரதி வரை - கவிஞர் எனப்படுவார் எவருக்கும் மொழி, நாடு பற்றிய உணர்வுகள் வெள்ளப் பெருக்கென வீறிட்டுப் பாயும். அவர்கள் விடுதலை முழக்க மிடுவார்கள்.

இறைவனுக்கும் இலக்கியத்துக்கும் வேறுபாடில்லை. இரண்டுமே கண்ணுக்குத் தெரியாதவை; நுண்பொருள்கள்.

இரண்டுமே உள்ளத்துக்கு இதம் தருபவை; இனிமை சேர்ப்பவை; கவலை தீர்ப்பவை.

மாணிக்கவாசகர் பாடிய சிவபுராணத்தை, இலக்கியத் துக்கும் ஏற்றிப் பார்த்தால் உண்மை விளங்கும்.

சிவனின் பெருமை கூறுவது சிவபுராணம். அது செம்பொருள்சேர் இலக்கியத்துக்கும் பொருத்திப் பார்க்கு மாறு இருக்கிறது.

ஐயா, என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

இலக்கியத்திலும் ஆழம் - அகலம் - நுட்பம் மூன்றும் இருக்கும்.

அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

சிறந்த இலக்கியங்கள் உயர்ந்த ஞானத்தைப் போதிக் கின்றன.

*கறந்தபால் கன்னலொடு நெய்கலந் தாற்போலச்*
*சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று*

கன்னல் - கற்கண்டு, இனிப்பு.

கறந்ததும் பாலுக்குள்ள சுவை போன்றது நல்ல இலக்கியச் சுவை. படிக்குந்தொறும் நினைக்குந்தொறும் சிந்தனையுள் தேனூறி நிற்பதுதான் சிறந்த படைப்பு.

கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே

இலக்கியத்தையும் மனத்துள் வாங்கிக்கொண்டு, உணர்பவர்கள் சிந்தனையில், நோக்குதற்கரிய நோக்காகும் இலக்கியம்; நுணுக்கத்தினும் நுண்ணியதான நுண்ணுணர்வு அது. 'என் சிந்தனையுள் ஊற்றான உண்ணார் அமுதே' என மாணிக்கவாசகர் பாடும்போது, நம் உள்ளுணர்வில் ஊற்றெடுக்கவைக்கும் இலக்கியங்கள் - அவற்றின் பகுதிகள் நினைவிலோடும் பாடலடிகள் எல்லாம் அலை பாய்கின்றன.

இவ்வளவு நம்மைச் சிந்திக்க வைப்பது, சிவ புராணத்தின் இறுதியடிகள்தான்!

*அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று*
*சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்*
*சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்*
*செல்வர் சிவபுரத்தின் உள்ளார், சிவனடிக்கீழ்ப்*
*பல்லோரும் ஏத்தப் பணிந்து*

இலக்கியம் பிறவி நீக்கம் மட்டுமன்று, இப்பிறவியிலேற் படும் அல்லலையும் அறுத்து ஒழிக்கிறது. சொல்லற்கு அரியதைச் சொல்லுவதுதான் இலக்கியமாகிறது.

இங்கேதான் பக்தன் - படிப்பவன் வருகின்றான். இலக்கியத்தின் சுவை அதைப் படிப்பவனையும் பொறுத் திருக்கிறதல்லவா? 'சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்' - மேலோட்டமான பொருளை மட்டுமன்று. அதன் உட்கிடையான - உள்ளொளியான பொருளையும் உணர்ந்து சொல்ல வேண்டும். பாடலை வாய்விட்டுப் படிக்க வேண்டும். அதன் ஓசையில் ஈடுபட வேண்டும். பொருள் மனத்தில் போய்ப் பதியவேண்டும்.

பக்தர்கள் சிவபுரத்தினுள் சென்று, சிவனடிக் கீழ்ப் பொருந்தியிருப்பார்களாம். பல்லோரும் பணிந்து ஏத்தும் பெருமையை அடைவார்களாம்.

இலக்கியத்துடனும் அதைப் படிப்பவன் படைத்த வனது உளக்கருத்தோடு - அனுபவத்தோடு ஒன்றி விடுகிறான். அவ்வாறு கற்பவர்களே மீண்டும் படைப்பாளிகளாக ஆகிறார்கள்; இலக்கியப் பாரம்பரியம் காலந்தோறும் வளர்கிறது; பலரும் ஏத்தித் தொழும் நிலையை இலக்கியப் படைப்பாளி எய்துகின்றான். அல்லாமல் பழமையை அறவே புறக்கணிக்கும் 'ஆகாயப் பூக்கள்' - வெறும் காகிதப் பூக்களாக மட்டுமே விளங்கும்.

# 26

## உயிரை உண்ணும் முறுவல்!

இலக்கியம் படைப்பவன் புதிய புதிய சோதனை முயற்சிகள் செய்கின்றான். பழைய செடியில்தான் புதிய புதிய பனித்துளிகளாம் மாணிக்கக் கற்களைப் பதிக்கும் மலர்கள் அரும்பி விரிகின்றன. சிறந்த படைப்பு என்று எதை வேண்டுமானாலும் எடுத்துப் பாருங்கள்... அதில் ஒரு புதுமை ஒளி பூத்திருக்கும். சுவையைக் கூட்டுவதற்கு முயலாமல், இலக்கியப் படைப்பில் வெற்றி பெறவே முடியாது!

சிரிக்க வைக்கலாம்... சிரித்த பிற்பாடும் அது உங்களைத் தொடரவேண்டும்; உங்கள் உள்ளத்தைப் பற்றிக்கொள்ள வேண்டும். சுவைக்கும்படி சொல்ல வேண்டும்; சொல்லியது, கேட்டவன் நெஞ்சில் நிலைபெறுவதாக இருக்க வேண்டும்.

சீதை முதன்முதலாக இராமனின் அழகில் ஈடுபட்ட சமயம் அது. அவன் 'முனிவருடன் தன் கண் மறையப் போன' பிறகும், அவனது அழகு அவள் நினைவை விட்டு அகலவில்லை. 'இருண்ட தலைமுடி, சந்திரவதனம், தாள் தொடும் தடக்கைகள், சுந்தர மணிவரைத் தோள்கள்' - (வரை - மலை) எல்லாம் நினைவில் ஒளிப்படமென ஓடுகின்றன. ஆனாலும்...

முந்திஎன் உயிரைஅம் முறுவல் உண்டதே

என்கிறாள் சீதை.

'முறுவல்', புன்னகைக்கு முந்தியது. முகிழ்க்கும் மலர் அது. மொட்டவிழ்வதற்கு முந்திய நிலை அது. இராமன் முகமே முறுவல் பூப்பதுபோல் இருக்குமாம். கம்பர் சொல்லில் ஒரு சிற்பம் வடிக்கிறார். அது கல்லில் வடித்த சிற்பம்போல் காட்சி தருகிறது. பார்த்ததும், முதன்முதல் அம் 'முறுவல்'தான், அவளது 'உயிரை உண்டதாம்!' 'உயிருண்ணிப் பத்து' என்று பக்திக்கு அழைத்துப் போவார், மாணிக்கவாசகர்! அது காதலில்தான் தொடங்கும் போலும்!

முறுக்கவிழும் மொட்டுப் போன்ற முகக்களையை 'முறுவல்' என்ற சொல்லால் குறிப்பது, எவ்வளவு பொருத்த மாக இருக்கிறது. 'முந்தி' என்றதையும் கொஞ்சம் சிந்தியுங்கள்!

பார்த்ததும் கவர்ந்துகொள்ளும் அழகு என்று ஒன்று, அழகான ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. இப்போது 'முறுவல் பூக்கும் இராமன்' உங்கள் கண்முன் தெரிய வில்லையா?

இராமனை முதன்முதலாகப் பார்த்த சூர்ப்பணகையும், அவன் மார்பகலம் கண்டு வியக்கின்றாள். அவனது மார்பை வலது தோளிலிருந்து இடது தோள் முடிய, கண்ணால் அளப்பவள் போல் பார்க்கின்றாளாம். கண்ணை நகர்த்திக் கொண்டே பார்க்க வேண்டியிருக்கிறதாம். ஒரே பார்வையில் முழுவதும் பார்க்க முடியாதபடி, அத்துணை அகன்ற மார்பாம். 'இந்தக் கண் இன்னும் கொஞ்சம் நீளமாக இருக்கக்கூடாதா' என்று நினைக்கிறது அவள் நெஞ்சு!

தோளோடு தோள்செலத் தொடர்ந்து நோக்குறின்
நீளிய அல்லகண் நெடிய மார்பென்பாள்!

இரண்டு பெண்களின் 'முதல் பார்வை'யில்தான், எத்தனை வேறுபாடு காட்டுகிறார் கம்பர். 'முந்தி என் உயிரை

உண்டது அம் முறுவல்' என்றாள் ஒருத்தி. அது தூய காதல் பார்வை. **மார்பகலத்தில்** ஈடுபட்டாள், மற்றொருத்தி. அது காமப்பார்வை.

அசோதையின் மகனாக ஆயர்பாடியில் வளர்ந்த அந்தச் 'சின்னக் கண்ணனை' யார் நேரில் கண்டார்கள்? 'பெரியாழ்வார்' என்ற பெரியவர் ஒருவர் பிறந்து, நமக்குக் காட்டியிராவிட்டால், நம் கண்களுக்குள் அந்தக் கண்ணன் காட்சி தந்திருக்க மாட்டான்.

உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல் எல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்

சுவரை வைத்துச் சித்திரம் வரைவது பழைய காலப் பழக்கம். பெரியாழ்வார் தம் 'நெஞ்சகம்' என்ற சுவரில், கண்ணனது விக்கிரமங்களை (லீலைகளை) ஒன்றுவிடாமல் எழுதி வைத்துக் கொண்டாராம், ஓவியங்களாக!

ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்காற்பட்ட **ம.பெ. சீனிவாசன்,** 'பெரியாழ்வார்' என்னும் தம் நூலில் இவ்வாறு எழுதுகிறார்: "கண்ணன் தளர்நடைப் பருவம் தாண்டி, மேலும் வளர்ந்து குறும்புகள் செய்யத் தொடங்கி விட்டான். அவன் இப்போது ஆய்ப்பாடி எங்கும் ஓடித்திரிகிறான். புழுதியாடி வருகிறான். கன்றுகள் ஓடும்படி செவியில் கட்டெறும்பைப் பிடித்து விடுகிறான். அவற்றின் வாலில் ஓலையையும் கட்டி விடுகிறான். அசோதை அவனுக்குக் காது குத்த வேண்டும் என்று நினைத்து, அடைக்காய் திருத்தி வைத்து அவனுக்காகக் காத்திருக்கிறாள். 'மாதவனே! இங்கே வாராய், விட்டுவே! இங்கே வாராய்' என்று அழைத்துப் பார்க்கிறாள். அவன் வந்தால்தானே...! இந்தச் சந்தர்ப்பத்தில் ஆழ்வார் தம் கிருஷ்ணானுபவத்தை அசோதை பாவனையில் வெளியிடும் சில பாசுரங்கள் அருமையானவை. கவிதைச் சுவையறிவார்க்குப் பெருவிருந்தாக அமைந்தவை."

திவ்வியப் பிரபந்தக் கடலுள் ஒருமுறை மூழ்கி எழ, நீங்களும் இந்த நூலைப் படிக்கலாம் (சாகித்திய அகாடமி). இத்தகையதோர் இலக்கியச்சுவை அனுபவத்தாலன்றோ பாரதியார், 'தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்' என்று பாடினார்.

தின்னப் பழங்கொண்டு தருவான் – பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்;
என்னப்பன் என்ஐயன் என்றால் – அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்!.

கடைசி அடியைத் திரும்பப் படியுங்கள். 'எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான்' என்னும்போது, பிள்ளை துள்ளிக் குதிப்பதையும் பார்க்க முடிகிறதே!

'குழலூதும் கண்ணனுக்கு' இணையே கிடையாது. அவனது குழலிசையில் உலகமே இசைகிறது! மயங்குகிறது! அதை நேரில் நம்மையும் அனுபவிக்கச் செய்கிறார் பெரியாழ்வார். அதனால்தான், புதுக்கவிதை பழங்கவிதை என்று மீண்டுமொரு சாதிகுலம் பிரிக்காமல், கவிஞர்கள் பலவகையான புதிய புதிய சோதனை முயற்சிகளில் ஈடுபட்டாலென்ன என்று கேட்கத் தோன்றுகிறது.

# 27

## கண்ணன் பாட்டு

அதோ! கண்ணன், குழலூதுகின்றான்! அது உங்கள் செவிகளில் இசை மழையாய்ப் பொழியவில்லையா? கோகுலத்தில் ஆய்ச்சியர்களுக்குக் கண்ணபிரானின் குழலிசை கேட்பதென்றால் கொள்ளை மகிழ்ச்சிதான்!

கன்று குணிலாக் கனி உதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ!

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலம் தீங்குழல் கேளாமோ தோழீ!

கொல்லை அம்சாரல் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் ஆனுள் வருமேல் அவன்வாயில்
முல்லையம் தீங்குழல் கேளாமோ தோழீ!

பசுவின் கன்றையே குறுந்தடியாகக் கொண்டு கனிகளை யுதிர்த்த மாயவன், கண்ணன். கன்று வடிவாய் வந்த அசுரன் இவ்வாறு தூக்கி அடிக்கப்பட்டான். பாம்பு - வாசுகி என்ற பாம்பு, பாற்கடல் கடைந்த கதை. நம் ஆனுள்

– நம் ஆக்கள் (பசுமாடுகள்) நிறைந்த ஆயர்பாடிக்குள். குருந்த மரமாகி நின்ற ஓர் அசுரனை, தன்னைக் கட்டிவைத்த உரலையே இழுத்துச் சென்று, மோதி வீழ்த்தியவன் சின்னக் கண்ணனாம் மாயவன். கொன்றையம் குழல், ஆம்பலம் குழல், முல்லைக்குழல் – என்பன அக்கால இசைக் கருவிகள்; உள் துளையுடையவை. இன்றைய புல்லாங்குழல், பெரு வங்கியம் (நாகசுரம்) போலப் பல குழல் வாச்சியங்கள் அன்றிருந்தன. நம் ஆயர்பாடிக்குக் கண்ணன் வருவானாயின், இக் குழலிசைகளை எல்லாம் நாம் கேட்டு இன்புறலாமே என ஆய்ச்சியர் வேண்டுகின்றனர்.

இது ஆய்ச்சியர் ஆடிய குரவைப் பாட்டு. அன்று வாய்மொழியாய் இருந்த நாட்டுப்புறப் பாடலுக்குத் தரப்பட்ட இலக்கிய வடிவம் இது. ‘உறங்காத கண்ணுக்கு ஊசிகொண்டு மையெழுதி, தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மையெழுதி’ என்று வாய்மொழியாகப் பாடும்போதுதான், ஒரே கருத்து - அடி - பாட்டு திரும்பத் திரும்ப வரும்!

கண்ணன் குழல் ஊதினபோது ‘பறவையின் கணங்கள் கூடு துறந்து, அவனருகே வந்து சூழ்ந்து, பாடுகிடந்தனவாம். கறவைப் பசுக்கூட்டம், கால்களைப் பரப்பிப் படுத்துக் கவிழ்ந்து, செவிகளை ஆட்டமாட்டாமல் இசைவெள்ளத்தில் இலயித்துக் கிடந்தனவாம். செவியை ஆட்டிக் கொண்டே யிருப்பது பசுக்களின் இயல்பு; இப்போது குழலிசையில் மயங்கியதால், காதுகளை ஆட்ட மறந்தனவாம்.’ பெரியாழ்வார் மேலும் பாடுகிறார்; ஊதுகின்ற குழல் ஓசை வழியே, மருண்டு, மான் கணங்கள் மேய்கை மறந்தனவாம். ஏற்கெனவே மேய்ந்திருந்த புல்லும் கடைவாய் வழி சோர, நின்றனவாம். உயிருள்ளன எல்லாம் இவ்வாறு ‘எழுது சித்திரங்கள் போல நின்றன’வாம். சரி, இனி உயிரற்ற மரம் செடி கொடிகளின் நிலையென்ன?

ஆயர் பெருமான்... குழல்
ஊதினபோது
மரங்கள் நின்று மதுதாரைகள்
பாயும்,
மலர்கள் வீழும், வளர்
கொம்புகள் தாழும்,
இரங்கும், கூம்பும், திருமால்
நின்ற நின்ற
பக்கம் நோக்கி அவைசெய்யும்
குணமே!

ஆயர் பெருமான் - இடையர்குல வழிபடு தெய்வம், முல்லைநிலக் கடவுள். அவனது குழலிசை கேட்டு, மரங்கள் தேனைத் தாரைதாரையாக ஊற்றுமாம்! மலர்கள் இசையில் மயங்கி விழுமாம். மரக்கொம்புகள் கீழே தாழ்ந்து வளையு மாம்; அவை கண்ணீர் சொரிந்து, கூம்பி, திருமாலாம் கண்ணன் குழலூதி நிற்கும் திசைகளை நோக்கியே திரும்புமாம்!

இவ்வாறு திருமாலாம் கண்ணனின் பக்கம், இசை கேட்கச் செவி சாய்க்கும் ஓரறிவுயிர்களாம் மரங்களையும் பார்க்கிறோம். நுண்ணொலி இசையில் பயிரினம் வளரும் என்ற ஆராய்ச்சி இன்று நடக்கிறது.

கண்ணன் உள்துளையுள்ள கொன்றை, அல்லி (ஆம்பல்), முல்லை என எல்லாவற்றிலும் குழலிசைத்து வருகின்றான். அவனது குழலூதும் காட்சியைக் கூடப் பெரி யாழ்வார் காட்டுவதைப் பாருங்கள்:

சிறுவிரல்கள் தடவிப் பரிமாற,
செங்கண்கோட, செய்யவாய்
கொப்பளிக்க,
குறுவெயர்ப் புருவம் குடிலிப்பக்

கோவிந்தன் குழல்கொடு
ஊதினபோது...

விரல்கள் துளைகளில் 'பரிமாறுகின்றன'; கண்கள் ஒருபுறமாய் வளைகின்றன; வாய்நீர் சிறிதே கொப்பளிக் கின்றது. இது குழலை வாய்வைத்து ஊதுகிற மெய்ப்பாடு. அங்ஙனம் முயன்று வாசிக்கும் போது புருவங்களில் குறுவெயர்வை குடிகொள்ளும் தோற்றமும் தெரிகிறது. (குடிலிப்ப - வெயர்வை கொப்பளித்து நெற்றி மேலே நிற்கிறது.) இதைத்தான் தொல்காப்பியர், இலக்கியப் படைப் பாளி உணர்த்தும் வல்லமை உடையவனாக இருந்தால், சொல்ல வந்ததை அப்படியே - அச்சாகப் படைத்துக்காட்ட முடியும் என்றார். வாசகன் பக்கம் திரும்பி, "அங்ஙனம் உணர்ந்து சுவைப்பது - இரசிப்பது - அனுபவிப்பது என்பது, உன்னுடைய திறமையையும் - உணரும் வல்லமையையும் - பொறுத்திருக்கிறது" என்றார். இருவரும் இசையும் இடத்தே தான் இலக்கியம் சிறக்கிறது! இனிக்கிறது!

கண்ணதாசன் கண்ணனிடத்தில் கொண்ட காதல் ஈடும் எடுப்புமற்றது.

ஒரு பெண் கறுப்பாகப் பிறந்துவிட்டாள். பெண் 'திருத்தமாக' இருந்தால் போதுமே. கறுப்பா, சிவப்பா என்பது என்ன கேள்வி? அவளைப் பெண் பார்க்க வந்தவரெல்லாம், வேண்டாம் என்று சொல்லிப் போய்விட்டார்கள். இப்போது, கடைசியாக வந்தவர்களும் இனிப்பு, பலகாரம், காபி எல்லாம் சாப்பிட்டுவிட்டு, 'இந்தக் கறுத்த நிறப் பெண் வேண்டாம்' என்று எழுந்திருக்கிறார்கள்; வீட்டில் அவளைப் பெற்றவர்களும் உடன்பிறந்தவர்களும் அதிர்ந்து போகி றார்கள். இதை உணர்ந்து கொண்ட அப்பெண், 'நானும் ஒரு பெண்'தானே எனக் கண்ணீர் பெருக்கித் தோட்டத்துப் பக்கம், கேணி அருகே சென்று புலம்பி அழுகின்றாள்!

தோட்டம் - அங்குச் சுற்றிலும் பச்சைப் பசேர் என்ற தோற்றம்... 'பச்சைமா மலைபோல் மேனி'யுடைய கண்ணன் அவள் நினைவுக்கு வருகின்றான். 'கண்ணா அஅஅ...' என்று கூவி அழுவது, பாடலாக வெளிவருகிறது. 'கருமை நிறக் கண்ணா, உன்னைக் காணாத கண்ணில்லையே' என்று கூவி, 'உலகம் உன்னை மட்டும் காண ஆசைப் படுவதேன்' என்ற நியாயமான கேள்வியை எழுப்புகிறாள். 'கருமை நிறக் கண்ணா' என்று விளிக்கும்போதே, உள்ளத்து ஆதங்கம் - பொங்குமுணர்வு வெளிப்பட்டு விடுகிறது.

விவாதம் தொடர்கிறது; வெதும்பும் உள்ளம் பாடுகிறது. 'உன்னை மறுப்பாரில்லை, வெறுப்பாரில்லை; என்னைக் கண்டால் பொறுப்பாரும் இல்லையே ஏன்?' என அவள் கேட்கும்போது, 'ஆம்... இருவரும் கருப்புத்தானே; இவளுக்கு மட்டும் என்ன ஓரவஞ்சகம்' என நம் மனமும் எதிரொலிக்கிறது.

'மனம் பார்க்க மறுப்போர்முன் படைத்தாய் கண்ணா! - தினம் பார்த்து வெறுப்போர்முன் வைத்தாய் கண்ணா! - இனம் பார்த்து எனைச் சேர்க்க மறந்தாய் கண்ணா - நல்ல இடம் பார்த்துச் சிலையாக அமர்ந்தாய் கண்ணா!'

'நீ கருப்பாக இருந்தாலும் உனக்கு ஒரு துன்பமும் இல்லை' என்று கூறி, தனக்கு விடை கூற முடியாது நிற்கும் நிலையைப் பார்த்து, 'நல்ல இடமாகப் பார்த்துப் பிருந்தாவனத்தில் சிலையாக அமர்ந்துள்ளாய்! உனக்கென்ன கவலை?' என்று கேட்பது, அவலத்தின் உச்சத்தை நோக்கிச் செல்கிறது.

'பொன்போல மனம் ஒன்று தந்து, அதில் பூப்போன்ற நினைவொன்றும் வைத்து, அதைப் புறத்தார்க்குத் தெரியா மல் மறைந்தாய் கண்ணா! எந்தக் கடன்தீர்க்க எனை நீயும் படைத்தாய் கண்ணா?' என்று அவள் தொடர்ந்து கேட்பன, கல்மனத்தையும் கரையவைக்கும் வினாக்களாகும். நிறம்

வெளியே தெரிவதுபோல், குணமும் தெரியும்படி செய்திருந் தால் அவளை யாரேனும் வெறுப்பார்களா?

ஒரு பாடலுக்குள் ஒரு நாடகம் இது; அவலத்தின் உச்சத்தைத் தொடும் நாடகம். கருப்பாகப் பிறந்துவிட்ட தாலேயே, உலகால் வெறுக்கப்படுபவளின் ஓலம் இது. மனித நேய வெளிப்பாடு இப்பாடலில் ததும்புகிறது.

படைப்புக் கலையால் மனிதநேயம் சீர்குலையலாமா? இன்றைய நிலை என்ன? இப்போது பெரும்பான்மையான பாடல்கள் விரசமானவை. நம் மானுட வாழ்வை வீழ்த்து பவை. பணத்துக்காக இவ்வாறெல்லாம் பாடலாமா?

# 28

## மனைவி இட்ட ஆணை!

படைப்புக் கலைஞன் சமுதாயத்துக்கு மிகவும் கடமைப்பட்டவன். மனிதநேயமே அவனது முதற்கடமை.

மேலைநாட்டாரைப் பார்த்து, 'இசங்கள்' பேசுகிறோம். அவற்றையும் சரிவரப் புரிந்துகொண்டோமா என்று கூற முடியாது. நமக்கு என்று ஒரு கோட்பாடு, இலக்கியக் கொள்கை, மரபு இருக்கிறது. அது தீமையைத் தீமை என்று காட்டும். தீங்குகளைச் சொல்ல நேர்ந்தால், அது தீங்குதான் என்று நாணவுணர்வு ஏற்படும்படி கூறும்.

'வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்றதம்மா' என்று கம்பன் பாடுவது போல, எவ்வகையாலும் மானுடம் வெல்ல - மனிதநேயம் வளர - அதையே நோக்கியதாக இலக்கியத்தைப் படைப்பதிலேதான், கலைஞனின் திறமை இருக்கிறது. பச்சையாக எழுதித்தள்ள, படம்பிடித்துக் காட்ட, பேசித் தீர்க்க யாராலும் முடியும். அதற்குத் திறமை வேண்டிய தில்லை. நம் படைப்புக் கலைஞர்கள் திறமைக் குறைவுடைய வர்கள்; அவர்கள் அதிட்டத்தை மட்டுமே நம்பி வாழ்பவர்கள்.

தொலைக்காட்சியில் ஒரு தமிழாக்கத் தொடர் பார்த்தேன். ஒரு மணி நேரம் வீட்டு மாடி வழி ஏறிக் குதிப்பது எப்படி? வீட்டுக்காரர்களைக் கட்டிவைப்பது எப்படி? வெளியே சத்தமே கேளாமல், பூட்டை உடைத்துத் திருடித் தப்பிச்செல்வது எப்படி? என்று செய்முறை விளக்கமாக (Demonstration) காட்டினார்கள்.

கற்பழிப்புக் காட்சி, கொலைச் செயல், வன்முறைகள் யாவும் 'தத்ரூபமாக' - கண்ணெதிரே நடப்பதுபோல் காட்டுகிறார்களாம். இதற்குத் திறமை வேண்டியதில்லை. அவற்றைச் செய்பவன் மனம் தடுமாறுவதை, அவனுக்கும் மனச்சான்று இருப்பதைக் கோடிகாட்டத்தான் திறமை வேண்டும்.

சேக்கிழார் பெருமான் திருநீலகண்ட நாயனார் கதையை எழுதிக் காட்டியுள்ள பாங்கு, அதைப் போல ஒரு சமுதாயக்கதையை இன்று எழுதினால் எப்படிச் சுவையாக இருப்பதோடு, மனிதநேயத்தையும் வளர்க்கும் என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

திருநீலகண்டர் என்ற பெயரே அவர் அடிக்கடி 'திருநீலகண்டம்' என்று கூறி, அதே தியானமாக இருந்ததால் வந்ததாகும்.

மட்பாண்டங்கள் செய்வதால் கிடைக்கும் வருமானத்தில், தமக்கு உணவு, உடை, உறையுமிடம் இவற்றுக்கு மேல் செலவிடுவதில்லையாம். கூடுதலாக வருவதை அடியார்க்கு உதவவே பயன்படுத்தினாராம்.

ஆயினும் 'இளமை மீதூர இன்பத்துறையில் எளியர்' ஆனாராம். இளமை முறுக்கு மிகுதியால், காம இன்ப நுகர்ச்சியில், 'எளியவரா'னாராம் அப்பெரியவர்.

ஒரு நாள் பரத்தையர் இல்லம் சென்று திரும்பிய அவர், தம் துணைவியார் அருகில் சென்றார். கற்பிற் சிறந்த அவர், தம் கணவரும் அக்கற்புநெறியைப் பேண வேண்டும் என்று

கருதினார். மான உணர்ச்சி மேலெழவே, அருகில் ஆசை வார்த்தை பேசித் தீண்ட வந்த திருநீலகண்டரிடம் **'எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்'** என்று ஆணையிட்டு விட்டார். இச்சபத மொழி கேட்ட நீலகண்டர் திகைத்துப் போனார். 'எம்மை' - (எங்களை) என்று சொன்னதைப் பெண்குலத்தின் சார்பாகக் கூறியதாகக் கொண்டு அன்று முதல் நாயனார் தம் மனைவியை மட்டுமல்லாமல் 'மற்றை மாதரார் தம்மையும் மனத்தினும் தீண்டேன்' என்று உறுதி கொண்டார். ஐந்து புலன்களையும் அடக்கும் 'தவம்' இது!

அன்று தொட்டு இருவரும் ஒரே வீட்டில் வாழ்கிறார்கள்; ஒன்றாகக் குடும்பக் கடமைகளைச் செய்கிறார்கள். நாயனார் தம் மனைவியைத் தொடவே இல்லை. 'தீண்டினால் திருநீலகண்டம்' என்ற ஆணை மீறப்படவில்லை. ஆனால், அண்டை அயலார்கூட இதை அறியாதபடி குடும்பம் நடந்ததாம்.

*இற்புறம்பு ஒழியார் அங்கண்*
*இருவரும் வேறு வைகி*
*அற்புறு புணர்ச்சி இன்மை*
*அயலறி யாமல் வாழ்ந்தார்*

என்று பாடுகிறார் சேக்கிழார். வீட்டைவிட்டு வெளியே போக வில்லை; உள்ளேயே தனித்தனியே - வேறுவேறாக வாழ்ந்தார்களாம்.

இற்புறம்பு ஒழியார் - வீட்டுக்கு வெளியிற்போய்த் தனித்தனியாக வாழவில்லை. அங்கண் இருவரும் வேறு வைகி - வீட்டிற்குள்ளேயே ஒருவரை ஒருவர் நெருங்காமல் தனித்தனியே வாழ்ந்தனர். அற்பு - அன்பு. அற்புறு புணர்ச்சி இன்மை - அன்பினால் கூடுகின்ற கூட்டம் இன்மையை அயலே யாரும் அறியாமல் பழகி வாழ்ந்தார்கள். புறத் தார்க்குக் கூடி வாழ்வதுபோல் தோன்றவேண்டும்; ஆனால்

கூடாமல் – நெருங்காமல் – தொடாமல் வாழவும் வேண்டும். இது மிகக் கடினம். இளமை தொட்டு, மிகப்பல ஆண்டுகள் அவ்வாறு வாழ்வது கடினம்; இதை உற்றார் உறவினர் சுற்றத்தார் அயலார் என யாரும் அறியாதபடி, அன்புடையவர் போல் நடித்து வாழ்வது மிகமிகக் கடினம். எப்படியாவது வெளிப்படும் சூழல் வரும். அதை மறைத்து வாழ்ந்ததிலேதான் அவர்கள் திறைமையுளது. சோதனைகள் மிகுந்த இத்தகையதொரு வாழ்வை, இன்றையச் சமூகக் கதையாக எழுதிப் பாருங்கள். மனிதநேயம் சுவைபடச் சொல்லப்படுவதை, அப்போது உணர்வீர்கள்.

இன்றும் உலகில் இப்படி வைராக்கியத்துடன், மன வுறுதியைத் தளரவிடாமல் வாழ்பவர்கள் இருக்கிறார்கள். கோடியில் ஒருவர் இருப்பினும், அவர்களைத் தேடிப் படைத்துக் காட்டினால், மாந்தரினம் ஒரு படி முன்னேறும். மாறாக, ஊசலாடித் தத்தளிப்பவர்களை மட்டுமே கற்பனையில் படைத்து, சுவையும் விறுவிறுப்பும் ஊட்டுகிறார்கள்.

இதனால் படைப்பாளி வெற்றி அடைந்தாலும் சமுதாயம் சீர்குலைகிறது.

திருநீலகண்டர் வரலாற்றில், இனித்தான் ஓர் உச்சகட்டம் உண்டாகிறது.

உலகியல் சார்ந்த கதையாக இருந்தால், கூர்த்த அறிவுடை ஒருவன், இவ்வுண்மையைப் புலனாய்ந்து கண்டு உலகுக்கு அறிவித்து, சமுதாயமே அவர்களை, புலன் துய்க்கவியலாத முதுமையிலாவது ஒன்று சேர்த்தான் என முடிக்க நேர்ந்திருக்கும்.

இங்கு கடவுளே வந்து, பிச்சை எடுக்கும் துறவி – ஆண்டி போல நின்று, ஒரு 'பழைய திருவோட்டை' வைத்திருக்கும் படி ஒப்படைத்துப் போகிறார். திரும்ப வந்து கேட்டபோது, அதனைக் காணோம். ஆடல்வல்லானாம் சிவன், தமது திருவோடே வேண்டுமென்றும் வேறு

பொன்னாலான ஓடு என்றாலும் வேண்டாமென்றும் நாயனார் தம் திருவோட்டைக் களவாடி மறைப்பதாகவும் குற்றம் சுமத்துகிறார். நாயனாரை வம்புக்கு இழுத்து, 'நீர் சொல்வது உண்மையானால், உம் மகனுடன் குளத்தில் மூழ்கி எழுந்து சத்தியம் செய்யும்' என்று கூறுகிறார். 'மகன் இல்லையே' என்றதும் மனைவியுடன் சேர்ந்து சபதம் செய்யக் கூறுகிறார். மனைவியைத் தீண்டவியலாத அவர் ஒரு மூங்கிற்குச்சியைத் தந்து, அதை இருவரும் இருபுறமும் பற்றி நீரில் மூழ்கப் போகிறார்கள். இறைவன் அதை ஒப்புக்கொள்ளவில்லை. மன்றத்தாரும் இறைவன் பக்கமே தீர்ப்புக் கூறினர். இந்த நிலையில், திருநீலகண்டர், தம் மனைவியைத் தீண்டவியலாத சூழலைப் பலரறியக் கூற நேர்ந்தது. அயலறியாமல் வாழ்ந்த நாயனாரையே கூறவைத்த சிவனது சாதுரியம், இக்காலத்தும் கற்பனைக்கு எட்டாதது. அதன்பின், அவர்கள், அம்முதுமைப் பருவத்தில் ஒன்று சேர்கின்றனர். அவர்கள் இறைவன் திருவடி நிழலில் என்றும் இளமையாய் மாறி எய்தினர் என முடிக்கிறார் சேக்கிழார்.

இருவரும் அருகருகே இருந்து, ஆசைகளை வென்று வாழ்ந்த சூழல்களை அடுக்கிச் சொன்னால், இதைவிடச் சுவையான கதையைப் படைக்க முடியாது.

நம் முன்னோர் பக்திப் பாடல்களையும் இலக்கியச் 'சுவை நனி சொட்டச்சொட்டப்' பாடியுள்ளனர். அவற்றுள்ளும் ஒன்றிரண்டு பார்த்துவைப்போம்.

# 29

## வேண்டுவதை வேண்டுவதா?

உங்களுக்கு என்ன வேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா? 'தெரியும்... தெரியும்' என்று சொல்லத்தான் ஒருவரை ஒருவர் முந்துவீர்கள்! ஆனால், உண்மையில் நம்மில் பலருக்கு நமக்கு என்ன வேண்டுமென்றே தெரியாது. நம்மில் பலர், நமக்கு வேண்டாதவற்றில்தான் அதிக ஆசை வைக்கிறோம். நாம் மிக விரும்புவன சில, நம்மையே அழிக்கக்கூடியனவாகவும் இருக்கும். நம்மை நாமே மூன்றாவது ஆளாக நினைத்துக்கொண்டு, நாமே உசாவவேண்டும். 'இது உனக்குத் தேவைதானா? அளவுக்கு மீறி அகலக்கால் வைப்பவன் தடுமாறி விழமாட்டானா?' – இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்து நடப்பவர்கள் முன்னேறுகிறார்கள்.

எவ்வளவு வளர்ந்தாலும் மனித மனம் ஆசை வைப்பதில், குழந்தைத்தனத்தைவிட மோசமாகவே நினைக் கிறது; நடக்கிறது. அதனால்தான் நம் பெரியவர்கள் இறை வணக்கத்தில், கேட்கத் தக்கனவற்றை மட்டும் கேட்டார்கள். நிலையான... உயர்ந்த... சிறந்த... என்றும் இருக்கக்கூடிய மானுட மதிப்புக்களை... நற்பண்புகளை மட்டும் வேண்டி

னார்கள். அவை கிடைத்தால், உலகில் நாம் அனுபவிக்க வேண்டிய இன்ப சுகங்கள் எல்லாம் தாமே வருவதையும் துன்பமற்ற நல்வாழ்வு - கவலைகள் நீங்கிய பெருவாழ்வு - மனத்தளவில் அளவிலா அமைதிதரும் ஆனந்தப் பெரு வாழ்வு தொடர்வதையும் கண்கூடாகக் கண்டார்கள்.

சங்ககாலப் பரிபாடலில் கடுவன் இளவெயினனார் என்ற புலவர் செவ்வேளாம் முருகனைப் பற்றி ஒரு கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். அதற்குக் கண்ணகனார் என்ற புலவர் இசையமைத்துள்ளார். தமிழில்தான் இப்படி ஒருவர் பாடிய பாட்டுக்கு, இசையமைப்பாளர் ஒருவர் பண்ணிசை அமைத்த வரலாற்றைப் பார்க்கின்றோம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பாடியவர் ஒருவர், இசையமைப் பாளர் ஒருவ்ரென இருந்த நாட்டில் தமிழில் இசையில்லை எனச்சிலர், வாதிட்டு, பிறமொழி இசையே பாடி வருகின்றனர். 'பாலைப்பண்' என்ற இராகத்தில் இசை யமைக்கப் பட்ட பாடலாகும், இது.

செவ்வேளின் சிறப்பெல்லாம் விரித்துப் பாடிய இள வெயினனார் என்ற அப்புலவர், பாடலை முடிக்கும்போது கீழ்வருமாறு வேண்டுகின்றார்.

யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல
நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள்இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!

(இணர் - பூங்கொத்து, ஒலிதார்-மலர்மாலை)

'கடப்ப மரத்தின் உருளைபோன்ற வட்ட வடிவப் பூங்கொத்துக்களின் மாலையை அணிந்த முருகா! செவ் வேளே! 'யாஅம்' (என்று நீட்டிச் சொல்லி) இரப்பவை (யாசிப்பவை) என்னவென்றால்..' என்று பணிவுடன் கேட்கின்றார்.

'உலகில் வாழப் பொருள்கள் வேண்டும்; அப்பொருள்களை வாங்கப் பொன் (பணம்) வேண்டும்; அவை இரண்டுமிருந்தால் போதுமா? அவற்றைத் துய்த்து அனுபவிக்க வாய்ப்பு வேண்டும். ஆனால், நாங்கள் உன்னிடம் இப்பொருளையும் பொன்னையும் போக நுகர்ச்சியையும் அல்ல வேண்டுவது...

நின்பால் வேண்டுவன... நீ எங்களுக்குச் செய்ய வேண்டிய அருளும் அந்த அருளைப் பெற நாங்கள் கைக்கொள்ள வேண்டிய அன்பும் (பக்தியும்) இவை இரண்டும் இருப்பதால் அமையவேண்டிய அறநெறி வாழ்வும் ஆகிய மூன்றுமேயாம்.'

பின்னர்ச் சொல்லப்பட்ட அருளும் அன்பும் அறமும் பெற்றவர், முன்னைய பொருள், பொன், போகம் மூன்றையும் இயல்பாக அடைவர். நாம் நடக்க வேண்டிய நெறியில் நடந்தால், அந்த நன்மைகள் தாமாக எதிரே வந்து சேரும். அல்லாமல் பொன், பொருள், போகத்தையே நினைத்து, அவற்றிலே மோகம் கொள்பவர்கள் நல்ல வழிகளைக் கைவிட்டு, எல்லை மீறி அழிய நேர்கிறது. இந்த நுட்பமான சிந்தனையினால்தான், சங்கப் புலவர் இளவெயினனார் 'பொருளும் பொன்னும் போகமும் வேண்டாம்; அருளும் அன்பும் அறமும் தா' என்று கேட்கின்றார்.

மாணிக்கவாசகர் சிவனியம் எனப்படும் சைவ சித்தாந்த நெறியில் முழுமையான 'சரணாகதித் தத்துவத்தை'ப் படைத்தவர் என்பர். அவர் தம்மை முழுவதுமாகச் சிவனிடம் ஒப்படைத்துவிடுகிறார்.

அன்றே என்தன் ஆவியும் உடலும்
உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்டே போதே கொண்டிலையோ

என்று கேட்பார் அவர். தம் உயிர், உடல், உடைமை எல்லாமும் இறைவன் ஆட்கொண்டபோதே, அவன் உடைமை ஆகிவிட்டனவாம். 'தான்' என ஒன்றில்லை என்பது அவர் முடிவு.

அவரும் இறைவன் திருமுன் நின்று வேண்டுகிறார். எவ்வாறு வேண்டிக்கொள்கிறார் என்று பாருங்கள்.

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ

என்று தொடங்குகிறார். 'எனக்கு வேண்டத்தக்கது யாது என்பது உனக்குத்தான் தெரியும்; அங்ஙனம் எனக்குத் தகுந்தது எதுவோ, அதை நான் விரும்பினால் அதை முழுவதும் தருபவனும் நீயே' என்பது அவர் வாக்கு.

சிறு குழந்தை மிட்டாய் கேட்டு அடிக்கடி அழுதால் தாய் தரமாட்டாள்தான். அதே குழந்தை படிக்கப் புத்தகம் கேட்டால், உடனே வாங்கித்தர முயல்வாள். இறைவன் 'தாயுமானவன்' அல்லவா?

வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்!

அயன் - பிரமன், மால் - திருமால்

தாம்தாம் உயர்ந்தவர் என முயன்றதால் நான்முகனாம் பிரமனும் திருமாலும் காண அரியவனாக ஆன சிவபெருமான் மாணிக்கவாசகரை விரும்பித் தானே வந்து பணிகொண்டானாம். ஆணவம் அல்லது செருக்கினால் இறைவனைக் காணுதல் இயலாது; ஆதலால், அன்பும் பண்பும் மிக்கவர்களை இறைவன் தானே வந்து பணி கொள்வான் - ஆட்கொண்டு அருளுவான் என்பது இப் புராணக் கருத்து. சிவனது அடிமுடிகாண முடியாத தொன்மக் கதை இது.

சிவபெருமான் ஒளிப் பிழம்பாய் அண்ணாமலையாய் ஓங்கி, வளர்ந்து நின்றான். நான்முகன் அன்னப் பறவையாகி, மேலே மேலே பறந்துபோயும் இறைவனது முடியைக் காண முடியவில்லை. மேலே மேலே பறக்கும் உணர்வாகிய ஆணவத்தால் இறைவனைக் காண இயலவில்லை. திருமால் பன்றி உருவெடுத்துக் கீழே கீழே தோண்டிச் சென்றும் இறைவனது அடியைக் காண முடியவில்லை. அறிவால் அகழ்ந்து ஆராய்ந்தும் இறையைக் காணமுடியாது. அன்பே காட்டும் என்பது கருத்து.

இனி, இறைவனிடம் எதை, எவ்வாறு, எப்போது வேண்டலாம்; வேண்டுதல் கூடும்?

*வேண்டி நீயாது அருள்செய்தாய்*
*யானும் அதுவே வேண்டினல்லால்*
*வேண்டும் பரிசொன்று உண்டென்னில்*
*அதுவும் உன்றன் விருப்பன்றே!*

'நீ, எதை நான் வேண்ட வேண்டும்... கேட்க வேண்டும் என்று கருதுகிறாயோ, அதையே விரும்பி வேண்ட நான் கடமைப்பட்டுள்ளேன். அதுகூட யானாக எதையும் கேட்க, என்னிடம் எந்தப் பற்றும் இல்லை. அவ்வாறு வேண்டுமாறு என் உள்ளத்தே ஏதும் தோன்றுமானால் அதுவும் உன் விருப்பத்தால் நிகழ்வதே ஆகும்'.

கோயிலுக்குப் போகும்போதெல்லாம் இதை இதை அடைய வேண்டும் என ஒரு பட்டியலே போட்டுக்கொண்டு போகும் நாம், அடிக்கடி படிக்கவேண்டிய பாட்டு இது.

*கடமையைச் செய்;*
*பலனை எதிர்பாராதே;*
*அதை இறைவனிடம் விட்டுவிடு*

என்று கூறும் கீதையின் சாரமும் இதனால் விளங்க வில்லையா?

# 30

## முதல்வர் தந்த ஊக்கம்!

அப்போது ஜி.யு. போப்பையருக்கு எண்பது வயதிருக்கும். அதாவது அவரது திருவாசக ஆங்கில ஆக்கம் வெளியிடப்படுகிற நாள் 1900, ஏப்பிரல், 24 அது. அன்று அவர் வெளியிட்ட அதன் முன்னுரையில் ஓர் அரிய செய்தியைக் குறிப்பிடுகிறார்.

1837–இல் தொடங்கி, ஏறத்தாழ 65 ஆண்டுகள் தமிழ் பயின்று, ஒரு முடிவுக்கு வந்ததாக அவர் கூறும்போது, அவரது கல்லறையில் 'ஒரு தமிழ் மாணவன்' என்று அவர் குறிக்கச் சொன்னதன் பொருள் புலப்படுகிறது.

உலகிலேயே ஒரு மொழியாக்கத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டச் சில நூல்களை மட்டுமே குறிக்க முடியும். அவரது திருவாசக மொழிபெயர்ப்பு ஒப்புயர்வற்றது. அதன் சில பகுதிகளையேனும் இன்று மொழிபெயர்ப்புப் பயிற்சி யகங்களில் எடுத்துக்காட்ட வேண்டும்.

அவர் தமிழகத்தை விட்டு, லண்டனிலுள்ள பாதிரிமார் கல்லூரிக்குச் (Balliol College) சென்ற பிறகுதான், இம்மொழி பெயர்ப்புப் பணியைத் தொடங்குகிறார். ஒரு நாள் மாலை, அக்கல்லூரியின் அன்றைய முதல்வரும் (Benjamin Jowett)

போப்பையரும் இறைவணக்க நிகழ்ச்சி முடிந்தபின், சோலைப் பக்கமாகச் சிறிது நேரம் நடந்துகொண்டிருக் கின்றனர். அப்போது அவர்கள் பேச்சு தமிழ் வரலாற்றுத் தொன்மைகள், கவிதைச் சிறப்புக்கள், மெய்யியல் தத்துவ உண்மைகள் பற்றித் திரும்புகிறது. அப்போது, போப் அவர்கள் தம் திருவாசக மொழியாக்கம் பற்றிச் சொல்லவே, "அதை விரைவில் நீங்கள் வெளியிடவேண்டும்" என்றார் அம்முதல்வர். அப்போது போப்புக்கு எழுபதைத் தாண்டிய வயது. "முதல்வர் அவர்களே! நான் சாகாவரம் பெற்றவன் அல்லன். இப்பணியோ மிக நீண்ட காலம் பிடிக்கும்" என்றார் போப்பையர்.

அதற்கு அம்முதல்வர், அன்று கூறிய பதிலை, உணர்ச்சி ததும்பக் கூறுகிறார் போப்:

"அவரை இப்பொழுதும் பார்க்கிறேன்; பார்க்க முடிகிறது. அவர் என் பக்கமாகத் திரும்பியபொழுது, அவரது அன்புதவழும் முகத்திலும் வெண்மை தவழும் தலை முடியிலும் நிலவொளி படிந்து, ஒளி வீசியது. அவருடைய கையை என் தோள்மீது வைத்துக் கொண்டு, 'மிகப் பெரியது ஒரு பணியைக் கையிலெடுத்துக் கொண்டு, அதில் ஈடுபடுவதுதான் ஒருவர் நீண்ட நாள் வாழ்வதற்குரிய வழியாகும்! அதை முடிக்கும் வரை நீங்கள் வாழ்வீர்கள்' என்று கூறினார்."

திருவள்ளுவர் 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்' என்றார். தொல்காப்பியர் 'நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறைமொழிதானே மந்திரம் என்ப' என்றார். திருஞான சம்பந்தர் தமது தமிழிசைப் பதிகங்களைப் பாடுகின்றவர்கள், இப்படிமிசை (உலகில்) 'அரசாள்வர் ஆணை நமதே' என்றார்.

லண்டனிலிருந்த பாதிரிமார் கல்லூரியின் முதல்வர் சொன்னது, தமக்கு 656 பாடல்கள் அடங்கிய திருவாசகத்தை ஆங்கில ஆக்கம் செய்தபோது, சோர்வு வந்த

சமயத்திலெல்லாம், அதை நீக்கி உற்சாகமும் ஊக்கமும் தந்தது எனக் கூறுகிறார் போப்பையர்! அதை முடித்து, நூல் வெளிவந்தபோது, அம்முதல்வர் உயிரோடு இல்லை. 'தம் கண்களை விட்டு மறைந்தாலும், கருத்தைவிட்டு மறையாத' முதல்வருக்குப் போப்பையர் நன்றி சொல்வதைப் படிக்கும் போது, நம் கண்கள் பனிக்கின்றன.

திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்று ஆயிரம் முறை, மேடைகளில் பேசுகிறோம். நாம்தான் 'மேடை நாடக நடிகர்களாயிற்றே'! நம்மைப் பார்த்துத்தானே 'நடிப்புச் சுதேசிகள்' என்றார் பாரதியார்.

உ.வே. சாமிநாதய்யருக்கு, போப்பையர் கடிதம் எழுதும் போது, திருவாசகம் பற்றி எழுதிய இடங்களில் எல்லாம் கண்ணீர்த் துளிகள் சிந்தி, மை கலைந்திருக்குமாம். 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து' சொன்னால் அல்லவா, உள்ளம் உருகுவதற்கு? முதலில் படிக்க வேண்டுமே? முறையாக அறிமுகம் ஆகவேண்டுமே?

லண்டன் கல்லூரி முதல்வர் சொன்ன பொன்மொழி ஆத்திசூடி, மூதுரை, நல்வழிபோல நம் உள்ளத்தில் பதிய வைக்கவேண்டிய வாழ்க்கை இலக்கியமாகும். கடைசி காலத்தில், அகவை முதிர முதிர, சில நல்ல காரியங்களை எடுத்துக்கொண்டு, அதில் கடமையுணர்வோடு ஈடுபடுவது, வாழ்நாளின் எல்லையை நீட்டிக்கும். இது உறுதி. இதை நாம் உணர்வது நல்லது.

இறைவன் நமக்கு இன்பங்களை மட்டுமே தந்திருக்க லாமே? துன்பங்களையும் ஏன் தந்தான்?

இனிப்பு மா உருண்டை செய்யும்போது, பாசிப்பயறு மாவுடன் இனிப்புச் சர்க்கரையைச் சேர்த்து, இரண்டையும் ஒன்றாக்கப் பலமுறை அடித்தடித்து உருட்டுவார்கள். **'அடியேனை, அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய அற்புதம் அறியேனே'** என்கிறார், மாணிக்கவாசகர். (அக்காரம் - பனை

வெல்லச் சர்க்கரை. அக்கார அடிசில் சாப்பிட்டது இல்லையா?) இவ்வாறு உணர்ந்தால் துன்பம் கண்டு துன்புற மாட்டோம். துன்பம் நம்மைத் திருத்துவதற்கும் வருகிறது; நம்மைத் தூய்மைப்படுத்தி ஒளிவீசச் செய்வதற்கும் வருகிறது.

இவ்வாறு உணர்ந்தால், நமக்கு வரும் துன்பங்களையும் நாம் நம் முன்னேற்றத்துக்கு உதவுபவையாக மாற்றிக்கொள்ள முடியுமே! 'சமயங்கள்' என்பன, போகிற வழிக்குப் புண்ணியம் தேடுவன என்ற மனப்பான்மை மாற வேண்டும். அவை நம்மைச் சிறப்புடன் வாழ்வதற்கும் பக்குவப் படுத்துபவை; தன் முன்னேற்றத்துக்கும் உதவுபவை, அன்றாட வாழ்வில் பயன்படுபவை என்ற கருத்து பரப்பப் பட வேண்டும்.

சித்தர்கள், திருவள்ளுவர், திருமூலர் முதல் பாரதி வரை இதைத்தான் சொல்லியுள்ளார்கள்.

இறைவன் என்ன செய்கின்றான்?

*சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட*
*அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார்*
*அச்சோவே?*

அத்தன் - தந்தையாகிய இறைவன். உயிர்களின் குற்றங்குறைகளை - மாசுகளை. அறுத்து - அறவே நீக்கிச் சீவனைச் சிவமாக்குகின்றான். சிவன் தன்னவனாக - தானாக இவ்வுயிரை மாற்றி ஏற்றுக்கொள்கிறான். இதற்கே மனிதனின் மனம் என்ற 'கல்லைப் பிசைந்து கனி'யாக்குகிறான்; 'அடித்தடித்து அக்காரம் தீற்றுகிறான்!'

இங்ஙனம் உயிரும் சிவனும் - இருவரும் மாறிப் புக்கதில், உயிர் தன்னை இழந்து சிவமானதில், சிவம் உயிரை ஏற்றுத் தானும் அதுவும் வேறல்ல என ஆக்கிக்கொண்டதில் யாருக்கு இலாபம்?

தந்ததுஉன் தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்?

இந்தப் 'பண்டமாற்றில்' யாருக்கு இலாபம் என்றால் 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன், யாது நீ பெற்றது ஒன்று என்பால்' என உரிமையோடு வினவுகிறார், மாணிக்கவாசகர். அவர் வாசகம் ஒவ்வொன்றும் மாணிக்க மாயிருப்பதை மேலும் பார்ப்போம். நாமும் 'அந்தம் ஒன்றில்லா ஆனந்தத்தில்' ஒரு துளியாவது பெற வேண்டாமா?

**31**

# வாழ்க்கையெனும் பயணம்

'வாழ்க்கைப் பயணம்' என்று உருவகமாகச் சொன்ன காலம் ஒன்றுண்டு. இன்று அது நடைமுறையாகிவிட்டது. இரயில் பயணம், பேருந்துப் பயணம் போகும்போது அந்த நேரத்துக்கு மட்டும் பழகிக் கொள்கிறோம். அவரவர் ஊர், நிறுத்தம் வந்ததும் விரைந்து இறங்கிப் போய்விகிறோம். மேலைநாட்டைப் பார்த்துப் பார்த்துக் கணவன் - மனைவி உறவுகூட, இப்படி மாறும் சூழல் உருவாகி வருகிறது.

*இம்மை மாறி மறுமை யாயினும்*
*நீயா கியர்என் கணவனை*
*யான்ஆகியர்நின் நெஞ்சு நேர்பவளே*

'நீ என் கணவனாகுக, யான் உன் மனைவி ஆகுக' என்று கூறாமல், நான் 'உன் நெஞ்சு நேர்பவள்' (உன் மனத்திற்கு உகந்தவள்) ஆகுக என வேண்டுவதில், எவ்வளவோ பொருள் பொதிந்து,, உட்குறிப்பாகவும் இருக்கிறது.

ஒரு மனைவி சொல்கிறாள், தன் கணவனிடம் -

சாதல் அஞ்சேன்; அஞ்சுவல்
பிறப்புப் பிறிது ஆகுவ தாயின்
மறக்குவென் கொல்என் காதலன் எனவே

என்று. சாவதற்கு அஞ்சவில்லையாம்; ஏதேனும் மாறு பட்ட பிறவியாகப் பிறந்து, கணவனை மறக்க நேருமோ என அதற்கே அஞ்சுகிறாளாம். உயர்ந்த எண்ணங்கள்; உச்சத்தைத் தொடும் கற்பனைகள். இப்படி இலக்கியம் வளர்த்த பண்பாடுதான், இன்றும் நம் நாட்டில் எத்தனையோ மனவேறுபாடு வந்தாலும் பிரியாமல் வாழும் நெறியை உருவாக்கி உள்ளது.

இன்று 'விவாகரத்து,' ஆண்டுதோறும் கூடிவருவதைப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன. அமெரிக்காவில் கணவனும் மனைவியும் தனித்தனி வங்கிக்கணக்கு வைத்துக் கொள்கிறார்கள். ஏன்? எப்போது பிரிவார்கள் என்று இருவராலும் உறுதிசொல்ல இயலாது. அப்படி ஒரு பண்பாடு வயிரம் பாய்ந்து வளர்ந்து உள்ளது.

இங்கேயும் நம் குழந்தைகள் சின்னத்திரையால் கெட்டு அழியும் காலம் நெருங்குகிறது. படைப்புக்கலை - கவிதை - திரைப்பாடல் - கதை - படம் என அனைத்தும் மனிதநேயத்தை, நாகரிகத்தை, பண்பாட்டை வளர்ப்பதாக அமைய வேண்டும்.

மனிதருள் மாணிக்கம் நேருவின் மனம் கவர்ந்த பாடல் ஒன்று, அமெரிக்கக் கவிஞர் இராபர்ட் ஃபிராஸ்ட் இயற்றியது.

அவர் 'ஒரு பனிக்கால மாலைப் போதில், மரப் பொதும்பர் ஒன்றில், குதிரைகளை அவிழ்த்துவிட்டுவிட்டு, ஓய்வெடுக்கும் பயணி ஒருவனது,' கூற்றாக ஒரு பாடல் புனைந்துள்ளார் (பொதும்பர் என்பது மரங்களடர்ந்த சோலை). அப்பாட்டு நமக்கு வாழ்க்கைப் பயணத்திலும் சோர்வு தட்டும்பொழுது, சிறிது ஓய்வெடுக்க நினனக்கிறோ

மல்லவா...? அதை நினைப்பூட்டுகிறது. எவ்வளவு அடர்த்தியான, மரங்கள் செறிந்த தோப்பு! அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கிறது. இங்கேயே தங்கிவிடலாமா?' எனப் பயணியின் மனம் நினைக்கிறது. ஆனால், அவனுடைய உள்மனம், அவன் செய்யவேண்டிய கடமைகளை - முன்பு உறுதிசெய்து கொண்ட சூளுரைகளை நினைப்பூட்டுகிறது.

அந்தோ!
நான் ஓய்வெடுக்குமுன்,
பல கல் தொலைவு
கடந்தாக வேண்டுமே!
நான் ஓய்வெடுக்குமுன்
பல கல் தொலைவு
கடந்தாக வேண்டுமே!

இன்றும் நம் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உந்தி வெளிப்படும் கடமையுணர்ச்சி இது!

The woods are lovely, dark and deep
But I have Promises to keep
And miles to go before I sleep
And miles to go before I sleep!

**சில கவிதைகள் தான் உலகளாவிய அனுபவ உண்மைகள். அவை இடம், கால எல்லைகளைக் கடந்தவை. தமிழில் அத்தகையவை மிகமிகக் கூடுதலாகக் காணப்படுகின்றன.**

மாணிக்கவாசகர் **'யாத்திரைப்பத்து,'** என்று ஒரு பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். சிவன் திருவடியை அடைவது என்பது, உலகில் பிறந்த இந்தச் 'சீவன்', குற்றங்கள் நீங்கி, அந்தச் சிவமாகவே மாறுவது. அதற்குரிய சமயம் வந்துவிட்டதால், 'சீவன்மார்களே! அடியார்களே! உடனே புறப்படுங்கள்! காலம் தாழ்த்தினால், சிவப்பேற்றை இழந்து விடுவீர்கள்!' என்று அன்போடு அழைக்கின்றார். 'நிற்பவர்கள் நிற்கட்டும், மற்றவர்கள் புறப்படுங்கள்! இன்றேல் பிற்பாடு

கண்களை அகல விழித்து வருந்துவதால் பயனில்லை' என மாணிக்கவாசகர் அழைக்கும்போது,, ஃபிராஸ்ட்டின் குரல் போலவும் ஒலிக்கிறது.

*நிற்பார்நிற்க, நில்லா உலகில்*
*நில்லோம் இனிநாம் செல்வோமே!*

எங்கே செல்வது?

*பொற்பால் ஒப்பாம் திருமேனிப்*
*புயங்கன் ஆள்வான்*
*பொன்னடிக்கே.*

அப்பொன்னடிகளை அடைய,

*நிற்பீர் எல்லாம் தாழாதேநிற்கும்*
*பரிசே ஒருப்படுமின்*

ஓய்வுகொள்வார் போல நிற்பவர் எல்லோரும் காலந் தாழாதே நிற்கும்(தாமதப்படுத்தாத) தன்மையையே மனங் கொள்வீராக!

ஏனென்றால்,

*பிற்பால் நின்று பேழ்கணித்தால்*
*பெறுதற்கு அரியான்*
*பெருமானே!*

நாளைக்குப் பார்க்கலாம் என்று ஒத்திப்போடுவதை, மாணிக்கவாசகர் ஒப்பவில்லை. 'நிற்பார் நிற்க, நில்லா உலகில் நில்லோம் இனி நாம் செல்வோமே' என்ற கருத்தை உலகியலிலும் சேர்த்துப் பார்க்கலாம்தானே. 'வாழ்த்து' வதன் தத்துவ நுட்பத்தைக்கூட உலகியலில் வைத்துப் பார்க்குமாறு மாணிக்கவாசகர் பாடுகிறார். இப்படியும் பார்த்தால்தான் இளைஞர்களுக்குச் சமயத்தில் பிடிப்புண்டாகும். சமயம் சார்ந்த பக்திப் பாடல்களும் ஒருவகையில் மனிதனின் 'தன் முன்னேற்றச் சிந்தனைகளே' என உணர்த்த வேண்டும். முதலில் நாம் அதை உணர வேண்டும்.

32

# வாழ்த்தினால் வாழலாம்!

உலகிலுள்ள பிற உயிரினங்களை எல்லாம் 'வாழ்வதாகக்' கூறுவதில்லை. மனிதனுக்கு மட்டுமே வாழும் நெறிமுறை உண்டு. திருவள்ளுவர் மனிதர்களை 'வாழும் உயிர்' என்பார்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு

சிறப்புடன் வாழும் உயிராதலின் கல்வி இன்றியமையாததாகிறது. ஆனாலும் மனிதரில் பலர் உயிரோடு இருக்கிறார்கள்; வாழ்வதில்லை.

வாழ்வது சிறப்பாக இருப்பது; பயன்படச் செய்வது. பெற்றுப் பெருகி, தொடர்ச்சி குறையாமல் இயற்கை உயிர்கள் வாழ்கின்றமை, காலத்தால் அழியாமல் இருப்பதைக் குறிக்கும். அதனால்தான் தன் அடியிலேயே கன்றை ஈன்று, குலத்தொடர்ச்சி போல் வளரும் மரத்தை, 'வாழை' என்ற சொல்லால் குறித்தனர். 'வாழையடி வாழை என வாழ்க' என்று வாழ்த்தவும் செய்தனர்.

இங்ஙனமெல்லாம் சிறப்பாகவும் குலத்தொடர்ச்சி யுறவும் ஆயுள் கூடவும் வாழ்த்துவன 'வாழ்த்து' எனப் பட்டன.

வாழ்த்தின் பயன் வாழ்த்துப் பெறுபவர்க்கு மட்டு மல்லாமல், வாழ்த்துபவர்க்கும் பயன்படுகிறது.

எவ்வாறு ஒரு தீங்கானது செய்யப்பட்டவனை மட்டுமன்றி, அதைச் செய்தவனையும் பாதிக்கிறதோ, அதுபோல நல்ல மனத்துடன் வாழ்த்துவது, வாழ்த்துபவனை யும் வாழவைக்கிறது.

ஒரு பெரிய தொழிலகத்தில் உச்ச மேலாளருக்கு, அடுத்த நிலையிலுள்ளவர் பணிவு காட்டினால், அதாவது தன் முன்னவர் சொற்படி நடந்தால், அவருக்குக் கீழே உள்ளவர்கள் அவருக்குப் பணிந்து, சொல்வதைக் கேட்டு நடப்பார்கள். இது ஒரு நிருவாக நடைமுறை.

மாணிக்கவாசகர்,

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மைஎல்லாம் தொழவேண்டி

என்று உலகியலை அப்படியே பாடுகிறார். தேவர்கள் இறைவனை வாழ்த்துகிறார்களாம். ஏன்? அவ்வாறு வாழ்த்துவதால், அவர்கள் வாழ்கிறார்கள். நாட்டை வாழ்த்திப் பாடுவதால், நாம் நாட்டுப்பற்றைப் பெறுகிறோம்; மொழியை வாழ்துவதால் நாம் கல்வியறிவும் திறனும் பெறுகிறோம்; இறையை வாழ்த்தி நாம் நல்வாழ்வு பெறுகிறோம்.

தேவர்கள் இறைவனை வாழ்த்துவதால், தாம் உயர்கிறார்கள். அதனால் மற்றவர்கள் எல்லோரும் அத்தேவர்களைத் தொழுகிறார்கள்.

வானவர்கள் மட்டுமென்ன? மனிதர்கள் 'வாழ்த்து வதும் தாம் வாழ்வான்', 'தம்மைவிடப் பெரியவர்கள்பால் பணிவதும்' 'தாம் உயர்ந்து மற்றவரனைவரும் தம்மைத் தொழ வேண்டியே' என்றால் தவறாகுமா?

வண்டுகள் மலர்களின் மேலே ரீங்காரமிட்டுப் பாடுவது, அப்பூக்களை இசைபாடி வாழ்த்துவதுபோல் தோன்றுகிறது. ஆனால் தான் தேன் எடுக்கவே, அதாவது தான் பயன்படவே அது இசைபாடுகிறது.

சூழ்த்து மதுகரம் முரலும் தாரோயை

இறைவன் சூடிய மாலையிலுள்ள பூக்களை மதுகரம் (மதுவை ஈட்டும் வண்டுகள்) சூழ்ந்து படிந்து முரல்கின்றன. வண்டு இசைப்பது தனது நலம் கருதியே என ஒரு தொனிப்பொருளும் அமையுமாறு, இது அமைந்துள்ளது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . நாயடியேன்
பாழ்த்தபிறப்பு அறுத்திடுவான் யானும் உன்னைப்
பரவுவனே'

என்று மாணிக்கவாசகர் முடிக்கின்றார். பிறவியினின்றும் விடுபடுதலாகிய பெரும்பயனே, இவ்வாழ்த்தினால் கிடைக்குமாம். வாழத்தரங்குகளில் பயன்படும் இப் பாடலை, பொருளுணர்ந்து படித்துப் பாடிக் காட்ட வேண்டும்.

திருமண வாழ்த்தரங்குகளில், திருஞானசம்பந்தரின் பதிகப்பாடலொன்று, மிகப் பொருத்தமாகப் பயன்படுகிறது. 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்று திருக்கழுமலப் பதிகம் தொடங்குகிறது. என்றும் இவ்வுலகில் 'நல்லபடியாக' வாழலாம்; வாழமுடியும்; வாழ வேண்டும். 'நல்லவண்ணம்' என்பதில் எவ்வளவோ பொருள் அடங்கி இருக்கிறது. நல்லவண்ணம் வாழ் முயலும்போது தடங்கல்கள் வரும். அவற்றையும் கடந்து – வென்று வாழ்வதெப்படி

என்றுதான் கற்பனை செய்யவேண்டும். 'சமயம்' என்பது மேலுலகத்துக்கு மட்டுமே என்பது தவறான கருத்து. சமயம் இவ்வுலக நல்வாழ்வுக்கே முதலில் பயன்பட வேண்டும்.

'எண்ணில் நல்ல கதிக்கு யாதும் ஓர் குறைவு இல்லை' என்பது, அடுத்த அடி. நல்ல கதி - போய்ச் சேரும் இடம். சிந்தித்துப் பார்த்தால், இவ்வுலகில் 'நல்லவண்ணம்' வாழ்ப வர்க்கே, மேற்கதியும் நன்கு அமையும். கொடுத்த பதவியைக் காப்பாற்றாதவனுக்கு, மேற்பதவி எவ்வாறு கிடைக்கும்? நல்லகதி - வானுலக நல்வாழ்வு, முத்தியடைதல்.

இதைக் 'காட்சி அளவை'யாலும் நிறுவுகிறார் சம்பந்தர்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவு இலை
கண்ணில் நல்லஃது உறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

"நான் சொல்வது உண்மை என்பதற்குக் கண்கண்ட சான்றாக, அதோ பாருங்கள்! கண்ணுக்கு நன்றாகக் காட்சிதரும் கழுமலநகரில், உமை ஒரு பாகனாக, பெண்ணி னத்தின் சிறப்பை அறிவிக்கும் தேவியுடன் இறைவன் இருப்பதைக் கவனியுங்கள்!" இவ்வாறு சம்பந்தர் பாடுகிறார்.

இப்பதிக இறுதியில் கடும் துறவைப் போதித்த சமண, புத்த சமயங்களைக் குறிப்பதால், சிவனியமும் மாலியமும் (சைவ, வைணவ நெறிகள்) இவ்வுலக நல்வாழ்வில் அழுத்தம் வைத்தமை உணரப்படுகிறது.

'வாழ்த்தியல்வகை' எனச் சில நூல்வகைகளாகவே, தொல்காப்பியம் குறிப்பிடும். அந்த அளவு தமிழில் வாழ்த்து மரபுகளும் முறைகளும் பல்கிப் பெருகியுள்ளன. அவற்றுள் சிலவற்றை அறிந்துகொண்டால், நாம் புதுமையாக வாழ்த்தவும் தெரிந்து கொள்ளலாம்.

# 33

## சந்திரனும் சூரியனும் போல...

நம் அன்புக்குரியவரை நினைக்கும் பொழுதெல்லாம் நெஞ்சம் இனிக்கிறது. அவர் உருவம் நம் மனத்திரையில் நெடிதாகத் தோன்றிக்கொண்டே இருக்கிறது. அவருடன் பழகிய நினைவுகள், திரைக்காட்சிகளாக விரிகின்றன. எவ்வளவு கூடுதலாக நினைக்கின்றோமோ, அவ்வளவுக்கு இனிமை தோன்றும்; அலுப்புத் தட்டாது.

உங்களுக்கும் அப்படி 'ஒருவர்' இருக்கக்கூடும் அல்லவா?

தோழியிடம் தலைவி சொல்கிறாள், தன் காதலனைப் பற்றி: 'நின்ற சொல்லர், நீடுதோன்று இனியர்'! சொல் நிலை பெற்றவர் - அதாவது சொன்ன சொல் தவறாதவர். மனத்தில் தொடர்ந்து தோன்றும் இனிமையுடையவர். அதாவது எவ்வளவு காலம் நினைத்தாலும், நினைக்குந்தோறும் நம் மனத்திற்கு இனிமை தருபவர்.

இத்தகையவர்களை வாழ்த்தும்போது என்றென்றும் நிலையாக வாழ்க என வாழ்த்துவது ஒரு மரபு.

இ.12.

*நடுக்கின்றி நிலியரோ...*
*பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்றே*

(புறம்.2)

இமயமலையும் பொதிய மலையும் காலத்தால் அழியாது நிலைத்திருப்பவை என்று கருதியுள்ளனர். எனவே, அவைபோல அசைவின்றி நிலையாக வாழ வாழ்த்தியுள்ளனர்.

சங்கப்பாடல்கள் பல இமயம் முதல் குமரிவரை ஒரு நாடாகப் பார்க்கும் கருத்தை வெளிப்படுத்துகின்றன. (புறம். 6,17).

சந்திரனும் சூரியனும் போல நிலைத்து வாழ வாழ்த்துகின்றனர் பலர்.

*தண்கதிர் மதியம் போலவும், தெறுசுடர்*
*ஒண்கதிர் ஞாயிறு போலவும்*
*மன்னிய பெருமநீ! நிலமிசை யானே!*

இந்நிலவுலகில் குளிர்ந்த கதிர்களையுடைய மதியம் போலவும் வெப்பச் சுடர் வீசும் ஒளிக்கதிர்களையுடைய ஞாயிற்றைப் போலவும் நிலைபெறுவாயாக! (புறம். 6, 56)

ஆயுளை நீட்டிக்கவேண்டும்; வாழும் நாள் பலவாக வேண்டும்; வாழ்நாள் எண்ணிக்கை கூட வேண்டும் என்று வாழ்த்துவது வேறு ஒரு மரபு.

கடல்கொண்ட தென்னாட்டில் பஃறுளி ஆறு ஓடியது. அது பாண்டியர்க்குரியது. எனவே ஒரு பாண்டிய மன்னனை இவ்வாறு வாழ்த்தி உள்ளனர்:

*முந்நீர் விழவின் நெடியோன்*
*நல்நீர்ப் பஃறுளி மணலினும் பலவே!* (புறம். 9)

இவ்வாறு அவரவர்க்குரிய ஆற்றையோ, கடலையோ கூறி, அதிலுள்ள மணலினும் பலநாள் வாழ்க என

வாழ்த்துகின்றனர். 'காவிரி எக்கர் இட்ட மணலினும் பலவே' என்பர் (எக்கர் - மணல் திட்டுகள்).

*பல்லூரர் சுற்றிய கழனி*
எல்லாம் விளையும் நெல்லினும் பலவே!

நின் ஊரைச் சுற்றியுள்ள கழனிகள் - வயல்கள் எல்லாவற்றிலும் விளையும் நெல் எண்ணிக்கையைவிடக் கூடுதலாக வாழ்க என்னும்போது ஒரு மாற்றத்தைப் படைக்கிறார் புலவர் (புறம். 387). 'வானத்து விண்மீன்களினும் பலநாள் வாழ்க!', 'மழைத்துளிகளினும் பலநாள் வாழ்க' என்பதும் இது போன்றதே. வேங்கட மலைமேல் பொழியும் 'ஓங்கல் வானத்து உறையினும் (மழைத்துளி) பலவே!' (புறம். 385)

மன்னர்களையும் வள்ளல்களையும் 'நின் தாள் வாழிய' என்றோ, 'வாழ்க அவன் தாளே' என்றோ வாழ்த்துகின்றமை மிக நீண்ட கால மரபாகக் காணப்படுகிறது. (புறம். 101, 103, 171) இறைவன் திருவடிகளை வாழ்த்தும் முறையுடன் இதை ஒப்பிடலாம். தாள் (பாதம்) அடைக்கலம் புகுவதற்கு உரியதாகலின் இப்படி வாழ்த்தியிருக்க வேண்டும்.

மேலும் பல புதுமையான வாழ்த்துக்கள் காணப் படுகின்றன. ஒருவர் வாழ்த்துவதுபோல மற்றவர் வாழ்த்துவ தில்லை. அதே போல வாழ்த்தினும் சிறு மாற்றமாவது இருக்கும்.

இதையே மரபும் மரபில் பூக்கும் புதுமையும் என விளக்குவார் டி.எஸ். எலியட். மரபைப் பின்பற்றுகிறவர்கள் அல்லது விளங்கிக்கொண்டவர்கள்தான், தங்கள் தனித் திறனையும் வெளிப்படுத்துகிறார்கள்; வெளிப்படுத்த முடியும் என்பார் அவர். நூறு விதமான வாழ்த்துக்கள் காணப் படுவதால், ஒருசில தனித்துவம் உடையவற்றைப் பார்ப்போம்.

*'நீ வாழ்க! உன்னைப் பெற்றதனால், உன் தாய் தந்தையரும் வாழிய!'* என ஒரு புலவர் வாழ்த்துகிறார். *(புறம். 137)*

பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர் கிழார் வாழ்த்துவது இன்னும் புதுமையாக இருக்கிறது. சேரன் இரும்பொறையை அவர் வாழ்த்துவதைப் பாருங்கள்:

'உனது ஒவ்வொரு நாளும் ஒரு மாதமாகட்டும்; ஒவ்வொரு மாதமும் ஓராண்டு ஆகட்டும்; ஒவ்வோர் ஆண்டும் ஒரு யுகமாகட்டும்; ஒவ்வொரு யுகமும், கணக்கற்ற 'வெள்ளம்' என்ற பேரெண்ணாகட்டும்!'

*நின்நாள் திங்கள் அனைய ஆக!*
*திங்கள்*
*யாண்டு ஓரனைய ஆக! யாண்டே*
*ஊழி அனைய ஆக! ஊழி*
*வெள்ள வரம்பின ஆக!.*

இதேபோல், 'நீங்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ வேண்டும்; ஒவ்வோர் ஆண்டும் ஐம்பதாயிரம் நாட்கள் கொண்டதாக இருக்கவேண்டும்' என்று இந்தியிலும் ஒரு பிரபலமான பிறந்த நாள் வாழ்த்து முறை உண்டு.

கோள்களின் நிலையை வைத்துச் சோழ மன்னனைக் கோவூர் கிழார் வாழ்த்துவது மேலும் புதுமையாக உளது. வெள்ளி என்னும் சுக்கிரன், தென்திசை சார்ந்தால் உலகத்துக்குக் கேடு, மழை பெய்யாது, உயிர்கள் வாடும் என்ற நம்பிக்கை இருந்திருக்கிறது. "வெள்ளி (சுக்கிரன்) கிழக்கே இருந்து மேற்கே போனாலும், மேற்கே இருந்து கிழக்கே போனாலும், வடக்கே இருந்து தெற்கே போனாலும் தெற்கே இருந்து பெயராது அங்கேயே தங்கினாலும்,

யாண்டும் நிற்க வெள்ளி; யாம்
வேண்டியது உணர்ந்தோன் தாள் வாழியவே!'

(புறம். 386)

என்று வாழ்த்துகிறார். 'சுக்கிரன் எங்கே வேண்டு மானாலும் நிற்கட்டும்; நாங்கள் வேண்டியதைச் சொல்லுமுன், குறிப்பால் உணர்ந்து தருபவன் தாள் வாழ்வதாக!' என்பதால், ஊழையும் வென்று வாழ வாழ்த்துவதாகப் படுகிறது.

ஒருவன் தனக்கென எல்லை வகுக்கப்பட்ட வாழ்நாள் முழுவதையும், நன்றாக அனுபவித்து வாழவேண்டும் என, மூவேந்தரையும் ஒருங்கு கண்டபோது வாழ்த்துகிறார் ஔவையார்.

வாழ்தல் வேண்டும் இவண் வரைந்த வைகல்!

இவ்வுலகில் இத்தனை நாள் வாழவேண்டுமென வரை யறுக்கப்பட்ட வாழ்நாள் முழுவதையும் மகிழ்ச்சியாக, இன்புற்று வாழ்க என்பது சிறந்த வாழ்த்தாகும். எல்லை வகுக்கப்பட்டது மனிதனின் வாழ்நாள். இதில் போய் அழுகையும் துக்கமுமாக, சண்டையும் சச்சரவுமாக முக்கால்வாசி நாளைக் கழிக்கலாமா?

"ஏவல் மகளிர் பொற்கலத்தில் ஏந்திய மதுவைப் பருகி, இரவலர்க்கு ஈந்து வாழ்க!" எனவும் வாழ்த்துகிறார்.

சிறுகுடி கிழான் பண்ணன் என்பவன், சோழநாட்டில் இருந்த பெரிய நிலக்கிழார் ஆவான்; நல்ல கொடையாளி.

அவன் வீட்டின் முன், எறும்புகள் முட்டையைக் கவ்விக்கொண்டு மேட்டுநிலம் நோக்கிச் சாரிசாரியாகப் போவதுபோல், மக்கள் கையிலேந்திய சோற்றுருண்டை யுடன் நீண்ட வரிசைகளில் போய்க்கொண்டிருப்பார்களாம். அத்தகைய கொடைஞனை, அந்நாட்டு வேந்தனாகிய கிள்ளிவளவன்.

*யான்வாழும் நாளும் பண்ணன் வாழிய'* (புறம். 173)

என்று வாழ்த்துகின்றான். என்னுடைய வாழ்நாளையும் சேர்த்துப் பண்ணனே வாழட்டும் என்ற இது, பயன்பெற வாழ்பவர் ஆயுள் கூடட்டும் என்ற கருத்துடையது.

இப்படிப்பட்ட வாழ்த்து மரபிலே வந்த பெரியாழ்வார், திருப்பல்லாண்டு பாடி, வாழ்த்தின் உச்சத்தைத் தொடுகிறார்.

*பல்லாண்டு பல்லாண்டு*
*பல்லாயிரத்தாண்டு*
*பல கோடி நூறாயிரம்*
*மல்லாண்ட திண்தோள்*
*மணிவண்ணா! உன்*
*சேவடி செவ்வி திருக்காப்பு!*

நம் முன்னோர்கள், ஒரு சிறிய எளிய பாடலில்கூட, மிக அரிய செய்திகளைப் பொதிந்து வைத்திருப்பார்கள். தேடிக் கண்டுகொள்ள வேண்டியது நம் கடமையாகும்.

34

# இணக்கம் அறிதல்!

'அறம் செய விரும்பு' என்று ஆத்திசூடியை ஔவையார் தொடங்குகிறார். அதிலுள்ள நுட்பம் என்ன?

'அறம் செயவேண்டும்'. 'அறம் நீ செய்க' என்றெல்லாம் பாடியிருக்கலாமே? அப்படிச் சொன்னால் எல்லோரும் வாய்ப்பு வசதியைப் பொறுத்துத்தானே செய்ய முடியும். எல்லோராலும் இயலாது; எல்லாக் காலத்தும் முடியாது; எந்த அளவு என்றும் கூறமுடியாது. அதனால்தான் 'விரும்பு' என முடித்தார். அறம் செய்ய வேண்டும் என்ற நாட்டம் இருக்க வேண்டும்; விருப்பம் இருக்க வேண்டும். அந்த ஈடுபாடு மனத்தில் இருந்தால் காலப்போக்கில் அவரவர் செயலில் அது வெளிப்படும்.

ஒரு செல்வர் தம் மனைவியைப் புகை வண்டியில் ஏற்றிவிட்டு, வழியனுப்ப வந்தவர், 'அந்தக் கருப்புப் பெட்டி பத்திரம்' என்று திரும்பத் திரும்பக் கூறினார். இதை அக்கம்பக்கத்தவர் கவனித்துக் கொண்டிருந்தனர். கடைசியில் என்ன ஆயிற்று? அம்மையார் தம் ஊர் போய் இறங்கும்போது, அந்தக் கருப்புப் பெட்டி மட்டும் காணாமல் போனது. 'உடையது விளம்பேல்' என்கிறது ஆத்திசூடி. நம்

உடைமை பற்றி, நம்முடைய நண்பர், மனைவியிடமும் கூறக்கூடாதா? கூறலாமே. ஔவையார் 'உடையது கூறேல்; சொல்லேல்' என்று பாடி வைக்க வில்லையே. 'விளம்பேல்' என்றுதானே கூறியுள்ளார்.

முன்பு அ, ஆ என்று மணலில் எழுதி, அதன்மேல் பிள்ளைகளை விரலால் விளம்பச் சொல்வார்கள். வாயால் ஆனா, ஆனா என்று சொல்லிக்கொண்டே கைவிரலால் மணலில் 'அ' எழுத்து வடிவத்தை விளம்புவதால், செவிப்புலன், தொடும் உணர்வு இரண்டாலும் குழந்தையால் அகரம் நன்கு உணரப்பட்டு, மனத்தில் பதியும். இதை 'விளம்புதல்' என்பது அக்கால வழக்கு. திரும்பத் திரும்பப் பலரறிய ஒருவர் எதையாவது சொன்னால், 'என்னடா விளம்புகிறாய்' என்று கேட்பதுண்டு. அதாவது தன் உடைமை, செல்வம், திறமை, பெருமை பற்றியெல்லாம், பலரறிய விளம்ப வேண்டாம் என்பது ஔவையின் அறிவுரை.

அமெரிக்காவில் தன்னுடைய சம்பளம் இதுவென்று வெளிப்படையாகச் சொல்லக் கூச்சப்படுவார்கள். அது நல்ல பழக்கம். கல்யாண மண்டபங்களில் நம் பெண்கள் நகைக்கடையே நடந்து வருவது போலப் பொன்னணி களுடன் அங்குமிங்கும் பகட்டித் திரியும்போது, 'உடையது விளம்பேல்' என்று உரக்கக் கத்தலாம் போலத் தோன்றுகிறது.

'இணக்கம் அறிந்து இணங்கு' என்ற ஆத்திசூடியில்தான், எத்தனை நுண் பொருள்கள் அடங்கிக் கிடக்கின்றன. இணங்கத் தக்கவரை ஆராய்ந்து இணங்கவேண்டும் என்பது முதற்கருத்து. எல்லோரும் ஒரே குணம், கருத்து, நடை உடை பாவனை கொண்டவராக இருக்க இயலாது. வேறுபாடுகள் இருப்பது மனித இயற்கை. ஐந்து விரல்களும் ஒன்றுபோலவா உள்ளன? இந்நிலையில் நண்பர்களாயினும், கணவன் மனைவியாயினும் ஒருவருக்கு ஒருவர் இணங்கத்தக்க பண்புகள் சிலவேனும் இருக்குமல்லவா? அந்த இணக்கம்

அறிந்து இணங்குவதே ஒற்றுமைக்கு வழிவகுக்கும். அல்லாமல் பிணக்கம் (மனவேறுபாடு) அறிந்து, அதைப் பெரிது படுத்தினால், நட்பு முறிவிலும் மணவிலக்கிலும்தான் அது கொண்டுபோய்விடும். இணங்க வேண்டிய அளவறிந்துதான் சிலரிடம் பழகவேண்டும்; மற்றும் சிலரிடமோ இணங்கக் கூடிய நேரமறிந்து பழக வேண்டும். இறுதியில், 'இணங்குவது தான் வெற்றிக்கு வழி' என அறிந்து, இணங்கி வாழ வேண்டுமென்றால், அது தன்முன்னேற்றச் சிந்தனையும் ஆகிறது.

அலுவலகங்களிலும் சில வீடுகளிலும் எழுதி வைக்க வேண்டிய, குறிக்கோள் வாசகம் 'இணக்கம் அறிந்து இணங்கு' என்பது என்றால் மிகையாகுமா?

ஔவையார், மனிதன் தன் வாய்ப்பேச்சாலேயே உயரவும் செய்கிறான்; கீழே விழுந்து தோல்வியையும் தழுவுகிறான் என்பதை நன்கறிந்தவர். ஆத்திசூடியில் உள்ள 108 சூடிகளில், 17 சூடிகள் வாய்ப்பேச்சுப் பற்றியே இருப்ப தால் இதை அறியலாம். 'வாது முற்கூறல்' – வறட்டு வீண் வாத்தை, நீ தொடங்காதே. சிலர் அரசியலிலும் இவ்வாறு 'முற்கூறி', வாதம் – முடக்கு வாதமாகிவிடும்.

சிலர் மேடையேறிச் சொற்பொழிவாற்றுவார்கள். அவையோருக்கு என்ன பேசுகிறார் என்றே விளங்காது. இழுத்து அறையலாம் போல இருந்தாலும், நாகரிகம் கருதி அவையோர் மனத்துள் வெந்துகொண்டிருப்பர். இத்தகைய வர்களை நோக்கி, 'மொழிவது அறமொழி' என்பார் ஔவையார். 'சொல்வதைத் தெளிவாகச் சொல். விளங்கும் படி சொல்; குழப்பமில்லாமல் சொல்ல வந்ததைச் சொல்' என்பது இது.

ஒருவர் செய்த உதவியை மறக்காமல், நன்றி பாராட்ட வேண்டியவர், அவ்வுதவியைச் செய்து கொண்டவரே. ஏனெனில் செய்தவர் எதிர்பார்த்துச் செய்தால் அது நன்மை ஆகாது. 'வேண்டி வினை செயேல்' என்பது அதுதான்! உதவி

பெற்றவர் அதை மறக்கக்கூடாது. அதனால்தான் 'நன்றி யறிதல்' என்று சொன்னார்கள். தமிழில் இத்தகைய வாழ் வியல் கலைச் சொற்கள் பொருள் பொதிந்தவை.

நாம் ஒருவருக்கு ஒரு நன்மை செய்திருப்போம். பிற்பாடு, அவர் மூலமாகவே அந்நன்மை நமக்குத் திரும்ப வரும் என்று எதிர்பார்க்கக்கூடாது. நமக்குப் பிறர் ஒருவர் - முன்பின் அறியாதவர்கூட - தக்க சமயத்தில் உதவக்கூடும். எங்கிருந்தோ ஆபத்தில் காக்கும் உதவி நமக்கு வந்து சேரும். அதாவது, நாம் செய்த உதவி அதே வழியாகவோ, நம்மிடம் உதவி பெற்றவர் வழியாகவோ உதவிய அந்தக் காலத்துக் குள்ளேயோ, நமக்கு வந்து சேராது. நாம் தக்கசமயத்தில் உதவினால், வேறு ஒரு சமயத்தில், வேறு எங்கோ இருந்து நமக்கு உதவி கிடைக்கும். அவ்வாறு செய்பவர் நம்மிடம் எதையும் எதிர்பார்க்கவும் மாட்டார்.

மானிட சமுதாயத்தின் இக்கூட்டுறவு வாழ்வின் அடிப்படையை, ஔவையார் தமது மூதுரையில் மிக அழகாகப் பாடுகிறார்.

*நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி*
*என்று தருங்கொல் எனவேண்டா - நின்று*
*தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்*
*தலையாலே தான்தருத லால்.*

தென்னை (தெங்கு) நின்று ஓங்கி வளர்வது, தெங்கு - தெங்கங்காய், தேங்காய் தருகிறதல்லவா? அது அடியிலே குடிக்கும் நீரை, நல்ல இளநீராக்கித் தலைமேலே, இளநீர்க் குலைகளாகத் தருகிறது. தான் - அடியிலுண்டதை, அங்கேயே தருவதில்லை.

எனவே நன்மை ஒன்றைப் பிறர்க்குச் செய்தவர், அதன் பயன் எங்கே, எப்போது கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டாம். அது 'எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதி நான் என்றான், உதவினான்' என்பதுபோல் எதிர்பாராத இடத்திலிருந்தும் கிடைக்கும்.

# 35

## யானையா? மரமா?

சித்தர்களின் பாடல்கள் உலகியல் சார்ந்தவை; புதுமையானவை; புரட்சிகரமானவை. 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்று பாடுவார்கள் மனிதனுக்கு 'நிலையாமை' உணர்வு வேண்டும். யாருடைய வாழ்வும் எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது. ஒருவரிடம் 'நீங்கள் இனிமேல் இத்தனை ஆண்டுகள், மாதங்கள், நாள்கள் மட்டுமே இவ்வுலகில் வாழப்போகிறீர்கள்' என முன்னதாக எழுதிக் கொடுக்கும் நிலைமையிருந்தால், ஒவ்வொருவரும் மிக உன்னிப்பாக, மிகுந்த கருத்துடன் தம் வாழ்நாட்களைச் செலவிடுவார்கள். அது தெரியாததால், பலரும் விளையாட்டாக, வீணாகத் தம் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது நிலையாமை உணர்வு. நிலைத்த பணிசெய்து பயன்பட வாழ ஒருவரைத் தூண்டும் என்பதாலேயே, அவ்வாறெல்லாம் பாடியுள்ளனர்.

திருமூலர் 'உடம்பை' உயர்திணை ஆக்கி, மரியாதை கொடுத்து, 'உடம்பார்' எனக் குறிப்பிடுகின்றார். ஏனெனில் இந்த உடம்பு இல்லையென்றால், அதிலுள்ள உயிரை எங்கே காண்பது?

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே!

திடமான உடம்புடையவரிடம்தான் மெய்யான ஞானமும் சேருமாம். நோய் நொடியிலே வாடும் உடல் ஞானத்தை நாடுவது எப்படி? 'ஊனுடம்பு ஆலயம்' என்றும் அங்கு இறைவன் உறைகின்றான் என்றும் கூறும் கருத்துக்கள் எவ்வளவு சிறந்தவை? நம் நீதியும் சமயமும் தத்துவமும் வாழ்வியல் பற்றியவை. அவற்றை நாம் உள்ளவாறு உணர்வது எப்போது?

**தி**ருமூலர் சித்தர்களில் தலையாயவர். அவர் பல்வேறு துறைகளைத் தொட்டுள்ளார்.

படைப்புக் கலைஞன் நாம் பார்த்த ஒன்றில், காணத் தவறிய ஒன்றைக் கண்டு சொல்கிறான். அதை அறிந்ததும் நம் மனம் இன்பத்தில் துள்ளுகிறது; மகிழ்ச்சியில் கூத்தாடுகிறது; மேன்மேலும் திருத்தமும் அழகும் பண்பும் கைகூடி வருகின்றன.

திருமூலர் அருளிய நூலுக்குத் 'திருமந்திரம்' என்று பெயர். 'மந்திரம்' என்பது, சிலர் நினைப்பதுபோல் வேறு எதுவும் அன்று. பெரியோர் வாக்கு, அனுபவ உரை, பொருள் பொதிந்த சொல், பயனை விளைவிக்கக்கூடிய ஆற்றலுள்ள பேச்சு, உள்ளத்து ஒளியால் வாக்கினில் பிறந்த ஒளி அது! திருமூலர் மிக அரிய உண்மைகளையும் மிகவும் எளிமையாகக் கூறியுள்ளார். அதனால் அவை 'மந்திரம்' எனப்பட்டன.

**'நான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்'; 'ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்'** - இவ்வாறு அவர் வாக்குகள் பல பழமொழி போல வழங்குவன.

‘கல்லைக் கண்டால் நாயைக் காணோம்; நாயைக் கண்டால் கல்லைக் காணோம்’ என்பதற்கு உண்மையான பொருள் வேறு. நாய் போலவே செதுக்கப்பட்ட சிலை ஒன்றை வெறுங்கல்தானே என நினைத்தால், அது கல்லாகவே தோன்றும். எப்படிப்பட்ட கல்லென்று மனம் ஆராயும். அதன் நாய்த்தோற்றத்தைக் கண்டு, அதில் ஈடுபடும் போது அது கல்லாகக் காட்சி தராமல் நாயாகவே உணரப் படும். குழந்தைகள், கல்தானே என்று கருதாமல் ‘நாய் கடிக்கும்’ என்று அதன் அருகில் போக அஞ்சுவது இயல்பான உணர்ச்சியல்லவா...?

நம் உடல் இயங்குகிறது. இயக்கம் நிற்கும்போது வெறும் சடலமாக விழுந்து விடுகிறது. அந்த இயக்கம் ஒரு சக்தி – பேராற்றல் என்பதை நம்மால் உணர முடிகிறது. ஆனால், அது கண்ணுக்குத் தெரியவில்லை. அதை ‘உயிர்’ என்கிறோம். கண்ணுக்குத் தெரியாததால், அப்படி ஒன்றும் இல்லை எனவும் மறுக்க முடியவில்லை. ‘உயிர் போய் விட்டது’ என்றால், அப்படி ஒன்று இருந்ததென்பதுதானே பொருள்...?

உலகமும் இயங்குகிறது. அதை இயக்கும் பேராற்றல் ஒன்று உளது என்று உணர முடிகிறது. நிலம், நீர், காற்று, நெருப்பு, வானம் என்ற ஐம்பூதச் சேர்க்கையே இவ்வுலகம். ஆனால், இவை மட்டும் உலகமாகிவிடுமா...?

இவற்றை இயக்குவதற்குக் காரணமான ‘பரம்பொருள்’ ஒன்று உண்டு என நம்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. உயிர் கண்ணுக்குப் புலப்படாதது போல், இப்பரம்பொருளும் – இறையும் கண்ணுக்குப் புலனாகவில்லை.

‘பரம்பொருள்’ என்பதற்கு மேலான பொருள். முழுமுதற் பொருள் என்றுதான் அர்த்தம். அதனை இயற்கைப் பேராற்றல், இறைவன் என எப்பெயரிட்டு அழைத்தாலென்ன...?

**'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'** என்பர். பார்த்தவர்கள் சொல்லவில்லை, சொன்னவர்கள் பார்க்க வில்லை (விள்ளுதல் - வெளிப்படுத்திச் சொல்லுதல்). பிறகு, இதை எப்படித்தான் சொல்லிக் காட்டுவது...?

*மரத்தை மறைத்தது மாமத யானை*
*மரத்தில் மறைந்தது மாமத யானை*
*பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்*
*பரத்தின் மறைந்தது பார்முதல் பூதமே!*

மரத்தால் செய்யப்பட்ட யானைச் சிற்பம் - யானை போலவே இருக்கிறது. அதை யானை என்று பார்த்தால், மரம் (என்ற நினைப்பு) மறைந்துவிடுகிறது. மரம்தானே என்ற எண்ணத்துடன் பார்த்தால் என்ன மரம், என்ன தரம் என்ற சிந்தனை பிறக்கிறது. அதுபோல, 'பரம்' என்ற அம்மேலான பொருள், தன் உள்ளே இருப்பதை, பார் (மண்) முதலான ஐம்பூதங்கள் மறைத்துவிடுகின்றன. உள்ளிருந்து இயக்கும் இறை - கடவுள் - 'பரம்' என்ற நினைவு மேலெழும்போது, இவை வெறும் ஐம்பூதங்களாகிய சடப்பொருளே என்ற எண்ணம் மறைந்துவிடுகிறது.

இத்தகைய உலகின் இயல்பைச் சொல்ல வந்த, **நன்கணியார்** என்ற சங்கப் புலவர், ஓர் அரிய உண்மையை எடுத்துரைக்கிறார். கணி, கணியார், கணியன் என்பன வானநூல், சோதிடக் கலை வல்லவர்களைக் குறிப்பது. அதனால் இப்புலவர், இவ்வுலக நிலையாமையை நன்கு கணித்துச் சொல்லி, ஒரு முடிவும் சொல்கிறார்.

இன்றும் பார்க்கிறோம். ஒரு தெருவில் கிழக்கேயுள்ள வீட்டில் யாரோ இறந்து போனதால் சாப்பறை கொட்டுகிறார்கள். அதே தெருவின் மேற்கிலுள்ள ஒரு வீட்டில் திருமணம் நடப்பதால், இனிய மேளக்கச்சேரி கேட்கிறது.

கணவனுடன் கைகோத்து இணை இணையாக வரும் மகளிர், தலைநிறையப் பூச்சூடிக்கொண்டு, அதோ சிரிப்பும் மகிழ்ச்சியுமாகச் செல்கிறார்கள்! இதோ, இந்த மகளிர் தம் கணவன்மாரைப் பிரிந்ததனால், துன்பம் தாங்காது அழுத கண்ணீரால், மைதீட்டிய கண்கள் கலங்கி நிற்கிறார்கள்!

இப்படி இவ்வுலகத்தை ஏறுமாறாகப் படைத்தவன், நிச்சயமாகப் பண்பற்றவனே! எத்தனை முரண்பாடு...? இது என்ன உலகம்...?

ஓர்இல் நெய்தல் கறங்க, ஓர்இல்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப

ஒரு வீட்டில் நெய்தல்பறை - சாப்பறை கொட்டி முழக்கப்பட, மற்றொரு வீட்டில் குளிர்ந்த, இனிய தண்ணென்ற மத்தள ஓசை தாளம் தவறாமல் இசைக்கின்றது. (பாணி - தாளம்). சாப்பறை 'கறங்குகிறதாம்' - மேளம் 'ததும்புகிறதாம்'. அவற்றின் ஓசைக்கு ஏற்ற வினைச் சொற்கள்!

புணர்ந்தோர் பூஅணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப

கூடினவர் பூ அலங்காரம் செய்து கொள்கின்றனர். பிரிந்தவர்கள் துன்பம் படர்ந்த, மைதீட்டிய கண்களில் கண்ணீரைக் கொட்டி, அது கடைக்கண்களிலே உறைந்து போய் நிற்கிறது. (பைதல் - துன்பம். உண்கண் - மை தீட்டிய கண். பனி - கண்ணீர்த் துளி. வார்தல் - கொட்டுதல்).

**படைத்தோன் மன்றஅப் பண்பிலாளன்** (மன்ற - நிச்சயமாக). இவ்வார்த்தை, உலகில் காணப்படும் முரண்பாட்டைப் பார்த்து, 'இப்படியும் படைப்பதா...?' என வருந்திச் சொல்வது. இது கடவுளைத் திட்டுவது அன்று. 'என்னய்யா இது...? இப்படியா செய்வது...?' என்று உலகில் பேசிக் கொள்வதில்லையா...?

இனி. நன்கணியார் பாடலை முடிக்கும்போது, கூறுகிற அவரது முடிவுதான் என்ன...?

**இன்னாது அம்ம இவ்வுலகம்!**

இந்த உலகினது தன்மை மிகவும் கொடியதாக இருக்கிறது. பார்க்கச் சகிக்கவில்லை. இங்கே இன்பம் ததும்புகிறது; அதற்குப் பக்கத்திலேயே துன்பம் 'கறங்குகிறது' (சுழன்று முழங்குகிறது)! இதைப் பார்க்கும்போது, உலகம் நன்றாக இல்லையே என ஒருவித வெறுப்பு உணர்ச்சி மேலிடுகிறது. ஆனால், இதோடு புலவர் பாடலை முடிக்க வில்லை.

**'இனிய காண்க இதன் இயல்புணர்ந் தோரே'** என்று முடிக்கின்றார். இதை மிக விரித்து விளக்கலாம். நெடுங்கதை யாகப் புனையலாம். இந்த உலகின் இயல்பு இது. இதை மாற்றவியலாது. இதை நன்கு அறிந்தவர்கள், இதன் 'இனிய பக்கத்தைப்' பார்த்து, அதன்வழி மகிழ்வோடு வாழவே முயல்வார்கள். அவர்கள் துன்பத்தையும் இன்பமாக மாற்ற வல்லவர்கள்.

உலகின் இயல்பு உணர்ந்தோர், அதன் துன்பமயமான பக்கத்தையே பார்த்துச் சோர்வுறாமல் அதனுடைய மறுபக்கத்தை - நல்ல கூறுகளை நினைத்து, வாழ்வாங்கு வாழ முயல்வார்களாக!

இதுதான் நன்கணியார் முடிவு. இவ்வுண்மை உள்ளளவும் இப்பாடலுக்கும் வாழ்வுண்டு அல்லவா...? படைப்புக் கலையும் உலகின் இனிய பக்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்ட வேண்டும். மறுபக்கத்தையே காட்டி மக்களை மறுகச் செய்யக் கூடாது.

36

## கவிகாட்டும் நடையழகு

இலக்கியம் படைக்கப்படும் முறை, படைப்பாளிகளின் தனித்திறமை. அது ஒரு கலை. நுண்கலை எனப்படும் கவின்கலைகளில் எல்லாம் சிறந்த கலை அது.

இலக்கியம் ஒன்றைக் கண்ணுக்குக் காட்டும்; காதால் கேட்கவைக்கும். உங்கள் ஐம்புலனுக்கும் அது அனுபவமாகும்!

நாம் மாணவர்களுக்கு இலக்கியத்தை, உரிய முறைகளில் பாடமும் தேர்ந்து வைக்கவில்லை; படிக்கவும் சரியாகச் சொல்லித்தரவில்லை. அதனால் இளையோர் இலக்கியத்தில் ஈடுபாடு காட்டவில்லை.

நாம் விஞ்ஞானிகளை உருவாக்கிய அளவு, இலக்கியப் படைப்பாளிகளை உருவாக்கத் தவறிவிட்டோமோ என்று கூட அச்சம் ஏற்படுகிறது.

திறனாய்வில், படைப்பாக்கத் திறனாய்வு (Creative criticism) என ஒன்றைச் சொல்வர். அது குறை, இது நிறை என முரண்படுவதுபோல் விமர்சனம் செய்வதைவிட, இலக்கியம் எவ்வாறு - என்ன என்ன உத்திகள் வழி படைக்கப்பட்டிருக்கிறது எனக் கண்டுபிடித்துச் சொன்னால்

இ. 13.

சுவையாக இருக்கும். இலக்கியம் படைக்கும் தூண்டுணர்வு ஏற்படும்; வழிகாட்டியதாகவும் இருக்கும்!

இராமன் அயோத்திக்குத் திரும்பாமல் காட்டிற்குள் நள்ளிரவில் நடக்கத் தொடங்குகிறான். விடிந்ததும் மக்கள் ஏமாந்து நகர்நோக்கிப் போகின்றனர்.

இப்போது தனிமை - மூவர் நடக்கும் காட்சி அது - காட்டுவழிதனிலே கண்ணுக்குக் கண்ணான சீதை முன் நடக்க, அவளுக்கு முன்பாக இலக்குவன் செல்ல, செந்நிற ஆடையுடுத்தி, வெற்றுடம்பு மேனியனாக 'வேந்தன்' நடக்கின்றான்.

அரசாட்சியை இழந்தோமே; இப்படித் துறவுக் கோலத்தோடு 'திக்குத்தெரியாத காட்டில் நடக்கிறோமே' என்று அவன் கவலைப்படவில்லை. அந்தச் செம்மாந்த பெருமித நடையுடன், சீரிய செல்வனாம் இராமன் செல் வதை எப்படிச் செப்பலாம்?

*வெய்யோன்ஒளி தன்மேனியின்*
*விரிசோதியின் மறைய*
*பொய்யோஎனும் இடையாளொடும்*
*இளையானொடும் போனான்*

வெற்றுடம்பு ஒளி வீசுகிறது; அதில் வெப்பம் மிக்க சூரிய ஒளி பட்டுத் தெறிக்கிறது. வெய்யோனாம் சூரியனது ஒளியை, இராமனது உடலிலிருந்து விரியும் சோதி மறைத்து விடுகிறது!

கடும் வெய்யிலில் இப்படி நடந்து பாருங்கள்! கவலையற்ற இராமனின் பெருமிதம் உங்கள் நடையில் வருகிறதா பார்க்கலாம்! திரும்பத் திரும்பப் பாடலைப் படியுங்கள்! கம்பரின் பாட்டுச் சந்த நடையில், இராமனின் பெருமிதநடை தெரிய வரும். அப்படித் தலைநிமிர்ந்து நடக்கிற நடை, 'வெய்யோன் ஒளி' எனத் தொடங்கும்போதே,

தொடங்குகிறதே! இலக்கியத்தை வாய்விட்டுப் படிக்க வேண்டும்; ஓசையுடன் படிக்க வேண்டும்.

ஒடிந்து விழுவதுபோன்ற, கொடிபோலும் இடையுடைய சீதையுடன் நடப்பதைச் சொல்லும்போது, 'பொய்யோ எனும் இடையாளொடும்' என்றது ஏன்? இந்த மெல்லிய மங்கைக்குமா இந்தக் கதி என உணர்த்தாமல் உணர்த்தப்படுகிறது.

யார் இவ்வாறு நடப்பவன்? சிலரது **'வடிவ அழகு'** மிகச் சிறப்பாக இருக்கும். உருவத்தின் கட்டமைப்பு உள்ளத்தைக் கவரும். நம் நாட்டு ஐம்பொன் சிலைகளும் அரிய கற்சிலைகளும் அகில உலகத்தையும் கவர்வதற்கு அவற்றின் 'வடிவச்சிறப்பே' அடிப்படையாகும்.

வடிவுக்கரசி, வடிவுடையம்மை, வடிவு என்றெல்லாம் நம் பெண்களுக்குப் பெயர் வைப்பதுண்டு. கம்பர் இராமனது வடிவ அழகில் ஈடுபடுவதுபோல், இதுவரை யாரும் ஈடுபட்டதாகக் கூற முடியாது. மை, மரகதம், நீலக்கடல், மழை மேகம் போல இராமன் கருப்பு நிறமேயாயினும், **வடிவ** அழகு **'கண்ணிமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே!'** என்று ஆக்கிவிடுகிறது.

மையோ மரகதமோ
மறிகடலோ மழைமுகிலோ
'ஐயோ' இவன் வடிவுஎன்பதோர்
அழியா அழகுடையான்!

ஆச்சரியப்பட்டுப் போகும் மெய்ப்பாடு 'ஐயோ' என்று வாய்விட்டுக் கூறுவது. இப்பாடல் இராமன் தனது பெருமித மான, காலைத் தூக்கிவைத்துத் தலைநிமிர்ந்து நடக்கும் நடையழகைச் சந்தத்தினால் உணர்த்துகிறது.

இராமனின் புவிநடையழகை, கம்பரின் கவிநடையழகு அப்படியே காட்டுகிறதல்லவா?

இனிச் சீதையின் நடையைக் கம்பர் பாடுகிற அழகைக் கேளுங்கள்!

தோழிமார்கள் மானே, தேனே, அமிழ்தே என்று பாராட்டி மலர்களைத் தூவிக்கொண்டு, முன்னே முன்னே நடக்க, அப்பூக்களின் மேலே நடக்கும் மற்றொரு பூவைப் போலச் சீதை நடக்கின்றாள்.

இராமனைக் கண்டு, 'கண்ணொடு கண் இணை கவ்வுமுன்,' சீதை கன்னிமாடத்தின் மேலே நடக்கும் நடை இது.

தன்நேர் இல்லா மங்கையர்
"செங்கைத் தளிர்மானே!
அன்னே! தேனே! ஆரமிழ்தே!"
என்று அடிபோற்றி
முன்னே முன்னே' மொய்ம்மலர்
தூவி முறைசாரப்
பொன்னே சூழும் பூவின்
ஒதுங்கிப் பொலிகின்றாள்!

அடிமேல் அடிவைத்து அன்னம்போல் நடப்பது, பாடலின் சந்தத்திலும் நடக்கிறதே! முன்னே முன்னே தோழியர் பூவைத் தூவ, பின்னே பின்னே இவள் அதில் நடப்பதில்தான் என்ன காட்சி அழகு! மொய்ம்மலர் - கையில் தொகுதி தொகுதியாகப் பூக்களை அள்ளித் தூவுகின்றனர். மொய்த்தல் - கை நிறையப் பூக்களை அள்ளுதல். சீதை பொன் இதழ்கள் சூழ்ந்த பூவாம்! பூப் போன்ற மென்மையான நடையழகு இது!

இனி, இராமனை வஞ்சிப்பதற்கென்றே சூர்ப்பணகை நடக்கும் நடையையும் படித்தால்தான், கம்பரின் படைப்புத் திறமை முழுமையாய் அறியப்படும்.

சிலபெண்கள் காலில் சதங்கை, மிஞ்சி என அணிந்து கொண்டு, சலசலக்க நடப்பார்கள்; பிறர் பார்க்க வேண்டு மென்றே பகட்டி நடப்பார்கள். அவர்கள் வருமுன்பே, 'யானை வரும் பின்னே... மணியோசை வரும் முன்னே' என்பது போல் சதங்கையும் ஆபரணங்களும் பூக்களின் நறுமணமும் சேர்ந்து ஒரு பெண் வருகிறாள் என அறிவிப்பதுபோல் இருக்குமாம். இராமனைத் திரும்பிப் பார்க்கவைத்த, அந்தச் சலங்கை ஒலிச் சிலம்பு நடையைக் கேளுங்கள்!

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர்
பல்லவம் அனுங்க
செஞ்செவிய கஞ்சம்நிகர்
சீறடியள் ஆகி
அஞ்சொலிள மஞ்ஞைஎன
அன்னம்என மின்னும்
வஞ்சிஎன, நஞ்சமென
வஞ்சமகள் வந்தாள்

பஞ்சி - செம்பஞ்சு நிறம் தீட்டிய பாதம். பல்லவமாம் குளிர்ந்த இளம் தளிரும் அனுங்க நடந்தாளாம். ஓர் அரக்கி அழகிய பெண்போல உருமாறி வருவதால் கஞ்சம் - தாமரை நிகர்த்த அடியுடன் நடக்கிறாளாம். மஞ்ஞை - மயில். மின்னும் வஞ்சி - மின்னுகின்ற கொடி. அதாவது தம்மைப் பார்க்க வேண்டுமென்றே, கால் அரவம் தோன்ற நடக்கும் பெண்களின் நடை இது!

கம்பர் படைக்கும் இலக்கிய உத்திகள் மிகப்பல. அதில் மாந்தர்தம் நடையைக் கவிநடையில் காட்டிவிடுவது ஓர் உத்தி. இன்னும் பேசாமல் பேசவைப்பது; சொல்லாமல் குறிப்பால் உணர்த்துவது என அவர் படைக்கும் இலக்கியப் படைப்புத் திறன்களைப் படித்தால் சுவையாக இருப்பது மட்டுமன்று; இப்படிப் புதிய புதிய இலக்கிய முயற்சிகளுக்கு நம் மனமும் நம்மை அறியாமல் முந்தும்!

**37**

# உலக வியப்புக்களில் ஒன்று!

**உ**லகம் மாறிக்கொண்டே இருக்கிறது. மாறுதல் ஒன்றுதான் உலகில் மாறாமல் இருக்கிறது!

சங்கப் பாடல் ஒன்று 'நிலையாமையே நிலையிற்று' ஆகலின் என்று கூறும். நிலையாமை ஒன்றுதான் உலகில் நிலையாக இருக்கிறது. நாம் நிலையாக வாழப் போவதாக எண்ணித்தான், பல்வேறு தீய செயல்களில் ஈடுபடுகிறோம்.

செல்வம் கை மாறும் இயல்புடையது. தந்தையின் செல்வம் மகனுக்குப் போனபின், அது மகன் பெயரால் மட்டுமே விளங்கும். அச் செல்வத்தைக் கொண்டு, நிலை யான பணி செய்தால், செய்தவர் பெயர் விளங்கும். வள்ளல் அழகப்பர், 'தாம் குடியிருந்த வீடும் கொடுத்த' கல்விவள்ளல்.

கோடி கொடுத்த கொடைஞன்; குடியிருந்த
வீடுங் கொடுத்த விழுச்செல்வன் – தேடியும்
அள்ளிக் கொடுத்த அழகன்; அறிவூட்டும்
வெள்ளி விளக்கே விளக்கு.

என, கொடை விளக்கு நூலில், மூதறிஞர் வ. சுப. மாணிக்கம் பாடுவார். வெண்பா வடிவில் மற்றுமொரு புதுமை படைத்த புகழ்வாய்ந்த நூல் அது.

அதனால் அவர் சேர்த்த செல்வம் இன்றும் அவர் பெயராலேயே வழங்குகிறது. இதைத்தான் பெரியார் அவர்கள், "அழகப்பர் சேர்த்த செல்வம், அவருக்கே உரிய செல்வம்" என்றார். ஏனைய பலர் சேர்த்தவை எல்லாம் இடம் மாறி, ஆள்மாறிப் போவதால், முதலில் சேர்த்தவர் பெயரைவிட்டுச் சிறிது சிறிதாக நீங்கிவிடுகின்றன.

இதையுணர்ந்த நம் பெரியவர்கள் 'நிலையாமை' பற்றி, நிரம்பப் பாடியுள்ளார்கள். அவை எல்லாம் நிலையாக வாழ ஆவன செய்யவேண்டும்; 'நிலையாததைக் கொண்டு நிலையானவற்றைச் செய்யவேண்டும்' என வற்புறுத்தச் சொல்லப்பட்டனவேயாம். நம் ஊக்கத்தைத் தளரச் செய்வன அல்ல.

ஒருவனது உடைமைகளை எல்லாம் எடுத்துப் பாருங்கள்; சிந்தியுங்கள். வங்கிக் கணக்கு மாறிவிடும்; வீடு பிறர் வாழுமிடமாகிவிடலாம்; தோட்டம் துரவு அவ்வப் போது பத்திரம் பதிந்தவர்க்கு மட்டுமே உரியனவாகும். அவ்வாறானால் ஒருவரை விட்டு விலகாத செல்வம் எது.?

கல்வியறிவு ஒருவன் தனது உயிருக்குச் சேர்க்கின்ற ஆக்கம்; அவன் சேர்க்கும் கலைச் செல்வம் அவன் பரம்பரைக்கும் குருதி அணுக்கள் வழி குடிபோகும். ஒருவன் இசைவல்லுநன் ஆனால், இடைப்பட்ட காலம் தடைப் பட்டாலும், கொள்ளுப் பேரன் சின்னஞ்சிறு வயதிலேயே உலகம் வியக்கும் இசை மேதை ஆவான்; கலைச்செல்வன் ஆவான். இக் கவியறிவு குருதியில், மரபு அணுக்களில் தங்கி, ஏழேழு பரம்பரைக்கும் போக வல்லது.

கல்விச்செல்வமே ஒருவனது உடைமை. அவனை விட்டு அதைப் பிரிக்க முடியாதபடி அவனது உடைமை

யாகும் அது. கல்வியைப் பிறர்க்குக் கொடுத்தாலும் குறைவ தில்லையே - மாறாகக் கொடுக்கக் கொடுக்க மேலும் வளர்கிறதே, செல்வமோ கொடுத்தால் குறைகிறதே?

கல்விச் செல்வத்தை மட்டும் யாரும் கொள்ளை கொள்ளவும் முடிவதில்லை.

அடுத்து, ஒருவரது சொந்தச் செல்வம் என்பது அவர்கள் பெற்ற குழந்தைகளே. குழந்தைகளைத் தம்முடையன அல்ல என்று தள்ள முடியாது; சொல்ல முடியாது. திருவள்ளுவர் **'தம் பொருள் என்ப தம் மக்கள்'** என்றது அதனால்தான். அப்பிள்ளைகளைப் பண்புடன் வளர்க்க வேண்டுமாம். அது 'எழுமை எழுபிறப்புக்கும்' சிறக்குமாம். இவனது ஏழு பிறப்பேயன்றி, ஏழு பரம் பரைக்கும் அது செல்லுமாம்!

எனவேதான் திருமூலர் நிலைத்த உண்மையாக நிலையாமையை, மனங்கொள்ளும்படி சொல்லிப்பதிய வைக்கிறார்.

உலக வியப்புக்களிலேயே பெரிய வியப்பு எது என்று திருவள்ளுவரைக் கேட்டார்கள். 'அடடா! நேற்றுத்தானே பார்த்தேன். என்னை நலம் விசாரித்தாரே! இன்று இறந்து விட்டாரா?' என்று, மூக்கின் உச்சியில் சுட்டுவிரல் வைத்து, நாம் வியப்படைவது இதிலேதான்' என்றார் அவர்.

உலக அதிசயங்களை ஏழுக்குப் பிறகு எட்டு, ஒன்பது என எண்ணலாம். காலையில் கண்ணால் காணப்பட்டவர் மாலையில், நீர்க்கடன் செய்யப்பட்டுக் காணாமல் போவ தற்கு இணையாக, வேறொரு வியப்பைச் சொல்ல முடியாது.

ஒருவர் எப்படி இறந்தார் என்பதைத் திருமூலர் மிக அழகாகச் சொல்கிறார். இன்று மாரடைப்பு என்கிறோம். அவர் பகர்வதைப் பாருங்கள்:

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்;
மடக்கொடி யாரொடு மந்தணம் கொண்டார்;
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே!

அடப்பண்ணி வைத்த - நன்றாகச் சமைத்துவைத்த அடிசிலை - உணவைச் சாப்பிட்டாராம். தன் மனைவியாம் இளமைமிக்க கொடியனையாளுடன் இன்பம் துய்த்தாராம். (மந்தணம் - பிறரறியாது இன்புறுதல்). நம் இருதயம் இடப்பக்கம் இருப்பதை, எவ்வாறு அறிந்தாரோ, திருமூலர்! 'என் மார்பில் இடதுபக்கம் இறை (சிறிது) வலிக்கிறது' என்றவர், அப்படியே நீட்டிக் கிடக்குமாறு படுத்தாராம். முன்பு எல்லாம், அப்படிப் படுத்தவர், உறங்கி எழுந்ததுண்டு. இப்போதோ, கிடக்கப் படுத்தவர், கிடந்து ஒழிந்து விட்டாராம்!

இப்படி அவர் இறந்தபிற்பாடு ஊரெலாம் கூடி அழுகிறது. அவரோ அப் பகுதியிலேயே மிகப்பெரிய செல்வர், முதலாளி, பேரறிஞர்! ஆனால் என்ன பயன்? 'என்ன பிணம் இன்னும் தூக்கவில்லையா?' என்று ஊரார் பேசிக்கொள்கின்றனர். திருவாளர் இன்ன பெரியவரை இன்னும் தூக்கிப் போகவில்லையா என்று கேட்காமல், பேரை விட்டுவிட்டுப் 'பிணத்தைத் தூக்கவில்லையா' என்றுதான் உலகம் பேசுகிறது.

என்னதான் உற்றாரும் உறவினரும் மனைவியும் மக்களும் என ஆயிரம்பேர் இருந்தாலும் பிணத்தை யாரும் வீட்டில் வைத்துக் கொள்வார்களா?

சூரைச் செடிகள் குத்துக்குத்தாக வளர்ந்த காட்டிற்குள்ளே கொண்டுபோய் எரித்துவிட்டு, திரும்ப வரும்போது, ஆற்றிலே நன்கு தலைமுழுகிக் குளித்துவிட்டு வருகிறார்கள். அதாவது நீரில் மூழ்கியபின் - தீட்டுக்

கழிந்ததாக உலக மக்கள் சொல்வர். திருமூலர் நீரில் முழுகி, அவர் நினைப்பையே போக்கிவிட்டு வருவதாகக் கூறுகிறார்.

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கி, 'பிணம்' என்று பேரிட்டுச்
சூரையம் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பு ஒழிந்தார்களே!

"உலக மக்களே! நீங்கள் இறந்த பின் சில மாதங்களில், சில ஆண்டுகளில் நீங்கள் முழுவதும் மறக்கப்படுவீர்கள்!" என்று திருமூலர் எச்சரிப்பதன் உள்நோக்கம் என்ன?

'மக்களே, வாழும்போதே பிறர்க்குப் பயன்பட வாழ் வீர்களாக! நீங்களும் சிறந்து, மற்றவர்களும் சிறப்புற வாழ் வீர்களாக! செல்வத்தைச் சேருங்கள்! நிலையாத அச் செல்வத்தை நிலைத்த பணிக்குப் பயன்படுத்துங்கள்! நீங்கள் புற்றீசல்போல் பிறந்து இறந்து என்ன பயன்? இந்த உலகிற்கு, உங்கள் குடிக்கு - பரம்பரைக்கு - நாட்டுக்கு - மொழிக்கு - இலக்கியத்திற்கு, என ஏதாவது நல்லதை விட்டுச் செல்லுங்கள்!' என்று திருமூலர் போன்ற சித்தர்கள் சொல்வது, நம் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும்! மானுடம் உய்யும் வழி அது; மனித நேயம் வளர்க்கும் வழி அது!

# 38

## கதவு பேசுகிறது!

ஒரு சிறந்த சொற்பொழிவு முடிந்ததும் அடுத்த பொழிவு எடுபடாது. எவ்வளவு திறமையுடையவராயினும் தடுமாறித்தான் எழ நேரும்.

பாரதிக்குப் பிறகு வந்த பாரதிதாசன், மிகச் சிறந்த வெற்றி பெற்றதொன்றே, அவரது தனித்திறனுக்குச் சான்றாகும்.

பாரதி நாட்டு விடுதலையை முதன்மைப் படுத்தினார்; தமிழும் அதில் இணைந்து இடம் பெற்றது. பாரதிதாசனோ, அடுத்து வந்த சூழலுக்கேற்பத் தமிழை முதன்மைப் படுத்தினார்; சமுதாய சீர்திருத்தமும் இணைந்து இடம் பெற்றது.

பாரதியைப் பற்றிப் பாரதிதாசன் **'புதுநெறி காட்டிய புலவன்'** எனப் பாடியதொன்றே, 'தம்மில் தம்மக்கள் அறிவுடைமை' என்பதுபோல, மிக்குயர்ந்து நிற்கிறது. அப்பாடலின் ஒவ்வோரடியும் தித்திக்கும் தேனமிழ்தமாகும்.

பாரதி யார்?

பைந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!

நீடுதுயில் நீக்கப் பாடி வந்தநிலா;
காடு கமழும் கற்பூரச் சொற்கோ;
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்;

திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து!

மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்;
அயலார் எதிர்ப்புக்கு அணையா விளக்கவன்;

என்னென்று சொல்வேன்; என்னென்று சொல்வேன்
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்
தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்...

பாரதிக்கு இதைவிடச் சிறந்த தகுதியுரையை வேறு எக்காலத்திலும் யாரும் எழுதிவிட முடியாது.

தமிழ் எழுச்சியும், தமிழின எழுச்சியும் பாரதி என்ற விடிவெள்ளியில் புலர்ந்து எழுந்தன. பாரதிதாசனோ எழுஞாயிறு ஆகித் தமிழினப் பகையைச் சுட்டெரித்தார். அவர் தந்த தமிழ் எழுச்சிக் கீதங்கள் இணையற்றவை.

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவு
திறக்கப் பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலிஎன உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலி எனச் செயல்செய்யப் புறப்படு வெளியில்!

நம்பினை பகலினை நள்ளிருள் என்றே
சிம்புட் பறவையே சிறகை விரி,எழு!
சிங்க இளைஞனே! திருப்பு முகம்; திறவிழி!
இங்குன் நாட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?

இப் பாடல் முழுவதும் இளைஞர் மனத்தில் பதிய வேண்டும். தமிழைக் காக்கவேண்டுமெனில், தமிழினம் உய்யவேண்டுமெனில், மறத்தமிழர்கள் 'புலிகளாய்' மாற வேண்டுமென, அன்றே கனவுகண்ட திறத்தை எண்ணி யெண்ணி வியக்கவேண்டியுளது.

பாவேந்தர் பாரதிதாசன் 'கதவு பேசுமா?' என, ஒரு காதற்பாடல் புனைந்துள்ளார். பரணி இலக்கியத்தில் 'கடை திறப்பு' என்பது, முதற்பகுதி. போருக்குப் போய் வெற்றியுடன் திரும்பும் வீர மறவர்கள் தத்தம் வீடுகளுக்குச் சென்று, கதவைத்தட்டி மனைவியரை அழைத்துக் கதவைத் திறக்கும் படி வேண்டுவதாகப் பாடல்கள் அமையும்.

*முருகிற் சிவந்த கழுநீரும்*
*முதிரா இளைஞர் ஆருயிரும்*
*திருகிச் செருகும் குழல்மடவீர்!*
*செம்பொற் கபாடம் திறமினோ!*

என்பது கலிங்கத்துப்பரணி. முருகு - அழகு. செங்கழுநீர்ப் பூவையும், காதல்கொள் இளையோரின் ஆருயிரையும் ஒருசேரத் திருகி எடுத்துத் தம் கூந்தலிலே (குழல் - கூந்தல்) செருகும் இளம் மகளிரே! செம்பொன்னாற் செய்த கதவைத் திறப்பீர்களாக! (கபாடம் - கதவு)

பாவேந்தர் இதில் புதுமை படைத்துப் பாடுகிறார். அதாவது 'இரு விரலை வீட்டுத் தெருக்கதவில்' சிறிது ஊன்றினானாம்; உடனே 'திறந்தேன்' என்ற சொல் கேட்டதாம். கூப்பிடவில்லை; விரல் வைத்ததும் கதவு வழி 'திறந்தேன்' என்ற ஒலி கேட்கிறது. அம் மறவன் 'என்ன இது! தெருக்கதவும் பேசுமா?' என்று வியப்படைகின்றான். அடுத்த கணம் மனைவி காட்சிதரவே, 'என்னேடி? தட்டு முன்பு தாழ்திறந்துவிட்டாயே? என வினவினான்.

அதற்கு அவள் சொன்ன விடைதான், காலத்தால் அழியாத இலக்கியமாகிறது.

"பிரிவறியாத கணவரைப் பெற்றவள் நான். கட்டாயம் கருதி அவர் பிரிந்தால், அவர் வரும்வரை நான் கதவை அடைத்துவிட்டு உள்ளே இருப்பவள் அல்லள். அக் கதவாகவே காத்திருப்பவள் நான். அதனால்தான் 'தட்டு முன்பே தாழ் திறந்தது" என்று கூறுகிறாள்.

*விட்டுப் பிரியாதார் மேவும்ஒரு பெண்நான்*
*பிரிந்தார் வரும்வரைக்கும், பேதை, தெருவில்*
*கருமரத்தாற் செய்த கதவு.*

பேதைப் பெண்ணாகிய (இளம்பெண்) நான், 'பிரிந்தவர் வரும் வரைக்கும், தெருவிலுள்ள கதவாகவே இருந்தேன்' என்று கூறுவது, முன்னைய பரணி இலக்கியக் கற்பனையை விஞ்சுகிறது. இலக்கிய வளர்ச்சி, பழைமையில் புதுமை, மரபில் தனித்திறன் படைத்தல் என்பன இதுதான்!

இன்றைய கவிஞர்கள் பழைமையைப் பழிப்பதிலே மகிழ்கிறார்களே தவிர, புதுமையைப் படைப்பதில் பூரிப்புக் கொள்வதில்லை! எழுதியன எல்லாம் எழுத்தாகா, பாடியன எல்லாம் பாட்டாகா என்பது பலருக்கு இன்னமும் விளங்க வில்லை.

# 39

## காகிதப்பூ மணக்காது!

இலக்கியம் என்றும் வாழ்வது. அதற்குக் கடந்தகாலம், மறந்துபோனது, மறைந்தது என்று எதுவும் கிடையாது. ஒரு நூல் காணாமலே போய்விட்டால்கூட, அதன் மரபு, சுவை, இன்பம் எல்லாம் மற்றொரு நூல்வழி கிடைக்கிறது.

உயிரினம் பயிரினம் போல இலக்கியம் என்பதும் ஓரினம். அது பலமொழிகளில் இருக்கலாம்; பல நூல்களில் காணப்படலாம். அதற்குச் சாதி, சமய, இன, மொழி வேறுபாடு இல்லை. விளங்குமானால் ஓர் இசுலாமிய இலக்கியத்தைக் கேட்டு, ஓர் இந்து மகிழாமல் இருக்க முடியாது. அண்ணாமலை ரெட்டியார் காவடிச்சிந்தை, அண்ணாமலை செட்டியார் வேற்றுமையாக நினைப்ப தில்லை. சிந்து பாடியதும் பிள்ளையும் முதலியாரும், அம்பலமும் எழுந்து, காவடியுடன் ஆடத் தொடங்கிவிடுவர்.

உலக ஒருமைக்கு, இந்திய தேசிய ஒருமைக்கு, மத நல்லிணக்கம் எனப்படுகிற ஒற்றுமைக்கு இலக்கியம் ஒன்றே முழுமையாய்ப் பயன்படும். வெறும் இலக்கியம் எவ்வாறு பயன்படும்? இலக்கிய வாசிப்புப் பழக்கம் வேண்டும்; இலக்கியப் பயிற்சி வேண்டும். 'கற்க, கசடு அற, கற்பவை'

என்றார் திருவள்ளுவர். சிறந்த, நல்ல, உயர்ந்த இலக்கியங் களையே நாம் இளைஞர்கட்கு அறிமுகப்படுத்தவேண்டும்.

இன்று சின்னத்திரையும் சினிமாத்திரையும் இளை யோரை ஈர்த்துத் தீய மனவுணர்வுகளில் தூண்டுகின்றன. இதில் 'வலிப்பு நடனங்கள்' வேறு. காக்கைவலிப்பு நோய் வந்தால், கை, கால்களை வெட்டி வெட்டி இழுக்கும். இந்த வலிப்பு நடனத்திலும் முகம், கை, கால் எல்லாமே வெட்டி வெட்டி இழுக்கப்படுகின்றன. பாலுணர்வு மோதல்கள் பார்க்கச் சகிக்கவில்லை. இளையோர் இவற்றைப் பார்த்து, அருவருப்புக் கொண்டு புறக்கணிக்கவேண்டும்.

கம்பர் மிதிலை நகரத்தில் மகளிர் நடனமாடுவதை வருணிக்கின்றார்.

கைவழி நயனம் செல்ல
  கண்வழி மனமும் செல்ல
ஐயநுண் ணிடையார் ஆடும்
  ஆடக அரங்கு கண்டார்

கைபோகும் வழியில் கண் (நயனம்) போகிறதாம்; கண் போகிற வழியில் கருத்து-பாவம் அதாவது மெய்ப்பாடு செல்கிறதாம். நமது பரத நாட்டியத்தை உலகம் கண்டு வியக்கிறது. நாமோ அவர்களுடைய வலிப்பு நடனத்தில் மூழ்கித் திளைக்கிறோம்.

வெட்கக் கேடு, காலத்தின் கோலம் இது.

இலக்கியம் சுவையாக இருக்கவேண்டும். படிக்கப் படிக்க இனிக்கவேண்டும். மனத்தை ஈர்க்கவேண்டும். 'உப்பு (சுவை) இல்லாப் பண்டம் குப்பையிலே' என்பது, உண்பதைவிட, உணரும் இலக்கியத்திற்கு மிகவும் பொருந்தும். புதுக் கவிதைகள் எல்லாம் இலக்கியம் ஆகிவிடா; ஆனால் இலக்கியமாகித் திரும்பப் பார்க்க

வைக்கும் - படிக்க வைக்கும் புதுக்கவிதைகளும் பலவுள. கழனியூரன் என்பவர் பாடுகிறார்,

அன்புடைமை அதிகாரத்தை
ஆசிரியர் கற்பிக்கிறார்
கையில் பிரம்புடன்...

இதை விளக்கிய ஒருவர், அந்தப் பிரம்பும் ஆசிரியர் தற்காப்புக்கு என்று உரைவிளக்கம் கூறினார்!

செந்தமிழினியன் என்பவரும் ஒரு சிறு ஹைக்கூ பாடியுள்ளார்.

அறிவுரை வேண்டாம்
வழிநடத்திச் செல்லுங்கள்
எவரையும் காணோம்

நம் நாட்டில் அறிவுரை பேச ஆயிரம்பேர் இருக்கிறார்கள். செயல் செய்து, வழி நடத்திச் செல்லத்தான் ஒருவரையும் காணோம்.

இளைஞர்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் படிக்க வேண்டும்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

தந்தைசொல் மிக்க மந்திரம் இல்லை

தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை.

இவற்றைப் படித்தால், பலமுறை பயின்றால் மோனை எதுகை இயைபு (Rhyme) மூன்றும் ஓடோடி வரும்.

கவியரசு முடியரசன் 'பாடுங்குயிலை'ப் படித்தால் போதும். நீங்கள் ஒப்பற்ற கவிஞராகிவிடுவீர்கள். கட்டமைப்பும் சந்தமும் இசையும் நயமும் உள்ள கவிதைதான் படிக்கப் படிக்க இனிக்கும்.

என்றும் நானோர் இளைஞன் – பாடல்
எழுதிக் கொழிக்கும் கவிஞன்
ஒன்றும் வாழ்விற் சுவைஞன் – நெஞ்சில்
உணர்ச்சித் துடிப்போ மிகைஞன்!

செந்தமிழ் அமுதம் உண்டேன் – முதுமை
சிறிதளவேனும் அண்டேன்
சிந்தையில் இளமை கொண்டேன் – உலகம்
சிறிதாய்த் தோன்றிடக் கண்டேன்

எவ்வளவு எளிமையாய், இனிமையாய் முடியரசன் பாடுகிறார் என்பதைப் படித்துப் பாருங்கள்!

மீண்டும் மீண்டும் படிப்பதுதான் - படிக்க வைப்பது தான் கவிதையாகும். முடியரசன் இளையோர்க்குச் சொல்லும் அறிவுரை ஒன்றையும் கேளுங்கள்.

இளையவரே ஒன்று கேளுங்கள்! – சொல்லும்
என்மொழி கேட்டே வாழுங்கள்!
மொழிபல கற்கச் செல்லுங்கள் – ஆனால்
முத்தமிழ் உயிராச் சொல்லுங்கள்!

இத்தகைய அறிவுரைகளை ஒதுக்கிவிடாது, நல்ல நல்ல கவிதைகளைத் தேடிப் பிடித்து, மனப்பாடம் செய்து ஒப்பிக்க வேண்டும். அங்ஙனம் பயின்றால் நீங்களும் சிறந்த கவிஞராக லாம்! சிறந்த உரைநடை எழுத வேண்டுமென்றால், முன்னர் பலரும் எழுதிய சிறப்புடைய உரைநடைகளைப் பலகாற் பயில வேண்டுமென்று ஆங்கில அறிஞரும் கூறுவர்.

'இலக்கியம்' என்பதுதான் என்ன? திட்டமிட்டு, அழகுபடுத்திச் சிறிது மெருகூட்டிச் சொல்லிவிட்டால், எதுவும் இலக்கியமாகிவிடும்.

ஒரு பேருந்தின் முதுகில், தடித்த எழுத்தில், **'உனக்கு நான்; எனக்கு நீ'** என எழுதியிருந்தது. காதலர்களுக்கும்

பொருந்தும் வாசகம் இது. அப் பேருந்தின்பால் பாசத்தை வளர்ப்பது போன்ற இதில் கவித்துவம் இல்லை எனச் சொல்ல முடியுமா? பழமொழிகளும் விடுகதைகளும்கூட இலக்கியமாகும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார்.

எனவே இலக்கியப் படைப்பாளியாக விரும்பும் ஒருவன், தனக்கு முன் தோன்றிய இலக்கியங்களைப் படிக்க வேண்டும்; சுவைக்க வேண்டும்; அதில் மூழ்கித் திளைக்க வேண்டும். வேர்பிடித்து, முளைவிட்டு வளர்வது போன்றது அது. அவ்வாறு வருபவனே, இலக்கியவுலகில் ஆல் எனத் தழைத்துச் செழிப்பான். அல்லாதவர்கள் காகிதப் பூக்கள் ஆகலாம்; கமகமக்கும் மலர்களாகி மணம்வீசி நிலைபெறுதல் இயலாது.

# 40

## வாழையடி வாழை

'மீரா' என்றொரு கவிஞர். சிவகங்கை மீ. இராசேந்திரன் அவர். தம்மைச் சுற்றியிருந்தவர்களை வளர்க்க நினைத்தே, தம் எழுத்துப் பணியைத் தவற விட்டவர். மிகச் சிறந்த கவிமலர்களைத் தொடுத்தவர்.

புதுக்கவிதை பிறப்பெடுத்தபோதே, ஏதோ 'மரபுக் கவிதை' எனப் பிரித்தும் பழித்தும் பேசிய பலர் இன்று காணாமற் போய்விட்டனர். ஆங்கிலத்தின் மரபைப் பின் பற்றுவதாக நினைத்த, அரைகுறைகளால் வந்த வினை அது.

காலம் பொல்லாதது. தகுதியற்றவை தோன்றுகின்ற போதே, அழியத் தொடங்குகின்றன. மீரா மரபில் தொடங்கி, புதுக்கவிதைகளையும் படைத்தவர். கனவுகள், கற்பனைகளில் மிதந்தவர்.

நீ முதல்முறை
என்னைத்
தலைசாய்த்துக் கடைக்கண்ணால் பார்த்தபோது
என் உள்ளத்தில்
முள் பாய்ந்தது.
அதை இன்னும் எடுக்கவில்லை

முள்ளை முள்ளால் தானே
எடுக்க முடியும்?
எங்கே, இன்னொரு முறை பார்!

'பழமையிலே புதுநினைவு பூத்தது போலே' வெளிப்பட்ட இக் கவிதையில், எளிமை மிகுந்த அருமையும் இனிமையும் கலந்துள்ளன.

இன்றைய நிலையின் நடைமுறைகளை, நகைச்சுவை யோடு, ஈரோடு தமிழன்பன் பாடுவன நல்ல 'அங்கதக்' குறிப்புடையவை.

'நகர்' நட்பு – இது தலைப்பு.

என்ன சேது,
எப்போ வந்தீங்க?
இருபது வருசமாச்சு
பார்த்து!
இதோ
'இருபத்து நாலு
வருது...
வரட்டுமா பார்ப்போம்
பிறகு!

இந்த அவசரயுகத்தில் நட்பாவது, உறவாவது! அண்ணன் தம்பிக்கே அறிமுகம் செய்துவைக்க வேண்டிய சூழல் வந்து கொண்டிருக்கிறது.

ஈரோடு தமிழன்பனின் 'உரை வீச்சுக்கள்', சாலை இளந்திரையனார் கூறியவாறு அமைந்த, ஒளிவீச்சுக்களாக உள்ளன.

அடையாளம்

காந்தி கண்ட
இராம ராச்சியத்தில்
கூனி உண்டா?
உண்டு.
நிமிர்ந்திருப்பாள்
யாருக்கும் அடையாளம்
தெரியாது!

இன்றைய ஊழல் அரசியல்வாதிகளின், இராச நடையை, நாளிதழ்களில் பார்க்கிறோமே-யாரென்று அடையாளம் தெரிகிறதா?

இன்னுமொரு கவிதை - தமிழன்பன் தந்துள்ள 'தலைப்பூ' - **வைராக்கியம்:**

எங்கள் ஊரில்
ஒருவர்
ஊராட்சி உறுப்பினரானார் -
ஒன்றியத் தலைவரானார் -
சட்ட மன்ற
உறுப்பின ரானார் -
அமைச்சரானார் -
அயல்நாட்டுத் தூதுவரானார் -
இறுதிவரை...
ஒரு முறைகூட
மனிதராகாமலே
மரண மானார்!

என்ன வைராக்கியம், உறுதிப்பாடு? மனிதராகாமலே, மரணமானார் - ஆமாம் அதுவும் ஒரு 'சிவலோக பதவி'தானே?

கவிஞர் மு. மேத்தாவின் 'கண்ணீர்ப் பூக்கள்', புலர் காலைப் பொன்மலர்கள். அவர் மரபுவழிச் சந்தப் பாட்டு முதலாக, நாடோடிச் சந்தம் ஈறாகப் பலவிதப் புதுப்புது சோதனை முயற்சிகள் செய்துள்ளார்.: 'போற்றுபவர் போற்றட்டும் புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்' என்ற, கவியரசன் கண்ணதாசன் மனநிலையே இவரிடமும் காணப் படுகிறது.

ஆயிரங் கோடி மனித மனங்களில்
ஆசை அழிகிறது
அதுதான் கவிஞன் நெஞ்சில் புகுந்து
கவிதை பொழிகிறது!

பாயும் கண்ணீர் நதிகளில் வாழ்க்கைப்
படகும் தெரிகிறது
பகலும் இரவும் அதுதான் எனக்குப்
பாடலைத் தருகிறது!

நெருப்பில் நீந்தும் பாடகன் வந்தேன்
நின்றால் சில சொல்கின்றேன்–நீங்கள்
சென்றால் பின் தொடர்கின்றேன்!

நான் சொல்வதை நீங்கள் நின்று கேட்காவிட்டால், நீங்கள் சொல்வதை நான் கேட்கப் பின் தொடர் கின்றேன்–என்பதிலுள்ள 'ஈர்ப்பு' வாசகனைச் சமமாய் மதிக்கிறது.

கவிஞர் சிற்பி, மெய்ம்மையியல் நோக்கி நடை போடுகிறார் எனத் தெரிகிறது. ஏதோ, காலத்தால் அழியாத படைப்புக்கு அவர் முன்னுரை எழுதிக் கொண்டிருக்கிறார். அடுத்தது அவர்தம் சமுகவியல் பார்வைகள். இவற்றில் மலையாள இலக்கியப் போக்கும் வீச்சும் வந்து விழும் இடங்களுமுண்டு.

அவரது 'எங்கெங்கு காணினும்...' - கவிதை, ஒரு மெய்ம்மைத் தேடலே.

நின்றால் தெரியும்
நடந்தால் தொலைவாகும்
அந்த நட்சத்திரத்திலிருந்து
என்னை அழைப்பது...?

நான்தான்!

மண்ணில் வானமும் உண்டு,
வானத்தில் மண்ணும் கூட!

இருட்டு
வெளிச்சம் இன்மை அல்ல
ஒளியை
வடிகட்டும் சல்லடை!

பகல்
இருட்டுக்கு எதிர்ப்பதம் அல்ல
இருளின்
மெல்லிய கரைசல்!

.......

மடிந்து போவது
முடிந்து போவதன்று
ஒரு எல்லையைக்
கடந்து போவதே!

.......

கரைந்து கரைந்து
காணாமல் போவது
எங்கும் நிரம்புவதற்காகவே!

ஒன்றில்லாமல் ஒன்றில்லையா? அல்லது ஒன்றினுள் ஒன்று, உள்ளுறைகின்றதா? தேடவைக்கும் சிற்பி, உலக 'மெய்ம்மைகளையே' தேட வைக்கின்றார்!

கவிஞன் என்பவன் மொழியைக் கருவியாக்கி, முழக்க இசை பாடுபவன். உலகில் எந்தக் கவிஞனிடமும் மொழி உணர்ச்சி – தாய்மொழிப் பற்று பொங்கித் தவழும். தமிழகம் ஒன்றிலேதான் இன்று தலை கீழான நிலை. தாய்மொழியை – தமிழைக் கல்விக்குத் தகுதியற்ற மொழி எனப் பேசும் 'தறுதலைகள்' தமிழ்ப் படைப்பாளிகளென வலம் வருகின்றன. தமிழைக் கொலை செய்துகொண்டே, தமிழில் எழுதி – தமிழ் இதழ் நடத்தி – தமிழுக்காகப் பட்டமும் பரிசும் வாங்கி, 'தாம் இருந்த கோடு குறைத்துவிடும்' (தாம் இருக்கும் மரக்கிளையைத் தாமே வெட்டி வீழ்த்தும்) போலிகள் பெருகி வருகின்றன.

கவியரசு **முடியரசனையும்** உணர்ச்சிக் கவியரசர் **காசி ஆனந்தனையும்** படிக்கிறபோது, ஆறுதல் ஏற்படுகிறது. இவர்கள் பாரதி, பாரதி தாசனைப் போலத் தமிழ் உள்ள அளவும் சாகாவரம் பெற்றவர்கள்.

தாயே தமிழே!
தலை கவிழ்ந்த பொற்செல்வி!
நீ கலங்க வேண்டாம்!
வருங்காலம் நின்காலம்!

சத்தை இழந்த தமிழ்ச்
சாதி பிழைக்க நான்
பத்தாயிரங் கவிதை
பாடாமற் போவேனா?

என்பது காசி ஆனந்தனின் கவிதை முழக்கம். இவரது பாடல் ஒவ்வொன்றும் தமிழ் எழுச்சி முரசுகள்; தமிழினப் போர்க்குரல்கள்!

குச்சிகள், கலப்பட நஞ்சுகள்; காட்டிக் கொடுக்கும் களைகள் ஆயிரம் உள. அவை தாமே உதிர்ந்து, அழிந்து உரமாகுமே யன்றி, நாம் உண்ணத்தகும் காய் கனி கிழங்குகள் ஆகா.

தமிழின் தரத்தை உயர்த்தும் படைப்புக் கலை வளர்கிறது. அதன் பக்கம் நம் பார்வையைச் செலுத்துதலே, இன்றைய நம் கடமையாகும்!

41

# முத்துக் குளிக்க வாருங்கள்

இலக்கியம் மனத்தைப் பண்படுத்த வேண்டும். மனிதனைத் தெய்வநிலைக்கு உயர்த்த வேண்டும். சமற்கிருத இலக்கியமாயினும் ஆசியப் பண்பாடாயினும் தமிழில் வேரூன்றிக் காணப்படும் இந்த இலக்கியக் கோட்பாட்டுடன் ஒற்றுமைப்பட்டிருப்பதை அறியலாம்.

மேலை இலக்கியப் பண்பாடு இதனின்றும் வேறு பட்டது. தொடக்கம் முதலே கிரேக்க, இலத்தீன் இலக்கியம் முதலாக அது வாழ்க்கையைப் 'பச்சையாகவும் கொச்சை யாகவும்' காட்டுவதில் தவறு காணவில்லை. இந்திய இலக்கியக் கோட்பாடு, வாழ்க்கையில் இயல்பாகப் பொருந்தி யுள்ள குற்றங்குறைகளை இலைமறைகாய்களாக்கி, அதன் நல்ல பக்கத்துக்கு மட்டும் வெளிச்சம் போட்டுக் காட்டி, மனித இனம் நல்லதையே நினைக்க வழி செய்தது.

மனித மனம் சார்ந்ததன் வண்ணமாகும். பன்றியோடு சேர்ந்த கன்றும் கெடும் என்பர். கொலை, கொள்ளை, வெட்டுக்குத்து, கற்பழிப்பு, மானபங்கம் என இவற்றையே விரிவாக, விளக்கமாகக் காட்டிக் காட்டி, பார்த்துப் பார்த்து, அது இளம் மனங்களில் பதிந்து, நாம் மூர்க்கர்களை - கொலையஞ்சாக் கொடியர்களை உருவாக்கிக் கொண்டிருக் கிறோம்.

உலகெங்கும் தீவிரவாதம் கொழுக்கிறது. சமுதாயம் சீரழிகிறது. படைப்புக் கலைஞன் சமுதாயக் கடமையை மறந்து, பணப்பேய் பிடித்து அலைந்தால் தற்கொலை செய்து கொள்பவனுக்கு ஒப்பாவான். ஊருக்குத் தீவைத்து விட்டுத் தான் அதில் ஒளிந்துகொண்டு வாழ நினைப்பவன் அவன்.

தாயும் மகளும் உடனிருந்து பார்க்கமுடியாத காட்சிகள், பாடல்கள் 'என்றும் எங்கும் எப்போதும்'! மேலைநாட்டார், நமது பண்பாட்டை எண்ணிப் பின்பற்ற ஏங்கும் மனநிலைகள் அங்கே தோன்றி வருகின்றன. Single Sex Schools என்று ஆண் - பெண் இருபாலருக்கும் தனித்தனிப் பள்ளிகளே நல்லது என்ற எண்ணம் கலிபோர்னியா மாநிலத்தில் முகிழ்த்துள்ளது. அமெரிக்க, ஐரோப்பியப் பண்பாட்டுச் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்த, அங்கே நூல்கள் எழுதப்படுகின்றன. கருத்துக்கள் பரப்பப் படுகின்றன.

இந்நிலையில், நாம் அயல்மோகம் கொண்டு அச் சீரழிவை நோக்கி வளர்ந்துகொண்டிருக்கிறோம். அவர்கள் நம்மைப் பின்பற்ற நினைக்கும் வேளையில், நாம் அவர்கள் வழியில் படுவேகமாகப் போய்க்கொண்டிருக்கிறோம். இது என்ன கொடுமை...?

நம் இலக்கியம், சமயம் எல்லாம் 'நிலையாமை'யை எடுத்துச் சொல்கின்றன. உலகம் நிலையில்லாதது. செல்வம் நிலையில்லாதது. உடம்பு நிலையில்லாதது என்று போதிக் கின்றன. இது ஏன்..?

செல்வம் கைவிட்டுப் போகும் - கைமாறும் இயல்புடையது என்பதால், அதைப் பெற்றதும் நல்லதற்கு அதைப் பயன்படுத்து! உலகமும் உடம்பும் நிலையற்றவை என்பதால் நிலைத்த பணி செய்ய, புகழ்பெற அவற்றைப் பயன்படுத்திக்கொள்! இவையே நமது குறிக்கோள், கோட்பாடு.

பழமொழிகள் சிறந்த இலக்கியங்கள். தொல்காப்பியர் பழமொழியையும் விடுகதையையும் அடிப்படை இலக்கிய

வகைகளில் சேர்த்துக் கூறியுள்ளார். 'மண்ணை ஆண்டவர் மண்ணிலும் கோடி; இன்னம் ஆள்பவர் எத்தனை கோடி' என்பது ஒரு பழமொழி. மதுரைக் காஞ்சி என்ற நெடும்பாடலை எழுதிய மாங்குடி மருதனார் கூறிய 'செய்தி' என்ன...? 'காஞ்சி' என்பது நிலையாமை.

*பணைகெழு பெருந்திறல் பல்வேல் மன்னர்*
*கரைபொருது இரங்கும் கனையிரு முந்நீர்த்*
*திரையிடு மணலினும் பலரே! உரைசெல*
*மலர்தலை உலகம் ஆண்டு கழிந்தோரே!*

என்ன, கடினமாகப் படுகிறதா...? முன் சொன்ன பழமொழிதான் இந்தப்பாட்டிலும் எடுத்தாளப்பட்டுள்ளது. இதன் பொருள் "முரசு (பணை - முரசு) முழங்கும், பல வேற்படையை உடைய அரசர்கள் கடலின் கரையில் வந்து மோதும் அலைகள் குவிக்கும் மணலைவிடப் பலராவர்; அவர்கள் புகழுடன் இந்தப் பரந்த உலகத்தை ஆண்டு பின் மாண்டவர்கள்!" (கனை இரு முந்நீர் - ஆரவாரிக்கும் கடல். திரை - அலை)

இவ்வாறு பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு நிலை யாமையைச் சொன்ன மாங்குடி மருதனார், அதனால் அவன் கடைப்பிடிக்க வேண்டியவற்றை எவ்வாறு அறிவுறுத்தினார் என்பதைப் பார்க்க வேண்டும.

"அண்ணலே, நீயும் அவ்வாறு அலைபரப்பிய மணல்போல் அழியலாகாது. நல்லறிஞர்களைப் போற்றி அவர்தம் கூட்டுறவு கொள்க. உனக்கென வரையறுக்கப் பட்ட வாழ்நாளை பகை வென்றும் இரவலர்க்குக் கொடுத்தும் புகழ்பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்வாயாக!"

*மகிழ்ந்து இனிது உறைமதி பெரும*
*வரைந்துநீ பெற்ற நல்லூ ழியையே...*

இதில் கடைசி அடியை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவருக்கும் வாழ்நாள் வரையப்

பட்டுள்ளதாம் - எல்லை வகுக்கப்பட்டுள்ளதாம். 'வரைந்து நீ பெற்ற நல்லூழி' என்பது ஒரு கணக்கு, புள்ளிவிவரம் மட்டுமன்று. எல்லை வகுக்கப்பட்டது நம் வாழ்நாள் என்பதை நாம் நன்றாக வாழும்போது நினைப்பதில்லை. வலிமையோடு இருக்கும்போது எண்ணுவதில்லை. செல்வச் செழிப்பில் மிதக்கும்போது கருதிப் பார்ப்பதில்லை.

அதனால்தான் எவ்வித அட்டூழியமும் செய்ய முந்து கிறோம். எல்லாத் தீவினைகளையும் செய்து செய்து, உலகை அலைக்கழித்து நாமும் அழிகிறோம்.

ஓர் ஆங்கிலப் பாட்டு: `Nobleness enkindleth Nobleness' என்பது. ஓர் அகல் விளக்கு ஆயிரம் அகல்விளக்குகளை ஏற்றப் பயன்படும். பெருந்தன்மைதான் பெருந்தன்மையைத் தூண்டும்; வளர்க்கும். சிறுமை சிறுமையையே வளர்க்கும். தீக்குச்சியாகப் பற்றவைத்து, ஊரை எரிப்பது எளிது.

நாம் ஊரை எரிக்கும் தீக்குச்சியாகாமல், அகல் விளக்கை ஏற்றி ஒளியூட்டுபவராக ஆகவேண்டும். நம் இலக்கியம் - படைப்பு - கலை யாதாயினும் அந்நல்ல திசை நோக்கி நடைபயில வேண்டும்.

நம் இலக்கியங்களின் கதையை, கருத்தைப் பார்ப்ப தோடு நில்லாமல், அவை எவ்வாறு படைக்கப்பட்டுள்ளன என்ற திட்பநுட்பத் திறன்களையும் கண்டறிய வேண்டும்.

படைப்புத்திறனையே (Creativity) நம் இளைஞருக்குப் பாடமாகப் போதிக்க வழிவகை காணவேண்டும்.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரளவு இன்றே

என்னும்படி நம் இலக்கியம் பரந்து விரிந்து கிடக்கிறது. ஆழ்கடலில் மூழ்கி, அரிய முத்துக்களைத் தேடி எடுத்துக் குவித்து அணிந்து மகிழ்வார் போல, நம் இலக்கியச் சுவை முயற்சிகள் பல்கிப் பெருகுமாக!



## தமிழண்ணல்
## டாக்டர் இராம. பெரிய கருப்பன்

12.08.1928–ல் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்ட நெற்குப்பையில் பிறந்த இவர் சங்க இலக்கியத்தில் மரபுகள் என்ற ஆய்வுக்காக முனைவர் பட்டம் பெற்றவர்.

உயர்நிலைப்பள்ளியில் 13 ஆண்டுகள், கல்லூரியில் 10 ஆண்டுகள், பல்கலைக் கழகத்தில் 18 ஆண்டுகள், பல்கலைக் கழக மானியக் குழுவின் (UGC) சிறப்பு நிலைப் பேராசிரியராக 2 ஆண்டுகள் என 43 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

ஆய்வியல், ஒப்பியல், சங்க இலக்கியம், நாட்டுப்புற பாடல்கள், இலக்கியக் கொள்கைகள் போன்ற துறைகளில் 30 நூல்கள் படைத்த படைப்பாளர்.

தமிழக அரசின் பொற்கிழிப்பரிசு (மீனாட்சியம்மை கவிதைக்காக – 1973) நல்லாசிரியர் விருது (1983), திரு.வி.க. விருது (1989), சிறந்த நூல்கள் எழுதியமைக்காக இரண்டு பரிசு (1982), குன்றக்குடி அடிகளார் பாரி விழாவில் நல்கிய 'கணக்காயர்' என்ற மெய்க்கீர்த்திப் பட்டயம், பல்கலைக் கழக மானியக் குழுவினரால் 1981, 82–ம் ஆண்டுகளில் இந்தியா முழுவதுமுள்ள பல்கலைக்கழகத் தமிழ்த் துறைகளில் தொல்காப்பியம் பற்றி விரிவுரையாற்ற தேசியப் பேராசிரியராக நியமனம் பெற்றமை, சாகித்ய அகாதமியில் பல ஆண்டுகள் உறுப்பின ராகவும், தமிழ்த்துறை ஆலோசனைக் குழுவின் இயக்குநராகவும் பணியாற்றியமை தமிழக அரசின் தமிழ் வளர்ச்சிக்குழு, தமிழகப் புலவர்குழு, வளர் தமிழ் மன்றம், தமிழ்ப் பல்கலைக்கழக செனேட் ஆகியவற்றில் உறுப்பினர் பணி, மேலைச் சிவபுரி சன்மார்க்க சபை செந்தமிழ்க்கல்லூரி நிர்வாகக் குழுத் தலைவர், அகில இந்திய பல்கலைக் கழகங்களின் தமிழாசிரியர் மன்றத்தின் தலைவர் எனப் பல பணியாற்றி வரும் திறமையாளர்.

"உங்கள் தமிழைத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று தினமணி நாளேட்டில் ஆறு ஆண்டுகள் தொடர்ந்து எழுதி இன்றையத் தமிழ் இனம் மீது இவர் கொண்ட அக்கறையைத் தெள்ளிதின் காட்டிய தமிழ்த் தொண்டர்.

பல்கலைக் கழக மானியக் குழு இந்தியாவிலேயே முதன்முறையாக இருபத்தி இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகையை இவர் துறைத் தலைவராக விளங்கிய காலத்து அளித்து இவர்தம் அருந்தமிழ்த் தொண்டு முயற்சியை இனங்கண்டு கொண்டமையும் தமிழ்த்துறை சிறப்புநிலைப் பேராசிரியர் என 1990–ல் பல்கலைக்கழக மானியக் குழுவினால் தமிழுக்காக முதன் முதலில் தேசியப் பேராசிரியராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றமையும் ஆகிய கீர்த்தி மிக்கவர்.

திரைகடலோடித் திரவியம் தேடிய பரம்பரையைச் சேர்ந்த இவர் இலங்கை, ஜப்பான், மொரீசியஸ், மலேசியா, சிங்கப்பூர் என்று பல கடல் கடந்த நாடுகளிலும் தேமதுரத் தமிழ் முழக்கம் செய்த பீடுடையவர்.

தமிழ் நலம் பாதி தன்னலம் பாதி என்ற எல்லையையும் தாண்டி தமிழ்நலமே தன்னலமாய்க் கொண்டு தமிழுக்காகவே தம் வாழ்நாளை அர்ப்பணித்துக்கொண்ட அருந்தமிழ்வாணர் – பெரிய கருப்பன் எனப் பேர் கொண்ட பெரும் பெயர்த் தமிழண்ணல் இவர்.

மணிவாசகர் பதிப்பகம்